சிவமயம்.

மரகத சுந்தரம்.

*

பூதூர், வைத்தியநாத அய்யரால்
இயற்றப்பட்டு

*

சென்னை - இட்டா

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
சக்கரவர்த்தி பிரஸ்,
189, தங்கசாலை வீதி, சென்னை.

[இப்புரிமை] 1953. [விலை 1-4-0

உ

முருகன் துணை.

மரகத சுந்தரம்.

விநாயகர் துதி.

வெண்பா.

பாவலரும் பாமாரும் பாங்குளநற் பாவையரும்
ஆவலுடனேகற் றறியவே - நாவலொன்று
நானியற்று முன்னமே நக்கன்சுதனைங்கரனை
யேனினைந் தேத்துவேனே.

முதல் அத்தியாயம்.

திருவிளக்குகளின் ஜோதியாய் இரவு பகலென்கிற வித்தியாசம் தீவிரத்தி லறிந்து கொள்ளக் கூடாத வண்ணம் ஜ்வலிக்கிறது. நகர் முழுவதும் தோரணங்களா லலங்கரிக்கப்பட்டு, வீதிகளின் மத்தியில் சித்திர வேலைகளாற் செய்யப்பட்ட பூம்பந்தர்கள் நிறைந்திருக்கிறது. ஒவ்வோர் வீடும் ஏற்றவண்ணம்தீபங்களாலும், அழகிய படங்களாலும் வர்ண பேதக் கும்பட்டங்களாலுங், தோகையர் தீட்டும் மாக்கோலச் சித்திரத்தாலும், பெரிதும் மங்களகரம் பெற்றிருக்கிறது. வெளியூர்களினின்றும் மாட்டு வண்டிகள் ஓயாது வந்துக் கொண்டிருக்கிறதும் தவிர, புகைவண்டி மூலமாய் வரும் ஜனங்களை ஏற்றிவரும் வாடகைக் குதிரை வண்டிகளின் அளவையும் அதிகரித்திருக்கிறது. பாதசாரியாயும் பல்லாயிரம் பிரஜைகள் ஓயாது வந்துக்கொண்டிருக்கின்றனர். திருக்குளத்தின் படிகளெல்லாம் ஓரடிக்கொரு மண் கலயத் தீபம் எரிவதும், திருக்கோயிலின் மதில், கோபுரம், முதலிய ஒவ்

வொரு பாகத்திலும் நிறைந்து விளக்குகள் பிரகாசிப்பதும், நேத்திரானந்தத்தை விளைவிக்கிறது.

௸ தீபங்கள் சுற்றும் மங்காவண்ணம் தூண்டவும், எண்ணெய் விடவும், வர்த்திகளிடவும் அநேக ஆட்கள் தத்தம் கரங்களில் எண்ணெய் நிறைந்துள்ளதான சிறு தூக்கண்டாக்களை எடுத்துக்கொண்டு பரபரப்புடன். நாலா பக்கமும் திரிந்து, தமது வேலைகளைப் பக்தியுடனும் சந்தோஷத்துடனும் பார்க்கிறார்கள். இவ்வாறு நிகழ்கையில், மணி சுமார் இரவு ஒன்பதிருக்கலாம். மணி பத்துக்கெல்லாம் ஆலயத்தில் கண்டாமணி யடிக்கத் தொடங்கினார்கள். மேள வாத்தியங்கள் முழங்கவும், பேரிகை கொட்டவும், அதிர் வெடிகள் அடுக்கடுக்காய் சப்திக்கவும், திருச்சின்னம் ஊதவும், கேட்ட ஜனங்கள் பலரும் துரிதமாய் ஆலயத்துட் சென்றார்கள். சந்நிதியில் ஜன நெருக்கம் சொல்லத் தரமல்ல. ஸ்வாமிக்கு அன்ன அபிஷேகம் செய்து தீபாராதனைகள் வரிசைக் கிரமமாய் நடந்து, அங்குள்ள ஒவ்வொருவரும் தத்தம் கரங்களைச் சிரமேல் தூக்கிக் கூப்பி, பக்தியாய்த் தோத்தரித்துக்கொண்டிருந்ததைக் கண்ட நாஸ்திகன் மனமும் ஆஸ்திகனது கொள்கையைச் சாரும். தீபாராதனை முடிந்த ஒருமணி நேரத்திற்கெல்லாம், தகத் தாயமாய் ஜ்வலிக்கும் தங்க விமானத்தில் கருணாநிதியாகிய எம்பெருமானை வைர ஆபரணங்களாலும், நறுமண மலர்களாலும் அலங்கரித்து வீதிவலம் செய்வித்தார்கள்.

சுவாமியின் முன்னும் பின்னுமாக ஜனங்களும் குழுமி வந்தார்கள். அக்குழாத்தின் மத்தியில் ஒருவன் சில சிறு விளம்பர துண்டுகளை அனைவர்க்கும் கொடுத்துக்கொண்டுவந்தான். ௸ கூட்டத்தின் மத்தியில் இணைபிரியாது உலவிக்கொண்டிருந்த இருவருள் ஒருவன் மற்றவனைப் பார்த்து "சந்திரசேகரா! அஃதென்ன நோடீஸ்? அதில் ஒன்று வாங்கி வா வென்றான். அத்துண்டிலொன்றை வாங்கித் தன் மனத்துள்ளே வாசித்துக்கொண்டு, "அடே சந்திரா! இதைப் பார் என்று தன் நண்பனிடம் தந்தான்.

அதில் அச்சிடப்பட்டிருந்ததாவது;

பரவுதற்குரித்தாம் பக்திப்பெருமையீர்! இக்ஷேத்திரத்தில் இன்றிரவு லக்ஷதீபமும், அன்ன அபிடேகமும் நடந்தேறிய பின்பு ஸ்ரீமதி "கங்கா பாய்" என்னும் மாதரசியால், "நந்தனார் சரித்திரக் காலக்ஷேபம் நடத்தப்போகிறபடியால், அன்பர்கள் விஜயம்செய்து பரவசமடையக்கோரப்படுகிறது" என்றிருந்தது; இதைக் கண்டவுடன் சுந்தரன் சற்று மௌனம் சாதித்தான்.

சந்திர:— என்னடா சுந்தரா! இவ் விளம்பரத்துண்டைக் கண்டவளவில் உன்முகம் ஒருவாறாய் தோன்றுகிறதே?

சுந்:— ஒன்றுமில்லை. ஒரு விஷயம் என்மனதிற் றோன்றிற்று அதைப்பற்றி யோசிக்கிறேன், தவிரவும் அந்த விஷயத்தை இதுவரையில் உன்னிடம் கூறாதிருந்தமைப்பற்றி நீ கோபிப்பாய்.

சந்திர:— அதென்ன அப்பேர்ப்பட்ட சமாசாரம்?

சுந்:— நேற்றைய தினம் எனக்கு ஒரு கடிதம் வந்தது.

சந்தி:— எங்கிருந்து?

சுந்:— மிதுனபுரியிலிருந்து.

சந்தி:-மிதுனபுரியிலிருந்தா? யார் தணிகைமலை எழுதினானோ?

சுந்:— அல்ல; மரகதம் எழுதினாள்.

சந்தி:— அக்கடிதத்தில் வரையப்பட்டிருந்த விஷயத்தின் கருத்தென்ன?

சுந்:— இம்மாதம் மிதுனபுரியில் நடக்கும் ப்ரம்ம உற்சவத்திற்கு என்னை அவ்விடம் வரும்படி எழுதியிருந்தது.

சந்திர:— ஆனால் உற்சவத்திற்கு நீ மிதுனபுரி போவாயோ?

சுந்:— ஆம்; போகலாமென்றுதானிருக்கிறேன்.

சந்திர:— மிதுனபுரியில் நீ தங்கும் ஒவ்வோர் தினத்தையும் வெகு ஜாக்கிரதையாய் கழிக்கவேண்டும், நமது சிறிய தகப்பனார் வீடுதானே என்று பராமுகமாய் இருக்கக் கூடாது. நின்பால் கொடிய துவேஷத்தை பூண்டுள்ள அனுமந்தனுடைய சூழ்ச்சிகள் பலவிருக்கும் என்பதை நினை.

சுந்:— எவ்வாறான சூழ்ச்சிகளினின்றுந் தப்பவைக்கக் கடவுளையே நம்பியிருக்கிறேன். நாம் மனப்பூர்வமாக ஒருவருக்கும் தீங்கிழைக்காமலும் தீங்கிழைக்க நினையாமலுமிருப்பின் நமக்குக் கடவுள் துணை செய்வார் என்பது உண்மை.

சந்திர:— நம்மைக் காக்கக் கடவுள் இருப்பினும், நாம் இருக்கும் ஜாக்கிரதையில் இருக்கவேண்டுவது கடமை. சரி அஃதிருக்கட்டும் நாம் இங்கு நடக்கும் காலக்ஷேபத்திற்குப் போகலாம் வா. சந்திரசேகரனும் சுந்தரனும் இருவருமாக கோயில் மண்டபத்தில் நடக்கும் காலக்ஷேபத்திற்குப் போய் கேட்டிருந்து முடிந்தவுடன் அவாளவாள் கிரகத்திற்குப் போய்விட்டார்கள்.

மறுதினங் காலையில் சுந்தரன் தன் தகப்பனாரிடம் சென்று, தான் மிதுனபுரிக்குப் போக விடையளிக்க வேண்டுமென்று கேட்டான். தன் குமாரனது மனம்போல நடக்க வேண்டுமென்பது குணலய முதலியாரின் கொள்கை, ஏனெனில் சுந்தரன் எவ்விதத்திலும் தனது தந்தைதாய் வாக்கியத்திற்குக் கட்டுப்பட்டவன். சுவல்ப காரியத்தையும் தனது பெற்றோர்களின் அனுமதியின்றிச் செய்ய மனங்கொள்ளான். அதனால் அவனை ஈன்றோர்க்கு அவன்பால் நிரைந்த அன்பு. பெற்றோரன்றி மற்றோரும் சுந்தரன் என்றால் விரும்புவார்கள். அவன் பாடசாலையை விட்டு நின்ற பிறகும், வைத்தீஸ்வரன்கோவில் கிராமத்தின் சிலபகுதிகளே அவன் அறிந்தது; என்றாலும் சந்திரசேகரனை அறியாதாரில்லை, சுகுணத்தில் மேம்பாடடைந்திருப்பதுந் தவிர மீறிய செல்வவந்தர்

வீட்டுப்பிள்ளை யானதால் சகலரும் சுந்தரனைத் தெரிந்தே யிருந்தனர்.

நிற்க, தனது குமாரன் சுந்தரன் மிதுனபுரிக்குப்போக உத்தரவு கேட்ட வளவிலேயே குணாலய முதலியார் உத்தரவு கொடுத்து மறு தினமாகிய சுக்கிரவாரங் காலை மிதுனபுரிக்கு போகக் கட்டளை யிட்டார். சுந்தரன் சென்னையில் வாசித்திருந்தவன் தனது பரீக்ஷை முடிந்ததும் வைத்தீஸ்வரன் கோவிலுக்குவந்து விட்டான். அதுமுதல் வேறெவ்வூருக்கும் போகவில்லை. தான் சென்னையில் வாசிக்கும் போது விடுமுறைக் காலங்களில் மிதுனபுரிக்குப்போய் காலங்கழிப்பான் அவ்வூரில் இவனுக்கு சில சிநேகர்களும் உண்டு. ஆதலால் தான் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வந்தது முதல் மிதுனபுரிக்குப்போய் வரவேண்டுமென்கிற அவா அவனைத் தூண்டிக்கொண்டிருந்த தென்றாலும் தன் தகப்பனரின் உத்தரவைப் பெறவேண்டிய நிமித்தம் வாளாவிருந்தான். மிதுனபுரியிலிருந்து மரகதம் கடிதம் எழுதியவளவில், மனந்துணிந்து தன் தகப்பனரை உத்தரவு கேட்டு அவர் சம்மதத்தை யடைந்தான். மறு தினங் காலையில் வண்டி தயாராய் வந்து நின்றது. சுந்தரனும் காலைச் சிற்றுணவருந்தி தனக்கு வேண்டிய உடுப்புகளை யாத்திரைத் தகரப்பெட்டி நிரைய எடுத்துக்கொண்டு தன் நண்பனகிய சந்திரசேகரனை அழைத்து வரும்படி ஓர் ஆளை அனுப்பினன். உடனே சந்திரசேகரனும் சுந்தரன் வீட்டிற்கு வந்தான்.

சுந்:— சந்திரசேகரா! நான் உன்னிடம் கூறியவாறு மிதுனபுரிக்குப்போக என் தகப்பனரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டேன்.

சந்தி:— எப்போது போகப்போகிறாய்?

சுந்:— எப்போதா? தெருவில் பார் வண்டி நிற்கிறது.

சந்திர:— அம்மா! இவ்வளவு சீக்கிரத்தில் பயணம் குதிர்ப் பாடாய் விட்டதா?

சுந்:— குதிர்ப்படாமலென்ன? நான் என்ன மூட்டைக் கட்டப்போகிறேனா? அல்லது பெண்கள் சகிதம் புறப்படப் போகிறேனா?

சந்திர:— அப்பேர்ப்பட்ட காலம் வராமலாபோகிறது.

சுந்:—சரி அது இருக்கட்டும், நீயும் வருகிறாயா மிதுனபுரிக்கு?

சந்திர:— வரலாம் ஆனால்,

சுந்: — உன் தாயாரைக் கேட்கவேணுமோ?

சந்தி:— வேண்டாமா?

சுந்:— சரி நானே போய் கேட்டுக்கொண்டு வருகிறேன்.

சந்திர:— அப்படியானால் வா. இருவரும் போய் என் தாயாரிடம் உத்தரவு கேட்டுக்கொண்டு வரலாம்.

சுந்தரன் சந்திரசேகரனை அழைத்துக்கொண்டு அவன் தாயாரண்டைபோய் "மிதுனபுரிக்கு நான் போவதால் உங்கள் குமாரனையும் என்னுடன் அனுப்பிவையுங்கள் ஒரு வாரத்தில் வந்துவிடுகிறோம்" என்று கேட்டான். சந்திரசேகரனின் தாயார் தனது கணவன் இறந்தது முதல் தன் ஒரு பிள்ளையை மிகவும் அன்புடனும் சன்மார்க்கத்தில் சிறிதும் தவறாமலும் பாதுகாத்து வருவது வழக்கம், மேலும் கெட்ட நடவடிக்கை யுள்ளவர்களிடம் வசனிக்கவும் விடாள் ஆனால் சுந்தரனுடைய சகல நற்குணங்களையும் அறிந்தவளானதால் சுந்தரனுடன் மட்டில் நேசிக்கவும் பழகவும் விடுவாள். சுந்தரன் மிதுனபுரிக்குத் தன் மகனை அழைத்துக்கொண்டுபோவதாய்ச் சொன்னவுடனே சந்திரசேகரனுடைய தாயாருக்கு மனவருத்தம் உண்டாயிற்றென்றாலும், சுந்தரனுக்குத் தடுத்துரைக்க மனமில்லாது சம்மதப்பட்டாள். தாயாரின் உத்தரவு பெற்ற சந்திரசேகரனும் தனக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். சந்திரசேகரன் சுந்தரனைப்போல மிகுந்த செல்வவந்தன் வீட்டுப் பிள்ளை அல்லாவிட்டாலும், ஏழையல்ல, வைத்தீஸ்வரன் கோயி

யில் இவனும் கொஞ்சம் ஸ்திதியுள்ளவன் வீட்டுப்பிள்ளையே இருவருமாக வண்டியி லேறிக்கொண்டார்கள். மாலை நாலு மணிக்கெல்லாம் வண்டி மிதுனபுரிக்கு வந்துவிட்டது. கனக சபை முதலியார், சுந்தரனையும், சந்திரசேகரனையுங் கண்ட வளவில் மிகுந்த சந்தோஷத்துடன் வரவழைத்தார். கனக சபை முதலியார் என்பவர் சுந்தரனுடைய தந்தையாராகிவ குணலய முதலியாருடைய சகோதரர். இவர்கள் தந்தை காலத்தில் இராஜாங்கத்தில் உயர் பதவி உத்தியோகத்திலி ருந்து அநேகமான சொத்துகளைச் சம்பாதித்தார். அவரு க்கு வைத்தீஸ்வரன் கோவிலிலும் அதையடுத்த கிராமங்க ளிலும் விசேஷமான நிலங்கள் உண்டு. தவிரவும் மிதுனபுரி கிராமத்திலும் ஏராளமான பூஸ்திதி இருந்தது. மிதுனபுரி யிலுள்ள நிலபலங்களைக் கவனிக்கக் கனகசபை முதலியார் அவ்விடம் அனுப்பப்பட்டார். அதுமுதல் அவ்வூரிலேயே தங்கிவிட்டனர் கனகசபை முதலியார். குணலய முதலியார் வைத்தீஸ்வரன் கோவிலிலேயே இருந்துவந்தார். கனகசபை முதலியார், தனியே யிருந்தாலும் தன் தமையனார் உத்தர வின்றி எவ்வித காரியங்களும் செய்யமாட்டார். அற்பவிஷய மானாலும் அண்ணர் உத்தரவை எதிர்பார்த்து நடப்பது வழக்கம். வருஷ முடிவில் செலவு போக நின்ற பணத்தைத் தன் தமையனாரிடம் அனுப்பிவிடுவார். கனகசபை முதலி யாருக்கு இளமையிலேயே விவாகம் ஆயிருந்தும் சந்தான விருத்திமட்டில் கிடையாது. ஆயினும் தன் தமையனருக் குள்ள ஓர் புத்திரனை சுந்தரனை தன் புத்திரன்போலப் பாவித்துவந்தார். அதனாலேதான் சுந்தரனுக்கு மிதுன புரி வாசத்தில் மிக விருப்பம். கனகசபை முதலியார் சுந்தரனைக் கண்டவுடன் வைத்தீஸ்வரன் கோவில் க்ஷேம லாபத்தை விசாரித்துக்கொண்டு சந்திரசேகரனையும் அன் புடன் விசாரித்தார். அன்றிரவு போஜன மருந்தியதும் சந்திரசேகரனும் சுந்தரனும் சிலநேரங்கள் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது கனகசபை முதலியார் சுந்திரனிடத்தில் ஓர் சமாசாரப் பத்திரிகையைத் தந்தார் அதை வாங்கி, சந்திரசேகரனிடம் ஒரு காகிதத்தைக்கொடு

த்து மற்றொன்றைத்தான் படித்துக்கொண்டிருந்தான் சுந்தரன். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் சந்திரசேகரன் சுந்தரனைப் பார்த்து சுந்தரா! இதைப்பார் இவ்வருஷம், பீ. ஏ. பரீக்ஷையில் தேறிய நபர்களின் நம்பரைக் குறித்த ஜாபிதாவை விளம்பரப்படுத்தி யிருக்கிறது. உன் நெம்பர் என்னவென்றான். சுந்தரன் சந்தோஷத்துடன் அப்பத்திரிகையை வாங்கிப் பார்க்கையில் தன் நெம்பர் முதல் வகுப்பில் தேறிய நம்பர்களி லொன்றாயிருக்கக்கண்டு, அச்சேதியை சந்திரசேகரனுக்குச் சொல்லியதுந்தவிர, தன் சிறிய தகப்பனாருக்குத் தெரிவிக்க உள்ளே சென்றான், அச்சமயத்தில் கனகசபை முதலியார் கூடத்தில் ஊஞ்சற்பலகையின்மீது உட்கார்ந்திருந்தார். அருகில் அவர் மனைவியான மனோன்மணியம்மாளும் நின்றுக்கொண்டிருந்தார்கள். சுந்தரன் துரிதமாய் வந்து கனகசபை முதலியாரிடம் தான் பீ. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பிற்றேறி இருப்பதைச் சொன்னான். உடனே மனோன்மணியம்மாள் சுந்தரனுக்குத் திருஷ்டி கழித்தாள். சந்திரசேகரனும் அவ்விடம் வந்து சேர்ந்தான். ஷை நால்வர்களும் அரைமணிநேரம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்து பின்பு அவரவர் படுக்கைக்கு போய்விட்டார்கள். சந்திரசேகரனுக்குக் கூடத்து ஊஞ்சற் பலகையின்மீது படுக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. சுந்தரன் தான் வரும்போது வழக்கமாய்ப்படுக்கும் அறைக்குள் சென்றான் சுந்தரன் வந்திருப்பதை யறிந்தப் பணியாளர்கள். அவ்வறையைச் சுத்தஞ் செய்து கட்டிலின்மீதுள்ள மெத்தைத் தலையணைகளையெல்லாம் சுத்தமாக்கிப் போடப்பட்டிருந்தது. கட்டிலுக்கருகாமையிலுள்ள வட்டமேஜை யொன்றின்மீது, சந்திரவொளி விளக்கு வைக்கப்பட்டிருந்தது. சுந்தரன் அக்கட்டிலின்மீது படுத்துக்கொண்டான்.

கூடத்தில் சுந்தரன், சந்திரசேகரன், கனகசபை முதலியார், மனோன்மணியம்மாள் இந்நால்வரும் வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் பின்கட்டு வாசற்படிக் கதவண்டையிலிருந்து ஓர் பெண்மணி சுந்தரனை அதிக ஆவலோடும் சந்

தோஷத்தோடும் பார்த்துக்கொண்டு இருந்தாள். அவள் யாரெனின், சுந்தரனுடைய அத்தையின் மகள். அவளுடைய தாய் தகப்பனார் இளமையிலேயே காலமாய் விட்டதனால் அதுமுதல் அவ்விளங்கொடியாள் தன் அம்மானான கனகசபை முதலியாரின் மனைவியான மனோன்மணியம்மாள் தனக்குப் புத்திரப்பேறு இன்மையால் அக்குழந்தையை ஈன்ற மகவுக்கும் எண்மடங் கதிகமாகவே பாவித்து "மரகதம்" என்கிற நாமம் சாற்றி வளர்த்து வந்தார்கள். மரகதம் ஏழுவயதிற்கெல்லாம் உலகில் இனியில்லையென்ற அழகும் தேஜசும் பெற்றாள். ரோஜா மலரின் வர்ணத்தை யொத்த அவளது இரண்டு கன்னங்களும், வேல்போலும் உருவத்தை யுடைய இருவிழிகளும், முத்துப்பந்திகளென்ன வமைந்த தந்த ராசிகளும், சுவர்ணம்பொன்ற தேக காந்தியும், தவத்தினர் மனதையும் கவருந்தன்மையதாயிருந்தது. இஃதோடா நின்றது. கல்வியிலுங் கலைமகளை யொத்திருந்தாள். மரகதத்தின் அழகையும், கல்வியையும், குணத்தையுங் கண்ட கனகசபை முதலியார் மனம் சுந்தரனுக்கு இவளை விவாகம் செய்து பார்க்கவேணுமென்று தூண்டிற்று. இச்சேதியை தன் மனைவியான மனோன்மணி அம்மாளிடமும் அநேக விசைகளில் கூறுவதுண்டு. அந்தம்மாளும் அதே எண்ணத்தை மனதிடங் கொண்டிருந்தாள். சுந்தரனுந் தனது விடுமுறைக் காலங்களில் மிதுனபுரியில் வந்து சிலநாள் தங்கியிருத்தல் வழக்கமென்பதை முன்னமே நேயர்கள் அறிந்த விஷயம். அவ்வாறு சுந்தரம் இதற்கு முந்தி மிதுனபுரிக்கு வந்திருக்குங் காலங்களில் மரகதம் புஷ்பிணியாகாத சிறுவயதினளாயிருந்தமையால் சுந்தரனும் மரகதமும் அநேகமாய் கலந்து வார்த்தையாடுவதும் வேடிக்கையாய் ஒருவர்க்கொருவர் பரிகசித்து விளையாடுவதும் உண்டு. ஆயினும் சுந்தரன் மரகதத்தின் எழிலையும் குணத்தையுங் கண்டு எவ்விதத்திலும் இவளை நாம் மணம் புரியவேண்டும் என்று எண்ணுவான், அவ்விஷயத்தை மரகதத்தினிடம் கூறுவதில்லை. மரகதமோ சுந்தரன் கொண்டிருக்கும் காதலினும் பதின்மடங் கதிகமாகக் கொண்டிருந்தாளெனினும், அவ்

வெண்ணத்தைத் தானும் வெளியிடாமல் மனதிலேயே வைத்திருந்தாள். அநேகமாக சுந்தரனுக்கு மரகதமே அன்னம் போடுவது வழக்கம். இவ்விருவரும் இவ்வளவு நேசமாயிருத்தலைக்கண்ட கனகசபை முதலியாரும் மனோன்மணியம்மாளும் உள்ளுக்குள்ளே பரவச மடைவார்கள். சுந்தரன் சென்னையிலிருந்து தன் சிறிய தகப்பனருக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் மரகதத்தின் க்ஷேமத்தை விசாரித்தெழுதுவது வழக்கம். கனகசபை முதலியாரும் தான் எழுதும் கடிதங்களின் முகப்பிலேயே "மரகதம் முதலிய சகலரும் க்ஷேமம்" என்றெழுதுவார். இவ்வாறிருக்கையில் மரகதம் புஷ்பிணியானாள். அதற்குச் செய்யவேண்டிய சடங்குகள் நடத்துங் காலத்தில் சுந்தரனும் வந்திருந்தான். என்றாலும் அச்சமயம் சுந்தரன் இரண்டு தினங்களே ரஜாபெற்று வந்திருந்தான். அத்தடவையில் மரகதத்துடன் ஒரு வார்த்தையும் பேச வாய்க்கவில்லை. மரகதத்தின் முகத்தையும் நிதானித்துப் பார்க்கவில்லை. மறுபயணம் இதுவே சுந்தரன் வந்தவுடன் மரகதத்தைப் பார்க்கவேணும் என்கிற அவாவிருந்தும், வயதுவந்த பெண்களை விடாடவர்கள் காணப் பிரயத்தனப்படுவது தகுதியல்லவென்பதை யுணர்ந்தவனாதலால் வாளாவிருந்தான்.

மரகதம் சுந்தரனைக் கண்டதுமுதல் அவனிடம் வார்த்தையாடவேணும் என்கிற ஆவல் மிகுந்திருந்தும், தன் மீறிய அன்பால் நாலுபேருக்கு மத்தியிலுள்ள சுந்தரனுடன் பேச அடிக்கடி எண்ணங்கொண்டும் தன் அறிவால் அதைத் தடுத்தவளாயிருந்து, பிறகு தன் சயன அறையிற்போய்ப் படுத்துக்கொண்டாள். படுத்தாலும் நித்திரை வரவில்லை. சுந்தரன் மறைவிலிருக்கும்போதே நிதம் இரவில் அவனை நினைந்து வருந்தும் மரகதம், காதலனை எதிரிற் கண்டும் அவனுடன் வார்த்தையாடாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறவளுக்கா தூக்கம் வரும். தூக்கம் பிடிக்கவேயில்லை. விழித்துக்கொண்டிருக்கையிலேயே சுந்தரன் தன்னறைக்கு வந்

ததுபோலக் கனவு காண்பாள். மறுபடி தன் மனதைத் திடப்படுத்திக்கொள்வாள். சுந்தரனை எதிரிற்கண்டால் பேசும் பாவனையாய்ச் சில வார்த்தைகள் பேசிக்கொள்வாள். தன் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாத வண்ணம் தேகம் சோர்வாள், தன்னையும் அறியாது குவளைமலர் போன்ற விருவிழிகளிலும் நீர் விடுவாள். முடிவில் பித்தங் கொண்டவளைப் போல விருந்தாள்.

அதாவது :

" அல்லலுற்றழுங்கும் வாடும் ஆவிசோரு மெல்லிதழ்
பல்லவங்கள் தீயுமாறு பாயலிற்படுத்திடும்
ஒல்லையிற் பதைக்குகெட் டுயிர்ப்புவீங்கும்வார்கழை
வில்லிவாளி தன்னையார் விலக்குவார்கொலென்னுமால்"

என்பதை யொக்க விருந்தது மரகதத்தின் நிலைமை, மேலும் அன்றையதினம் அவள் கொண்ட மோகம் அணைகடந்த வெள்ளத்தை யொத்தது, அன்றிரவு சுந்தரனைக்காணு விடில் கட்டாயமாய் அவள் உயிர் துறக்குமென்றே சொல்லலாம். மரகதத்தின் மோகமானது படிப்படியாய் தோன்றினால் நாளா விர்த்தியில் அதைத்தணிக்க இயலும்.

" இறங்குதுறையில் நீத்தாயிற்றென்ன மாயையிடத்துமயல்
பிறந்தபொழுதே யுயிராளவாய் நின்றது "

என்னும் செய்யுளுக்கொக்க ஆரம்பத்திலேயே மரகதத்திற்கு மீறிய மோகம் உண்டாய்விட்டது, என் செய்வாள் மரகதம்; "சரி இனி இங்கிருந்தால்முடியாது, மணியோ பனிண்டிருக்கும்; வீட்டில் சகலரும் நித்திரை போகிறார்கள், இச்சமையத்தில் நாமே சுந்தரன் சயன அறைக்குப்போய் வார்த்தையாடி வருவோம்" என்று எண்ணி தன் அறையை விட்டு வெளியில் வந்தாள். இருள் நிறைந்திருந்தது. முன்கட்டுக்கு வந்தாள். கூடத்தில்

ஊஞ்சற் பலகையின்மீது சந்திரசேகரன் தூங்குவதைக் கண்டாள். சற்று அஞ்சினாள்.

ஆயினும் சுந்தரனுடன் பேசவேணும் என்கிற அவா மிகுதியால் அதையுங் கவனிக்கவில்லை. நேரே சுந்தரன் படுத்துக்கொண்டிருக்கும் அறையண்டை வந்தாள். கதவு கொஞ்சம் திறக்கப்பட்டிருந்தது. சந்தின் வழியாகப் பார்த்தாள். விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. கட்டிலின்மீது சுந்தரன் சயனித்துக்கொண்டிருந்தான். மனந்துணிந்து கதவை மெதுவாய்த் திறந்து உள்ளே சென்றாள். மறுபடி கதவை மெள்ளச் சாத்திவிட்டாள்: மங்கலாயெரிந்து கொண்டிருந்த தீபத்தை சற்று தூண்டினாள். சுந்தரனுடைய முகவிலாசத்தைக் கண்டாள். முன்னையினும் சுந்தரன் முகம அதிக வனப்புடையதாகத் தோன்றிற்று. அதேனென்றால் சில மணி நேரத்திற்குமுன் தான் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியதாகப் பத்திரிகையில் கண்டதே சுந்தரனுடைய முக மலர்ச்சிக்குக் காரணம். மேலும் ஒவ்வொருவருக்கும் தாம் இச்சித்த வஸ்து எத்தகைமைத்தாயினும் உசிதமாகவே தோன்றும். அதுபோல் மரகதம் சுந்தரன்மீது அளவுகடந்த அன்பை வைத்திருப்பதால், சுந்தரன் முகம் முன்னையிலும் வனப்பு அதிகமென்று தோன்றிற்று. மரகதம் மறுபடி உற்றுப்பார்த்தாள். மரகதத்தின் மனம் ஒருவித உணர்வை அடைந்தது. இயற்கையிலேயே சுந்தரன் சுந்தர புருஷனே. அவனது தேகம் முழுதும் சட்டையாலும் வஸ்திரத்தாலும் மூடப்பட்டிருந்தது. முகம்மட்டில் பிரகாசத்துடன் தோன்றிற்று. அம்முகத்திற்கு சந்திரனை உவமானங் கூறலாமென்றால்.

அதாவது:

“ விளிம்புறநடுக்களங்கம் வீழ்ந்துசூழ்மதியொன் றுண்டேல்
வளங்கெழுமயிரொழுங்கு வள்ளல்வாண் முகநிகர்க்கும்
துளங்குறுமுந்திமேற்போய் மார்பிடைத்தோன் றுரோமம்
இளங்கருநளினமுண்டேல் ஏய்க்குமென் றியம்பினான்.”

என்றவாறிருந்தது. சுந்தரனைப் பார்க்கப்பார்க்க மரகதத்தின் காதல் அதிகரித்துக்கொண்டே வந்தது. சுந்தரனைத் தட்டி எழுப்ப நினைத்தாள். ஆயினும் கன்னிகைப் பருவத்தினளான நாம் விவாகத்திற்கு முன் ஒரு ஆடவனைத் தீண்டல் தரும சாஸ்திரத்திற்கு விரோதமல்லவா என்று நினைத்தாள். (இதை வாசிப்பவர்கள். தொட்டெழுப்பினால் கற்புத்தவறும் என்று நினைத்தனளே! மனதால் நினைத்தளவிலேயே கற்புத்தவறவில்லையா? "சொல்லால் வருங்குற்றம் சிந்தனையால் வருந்தோஷம்" என்பது போல, ஓர் ஆடவனை மனதினால் எப்போது காதல் கொண்டனளோ அப்போதே கற்புத் தவறின மாதரியே எண்ண வேண்டாமா? என்று யோசிக்க இடமுண்டாகும். என்றாலும் கன்னிகைப் பருவத்தையுடைய பெண்கள் தங்கள் மனதில் ஓர் ஆடவனைக் காதலுறல் நீதியே; ஆயினும் ஒருவனைக் காதலித்துப் பின்னும் பலபேர்கள்மீது காதலைச் செலுத்தல் கற்புத்தவறியதாகுமே யொழிய ஒருவனைக் காதலுறல் கற்புத்தவறியதாகாது இவ்வண்ணம் விவாகத்திற்குமுன் ஒரு விடனைக் காதலுற்று அவனை மணந்து தங்கள் கற்பை நிலைநிறுத்திய மாதர்கள் அநேகர் உளர்.) இவ்வாறு மரகதம் சுந்தரனது காட்மாட்டில் நின்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், சுந்தரன் தற்செயலாய் விழித்தான். தன்னருகில் அழகே உருவெடுத்தாலென்ன ஓர் வனிதை நிற்கக்கண்டான். அவளை இன்னாள் என்று உடனே தெரிந்துகொள்ள இயலவில்லை, ஏனெனில் மரகதம் பூப்படைந்த பின்பு கவனித்துப் பார்க்காதவனாதலாலும் நித்திரையிலிருந்து விழித்தவனாதலாலும் சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. சுந்தரன் தன்னை இன்னாளென்று தெரிந்துகொள்ளாமல் பிரமிக்கிறான் என்று தெரிந்துகொண்டாள் மரகதம், தான இன்னாளென்று சொல்ல வாயெடுத்தாள். மெய்சிலிர்த்தது. உடல் நடுங்கிற்று. நாக்குளரிற்று, கண்களின் இமை துடித்தன. இருவிழிகளிலும் நீர் தாரை தாரையாய் வடிந்தது. மார்பு இடித்தது. இதனால் அவளும் பிரம்மம் சாதித்தாள். இதற்குள் சுந்தரன் தன்னெதிரில் நிற்பவள் இன்னாளென்றறிந்து கொண்டு, சமே

லென்றெழுந்து, மரகதம் என்ன! இந்நள்ளிரவில் தனியாய் இவ்விடம் வந்தாயே யாராவது பார்த்தால் என்ன நினைப் பார்கள் என்றான்.

மரகதம்:— நம் மனசாட்சிக்கு விரோத மில்லாமல் நடந்துக் கொண்டால் அதில் பாபமில்லையல்லவா?

சுந்தரன்:— மனச்சாக்ஷிக்கு விரோத மில்லாமல் நடந்து கொள்வது ஒருவாறிருக்கட்டும். முதலில் உலகோர் சம்மதத்திற் கொக்க நடத்தலவசியம்.

மரக:— சரி அதிருக்கட்டும், நீண்டகாலமாக காணாத உங்க ளைக் காணவந்தால் ஏன் வந்தாய்! என்கிறீர்களே, வெகு நன்றாயிருக்கிறது. இதற்குத்தானா உங்களுக்கு கடிதம் எழுதி வரவழைத்தது?

சுந்த:— மரகதம்! உன்மீது எனக்கிருக்கும் பட்சத்தை நான் வெளியிடுங் காலத்தை எதிர்பார்க்கிறேன். அஃது எப்போது கைகூடுமோ என்று, மரகதத்தின் காந்தட் புஷ்பத்தை யொத்த மிருதுவும் சிவந்ததுமான கரத் தைப் பிடித்தான் (சுந்தரன் மரகதத்தின் கையைப் பிடித்தது கெட்ட எண்ணத்தினாலல்ல. இதற்கு முன் (மரகதம் பூப்படையாமுன்) தொட்டு விளையாடுந் தன் மை வாய்ந்திருந்ததினால் பழைய வழக்கப்படி தொட் டான்)

மரக:— (சுந்தரன் பிடித்த கையை வாங்கப் பிரயத்தனப் பட்டுக்கொண்டே தலைகுனிந்து மேற்பார்வையாய் சுந்த ரனைப் பார்த்து) என்ன! தாங்கள் தெரிந்தவராயிருந் தும் இக்காரியம் செய்யப் பிரயத்தனப்பட்டீர்கள்?

சுந்த:— என்னகாரியம்?

மரக:— என்ன காரியமா? தாங்கள் இப்போது என்னசெய்து கொண்டிருக்கிறீர்கள்?

சுந்த:— என்னசெய்துகொண்டிருக்கிறேன்? ஒன்றுமில்லையே

மரக:— தங்கள் கை எங்கே இருக்கிறது?

சுந்த:— உடனே கையை விட்டுவிட்டு, மரகதம்! கோபம் வேண்டாம்; எவ்வாறான துர்எண்ணத்தைக் கொண்டும் அவ்வாறு செய்யவில்லை. வழக்கம்போல் செய்தேன்.

மரக:— "சொற்றநீர், நில்லாததென்று நானுரைப்ப நேர்ந் தொருவன் சொல்லாமே சூழ்ந்துசொலல்" என்னும் குமரகுரு சுவாமிகளின் வாக்கை மறந்துவிட்டீர்களோ?

சுந்த:— ஏன் அவ்வாறு கூறுகிறாய்?

மரக:— இல்லை "உலகோர் சம்மதத்திற்கு உடன்பட்டுநடத்த அவசியம்" என்று தாங்கள் எனக்குக் கூறி, இப்போது தாங்கள் இவ்வாறு செய்ததைப்பற்றிதான் அவ்விதம் கூறினேன். "யார்க்கும் சொல்லுதல் எளிது, அவ்வண்ணம் நடழுதல் அரிது" என்பது சகசம் தான் அதிருக் கட்டும் நான் எழுதிய கடிதம் சேர்ந்ததோ?

சுந்த:— சேர்ந்துதான் வந்தேன்.

மரக:— உங்களுடன் வந்திருப்பவர் யார்?

சுந்த:— என் சிறுவயது முதல் உண்மையாய் நேசித்து வந்த எனது உயிர்த்தோழன்; மேலும் அவனும் நமது மரபே;

மரக:— அப்படியானால் இதுவரையில் தாங்கள் வரும்போது அவர் வந்ததில்லையே.

சுந்:— ஏதோ அசந்தர்ப்பத்தால் வரவில்லை. இப்போது வந்தான்.

மரக:— தாங்கள் எவ்வளவு தினங்களிலிருந்தாலும் அவரும் இருப்பாரா? அல்லது முன்னாடி போய்விடுவாரா? இரண்டுபேரும் துரிதமாய்ப்போக எண்ணங்கொண்டு வந்தீர்களா?

சுந்த:— நான் எத்தனை நாளைக்கிருந்தாலும் அவனுமிருப்பான்.

மரக:— நான் ஒன்று கேட்கவே வந்தேன். அதாவது தங்கள் மீது எனக்கு அளவிலாத அன்பைக் கடவுள் தந்திருக்கிறாரே அது தமது ஆயுள்வரை நிலை நிற்குமா? அல்லது மத்தியில் பிளவு படுமோ? என்பதுதான். பிளவுபடுமோ என்றதனால் வேறுவித அர்த்தங் கொள்ளவேண்டாம். அதாவது, தாங்கள் என்னையே மணந்து என் ஆவலை என் வாழ்நாளின் இறுதிவரை நிலைநிற்கச்செய்வீர்களா? அல்லது தங்கள் மனதுக்கிசைந்த என்னிலும் அழகான வனிதையை மணந்து அடியாளை உயிர் நீங்கச் செய்வீரா? என்பதுதான் கேள்வி. இதற்குத் தாங்கள் யோசித்து கடவுளின்மீது ஆணையாய் உண்மையைச்சொல்ல வேணும்.

சுந்த:— மரகதம் “அமிர்தம் உண்ணும் வாயால் விஷத்தை யுண்பாரோ பேயாய்” என்பதுபோல அடிநாள்முதல் பழகிய உன்னையன்றி பிரிதொரு வுத்தமியையும்மணக்க உள்ளத்திற் கொள்வேனோ? மதியின் காந்தியையும்மறைக்கச்செய்யும் மாவழகுடைய மங்கையர் திலகமே! ஆருயிர்தனிலும் அன்பாய் நிற்கும் அணங்கி நல்லாய் எத்தனைத் துன்பமும், அல்லது எத்தனைச் செல்வமும் உன்னை நீங்குவதால் எனக்குறுவதானாலும், நின்னை நீங்கச் சற்றும் இயலேன் என்பது உண்மை. நின்னையன்றிப் பிறரை நான் மணக்கின் பஞ்சமா பாதகன் போகும்கதியில் போவேன்.

மரக:— பஞ்சமா பாதகம் என்பது ஒன்று தனியேயுள்ளதோ? அதன் விபரம் அடியாளுக்கு விளங்கவைப்பீர்.

சுந்த:— பாப கிர்த்தியங்களில் சில உள. அவைகளில் எதை செய்தாலும் பஞ்சமா பாதகங்களைச் செய்தவனாகிறான். அதாவது உவமானமாக.

“கற்பழி மனைவியோடு கலந்திருப் பவனுமற்றோர்
பொற்புடை மனைவிதனைப் புணர்வதற்கெண்ணுவானும்

சொற்பொரு ளுணகத் திறனைத் தொழுவுள னுறுவானும்
விற்பன வுலாவதுவிற்று மெய்வளர்த் தழிகுவானும்."

"நிந்தைசெய் புணவினுனும் நிருமலன் பூசையின்றி
வந்துணை யுருந்துவானும் மறுத்தலு னுகர்விப்பானும்
தந்தநல் வினையாற்செல்வம் சார்ந்தவர் தம்மைக்கண்டு
சிந்தனை பொருதழுங்கித் தீர்விலுண் மகிழ்வான் றானும்."

என்பதைப்போன்ற பாவங்களைச் செய்பவர்களே பஞ்சமாபாதகர்கள் எனப் பகரப்படுவர். பஞ்சமா பாதகர்கள் தங்கள் இறுதிக் காலத்தில் இகத்தில் அனுபவிக்கும் கோரமான துன்பத்தினும் பரலோகத்திற்கெய்தி ஆங்கு காலதூதுவரால் அடையும் துன்பத்தைக் கூறவும் நாவெழாது. அதனைப் பிறர்கூறக் கேட்கும்போதும் புராண வாயிலான் வாசிக்கும் போதும் அதனைப்பற்றி நினைக்கும்போதுமே சான்றோர்கள் மனம் நடுங்கும் என்றால், அதை அனுபவிப்பவரின் கதி எவ்வாறு யிருக்குமென்பதை நீயே யறியலாம். அதாவது பிறர் மனை நயந்தவனை பழுக்கக்காய்ந்து கனகன வென்றிருக்கும் இருப்புத்தூணைத் தழுவச் செய்வதும், பெரிய இருப்புக் கடாரத்தில் தளதள வெனக்கொதிக்கும் எண்ணெயில்தோய்த்துத் தோய்த்தெடுப்பதும், கீழே படுக்கவைத்து வாச்சி (தச்சன்மரம் சீவுங்கருவி)யினால் தேகத்தைச்சீவுவதும் காய்ச்சிய ஈயக்குழம்பை, பெரியோர்களையும் கற்றவர்களையும் தூஷித்தவன் வாயில் ஊற்றுவதும் இன்னம் அநேகமான கொடுமைகளையெல்லாம் பாபிகளை காலதூதுவர்கள் இரக்கமின்றிச்செய்வார்கள். ஆனதால் நான் உன்னையன்றி பிறரை மணந்தால் மேற்சொன்ன துன்பங்களை அனுபவிக்கும் பஞ்சமா பாதகனுவேன் என்பதை அறி என்றான்.

மரக:— தாருகாவனத்து விருடி புங்கவர்களின் மாதர்களைக் கற்பழிக்க கருதி எப்பெருமான் திரண்ட அழகுவாய்ந்த உருவம் எடுத்ததுபோல, அடியாளின் மனத்திடத்தை அகற்றவந்த அங்கஜன் போன்ற மன்னு! பாதகமே உருவெடுத்துவந்த என்னின் னிமித்தமாகவா தாங்கள்

தாங்கொணாத வருத்தமடையும் ஆணையை தரிக்கிறீர் ? வேண்டாம் அவ்வித ஆணைகள். தாங்கள் திருவுளம் மட்டில் என்பாற் பிணிப்பில் அதுவே சாலும். தங்களைச் சதா கண்டானந்திக்குமாறு தங்களின் அழகிய விரலில் தரிக்கும் பாக்கியம்பெற்ற அக்கணையாழியை மட்டில் என்னிடம் தாரும். அவ்விரல் வெறுமனே இராமல் சிறியாளினது அழகற விரலி லணிந்திரானின்ற இக் கணையாழியை அணியும் என்று, தானே சுந்தரன் விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி தன் விரலிலணிந்துகொண்டு தன் விரலிலிருக்கும் மோதிரத்தை கழற்றி சுந்தரனை அணிந்து கொள்ளும்படி கையை நீட்டினாள்.

சுந்த:— மரகதம்! நீ செய்தால் மாத்திரம் பிசகில்லை. நான் செய்தால் அதைக் குரூரமாகப் பாவித்துக் கேள்விகள் கேட்கிறாய். நீயே என்னைத் தீண்டி என் விரலிலணிந்திருந்த இலச்சினியைக் கழட்டலாமோ? தவிரவும் நின்னையான் தீண்டும்படி நினது மிருதுவாகிய கரத்தை எனக்குக் காட்டலாமா? என்று வேடிக்கையாய்க் கேட்டான்.

மரக:— நாணித் தலைகுனிந்து, நாதா! என்னை அவமானப் படுத்துகிறீர்களா? நான் தங்களையன்றி பிறரை மணப்பதில்லை யென்றும் தாங்கள் என்னையன்றி மற்றொரு வனிதையை வதுவை செய்வதில்லை யென்றும் நாம் ஒருவருக்கொருவர் நிச்சயப்படுத்திக்கொண்டபின் னன்றோ தங்களைப் பரிசித்தேன். நம்மிருவரும் வதுவரர்களாயிருக்கும்படி பிரமன் வகுத்துள்ளதால் தான் எனக்கு இவ்வெண்ணம் உதித்தது. அன்றேல் உண்டாகாது.

அதாவது:

"சந்திர கலையால் நெக்குநீர் பொழிவ
சந்திர காந்தமே யல்லால்

அந்தர சாதிச் சிலையினுண் டாகா
　　தவள் இவன் மனைவியென் றயனார்
முந்தவே விதித்த விதியினா லடங்கா
　　மோகமுந் தாகமு மிருந்து
புந்திகெட் டறிவு நிறைபொறை தோற்றம்
　　போக்கினன் யாக்கையுந் தளர்ந்தான்."

என்று அரிச்சந்திர புராணத்தில் கூறியுள்ளது தங்கட்கு நினைவிருக்கு மல்லவா?

அரிச்சந்திரன் பிரமச்சரிய விரதத்தில் நிலை கலங்காமல் அரசோக் சுபவனுகை விருந்தும் சந்திரமதியைக் கண்டவளவிலே மோகித்தானே. அப்போது அவன் பிரமச்சாரி விரதம் கலையவில்லையா யென்று சந்தேகிக்க வேண்டாம் சந்திரமதி அரிச்சந்திரனுக்கு மனைவியென்று முன்னமே பிரமன் த்துள்ளதால் தான் சந்திரமதியைக் கண்டவளவில் அரிச்சந்திரன் காமுற்றான் என்பதை விளக்கும் செய்யுள்போல நானும் காமுற்றேன், அதனால் பாதகமில்லை. ஆயின் இனி இப்பிறவியில் எவ்வகையிலும் அன்னிய ஆடவரை மணக்க மணங்கொள்ளேன். மனச்சாக்ஷிக்கு விரோத மில்லாமல் நான் அவ்விதம் நடந்துகொள்ளும் பக்ஷத்தில் மேற்படி பாவம் கிஞ்சிற்றும் என்னை அணுகஅஞ்சும் என்பதை உண்மையாய்க் கொள்ளுங்கள் என்றாள் மரகதம்.

சுந்த:— அதெல்லா மிருக்கட்டும் கடியாரம் மணியடித்ததே அதை கேட்டாயா?

மரக:— எத்தனை யடித்தது?

சுந்த:— இரண்டு

மரக:— இரண்டுதானே; ஆனாலென்ன? இன்னும் ஒருமணி நேரம் இருக்கலாம்.

சுந்த:— இருப்பதற்காகச் சொல்லவில்லை, யாராவது என்ன எண்ணுவார்கள்.

மரக:— நாம் என்ன செய்துவிட்டோம் யாராவது சொல்ல?

சுந்:— என்னதான் வாசித்திருந்தாலும், பெண்களுக்கு பின்புத்தியென்று முதியோர் சொல்வதில் பிசகில்லை, நாமிருவரும் நள்ளிருளில் தனி அறையில் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தால் போதாதா? "தாலநிழற் கிழிருந்தான் தான் பாலருந்திடினும் பாலதெனச் சொல்லுவாரோ பார்" என்பது அறியாததா? நாமிருவரும் சத்தியத்திற்குட்பட்டுதான் நடக்கிறோம்

"தேவையார் செவ்விளநீர் உண்ணுப் பழிசுமப்பார்
காரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய்ப்பொன்சொரியும் கொல்லிமலை நன்னுடா
ஊரைவாய்மூட உலைமூடி தானிலையே"

என்று கம்பர் கூறியதைப் போலே ஊர் வாயை மூடமுடியாது. நான் இன்னம் சிலநாளைக்கிருப்பேன், சந்தர்ப்பப் பட்டால் மறுபடி வார்த்தை சொல்லிக்கொள்ளலாம், நீ போய் படுத்துக்கொள், யாரும் விழித்துக் கொள்ளாததற்கு முன்னமே என்றான்.

மாகதம் சுந்தரனிடம் செலவு பெற்றுக்கொண்டு மெள்ளக் கதவைத் திறந்து தன்னறைக்கு வந்து கட்டிலின்மேல் படுத்துக்கொண்டாள். அப்போது கடியாரத்தில் அரைமணி யென்று குறிக்க ஒரு அடி அடித்தது. மாகதம் மணி இரண்டரை யென்பதை அறிந்தாள். தன் படுக்கைமீது படுத்துக் கொண்டாள். தானும் சுந்தரனும் பேசிக்கொண்டதையெல் லாம் மறுபடி ஒருக்கால் எண்ணினுள். ஐயோ இன்னம் சற்றுநேரம் அவரிடம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்காமல் வந்துவிட்டேனே என்று வருந்தினுள். சுந்தரன் வடிவமே இவள் கண்முன்னின்றது. நினைவெல்லாம் அவனை எப்போது மணந்து சுகிப்போம் என்றிருந்தது. கண்கள் மீளவும் சுந்தரனை எப்போது பார்ப்போம் என்று இருந்தது. இவ்விதமாக மரகதம் நெடுநேரம் என்று எண்ணும்படியான

காலம் யோசித்திருக்கையில் கடியாரம் மூன்றடித்தது. ஆச்சரியப்பட்டாள் என்ன கடியாரம் தப்போ என்று நினைத்தாள், கடியாரந் தப்பல்ல; இவள் யோசனையில் நெடுநேரம் போல் தோன்றிற்று; ‘‘மாளாதிமையோ ருகமாகுது’’ என்பது போல கொஞ்ச காலமும் நீண்ட காலமாக வெண்ணினாள். என்னதான் கஷ்டப்பட்டும் நித்திரை யென்பது சிறிதும் வரவில்லை. இரண்டொரு நிமிஷம் கண்ணயர்ந்தால், சுந்தரனிடம் வசனிப்பதுபோல் மரகதத்திற்குத் தோன்றும்.

உடனே விழித்துக்கொண்டு பற்பல வாறாய் எண்ணுவாள். இம்மாதிரி ஆறு மணிவரையில் நித்திரை செய்யாமலே காலத்தைப் போக்கினாள், ஆறுமணிக்கு ஒருவிதமான சோக்க நித்திரை வந்தது. மணி ஆறரையாகியும் மரகதம் எழுந்து வெளி வராததினால் மனோன்மணியம்மாள ஆங்கிருந்த மரகதத்தின் ஸ்நேகியாகிய பார்வதவர்த்தனி யென்னும் அண்டைவீட்டு பெண்ணைப் பார்த்து அடியம்மா! உன் கூட்டாளி இன்னம் எழுந்திருக்கவில்லை போய் எழுப்பு என்றாள். பார்வதவர்த்தினியும் மரகதம் படுக்கையறையின் கதவண்டை போய் உள் தாழ்ப்பாள் இட்டிருப்பாளென்கிற எண்ணத்தினால் கதவைத் தட்டினாள் கதவு திறந்துகொண்டது. மரகதம் கட்டிலின்மீது உறங்குவதைக் கண்டாள்; அருகிற் சென்று தட்டி எழுப்பினாள். உடனே மரகதம் எழுந்து, பார்வதம்! மணி என்னவிருக்கும்? நான் அயர்ந்து தூங்கிவிட்டேன், ராத்திரி சுமார் ஒருமணி வரையில் ஒரு கதையைப் படித்துக்கொண்டிருந்தேன். பின்பும் ரொம்ப நேரம் நித்திரை வரவில்லை, அதனால்தான் இன்னேரம் தூங்கிவிட்டேன் என்று சொல்லிக்கொண்டே வெளியில் வந்து பார்வதத்தோடு பேசிக்கொண்டு தன் வீட்டின் பின்புறமிருந்த சிறு தோட்டத்தண்டைபோய் தந்த சுத்தி முதலிய காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீட்டிற்குவந்து வீட்டு வேலைகளைப் பார்த்திருந்தாள், இவள்சேதி இம்மட்டிலிருக்க;

சுந்தரன், மரகதம் தன்னறையை விட்டுப்போனதும் மனதில் பற்பலவான எண்ணங்களெல்லாம் எண்ணி, தான்

மரகதத்தைக் காதலிருப்பதை தன் சிறிய பிதாவான கனகசபை முதலியாருக்கும் அவர் மனைவி மனோன்மணியம்மாளுக்கும் எவ்விதத்திலாவது தெரிவித்துத் தனது தந்தையையும் ஒப்பச்செய்து விவாகத்தை முடிக்கச்செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொண்டு நித்திரை போய்விட்டான். காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து தன்னரிய நண்பனான சந்திரசேகரனை யழைத்துக்கொண்டு ஊருக்கு வெளிப்புறமுள்ள வயல் வெளியிற் போய்க் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அவணிருந்த நடைபாயி (படித்துறைக் கிணற்றி)னிடம் உட்கார்ந்துகொண்டு சுந்தரன் சந்திரசேகரனைப் பார்த்து,

சுந்த:— நண்பா! நாம் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு என்றைக்குப் போகலாம்?

சந்திர:— நீ ஊரில் புறப்படும்போது "மிதுனபுரியில் சுமார் ஒரு வாரத்திற்குமேல் தங்கவேணும்" என்றாயே? இப்போது சீக்கிரத்தில் நமதூர் போக வெண்ணங்கொண்டாய் அதன் காரணம் என்ன?

சுந்த:— காரணம் என்ன ஒன்றுமில்லை. ஊருக்குப் போகலாம் என்கிற எண்ணம் உண்டாயிற்று. என் சிறிய தகப்பனார் சிறிய தாயார் இவர்களைப் பார்க்கும் அவாமிகுதியால் வந்தேன், பார்த்தாய்விட்டது; இன்று அல்லது நாளையில் ஊருக்குப்போகலாமென்று நினைக்கிறேன்.

சந்திர:— சுந்தரா! நன்றாய் சொன்னாய், அன்ன அபிஷேகத்தன்று மிதுனபுரிக்கு நீ வரவேண்டிய கருத்தைச் சொன்னாயே அதை மறந்துவிட்டாயோ?

சுந்த:— என்ன சொன்னேன்? எனக்கொன்றும் நினைவில்லையே?

சந்தி:— உண்மையாய் நினைவில்லையா? அல்லது பரிகசிக்கிறாயா?

சுந்:— இல்லை. பரிகாசமென்ன? உண்மையாய்க் கவனமில்லை. ஞாபகப்படுத்தினால் பின்பு சொல்லுகிறேன்.

சந்தி:— "மிதுனபுரியில் நடக்கப்போகும் ப்ரம்ம உற்சவத்திற்கு வரும்படி கடிதம் வந்திருக்கிறது" என்றாயே நினைவுவந்ததா?

சுந்:— ஆம்! ஆம்! நினைவிருக்கிறது. அக்கடிதத்தின் காரணமாக நான் வரவில்லை, அக்கடிதம் எழுதியவள் நான் பார்த்துப்பேசும் நிலைமையில் இல்லை.

சந்தி:— அதுபோகட்டும். நான் கடந்த இரவு ஓர் கனவு கண்டேன், அது முதல் அதை உன்னிடம் சொல்லவேணுமென்றிருந்தேன், மறந்துவிட்டேன் அதைச் சொல்லட்டுமா?

சுந்:— சொல்லட்டுமா வென்கிறாயே! கண்ட கனவைக் கூறவும் என் அபிப்பிராயம் வேண்டுமா? சொல் கேட்போம்.

சந்தி:— நான் இரவு ஊஞ்சற் பலகையின்மீது படுத்துக்கொண்டு நித்திரை செய்கையில், ஓர் விடநாயகி சர்வாபரண பூஷிதையாய் நீ படுத்திருந்த வீட்டிற் புகுந்தாள். பின்பு ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் அவ்வறையில் மங்கி எரிந்த தீபம் பிரகாசமாய்த் தோன்றிற்று. பின்னும் பத்து நிமிஷத்திற்கெல்லாம் அவள் யாருடனோ மெல்லிய குரலால் வசனிப்பது கேட்டது, இவ்வாறிருக்கையில், திடீரென நான் விழித்துக்கொண்டேன், படுத்தவண்ணமே உன் சயன அறையைப் பார்த்தேன் கதவு மூடப்பட்டும் தீபம் மங்கலாயும் எரிந்துகொண்டிருந்தது. நான் பழையபடி நித்திரை போய் விட்டேன். இதுதான் என் சொப்பனம். அதன் பொருளென்ன? சொல்.

சுந்:— கனவின் பொருள்கூற எனக்கு வன்மையில்லை. மனிதன் நித்திரிக்குங்கால் சிற்சில நினைவின் தோற்றங்கள்

ஏற்படுவதைக் கனவென்பார்கள். அதனால் பயன் அடைந்தவர்கள் இதுகாறும் கிடையாது. அவ்வாறிருக்க "அதன் பொருளென்னசொல்" என்கிறாய் நான் என்ன சொல்லக்கூடும்.

சந்தி:— சுந்தரா! இதுவரையில் உன்னை மனமொத்த நேயனென்று நான் நினைத்திருந்தேன். தற்போது அவ்வாறு நினைக்கக்கூடவில்லை. ஆனால் ஒன்று மட்டில் எனக்குத் தோன்றிற்று; அதென்னவெனில் என்னுடன் நேசித்த காலமுதல் இதுபரியந்தம் என்னிடம் நீ மனோ வாக்குக்காயம் என்கிற திரிகரண சுத்தியாய் இருந்திருக்கமாட்டாய் என்பதும், என்னை நீ உண்மையான சிநேகிதனாக மதிக்கவில்லை யென்பதும் தெற்றெனவிளங்கிற்று.

சுந்:— ஏன் அவ்வாறு நீ நினைக்கிறாய்?

சந்தி:— ஏனோ? நான் நினைத்ததற்குக் காரணம் நீ தெரிந்துகொண்டே யிருக்கிறாய், ஆனால் அதை இன்னும் மறைக்கிறாய்.

சுந்:— (புன் முறுவலாய்) நான் ஒன்றும் மறைக்கவில்லை.

சந்தி:— சுந்தரா! இரவு நான் கனவுகண்டதாய்க் கூறியவனைத்தும் உண்மையாய் நிகழவில்லையா? மரகதம் வரவில்லையா? உன் சயன அறைக்கு; "தாய்க்கொளித்த சூலா" என்பதுபோல் நான் அறியக்கூடாத விஷயமும் உனக்குண்டோ? என்னிலும் மிக்க அன்பை உடையவர்களும் உனக்கு உண்டோ? அல்லது, நீ நினைத்திருப்பதற்கு இடையூறு செய்வேனா நான்,

"தெரியவரு மறைப்பொருளைச்செவிப்புலத்திலுற நான்காம் வருணமுடையவர்கேட்க லாகாதேவாறேபோல்."

என்பதிற்கிணங்க, அதாவது, சூத்திரர்கள்-வேதத்தைக் காதாலுங் கேட்கக்கூடாததுபோல உன் விஷயத்தை நான் கேட்கவுங் கூடாதோ?

சுந்:— சந்திரசெகரா ! என்ன சொன்னாய் ? இன்னொரு முறை சொல். சூத்திரர்கள் வேதத்தைக் காதாலுங் கேட்கக்கூடாதா? யார் சொன்னது, எந்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. எந்த உபநிஷத் முறையிடுகிறது என் சங்கதியைப் பின்பு கூறுகிறேன். இவ்விஷயத்தை உனக்கு விளக்குகிறேன். அதாவது,

வேதாத்தியயனம். பிராம்மணரன்றி மற்றையவர்கள் செய்யலாகாதா வென்பதைப்பற்றி (தெ-இ-பி-ச) அவர்களால் பிரசுரித்துள்ளபடி அடியிற் கண்ட விஷயத்தைக் கூறுகிறேன் கேள்.

வேதத்தை பிராம்மணர்களே அப்பியசித்தும் பிரவசனம் செய்யக்கடமைப் பட்டவர்களென்று நெடுநாளாக எண்ணப்பட்டு வருகிறது. தவிர க்ஷத்திரியர், வைசியர்கள் இவ்விரு வருணத்தார் மட்டில் அப்பியசிக்கலாம் ஆனால் பிரவசனம் செய்யலாதென்றும், சூத்திரனுக்கு அப்பியசிக்கவே பிரமாணமில்லையென்றும், பெரும்பான்மையும் கருதப்பட்டிருக்கிறது. இவ்வாறு உண்டென்று நிரூபிக்கும் சாஸ்திரப்பிரமாணம் இருக்கிறதாவென சில பெரியோர்களையும் கற்றுணர்ந்தவர்களையும் நான் விசாரித்ததில், வழவழப்பாய் விட்டார்களே தவிர, பிரமாணமுண்டென்றும் அப்பிரமாணம் இன்ன சாஸ்திரத்திரத்தில் கூறப்பட்டுள்ளதென்றும் தைரியமாய்க் கூறுபவர் இதுகாறும் முன்வரவில்லை. அப்படி கூறுவார்களாயின் சந்தேகிக்கும் என் மனங்களிக்கும்.

மேற்கண்டவாறு நாம் ஒத்துக்கொள்ள சில திருஷ்டாந்தங்களால் தடை நேரிடுகிறது. அஃதாவது, பிரஹ் தாரணிய உபநிஷத்து, இரண்டாவது அத்தியாயம், முதலாவது பிரமாணத்தில், கார்கியரென்கிற ஓர் அந்தணன் அஜாத்சத்துருவென்னும் ஒரு அரசனை குருவாக வசித்து பிரஹ்மவித்தையைப் பயின்றதாகக் கூறியிருக்கின்றது. இப்பிரமாணத்தால் க்ஷத்திரியன் அத்தியாபனம் செய்யவும், அந்தணர்களுக்குங் கூட க்ஷத்திரியன் ஆசானாயிருக்கலாம் என்பதும் தெற்றென

விளங்குகிறது. தவிர ஜனகனிடத்தில், சுகர் உபதேசம் பெற்றுக்கொண்டது சகலருக்குந் தெரிந்த விஷயமே. இதுகளில் க்ஷத்திரியனுக்கு வேதத்தை உபதேசிக்கும் பிரமாணம் இல்லையென்று அநேகர் கருதப்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடாததாகிறதல்லவா?

மேலும் சாந்தோக்கிய உபநிஷத்து நான்காம் அத்தியாயத் தொடக்கத்தில் ஜானசுருதி, உபாக்கியானத்தில் கவனிக்கில் சூத்திரனும் வேதாப்பியாசம் செய்ததாக ஏற்படுகிறது. ஜான சுருதி என்கிற சூத்திரன் ரக்குவியர் என்ற அந்தணனை அடுத்து அளவிறந்த தனம்தந்து பிரும்ம வித்தையை யாசிக்கையில், அந்தரக் குவியர் என்பவர், ஜானசுருதி என்பவனை நோக்கி, சூத்திரனாகிய உனக்கு அதைச் சொல்லமாட்டேன்” என்றுகூற, அவன் சாலவருத்தமுற்று, முன்னையினும் அதிகமான பொருளளித்துத் தன் பெண்ணையுந் தரவே, அந்தரக் குவியர் பிறகு அவனுக்கு உபதேசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும், ஐதரீயப் பிராம்மணம் ஐந்தாவது சஞ்சிகை யாரம்பத்தில், கவுஷன் என்கிற வேடன் வேதாத்தியயனம் செய்ததுந் தவிர, ரிஷியுமாகி யாகாதி கிருத்தியங்களில் பிராமணர்களுடன் கலந்து, கௌரவமா யிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வித உவமானங்களால் சூத்திரனும் வேதத்தை அப்பியாசிக்கலாமென்று ஏற்படுகிறது.

ஆதியில் ஆரியர்கள் யாவரும் ஒன்றே. தொழிற்பேதத்தினால் நான்கு வகையாகப்பிரிக்கப்பட்டு அவரவர்கள் தொழிலுக்கேற்ற வண்ணம் ஆசாரமும் நிலைத்துவிட்டது. உவமானமாக, ரோமகதேசத்தில் அரசன், பாதிரிகள், பெட்ரிஷர், பிறேமியர் என்றும், இங்கிலாந்தில், அரசகுலம், பாதிரிகள், லார்டுகள், காமன்ஸ்கள், என்றும் ஏற்பட்டதுபோல, நமது தேசத்திலும் பிராம்மணன், அரசன், வியாபாரி, தொழிலாளன், என்று நான்கு வருணமாகப் பிரிக்கப்பட்டதே தவிர வேறல்ல. கடவுளை எப்படி நான்கு வருணத்தாரும் பேதமன்றி வணங்குகிறார்களோ அதைப் போலவே வேதமும் பொது. அதை நான்கு வருணத்தாரும் முறைப்படி, கற்க

லாம் அனுஷ்டித்தற் கேதுவாயுள்ள வேதத்தை சுத்தமும் ஆசாரமும் பெற்றவர்களே ஓதல் வேண்டும் சுத்தமும் ஆசாரமும் குறைந்த சூத்திரர்கள் அதை அப்பியாசிப்பது நலமல்லவென்றும், திரிகால ஸ்நானர்களாயும் சுத்தர்களாயும் ஆசார ஹீனமுண்டாக்கும் தொழில் செய்யாதவர்களாயுமுள்ள பிராம்மணர்களுக்கு மறையோதும் தொழிலைத் தந்தனர்.

மறையோதும் தன்மையார்க்கு மறையோர், வேதியர் என்கிற பெயரும் பிரம்ம ஞானத்தை அறிந்தவர்களுக்கு பிராம்மணரென்ற பெயரும் உண்டாயிற்று. தற்போதும யாதொருவன் அறிவின் மிகுதியால் பிரம்மம் இன்னதென்றும் அதன் தன்மை இன்னதென்றும் அறியும் சக்தி வாய்ந்துள்ளானே அவனே பிராம்மணனெனக் கருதப்படுவான். ஆதலால், நீ கூறிய "தெரியவரு மறைப்பொருளைச் செவிப்புலத்திலுற நான்காம் வருணமுடையவர் கேட்கலாகாத வாறேபோல்" என்பதின் அருத்தம் நீ கொண்ட விதமல்ல. "அந்தணர்களால் அத்தியாபனம் செய்யும் மறையொலியை சூத்திரன் கேட்கலாகாதெனுங் கட்டுக்கதைபோல உன் சங்கதி நானறிய வேண்டியதாயினும், நீ ரகசியமாக வைக்கவெண்ணுகிறாயோ" என்பதுதான் பொருள். அந்தணர்கள் தேவாலயங்களில் குழுமிவேதத்தை அத்தியாபனம் செய்யுங்கால் அவ்வொலி ஆங்குள்ள விலங்கு பறவை முதலியவற்றின் செவிகளிலும் நுழைகிறது. அதுபோல சூத்திரர்களும் கேட்கிறார்களே தவிர அதன் பொருளை கிரகிக்கும் தன்மை சிலருக்கில்லை. "மறைப்பொருளைச் செவிப்புலத்திலுற" வென்றதனால் அர்த்தம் தெரிந்துகொள்ளும் சக்திவாய்ந்த சூத்திரர்கள் மட்டில் கேட்கக்கூடாதா? மற்றெவ்வித சூத்திரர்களும் என்றால், விலங்கு பறவை முதலியன கேட்கலாமா? இருவிதத்திலும் வழியுண்டு.

"ஈசனளித்த ஒருகோட்டு யானைக்கு யாங்கள் இணையாயின்
வாசவனைத் தாங்கும் ஈரிருகோட்டு யானையெம்மைமாறும்"

அதாவது:—

கானகத்து யானைகள் என்ன சொல்லுகிறதாம், ஈசன் புத்திரனென்று சொல்லா நின்ற கொம்பையுடைய யானையானது (விநாயகர்) இரண்டு கொம்புகளையுடைய எங்களுக்கு சமமானால் தேவேந்திரனைச் சுமக்கும் (நான்கு கொம்புகளையுடைய) யானைகள் எங்களுக்குச்சமமாகும். நான்கு கொம்புகளுடையதால் தேவேந்திரனின் யானை எங்களில் மேம்பட்டதானால் ஒரு கொம்பையுடைய விநாயகரான யானை எங்களில் குறையும் என்று கூறிய மாதிரியாயிருக்கிறது என்று சுந்தரன் நீண்ட பிரசங்கம் செய்தான்.

சந்தி:— சுந்தரா! இவ்வளவுநேரம் நீ சொல்லிவந்த சங்கதிகளினால் அநேகம் விஷயங்கள் அறிந்தேன். சில சந்தேகங்களும் நிவர்த்தியாயிற்று. ஆயினும் நீ இவ்வளவு பிரயாசைப்பட்டு பேசியதெல்லாம் இதற்குமுன் நாமிருவரும் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை நான் மறந்துவிடட்டும் என்றல்லவா? உண்மையாய்ச் சொல்.

சுந்த:— அப்படிதான் வைத்துக்கொள்.

சந்தி:— பின்னென்ன? ராத்திரி நடந்தது உண்மைதானே?

சுந்:— உண்மைதான் ஆனால் அதனால் சில வருத்தங்கள் நேரும்போலிருக்கிறதே அதற்கென்ன செய்வது?

சந்தி:— வருத்தமென்ன யாரால் நேரும்; அனுமந்தனலா ?

சுந்:— அல்ல, அல்ல. அதாவது, இரவு நான் என் படுக்கையில் படுத்திருக்கையில் மரகதம் வந்ததை நீ அறிவாயல்லவா? அவள் வந்து என்னிடம் ஒரு நம்பிக்கைப் பெற்றுக்கொண்டுபோனாள். அந்த நம்பிக்கையாவது என்னவென்றால் நான் அவளையன்றி மற்றைய மாதர்களை மணம்புரிவதில்லையென்பதே. மேலும் அவள் அம்மாதரி என்னைத் தவிர மற்ற ஆடவர்களை கனவிலும் மணக்கக் கருதவில்லையென்று சத்தியஞ்செய்து கொடுத்திருப்பதுந் தவிர, அதற்கடையாளமாக ஒருவருக்கொருவர் கணையாழியையும் மாற்றிக்கொண்டோம். இனி

தவறக்கூடாது ஆனால் அதில் ஒரு பெருங்காரியமிருக்கிறது. அதை முன்னின்று முடிப்பது உன் காரியமேயாகும். என்னவென்றால், என்று தாய் தந்தையரிருவரும் பேசிக்கொண்டிருப்பதாவது எனக்கு தகுந்த செல்வவந்தள் வீட்டுப் பெண்ணைப்பார்த்து விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று பேசிக்கொள்ளுகிறார்கள். மரகதத்தைப்பற்றி அவர்கள் கனவிலும் நினைப்பதில்லை. மரகதமோ நிறைந்த செல்வந்தன் வீட்டுப் பெண்ணல்லவென்றாலும் பாத்தியமட்டில் உள்ளவள். இக்காலத்தில் கணத்தைப் பார்க்கிறார்களே தவிர,மற்ற பாத்தியமும் முதலானதுகளை யோசிப்பதில்லை. நவீன ஏற்பாட்டின்படிப் பார்த்தாலோ நாயகியும் நாயகனும் இஷ்டம் எதுவோ அதைக் கோர வேண்டும். பண்டைக் கால ஏற்பாட்டை நோக்கிலோ பாத்தியமும் குலமும் கவனிக்கவேண்டும். இரண்டிற்கும் மரகதம் ஏற்றவளே. இதுகளை யெல்லாம் விபரமாய் என் தாய் தகப்பன்மாருக்குச் சொல்லி இக்கலியாணத்தை என்னிஷ்டப்படி முடிக்கவேண்டும். முதலில் என் சிறிய தகப்பனார் சிறிய தாயார் இவர்களின் சம்மதத்தைத் தெரிந்துக் கொள்ளல் அவசியம். அநேகமாய் என் தகப்பனார் என் சிறிய தகப்பனாரின் கொள்கையின்படியே நடக்கப் பிரியமுள்ளவர். ஆதலால் முதலில் என் சிறிய தகப்பனாரைக் கலக்கவேண்டும். அவரைச் சரிபடுத்திவிட்டால் என் தகப்பனார் ஒப்பியமாதரிதான். இவைகளுக்கெல்லாம் உன்னிஷ்டம் என்னவென்று சந்திரசேகரனைக் கேட்டான்.

சந்தி:— தன்னண்பனது வார்த்தைகள் அனைத்தையும் கேட்டுக்கொண்டு சுந்தரா! இன்னாருக்கின்னார் மனைவியென்று பிரமன் வகுத்தபடியாகிறது. அவ்வாறு பிரமன் விதித்திருந்தால்தான் அதற்கிசைந்த மதி கொடுக்கும் எல்லாம் கடவுள் செயல் நம்மாலாவதொன்றுமில்லை. எதற்கும் நீ தைரியத்தை விடப்படாது. கூடுமான வரையில்

நான் உன் சிறிய தகப்பனுரையும் வசப்படுத்தி வைக்கி றேன். வாவென்று சுந்தரனை அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். அப்போது மணி சுமார் ஒன்பதிருக் கும். ஒன்பது மணி வரையில் சுந்தரன் வீட்டிற்கு வாராமையால் கனகசபை முதலியாரும் மனோன்மணி யம்மாளும் பையன் வாவில்லையே என்று வருத்தப் பட்டுக்கொண்டு வேலைக்காரரை விட்டு இரண்டொரு விடங்களில் பார்க்கச் சொன்னுர்கள். வேலைக்காரர்கள் கண்களில் தென்படாமல் ஊருக்கு சற்று தூரத்திலு ள்ள விடத்திலிருந்தமையால், வேலைக்காரர்கள் காண வில்லையென்று சொல்லிக்கொண்டிருக்குந் தருணத்தில், இவ்விருவரும் வந்து சேர்ந்தார்கள். இவர்களைக்கண்ட மனோன்மணியம்மாள் "காலையில் காப்பி சாப்பிடக்கூட ஒழியாமல் இன்னேரம் எங்கே போயிருந்தீர்கள் ஒன் பது மணிக்குமேல் காப்பி சாப்பிட்டு சாப்பாடு எத்தனை மணிக்கு சாப்பிடுவீர்கள் நேரமாய் விட்டது. காப்பி வேண்டாம் ஒரே மட்டாய் சாப்பிடுங்கள் சமையலும் ஆய்விட்டது. குளிக்கப்போங்கள்" என்றுள். உடனே சமையற்காரனுல் ஜலம் தயாரிக்கப்பட்டது. இருவரும் ஸ்நானம் பண்ணி பூஜை முடித்துக்கொண்டு போஜன மருந்தியபின், சுந்தரனும் சந்திரசேகரனும் கூடத்திலு ள்ள ஊஞ்சற் பலகையின்மீது உட்கார்ந்தார்கள். சுந் தரன் சந்திரசேகரனைப்பார்த்து, சந்திரசேகரா! என் சிறிய தகப்பனுரிடம் நாம்பேசிய விஷயங்களில் சிலதை மெதுவாய்ச் சொல்லிப் பார்க்கிருயா வென்றுன்.

சந்திரசேகரன் நண்பா! ஆசை வெட்கமறியாதுபோலும் உன் மோகத்தின் அவசரம் என்னைத் தூண்டச் சொல்லு கிறதோ?

"வேற்றரசர் திரைகொணரும் வேலையிலும் சொல்லற்க
மாற்றரசர் பால்வெகுளும் மயத்தும் வருத்துரையேல்
தேற்றமுடை மதிவல்லோர் தேர்ச்சிலுஞ்செகுத்துரயேல்
சாற்றினுரைத் தனவெல்லாந் தவருத லறிதியேல்."

என்பதை யறியா? சகலமுந் தெரிந்த நீ காலமல்லாத காலத்தில் போய் சொல்லும்படி தூண்டுகிறாயே? அது தகுதியா? கனகசபைமுதலியார் குணம் உனக்குத்தெரியதாதல்லவே. மேலும் தற்காலம் நிலவரி வசூல் விஷயத்திலிருக்கிறாரே. இதுவாசமயம்? எனக்குச்சமயந்தெரியும் நீ அவசரப்படாதே. பொறுமை கடலினும் பெரிது. பொறுமையென்னும் சிறுமை தராது, எவ்விதத்திலும் உண்ணெண்ணத்தை உனது சிறிய தகப்பனாருக்கறிவித்து காரியத்தைப் பூர்த்தி செய்விக்கிறேன் என்றான்.

இவ்வாறு சந்திரசேகரன் கூறியதைக்கேட்க சுந்தரன் சரியென்று ஒப்புக்கொண்டு வேறு விஷயங்களைப்பற்றி பேசியிருந்து மாலை நாலு மணிக்கெல்லாம் வயல் வெளிகளைச்சுற்றி பார்க்கச் சென்று, இரவு ஏழுமணிக்கு வீடுவந்து சேர்ந்தார்கள். இவ்விருவரும் வரும்போது கனகசபை முதலியார் தெருப்பந்தலில் படுக்கை நாற்காலி ஒன்றின்மீது உட்கார்ந்திருந்தார். சுந்தரன் நேரே உள்சென்றான். சந்திரசேகரன் மட்டில் முதலியார் உட்கார்ந்திருந்த நாற்காலிக் கெதிரிலிருந்த சிறு நாற்காலியண்டை நின்றான். கனகசபை முதலியார் சந்திரசேகரனைப் பார்த்து அன்புடன் நாற்காலியில் உட்கார வைத்து, வைத்தீஸ்வரன் கோவில் பயிர் வகைகளுக்கும் மிதுனபுரியின் பயிர் வகைகளுக்கும்உள்ள பேதத்தைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார். அச் சமயத்தில் சந்திரசேகரன் முதலியாரைப்பார்த்து,

சந்தி:— ஐயா! சுந்தரன் பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியது தெரியுமல்லவா?

கனக:— ஆம், நான் பார்த்துதானே பத்திரிகையை அவனிடம் தந்தேன்.

சந்தி:— ஆம். ஆம். நினைவிருக்கிறது, தவிர சுந்தரனை இம்மட்டில் வாசிப்பதை விட்டு நிறுத்திவிடப் போகிறீர்களா? அல்லது, மேலும் வாசிக்கவிடப்போகிறீர்களா?

கனக:— அவன் எண்ணம் எப்படி இருக்கிறது?

5

சந்தி:— தங்களபிப்பிராயப்படி நடக்குந்தன்மையான் தானே அவன். ஆதலால் அவன் இஷ்டத்தைக் கோறுவானே?

கனக:— அப்படிக்கல்ல, தன் புத்தி தனக்கு வந்தபின் அவனுடைய எண்ணத்தையும் கலந்து நடத்துவதே அழகு. அன்றேல் எக்காரியமும் முடிவுபெறாது.

சந்தி:— சுந்தரனுக்கு இம்மட்டில் ஆங்கிலத்தை நிறுத்தி, சுயபாஷையான தமிழில் ஐயமற நல்லாசிரியர் மூலமாய் கற்க எண்ணமிருக்கிறது.

கனக:— ஒ! மிகவும் நல்லது. என் தமையனார் தான் இங்கிலீஷைக்கட்டிக்கொண்டழுகிறார். எனக்கு இங்கிலீஷ் அவ்வளவு திருப்தியில்லை. ஆனால் இராஜாங்கபாஷையும் இன்றியமையாததே. தற்காலம் சுந்தரன் படித்திருக்கும் அளவு போதுமானது. தமிழில் தான் ஞானம் உண்டாக்கவேணும் என்பது என்னெண்ணம். அதுபோல அவனுக்கும் தோன்றியிருத்தலால் நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். அவ்வாறு தமிழ் கற்பிக்குந் திறமை வாய்ந்த புலவர்களில் அநேகர் எனக்குத் தெரியும். அவன் சொல்லும் பக்ஷத்தில் யாரை வேண்டுமானாலும் அழைப்பிக்கிறேன். அதனால் எவ்வளவு செலவானாலும் செலவு செய்யச்சித்தமாயிருக்கிறேன். மேலும் நமது சிநேகர் பொன்மார் நடேச முதலியார் என்று ஒருவர் இருக்கிறார். அவரை வரவழைக்கிறேன் என்றார்.

சந்தி:— அப்படியே தருவித்தால் நல்லதுதான். நானும் தமிழ் கற்க ஆவலுடையவனாய் தானிருக்கிறேன். இருவருமாகப் பயில்கிறோம். தவத்திற்கொருவர் தமிழுக்கிருவர் என்பது போல இருவராகக் கற்றல் மிகவும் நலமே என்று சந்திரசேகரன் கூறினான்.

கனக:— அப்படியானால் இன்றைக்கே கடிதம் எழுதி வரவழைக்கிறேன். என்று சொல்லிக்கொண்டிருக்கையில் சமையற்காரன் போசனத்திற் கழைக்கவே, முதலியார் சுந்தரன், சந்திரசேகரன் ஆக மூவரும் உட்கார்ந்து

போசன மருந்தி பின்பு பழயபடி முதலியாரும் சந்திர சேகரனும் தெருவில்போய் உட்கார்ந்து பற்பல சங்கதிகளைப்பற்றி பேசிக்கொண்டிருக்கையில்; சந்திரசேகரன் கனகசபை முதலியாரைப்பார்த்து ஐயா! நமது சுந்தரனுக்கு விவாகம் எப்போது செய்ய எண்ணம் என்றான்.

கனக.— அவ்விஷயம் என் தமையனாரின் இஷ்டப்படியல்லவா செய்யவேண்டும்.

சந்தி:— அது விஷயத்தில் தங்கள் தமையனாரின் இஷ்டத்தைக் கோருவது பெருத்த ஆபத்தை விளைவிக்கும் என்றெண்ணுகிறேன்.

கனக:—ஏன்? என்ன! அவ்வாறு சொல்லுங்காரணமென்ன?

சந்தி:— காரணமா? தங்கள் தமையனார் தன் மகனுக்கு பணக்காரன் வீட்டுப் பெண்ணைப் பார்த்து கட்டவேணுமென்றிருக்கிறாரே தவிர, ஏழைகள் வீட்டுப்பெண்களைக் கட்ட அவருக்கு இஷ்டமில்லை.

கனக:— சரி! அவரிஷ்டம்போல் பணக்காரன் வீட்டுப் பெண்களையே பார்த்து விவாகம் செய்தால் போகிறது. அதற்கென்ன தடை நான் வேண்டாமென்று சொல்லப் போகிறேனா?

சந்தி.— தாங்கள் வேண்டாமென்று சொல்லப்போகிறதில்லை மணமகனின் இஷ்டத்தை அறிந்தீர்களா?

கனக:— ஓ! இதில் என்னமோ பொடி யிருக்கிறாப்போல் தோன்றுகிறது. விஷயமென்ன சொல் பார்க்கலாம்.

சந்தி:— விஷயமென்ன சுந்தரன் தன் மனத்துள் எதையோ நினைத்திருக்கிறான். அவன் எண்ணம்போல் முடித்து வைக்காமற் போனால் பிறகு இவ்வுலகில் உயிருடன் வாழ்வதில்லை யென்று நேற்று வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து நாங்கள் வரும்பொது சொல்லிக்கொண்டு வந்தான். அதனால்தான் ஆபத்தாய் முடியுமென்று சொன்னேன்.

கனக:— இவ்வூருக்கு வருவதற்கு முன்னமே சொன்னானா? அல்லது வந்தபின் சொன்னானா?

சந்தி:— வருவதற்கு முன்னேயே வழியிலே சொன்னான்.

கனக:— அவன் எந்தப் பெண்ணைக் கோரியிருக்கிறான் தெரியுமா?

சந்தி:— தெரியும். அதாவது, தங்கள் வீட்டில் வளர்ந்து வரும் மரகதம் என்னும் பெண்ணின்மீதுதான சுந்தரன் நாட்டம் வைத்திருக்கிறான். அதுவும் அவன் வைத்திருக்கும் காதலுக்கு அளவில்லை. அவளையன்றி மற்றப் பெண்களை நினைவிலும் நினைக்க மாட்டானும். அதுவிஷயமாய்த் தாங்கள்தான் முன்னின்று முடிக்க வேண்டியது. தங்கள் தமையனாருக்கும் தாங்களே சொல்லிச் சரிப்படுத்தவேணும்; பணம் படைத்தவர்களின் சம்மதத்தைக் காட்டிலும் பாத்தியராயிருப்பதே மேல் என்பது தாங்கள் அறியாததல்ல,

"பெண்ணுதவுங்காலைப் பிதாவிரும்பும்வித்தை
எண்ணிற்றனம் விரும்பு மீன்றதாய்—நண்ணுங்
கூறியநற்சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்."

என்பதை யொக்க,

மரகதத்தைக் கலியாணம்செய்தால் குலம் கோத்திரம் கெடவேண்டியதில்லை. மேலும் மணமகனும் மணமகளும் தகுந்த எழிலுடையவர்கள். அத்தியந்த விசுவாசத்தைப் பூண்டவர்கள், நவீன நாகரீகத்தை அனுஷ்டிக்கும் ஒவ்வொருவரும் வதூவரர்களின் இஷ்டத்தைபொறுத்ததாகவே மணமுடிக்கிறார்கள். அதுபோலவே தாங்களும் முடிக்க வேண்டும். என்பதை நான் பல தடவையிலும், வற்புறுத்தி சொல்லுவேன், என்று சந்திரசேகரன் கூறினான். இதற்குள் படுக்கைக்குப் போகும் நேரமானதால், அவரவர்கள் படுக்கைக்குப் போய்விட்டார்கள்.

மறுதினம் காலையில் சுந்தரன் சந்திரசேகரனை நோக்கி சந்திரா! இரவெல்லாம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தாயே என்ன முடிவு ஏற்பட்டதென்று கேட்டான். சுந்தரனுடைய தீவிர எண்ணத்தைத் தெரிந்த சந்திரசேகரன் சுந்தரா! உன் சிறிய தகப்பனார் ஒத்துக்கொண்டார். மற்றவர்களின் அதாவது உன் தாய் தந்தையர்களின் சம்மதத்தையும் அவரே பெறுவர். சந்தேகம் வேண்டாம்; கூடிய சீக்கிரத்தில் உனது விவாகம் நடைபெறும் என்றான் இச்சந்தோஷச் சேதியைக் கேட்கவே சுந்தரனுக்கு அளவிலா மகிழ்ச்சியுண்டாயிற்று. இச்சேதியை மரகதத்திற்கு அறிவிக்க வேண்டுமென்கிற ஆவல் சுந்தரனைத் தூண்டிற்று. ஆனாலும் சமயம் வாய்க்காமையால் வாளாவிருந்தான். இரண்டொரு தினங்கள் கழிந்த பின்பு பகலில் மரகதம் தனியே சந்தர்ப்பப்பட்டாள். அச்சமயத்தில் தான் மரகதத்தை மணக்க வேண்டித் தன் நேசன் சந்திரசேகரன் மூலமாய் தன் சிறிய தகப்பனாரிடம் சொல்லி முடிவு செய்யச் சொன்னதையும் கனகசபை முதலியார் அதற்கொத்து கொண்டதையும் சுருக்மாய்ச் சொன்னான். அதுமுதல் மரகதமும் அதிக சந்தோஷத்துடனிருந்தாள்.

இரண்டாம் அத்தியாயம்.

கலியாண விஷயத்தைப்பற்றி கடிதப் போக்குவரவு.

சந்திரசேகரன் சுந்தரனது விவாக விஷமாய்த் தன்னிடம் இரண்டு மூன்று தினங்கள் வரையில் கனகசபை முதலியார் வாளாவிருந்து ஒரு நாள் அதைப்பற்றித் தன் தமையனுக்கு ஓர் கடிதம் வரைந்தார் அதன் விவரமாவது,

என்னருமைத் தந்தையார்க்கு நிகரான அண்ணா அவர்களுக்கு வணக்க விஞ்ஞாபனம்.

இவ்விடம் க்ஷேமம் அவ்விடத்திய க்ஷேமத்தை அறிய விரும்புகின்றனன்.

"சிரஞ்சீவி சுந்தரனும், சந்திரசேகரனும் சென்ற சோம வாரம் இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களும் சுகமே. கிராம விஷயங்களும் மற்றவைகளும் ஜாக்கிரதையாகப்பார்க்கப்பட்டு வருகிறது. தவிர, இம்மாதத்தில் சுந்தரனுக்கு விவாகம் முடிப்பிக்கலாம் என்பதைத் தாங்கள் கவனித்துத் தக்க முயற்சி செய்வீர்களென்று நம்புகிறேன். என் மனது சுந்தரன் விவாக விஷயத்தில் பெரிதும் சென்றிருப்பதால் எவ்விதத்திலும் அதை சீக்கிரத்தில் முடித்துப் பார்க்கப் பேராவல் பூண்டுள்ளதை நிறைவேற்ற முன்னிற்பீர்களென்னும் நம்பகத்தைக் கொண்டிருக்கிறேன்."

இது விஷயமாகத் தங்களபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். உடனே பதில் எழுதவும்.

இப்படிக்கு,

கனகசபை.

மேற்கண்ட மாதிரியான கடிதம் ஒன்றை எழுதி ஓராளிடம் கொடுத்து மறுதினமே யதற்குப்பதில் வாங்கி வரும்படி கட்டளை யிட்டனுப்பினர். முதலியார் தந்த கடிதத்தை ஆள் வாங்கிக்கொண்டுபோய் வைத்தீஸ்வரன் கோவில் முதலியாரிடம் கொடுத்தான். முதலியார் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து மேஜையின்மீது வைத்தார். பின்னும் இரண்டு நிமிஷத்திற் கெல்லாம் மற்றொருவிசை கடிதத்தைப் படித்துப் பார்த்தார். உள்ளே சென்று தன் மனைவியரான நாகவல்லியம்மாளிடம் அக்கடிதத்தைப் படித்துக் காட்டினர். தன் தம்பி கனகசபை முதலியார் திடீரென்று கடிதம் எழுதவேண்டியதின் காரணம் இன்னதென்றறியாமல் மயங்கினர்கள். குணாலய முதலியார் தன் மனைவியை நோக்கி, பெண்ணே! ஒருக்கால் சுந்தரன் ஏதாவது தன் சிற்றப்பனிடம் கூறினனோ வென்றார். நாகவல்லியம்மாள், நாதா! நமது குமாரன் அவ்

வாறு தைரியமாய் தன் விவாகத்தைப் பற்றி கூறுங் குணத்தோனல்லவே, அவன் பரம சாதுவாயிற்றே அவனோ சொல்லுவான். ஒருக்காலும் இராது. உங்கள் தம்பியார் சுந்தரனைக் கண்ட வளவில் விவாகம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதியிருப்பார் என்றனள். குணாலய முதலியார் தன் தம்பிக்கு இன்னவிதமாக பதில் எழுதுவதென்று பிரியாமல் அடியில் கண்டவிதமாக எழுதியனுப்பினார்.

செல்வச் சிரஞ்சீவி தம்பிக்கு ஆசீர்வாதம்.

உபயக்ஷேமம்.

“உன்னால் எழுதப்பட்ட கடிதத்தைக் கண்டேன், திடீரென உன் மனத்தின் கண் அவ்வாறான எண்ணம் உதித்த காரணம் என்னோ? தவிரவும் நீண்ட நாள் அனுபவிக்கும் தன்மை வாய்ந்த காரியத்தைத் தீரயோசித்தே செய்யவேண்டியிருப்பதால் அதைப்பற்றி நாமிருவருங் கலந்து பேச நீ ஒரு பயணம் இவ்விடம் வந்துபோகவும், மற்றவை நேரில்.”

இப்படிக்கு,

குணாலய முதலியார்.

என்று ஓர் கடிதம் எழுதி, மிதுனபுரியிலிருந்து வந்த ஆளிடமே கொடுத்தனுப்பினார். அக்கடிதம் கனகசபை முதலியாரிடம் கொடுக்கப்பட்டது. அதை ஆவலுடன் பிரித்துப் பார்த்தார். தான் எழுதிய விஷயத்திற்குப் பதிலில்லாமல் தன்னை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வரும்படி எழுதியிருந்தது. வந்த கடிதத்தைத் தன் மேஜை அறையில் வைத்துக் கொண்டார். அன்றிரவு போஜனம் முதலியன நடந்தேறிய பின்பு தனது மனைவியான மனோன்மணியம்மாளுடன் தனியே வசனித்துக்கொண்டிருக்கையில்,

கனக:— மனோன்மணி! நான் உன்னுடன் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன், அதாவது! நமது சுந்தரன் விவாக விஷயமாய் அநேக யோசனைகள் எனக்குண்டாயிருக்கிறது, அதைப்பற்றி அண்ணாத்தைக் கெழுதினேன்,

அவர் யாதொரு பதிலும் எழுதாமல், என்னை வரும்படி எழுதி யிருக்கிறார், நாளைய தினம் போய் வரலாமென்றிருக்கிறேன், உன்னிஷ்டமென்ன?

மனோ:— அதென்ன என்னிஷ்டத்தைக் கேட்கிறீர்களே? தங்கள் இஷ்டமும் தங்கள் தமையனார், அண்ணி இவர்களிஷ்டமும் எப்படி யிருக்கிறதோ அதையே நானும் அங்கீகரிப்பேன். ஆனால் என்மனதில் ஒன்று இருக்கிறது. அந்தமாதிரி நடந்தால் எனக்கு நிறைந்த சந்தோஷம்.

கனக:— உன்னிஷ்டந்தானென்ன?

மனோ:— அப்படி யொன்றும் ரகசியமல்ல, மரகதத்தையே சுந்தரனுக்கு கட்டிவைத்தால் நன்றாயிருக்கும், மரகதம் தாய் தகப்பனற்ற பெண். மேலும் தங்கள் தங்கையின் குமாரத்தி, அவளை வெளியில் கொடுப்பதைவிட நாமே கட்டிக்கொள்வது நன்மை. மரகதத்தின் தாயாராகிய உங்கள் தமக்கையிருந்தால் விடுவார்களா? எவ்வளவு சண்டை பிடிப்பார்கள், அந்தம்மாள் உயிர்விடும்போது கூட நம்மிருவரையும் பார்த்து "இது உங்கள் குழந்தை நான் இறந்துவிட்ட வருத்தம் சிறிதும் அதற்கு ஏற்படாவண்ணம் வைத்திருக்கவேண்டியது உங்கள்பொறுப்பு" என்றுசொல்லி உயிர் விட்டார்களே அதைமறந்துவிட்டீர்களோ? தவிர மரகதம் நல்ல அதிர்ஷ்ட முடையவள். அவள் வாழ்க்கைப்படும் இடம் நல்ல போகமாக இருக்கும். அழகிலோ மேம்பட்டவள். நமது பந்துக்களில் இவளைவிட அழகில் மேலான ரம்பை எவளிருக்கிறாள் கைமடக்குங்கள் பார்ப்போம். எப்படியும் சுந்தரனுக்கு மரகதத்தையே மணமுடித்தல் நலம் உலகத்தாருக்கும் திருப்தியாயிருக்கும் பிறகு உங்களுடைய இஷ்டம், நானென்ன சொல்லப்போகிறேன், இவளோ சிறுவயதுமுதல். நம்மிடம் பழகி நமது சுகதுக்கங்கள் இன்னவென்று தெரிந்திருக்கிறாள், நமது அருமையை நன்றாய் அறிந்தவள், உள்ளநாளைக்கும் வைத்துக்கொண்டு

அனுபவிக்க வேண்டியர்கள் நாம். புதியதாய் ஒருபெண்ணைக் கட்டினால் அதன் குணம் எப்படி யிருக்குமோ இதுகளை யெல்லாம் நான் சொன்னதாக உங்கள் அண்ணியிடமும் அண்ணனிடமும் சொல்லுங்கள். ஏற்றுக்கொண்டால் ஏற்றுக்கொள்ளட்டும் அல்லது விட்டால் விடட்டும் என்றாள்.

கனக:— அடடா! வெகு சாமர்த்தியம், இதற்குத்தானே பெண்டுகளிடம் அதிகம் பேசக்கூடாதென்பது. நான் உன்னை என்ன கேட்டேன். இதற்குள் ஒருபெரிய ராமாயணம் படித்துவிட்டாயே? எனக்கும் அப்படிச்செய்யத் தான் இஷ்டம். நீ சொல்லுவதைப் பார்த்தால் நாங்கள் என்னமோ, மரகதத்தை வேண்டாமென்று வேறுபெண்ணைப்பார்த்து முடிவு செய்துவிட்டமாதிரியாய் பேசுகிறாயே, வீண் அவசரப்படாதே. நான் நாளைக்குப்போய் சங்கதி தெரிந்துகொண்டு வருகிறேன்.

மனோ:—நீங்கள் போனால் முன்னாடி இதையெல்லாம் சொல்ல வேண்டாம். உங்களை வரச்சொன்னதற்கு போங்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதையெல்லாம் வாங்கிக்கொண்டு பின்பு உங்கள் எண்ணத்தைச் சொல்லுங்கள்.

கனக:— சரி இனிமேல் உன்சொல்லைக்கேட்டுக்கொண்டுதான் நான் நடக்கவேணும்; புருஷாளுக்கேது புத்தி, உலகத்தில் எல்லாரும் பெண்சாதி சொன்னபடி தானே நடக்கிறார்கள்?

மனோ:— அவ்வளவு தூரத்துக்கெல்லாம் நான் வந்தவளல்ல. தாலிகட்டி இத்தனை நாளாய் நான் ஏதாவது சொல்ல வந்தேனா? உங்கள் குணந்தான் எனக்குத் தெரியுமே. தெரிந்துதானே நான் ஒன்றும் சொல்ல வருவதில்லை. அங்கங்கே புருஷனும் பெண்சாதியும் இல்லையா? இந்த மாதிரியாயிருப்பார்கள். என்னமோ நான் வந்த வேலை யென்று நினைத்துக் கொள்ளுகிறேனே தவிர, ஏதாவது சொல்ல வருகிறேனா? சில ஆண்பிள்ளைகள் பெண்சாதி

சொன்னபடி நடக்கிறார்கள். காலணு செலவு செய்வதானாலும் கேட்டே செய்கிறார்கள். கையில் கிடைத்த பணத்தை அப்படியே கொண்டுவந்து பெண்சாதியினிடம் கொடுத்து விடுகிறார்கள். அந்தக் குடித்தனம் எப்போதும் கோபிதமாய்தான் இருக்கும் அந்த மாதிரி என்னயாவது செய்யச் சொல்லுகிறேனா? ஏன் இப்படி கோபித்துக் கொள்ளுகிறீர்கள்.

கனக:— கோபித்துக்கொள்ளவில்லை. எவன் ஒருவன் பெண் புத்திகேட்டு நடக்கிறானோ அவன் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு அவமான மடைவானென்பது உண்மை. வெளியில் நடமாடி உலக விவகாரங்களைப் பார்க்கும் புருஷனுக் கல்லவோ விஷயந்தெரியும். வீட்டுக்குள்ளே இருக்கும் பெண்டுகளுக்கு நல்லது, பொல்லது என்ன தெரியும். "ஸ்திரீபுத்தி பிரளயாந்தகா" என்பது போல பெண்கள் புத்தியைக் கேட்கலாகாது.

மனோ:— சரி அது கிடக்கட்டும் பெண்புத்தி கேட்கச்சொல்லவில்லை. உள்ளநாளும் போச்சு இனியா என் புத்தியைக் கேட்கும்படி கட்டாயப் படுத்தப்போகிறேன். அது இல்லை; நமது மரகதத்திற்குக்கூட சுந்தரனை மணக்க வேணும் என்கிற எண்ணம் இருக்கிறாப்போல் இருக்கிறது.

கனக:— அது உனக்கு எப்படி தெரியும்?

மனோ:— ஜாடையில் தெரிகிறது.

கன:— சுந்தரனும் மரகதத்தின்மீது அதிக ஆசை வைத்திருக்கிறான். அது எனக்குத் தெரியும்.

மனோ:— உங்களுக்கெப்படி தெரியும்?

கனக:— இரண்டு மூன்று நாளைக்கு முன்பு சந்திரசேகரன் என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னதாவது, "சுந்தரன் மரகதத்தைத் தவிர மற்ற எந்தப் பெண்களையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டானாம் அப்படி வேறு பெண்களை மணக்கப் பெற்றோர் வற்புறு

த்தினால், பிராணனையாவது விடுவானே தவிர, வேறு பெண்களை மணக்கவே மாட்டேன் என்று சொன்னான்" அதன்பேரில்தான் நான் என் தமையனாருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால் இந்த விபரமெல்லாம் நான் ஒன்றும் அதில் காணவில்லை.

மனோ:— சுந்தரன் சொல்லச்சொல்லி சந்திரசேகரன் சொன்னானா அல்லது அவனா சொன்னான?

கனக:— சுந்தரன் இங்கே வரும்போது வழியில் சொல்லிக் கொண்டு வந்தானாம். அந்த சங்கதியை ஏதோ பேசிக் கொண்டிருக்கையில் என்னிடம் சொன்னான் சந்திரசேகரன். அதுவே தவிர, சுந்தரன் சொல்லச்சொல்லி சந்திரசேகரன் சொல்லவில்லை.

மனோ:— எதுவுந் தலைவிதிப்படி முடியும்; இன்னாருக்கின்னாரென்று பிரம்மா எழுதியவாறு முடியுமே தவிர நம்மாலாவ தொன்றுமில்லை, என்று மனோன்மணியம்மாள் போய்விட்டாள். மறுதினங்காலையில் கனகசபை முதலியார் சுந்தரனை அழைத்து சுந்தரா! நான் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போய் சுமார் நாலுமாத காலமாகிறது. இன்றைக்குப் போகலாமென்றிருக்கிறேன், நான் போனால் கூடிய சீக்கிரத்தில் வந்துவிடுகிறேன். வருமளவும் இவ்விடம் நடக்க வேண்டியவைகளையெல்லாம் ஜாக்கிறதையாய்ப் பார்த்துக்கொண்டிரு. சந்திரசேகரனும் நான் வருமளவும் இவ்விடமே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டுப் பிரயாணமாகி வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போய்விட்டார்.

சந்திரசேகரனும் சுந்தரனும் மிதுனபுரியிலிருந்து கொண்டிருந்தார்கள்.

மூன்றாம் அத்தியாயம்.

மரகதத்தை மணக்க அனுமந்தனுடைய பிரயத்தனங்கள்.

இஃதிவ்வாறிருக்க மரகதத்தின் அத்தையினுடைய புதல்வன் ஒருவன் மிதுனபுரியிலேயே இருக்கிறான், அவன் பெயர் அனுமந்தன். அவன் இயற்கையிலேயே நாமதேயத்திற்கொத்த எழில் வாய்ந்தவன். அவன் தகப்பன் இளந்தை முதல் கல்வியில் விற்பன்னனாக்க வேண்டுமென்கிற அவாவினால் எவ்வளவோ முயற்சித்தும், விழலுக்கிறைத்த நீரையொத்தது தகப்பனது பிரயத்தனங்கள். பாடசாலைக்குப் போகச் சொன்னால், கோலி, நாடக சாலைக்குத் தவறாது போவான், இரவில் பொடிகடை செல்வான், ஏழு வயது முதல் பாழும் பீடி குடிப்பான். தன்னினச் சிறுவர்களை மென்னியைப் பிடித்து வருத்துவான். அவனுடன் சண்டையிடாத சிறுவர்கள் தாய் வயிற்றில் கருப்பமாயிருப்பவர்கள் தவிர மற்றவர்கள் கிடையாது. பிறருக்குக் கெடுதி செய்வதையே தனது முதற்றொழிலாகக் கொண்டவன். நிறத்தில் கிருஷ்ணாவதாரம், குணத்தில் ஆஞ்சனேயாவதாரம், உயரத்தில் கூர்மவாதாரம், சுத்தத்தில் வராகவதாரம், இவ்வாறான சுகுண சிகாமணியெனும் அனுமந்தவள்ளல் வெகு நாளாய் நம் கதாநாயகியான மரகதத்தின்மீது கண்ணோக்கம் வைத்திருந்தான். எவ்விதத்திலும் மரகதத்தைத் தானே விவாகம் செய்து கொள்ளவேணும் என்கிற எண்ணத்தைக் கொண்டிருந்தான். அடிக்கடி கனகசபை முதலியாரின் வீட்டிற்கு வருவான். சில சமயங்களில் மரகதத்துடன் வேடிக்கையாக பேசிக்கொண்டிருப்பான், கனகசபை முதலியார் அனுமந்தனுடைய கெட்ட நடவடிக்கைகளைக் கேட்டும் பார்த்தும் இருப்பவரானதால், அனுமந்தனைக்கண்டால், நன்மொழிகளைக்கடிந்துரைப்பார். அந்தத் தொந்தரவால் கனகசபை முதலியார் எதிரில் வருவதில்லை. முதலியார் வெளியில் போயிருக்குங் காலம் பார்த்து வருவான். மனோன்மணியம்மாளுக்கு புத்தி

போற்பத்திஇன்மையால், எவ்வருணத்து பாலகர்களானாலும் பட்சம் பாராட்டுவது வழக்கம். மேலும் அனுமந்தன் இனத்தானும் கொஞ்சம் பாத்தியமும் ஒட்டியிருப்பதால் அவனிடம் அன்பு மற்றவர்களிடம் காட்டுவதினும் சிறிது அதிகமாக வைத்து, அவன் தன்னில்லம் வரும்போதெல்லாம் போஜனம் செய்து போகும்படி வற்புறுத்துதல் வாடிக்கை. அனுமந்தன் மரகதத்தினிடம் தாராளமாய் பேசவும் விளையாடவுமாயிருப்பான். ஆனால் அவன் மனதில் மட்டும் மரகதத்தை அடைய வேணும் என்கிற ஆவலுடன் மரகதம் தன்னை மதிக்கும்படியாக நடக்கவேணும் என்று எண்ணிக் கொள்வான். மரகதமோ உலக நடையறியாத இளம் பருவத்தினளானதால் சிறிதும் மனங்களங்கமின்றி வார்த்தையாடிக்கொண்டிருப்பாள். இவ்வாறு நடந்துகொண்டு வருகையில் மரகதத்திற்கு வயது பனிரெண்டுக்குமேல் ஆய்விட்டது. அவள் பூப்படையாதவளாயிருந்தாலும், வாசித்தறிந்தவளானதால சகல விஷயங்களும் இன்னின்ன தன்மையதென்று அறிந்திருந்தாள். மரகதத்திற்குக் கல்வி அப்பியாசித்துக்கொண்டுவந்த காமாக்ஷியம்மாள் ஒய்ந்த நேரங்களில் அநேக நற்போதங்களையும், தகுந்தபடி வாய் மொழியாகவே போதித்து வந்தனள். வாசிப்பின் ருசியறிந்த மரகதமோ முன்போலில்லாமல் சதாவாசித்தலிலேயே காலங்கழிப்பாள். அவ்வாறே ஓர் தினம் மரகதம் ஏதோ வாசித்துக்கொண்டிருக்கையில் அனுமந்த சிகாமணி வந்தான். மரகதம் வந்தவன் யார் என்று நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடி வாசிப்பதில் நோக்கமாயிருந்தாள். அனுமந்தன் அருகில் உட்கார்ந்து மரகதம் என்ன வாசிக்கிறாய் என்றான். மரகதம் நான் என்ன வாசித்தாலென்ன? வாசிப்புதான் உனக்குச்ஜென்ம விரோதியாயிற்றே. துஷ்டர்களின் நேசிப்பு கற்கண்டான உனக்கு இன்னது படிக்கிறேன் என்று சொன்னால் தெரியப்போகிறதா? அஃதில்லையே ஏன் கேட்கிறாய் என்றாள். இம்மொழியைக் கேட்டவளவில் அனுமந்தன் மரகதத்தின் கையிலிருந்த புஸ்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, ஜாண் பெண்ணாயிருந்தாலும் வாய் முழமிருக்கிறதே, இப்போதே இவ்

ளாயிருப்பவள் பின்னிட்டு என்னை நீ மதிக்கப் போகிறாயா என்று சொன்னான்.

மரக:— பின்னிட்டென்றால் எனக்கு விளங்கவில்லையே?

அனு:— விளங்குமா? இப்பொழுது விளங்காது, விளங்காது.

மரக:— என்ன! கருவுகிறாயே? உனது கருவல் என்னை ஒன்றுஞ் செய்யாது, பின்னிட்டு என்றாயே அதன் விவரத்தைச் சொல்லக்கூடாதா?

அனு:— பின்னிட்டென்றால், விவாகமான பின்பு என்று எண்ணிக்கொள்ளக்கூடாதா? அதை நாலுவிசை கேட்க வேணுமா?

மரக:— விவாகமா! யாருக்கு விவாகம்?

அனு:— உனக்கும் எனக்குந்தான். தெரியாதவள்போல் கேட்கிறாயே.

மரக.— நான் தெரியாதவளல்லாமல் உன்னைப்போல் தெரிந்தவளா என்ன! ஆனால் அப்போது உனக்குக் கீழ்ப்படிந்தே நடப்பேன்! அவ்வாறு என்னை நீ விவாகம்செய்து கொள்ளும் எண்ணம் வைத்திருந்தால் அடிக்கடி என்னிடம் வந்து மரியாதை கெடும்படி நடந்துக்கொள்ள மாட்டாயே?

அனு:— உன்னை கலியாணம் செய்து கொள்ளும் எண்ணம் எனக்கிருந்தால், நான் அடிக்கடி இங்கு வரப்படாதா?

மரக:— அதை நான் சொல்லவேணுமா? இதுமுதல் அதிகம் இங்கு வராதே. அவ்வாறு வந்தாலும் என்னிடம் வேடிக்கையாக விளையாடுவதும் சிரிப்பதுமான வாடிக்கையை இன்றோடே விடு. என்றாள்.

மரகதம் கூறியது, உண்மையென்று அனுமந்தன் எண்ணிக்கொண்டு அது முதல் அவ்வீட்டிற்கு அதிகம் வருகிறதில்லை, முக்கியமாக வரவேண்டிய காரியமிருந்தால் வந்து உடனே போய்விடுவான். இவ்வாறிருக்கையில் மரகதம் பூப்

படைந்து வீட்டிலிருக்கிற காலத்தில் தனது தந்தையான சோணாசல முதலியாருடன் நாணமின்றி "மரகதத்தை எனக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும்" என்று கேட்பான். அவரும் தன் ஒரே மகன் மனப்படி நடக்கவேண்டும் என்பதினாலோ அல்லது மாட்டேனென்றால் கடியெடுத்து மாட்டுவான் என்கிற பயத்தினாலே ஆகட்டும் என்பார். இப்படியிருக்கையில், சுந்தரன் மிதுனபுரியில் வந்திருக்கிறதும் கனகசபை முதலியார் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போயிருப்பதும் மரகதத்தைச் சுந்தரனுக்கு விவாகம் செய்துவைப்பதற்கே என்று சிலரால் தெரிந்து கொண்டான்.

கனகசபை முதலியாரே அந்த விஷயத்தில் தலையிட்டிருப்பதால் அதை மாற்ற எவ்விதத்திலும் இயலாதென்பதை எண்ணினான். ஆகிலும் நமது சாமர்த்தியத்தை இக்காரியத்தில் செலுத்தியே பார்க்கவேண்டும், இது முடிவதற்கு ஜோசியரும் வைத்தியருமான நமது நண்பராலேதான் முடியும். என்று திடப்படுத்திக்கொண்டு, சரேலென்று வைத்தியர் வீட்டிற்குப்போனான். வைத்தியர் இவனைக்கண்டதும், அனுமந்தா! என்ன விசேஷம் ஒருவனாய் நிற்கிறாய், உன்னை பார்த்தால் ஏதோ பெரியகவலைப்பட்டவன்போலத் தோற்றுகிதே என்றார்.

அனுமந்தன், சந்தோஷப்பட்டு அடா! ஜோசியர் என்றால் இவரல்லவோ ஜோசியர். நாம் வந்து நிற்பதற்குள் "ஏதோ பெரிய கவலைப்பட்டவன்போலத் தோன்றுகிறதே" என்றாரே என்று சுவாமீ! நான் கவலைப்பட்டுள்ளது வாஸ்தவமே. ஆனாலும் என் கவலையைத் தங்களால்தான் ஒழிக்க வேண்டும். அப்படி ஒழிப்பீர்களானால் அதற்கேற்ற பணம் கொடுப்பதில் பின்வாங்கமாட்டேன். அந்தக் கவலையாவது யாதெனில், எனது அம்மான் புதல்வி மரகதம் என்பவள் கனகசபை முதலியார் வீட்டில் வளர்ந்து வருவது தாங்கள் அறிவீர்கள் அல்லவா? அவளை நானே மணம்புரிய வேண்டுமென்று நெடுநாளாய் எண்ணியிருந்தேன், அது அவளுக்கும் சம்மதமே. அவ்வாறிக்க. கனகசபை முதலி

யார் அப்பெண்ணை தனது தமையனார் புதல்வனான சுந்தரத்திற்கு விவாகம் செய்து வைக்கக்கருதி அதை முடிவுசெய்ய தன் தமையனார் இருக்குமிடமான வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போயிருக்கிறார். அவர் போய் கலியாணத்தை முடிவு செய்வதற்குள் எப்படியாவது கலைத்து என்னிஷ்டம்போல் நடத்தி வைக்கவேணும் என்றழுதான்.

வைத்தியர் அநுமந்தனைப்பார்த்து அநுமந்தா! நீ பயப்படாதே. நான் அக்காரியத்தைப் பூர்த்தி செய்விக்கிறேன். ஆனால் அது விஷயமாக இப்போதே நான் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போகவேணும். நான் போனால் முடியாத காரியமும் உண்டோ? அதில்லை. இக்காரியத்தில் நான் உழைத்தால் நீ என்ன கொடுப்பாய்? என்னிஷ்டம்போலக் கொடுப்பதானால் செய்கிறேன். அன்றேல் அதில் நான் தலையிடமாட்டேன் என்றார். அநுமந்தன், சுவாமீ! தாங்கள் என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள் அதைச் சொல்லுவீர்களாகில் அந்தப்படி செய்யக் காத்திருக்கிறேன் என்றான். வைத்தியர் தம்பீ! நீயோ அறியாதவன் மேலும் மிகுந்த திரவியவந்தனுமல்ல. ஆகையால் ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடு நான் முடித்துவிடுகிறேன் என்றார். அநுமந்தன் அதற்கொத்துக்கொண்டான் அப்போதே தன் கையிலிருந்த காப்பை விற்று தொண்ணூறு ரூபாய் கொண்டுவந்து வைத்தியரிடத்தில் கொடுத்துவிட்டு ஐயா! இதை தாங்கள் கேட்ட ஐந்நூறு ரூபாயில் கணக்கிடவேண்டாம். அந்த ஐந்நூறு ரூபாயும் பின்னிட்டு கொடுக்கிறேன். இதை தாங்கள் போய் வர வேண்டிய செலவுக்கு வைத்துக் கொள்ளுங்களென்று கொடுத்துவிட்டு வைத்தியரிடம் செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

அநுமந்தராயன் போய்விட்டதும் வைத்தியர் தொண்ணூறு ரூபாயையும் தட்டித் தட்டி ஏழுவிசை எண்ணிப் பார்த்து அளவிலாத சந்தோஷப்பட்டுக்கொண்டு ஷை ரூபாயில் பத்து ரூபாய் செலவிற்கு எடுத்துக்கொண்டு மீதி ரூபா

எண்பதையும் தனது மனைவியிடம் கொடுத்துவிட்டு வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போய்விட்டார்.

ஷை வைத்தியரோ வாயாடியே தவிர கையினால் ஒன்றும் ஆகாது. அவர் தகப்பனார் மிகுந்த பண்டிதரானதால் அந்த ஹோதாவின்மேல் தள்ளிக்கொண்டு போகிறது. இவ்ருக்கு கைபார்க்கவே சரியாய்த் தெரியாது. சுரக்காரன் கை காட்டி மருந்து கொடுங்களென்றால், சோற்றுக் கற்றாழை லேகியம் கொடுப்பான் சீதபேதிக்காரன் மருந்துக் கேட்டால், சித்திர மூலக்கஷாயம் போட்டுச் சாப்பிடச்சொல்லுவான், அனுபோகத்தில் தான் இம்மாதிரி என்றாலோகைவாசி இதை விட நேர்த்திதான், ஷை வைத்தியர் பார்க்கும் கேசுகளில் ஆயிரத்திற்கு ஒருவன் தேறுவது கடினம், ஒரு வீட்டிற்கு எண்ணி மூன்று விசை போய்வந்தால் நாலாவதுவிசைபோவதற்குள் சங்கு சப்தம் தப்பாமல் நோயாளி இருந்த வீட்டின் தெருவில் கேட்கலாம் இது தவிர இவர் ஜோசியமும் சிறிது சொல்லுவார், அந்த ஜோசியத்தின் பலனோ வைத்திய பலனினும் பதின்மடங்கதிமாகவே யிருக்கும், ஆனால் வாய்ப் பேச்சோ பார்ப்பவரும் கேட்பவரும் மலைத்து விடுவார்கள், ரூபாய் அறுப்பதிலோ, தாசிகளுக்கு அப்பன் என்னலாம், இத்தகைய ஆசாமி மிதுனபுரியிலிருந்து புறப்பட்டு வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வந்து, அன்றிரவு ஓர் சத்திரத்தில் தங்கிவிட்டு மறுதினம் காலையில் குளிக்காமலே சுமார் அரை ஆழாக்கு விபூதியை எடுத்துக் கனக்கக் கட்டுக்கட்டாய்குழையல்போட்டுக் கொண்டு பெரிய பைசா (அரையணா நாணயத்தைச் சிலவயோதியர்கள் பெரிய பைசா வெண்பதுண்டு) அவ்வளவு நடு நெற்றில் சந்தன மிட்டுக்கொண்டு குணாலய முதலியார் வீட்டிற்குப்போனார்.

வைத்தியர் வரவைக்கண்டதும் குணாலய முதலியார், அன்புடன் வரவழைத்து உட்காரச்சொல்லி, க்ஷேம லாபத்தை விசாரித்து வைத்தியருக்குச் சாப்பாட்டுக்காக படியரிசி கொடுத்து தமது வாழைத் தோட்டத்தில் தளிகை செய்து கொள்ளச் சொன்னார். முதலியார் உத்திரவுபடியே ஒரு படி

அரிசியும் அதற்கிசையச் சாமக்கிரியைகளும் கொடுக்கப்பட்டது. வைத்தியர் சமையல் செய்து விலாப்புடைக்கத்தின்று விட்டு வந்து உட்கார்ந்தார். இவருக்கு வைத்தியத்துடன் ஜோசியமும் தெரியுமென்ற பெத்தபேர் பரவியிருந்தபடியால் பலரும் இவரைக்கண்டால் ஆருடம் கேட்பார்கள், பெயர் ராசி பார்க்கச் சொல்லுவார்கள், ஜாதகத்தைக் காட்டுவார்கள், இவரும் தெரியாதென்று சொல்லாமல் எதையாவது அளப்பார், வைத்தியர் சாப்பிட்டுவிட்டு வந்து தனியே ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு எவ்விதத்தில் கலகம் செய்து மரகதத்தைச் சுந்தரனுக்குக் கலியாணம் செய்ய வெண்ணியிருக்கும் எண்ணத்தைக் கெடுக்கலாம் என்று யோசனை செய்துகொண்டிருந்தார்.

வைத்தியர் சேதி இப்படியிருக்க, மிதுன புரியிலிருந்து வந்த கனகசபை முதலியார், தான் வந்த மறுதினம் இரவு போசனம் செய்துவிட்டு உட்கார்ந்திருக்கையில், தமையனான குணாலய முதலியார் தம்பியை நோக்கி:

குணாலய முதலியார்:— ஏனப்பா கனகசபை! திடீரென பையன் கலியாண விஷயத்தைப்பற்றி எழுதினாயே என்ன விசேஷம்? (இதற்குள் குணாலய முதலியாரின் மனைவியான அம்மணியம்மாளும் அவ்விடம் வந்துசேர்ந்தார்கள்.)

கனக:— விசேஷ மென்ன? சுந்தரனுக்கு வயதாக வில்லையா? இதுவரையில்தான் வாசித்துக்கொண்டிருந்தானே என்றிருந்தது. அவன் பி. ஏ. பரீக்ஷையில் தெரிவிட்டானென்று பத்திரிகை மூலமாய் பார்த்தேன், இனி சீக்கிரத்தில் விவாகம் செய்து பார்க்கவேணுமென்கிற ஆவல் உண்டாயிற்று, பிறகுதான் தங்களுக்குத் தெரிவித்தேன்.

குண:— நீ யோசித்திருக்கும் காரியம் அவ்வளவு சீக்கிரத்தில் ஆவதா? நம்மிஷ்டத்துடன் நமது பந்துக்களில் இருக்கும் சில பெரியோர்களையும் கலக்கவேண்டாமா?

கனக:— யாரைக் கலந்தால் என்ன முனைந்து நின்றால் வெகு சுருக்கில் முடிக்கலாம், மேலும் காலம் ஒத்துக்கொண்டால், தானே முடியும்.

குணு:— அதிருக்கட்டும் அப்படி விவாகம் செய்வதானால் செலவு என்னபிடிக்கும்?

கனக:— தாங்களே சொல்லுங்கள், எனக்கு அனுபோகம் தெரியுமா?

குணு:— அனுபோகமென்ன, சுமார் மூவாயிரம் ரூபாய் பிடிக்காதா?

கனக:—நன்றாயிருக்கிறது, நாமென்ன நாலைந்து பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்து பார்க்கப்போகிறோமா என்ன? நமக்கிருக்கும் ஒருவனுக்கு விசேஷமாகவே செய்யவேணும், அதாவது என்ன குறைந்தாலும் இருபதினாயிரம் ரூபாயிக்குப் பிடிக்கும்.

குணு.— கனகசபை நான் சொல்வதைக்கேள். நீ செய்வதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை, அதாவது நமது நாட்டார்கள் இவ்வாறான காரியங்களில் வீண் டம்பங்கள் செய்தே அதிக கடனாளிகளானார்கள். நம் கண்முன்னமே அநேக ஜமீன்தாரிகளெல்லாம் கௌரவம் சம்பாதிக்க முயன்று அளவிறந்த பணங்களைத் தங்கள் வீட்டில் நடக்கும் சுபா சுபங்களில் செலவிட்டு கடன் அதிகரித்திருப்பதைக் கண்டிருக்கிறோம், தவிர, நீ செய்ய உத்தேசித்த செலவு, புண்ணியமா? அல்ல, அவ்வாறு பிரதி பிரயோசனமின்றி செலவிடும் பணத்தைக்கொண்டு பலபேர்களுக்கும் நன்மை விளைவிக்கும், ஏழை பாடசாலை, தேசாந்திரிகள் உணவுகொள்ள வசதி, தேவாலய திருப்பணி முதலியன செய்தாலும் நமது வாழ்நாளின் பின்பாவது ஒரு சுகத்தைக் கொடுக்கும், அவ்வாறன்றி பந்தல் அலங்கரிப்பதிலும், கோலம்வருவதிலும், தேவடியாள் கச்சேரியிலும் செல்வத்தைச் செலவிடுவது வீணே, விவாகமென்றால் இன்னார் புத்

திரன் இன்னார் புதல்வியை மணந்தானென்றறிய, பல பந்துக்களையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையில் மணமுடிந்து வந்தவர்களுக்கெல்லாம் சரியான உபசாரம் செய்து இரண்டொருநாள் வைத்திருந்து அனுப்புவது சகஜம். அதைவிட்டு, மத்தாப்பும் பாணமும், தீவட்டிகளும், நவீன மேளங்களும் வைத்து ஊர்கோலம் வருவதும், ஆயிரம் ஐந்நூறு கொடுத்து தாசி கச்சேரி வைப்பதும் இதுகளெல்லாம் எந்த பிரமாணத்தில் கூறுகிறது வேண்டுமானால் விவாகம் முடிந்து சகலரும் போஜனம் செய்த பின்பு வந்தவர்கள் மனம் களிப்பாய் பொழுது போக்கும் நிமித்தம் புராண பிரசங்கங்கள் தகுந்த புலவர்களைக்கொண்டு நடத்தலாம், வீண்டம்பம் செய்வதில் எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை, பிறகு உன்னிஷ்டம் உன் அண்ணியின் இஷ்டம் உங்கள் எண்ணத்தை நான் கெடுத்தேன் என்று சொல்லவேண்டாம்.

கனக:— செலவைப்பற்றி எப்படியாவது ஆகிறது. மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவோம், அதாவது பெண் எங்கே பார்த்திருக்கிறீர்கள்?

குண:— என் உனக்குத் தெரியாதா? உனக்கொப்ப எந்த பெண்ணைப் பார்க்கலாம்?

கனக:— எல்லாம் என்னையே கேட்கிறீர்களே அதென்ன? பெரியவர்களான தாங்களல்லவோ சொல்லவேணும்.

குண:— நான் இரண்டு விடத்தில் நோக்கம் வைத்திருக்கிறேன், அதாவது நாகப்பட்டணம், வேதநாத முதலியார் பெண்ணொன்று கும்பகோணம் வடிவேலு முதலியார் பெண்ணொன்று இவ் விரண்டில் கும்பகோணம் வடிவேலு முதலியார் பெண்ணைக் கட்டினால் பையன் போகவர கௌரவமாயிருக்கும், அவர்கள் நிறைந்த தனவந்தவர்கள் இதுதான் என் கருத்து.

அம்மணியம்மாள்:— (குணாலய முதலியார் மனைவி, ஆஹா வெகு நன்றாயிருக்கு, நல்ல பணக்காரனைப் பார்த்தீர்

கள். உங்கள் சகோதரியின் பெண் நம்மை அண்டிக்கொண்டிருக்கிறது, அதற்குத் தாய் தகப்பன் இல்லை. அதை நாமே விட்டால் பிறர் ஏனனம் செய்யார்களா? மரகதத்தைத் தவிர வேறு பெண்ணைக் கட்டவே கூடாது என்று சொன்னாள்.

கனக:—நேற்றெல்லாம் மிதுனபுரியிலும், மனோன்மணி இந்த மாதரிதான் சண்டை போட்டாள், எனக்கும் மரகதத்தையே விவாகம் செய்துவைக்க வேணுமென்ற எண்ணம் அதற்கொப்ப அண்ணியம்மாளும் சொன்னார்கள். எல்லோரையும்விட பையனுக்கும் அந்த எண்ணமே அதிகம், ஆனதால் எல்லாருடைய இஷ்டம்போல் மரகதத்தையே கட்டிவிடுவோம், மேலும் மருமகளை வைத்துப் படைக்கவேண்டிய இருவர் மனமும் ஒரே விதமாயிருப்பதால் நாமொன்றும் தடை சொல்லக் கூடாதென்றார்.

குண:— சரி! நோக்கத்தைச் சொன்னேனே தவிர வெளியில் தான் கட்டவேணும் என்று நான் வற்புறுத்தவில்லையே! அப்படியே எல்லாருடைய மனம்போல முடிக்கலாம். நாளைய தினம் புரோகிதரைக் கொண்டு நாள் பார்த்துவிட்டால் மற்ற காரியங்களெல்லாம் பார்க்க அனுகூலமாய் இருக்கும் என்று பேசி முடித்து அவரவர்கள் எழுந்து படுக்கைக்குப் போய்விட்டார்கள். மறுதினம் தான் நமது பண்டித சிரோமணியும் சோதிட சிகாமணியுமான, களங்க உரு வந்தது.

வைத்தியரைக் கண்டவளவில் சுந்தரனுக்கும் மரகதத்திற்கும் பொருத்த நிமித்தம் சரியாயிருக்கிறதா வென்று பார்க்கவேணுமென்கிற எண்ணத்தை குணலய முதலியார் கொண்டாரெனினும், வைத்தியர் சாப்பிட்டுவிட்டு வரட்டுமென்று இருந்தார், வைத்தியரும் சாப்பிட்டுவிட்டு வந்து திண்ணையின்மீது உட்கார்ந்தார், முதலியாரும் சற்று நேரத்தில் உள்ளே யிருந்து வெளியில் வந்தார், முதலியாரைப் பார்த்து வைத்தியர் எழுந்தார், முதலியார் வைத்தியரை

உள்ளே வந்து உட்காரச்சொல்லி, தன் தம்பியையும் மனைவியையும் அழைத்து வைத்துக்கொண்டு, நடந்த விஷயங்களைச் சொல்லி சுந்தரன், மரகதம் இவர்களுடைய ஜாதகத்தையும் அவரிடம் தந்து அதைப் பார்க்கச்சொன்னார்.

"சுந்தரனுக்கும் மரகதத்திற்கும் விவாகம் செய்து வைக்கலாமென்றிருக்கிறோம்" என்று குறையமுதலியார் சொன்னவளவில் வைத்தியர், ஆகா! ரொம்பவும் நல்லது, பிள்ளைக்கு ஏற்ற பெண்ணே மரகதம். இருவருக்கும் மணம் முடித்தால் வெகு நன்றாயிருக்கும், மேலும் உங்கள் தங்கையின் குமாரத்தியானதால், குலம்கோத்திரம் விசாரிக்கவேண்டியதில்லை, பாத்தியமும் விடாமலிருக்கும், அப்படியே முடிக்க எனக்கும் சம்மதமே என்று சம்மதப் பட்டவர்போல அபிநயத்துச் சொன்னார்.

உடனே சுந்தரன் ஜாதகத்தை சுமார் அரைமணி நேரம் பார்த்து, கற்பலகை யொன்றில் இராசி சக்கரங்கள் போட்டு சிற்சில பாடல்களை உவமானங்கள் கூறி பையன் ஜாதகம் வெகு நன்றாயிருக்கிறது, பெண் ஜாதகத்தைப் பார்க்கலாம் என்று மரகதம் ஜாதகத்தைவாங்கி கால்மணிநேரம் பார்த்துவிட்டு, கீழ் உதட்டை மேல் முன்னம் பல்லினால் கடித்துக்கொண்டு, இரண்டு கண்களின் கருவிழிகளும் மேற்புருவங்களை நோக்க வலது கையை (பொடி உறிஞ்சித் தட்டுபவர்கள் மாதிரி) உதரித் தட்டி, இடது கையிலிருந்த ஜாதகத்தைக் கீழே வைத்துவிட்டு, "என்ன முதலியாரே!" நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்தாற் போலிருக்கிறதே, நமது சுந்தரனுக்கு, மரகதத்தை மணஞ்செய்விக்க கனவிலும் நினையாதேயுங்கள், அதன் உள் ஆந்ரீகத்தை நான் உங்களுக்குக்கூட சொல்ல மாட்டேன், ஏனென்றால், அதை வெளிப்படுத்திவிட்டால், மற்ற யாருங் கொள்ளப் பிரியப்படார்கள்.

ஆனதால் இந்த சங்கதியை நாம் நால்வரும் அறிந்ததாயிருக்கவேண்டுமே தவிர, வெளியிடக்கூடாது, என்று வெகு

சாமர்த்தியமாய் புளுவினார், வைத்தியர், வைத்திய பாகத்தில் பூஜ்ஜியமா யிருந்தாலும் ஆரூடத்தில் மட்டும் அநேகமாய் சொல்லுகிறபடி நடந்து வருகிறதால், இதைக் கேட்ட அம்மணியம்மாள், சரி நாமென்ன செய்யலாம் நம்மாலான வரையில் வஞ்சனை இல்லாமல்தான் பார்த்தோம், ஜாதகம் இம்மாதிரி இருந்தால் அதற்கு நாமென்ன செய்வது, விளக்கிருந்தும் கிணற்றில் விழலாமா? சரி கும்பகோணத்துப் பெண்ணையே பாருங்கள் என்றாள். குணாலய முதலியாரும் அம்மணியம்மாள் சொன்னபடியே சொல்லி, என்னப்பா கனகசபை! உன்னிஷ்டம் எப்படி யிருக்கிறதென்றார். கனகசபை முதலியாரும் சுந்தரனுடைய சுகவாழ்வைக் கோரினவராய், தன் தமையனாரைப் பார்த்து, அண்ணா! கும்பகோணம் வடிவேலு முதலியாரின் மகளையே பாருங்கள் என்றார்.

இதற்குள் மாலை நான்கு மணியாய் விட்டது, ஜோசியருக்கு ஐந்து ரூபாய் தட்சணை கொடுத்து மரியாதை செய்தார்கள். ஜோசியரும் தமது எண்ணத்தை முடித்து விட்டதைப்பற்றி உள்ளுக்குள்ளே ஆனந்தம் கொண்டவராய் இச்சேதியை அநுமந்தனுக்கறிவிக்க. அன்றே முதலியாரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு இரவு எட்டு மணிக்கு மிதுனபுரி வந்து சேர்ந்தார், தான் வந்த சேதியை அநுமந்தனுக்குச் சொல்லியனுப்பவே, அரை நிமிஷத்திற்கெல்லாம் அநுமந்தன் வைத்தியர் வீட்டிற்கு வந்தான், வைத்தியரால் வைத்தீஸ்வரன் கோவிலில் நடந்தன யாவும் சொல்லக் கேட்டான், அளவிலா மகிழ்ச்சிபூண்டான், வைத்தியரின் சாமர்த்தியத்திற்காக அவரைச் சாலவும் மெச்சினான். அநுமந்தன் வைத்தியரைப் பார்த்து சுவாமி! தாங்கள் எனக்குச் செய்த உதவிக்குப்பிரதி என்னதான் செய்வேன், என் ஆஸ்தியனைத்தையும் தங்களுக்குக் கொடுத்தாலும் ஈடாகாது. ஆயினும் என்னுடைய சொத்துக்களனைத்தும் என் சுவாதீனத்திலிருந்தால் அவ்வாறே செய்வேன், ஆகிலும் இக்கவனம் என் ஆயுள் உள்ள வரையில் என்னை விட்டகலாது, தற்காலம் நான் உங்களுக்குச் சொல்லிய ரூபாய் ஐந்நூறை கொடுப்ப

தற்காக சென்னையிலுள்ள என்னண்பன் ஒருவனுக்குக்கடிதம் எழுதியிருந்தேன் அவன் என்னை வரும்படி தெரிவித்திருக்கிறான்.

அவ்வாறே நான் நாளையதினம் சென்னைக்குப்போய் இரண்டு தினங்களில் வந்து சேருகிறேன் என்று வைத்தியரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு மறுதினம் காலை ரயிலுக்குச் சென்னை வந்து மைலாப்பூரிலுள்ள தனது பந்துவான ஒருவர் வீட்டில் இருந்து அன்று மாலை புரசையிலுள்ள தன்னண்பன், கோதண்டசாமி என்பவனைப் போய்க் கண்டான். கண்டவுடன் கோதண்டசாமி பிரியமாக வரவேற்று க்ஷேம சமாசாரத்தை விசாரித்து பிறகு அனுமந்த முதலியாரே, நீங்கள் எழுதிய கடிதம் வந்தது, அதற்குப் பதிலும் எழுதினேன், அது சேர்ந்ததா வென்று கேட்டான், அனுமந்தன் ஆகா சேர்ந்தது. அது கிடைத்த பின்புதான் நான் புறப்பட்டு வந்தேன். நான் மறுபடி நாளை மாலை ரெயிலுக்கு ஊர் போய் சேரவேண்டும் என்முன், அனுமந்தன் சுகமாய்ப் போகலாம் என்றுலொன்றுந் தடையில்லை, நாளைய காலையில் பணம் வந்துவிடும் பத்துமணிக்கெல்லாம் கொடுத்துவிடுகிறேன், நீங்கள் சாயங்காலம் போகலாம் என்முன்.

அனுமந்தன் தான் மைலாப்பூரில் வந்திருப்பதால் இப்போது மைலாப்பூருக்குப்போய் நாளைய தினம் பத்துமணிக்கெல்லாம் வருகிறேனென்று போய் மறுதினங் காலையில் மைலாப்பூரிலிருந்து கோச்சு வண்டி ஒன்று வாடகைக்குப் பேசிக்கொண்டு கோதண்டசாமிவீட்டிற்கு வந்தான். அச்சமயத்தில் கோதண்டன் வெளியே போக தயாராயிருந்தான். இன்னும் இரண்டொரு நிமிஷங்கள் பொறுத்து அனுமந்தன் வந்திருந்தால் கோதண்டசாமி தரிசனம் கிடைக்காது, கோச்சு வண்டியில் வந்ததால் கிடைத்தது, அனுமந்தனைப் பார்த்தவுடன் கோதண்டன் வாருங்கள்! வாருங்கள், நானும் பணத்திற்காகத்தான் கோர்ட்டிற்குப் போகப் பிரயாணப் பட்டேன், ஒரு டிக்கிரி பாபத்தில் இன்றைய தினம் ஒரு ஆசாமி ஆயிரம் ரூபாய் கோர்ட்டில் கட்டப்போகிறுன்.

அதை வாங்கிக்கொண்டுவந்து தங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்தனுப்பலா மென்றிருந்தேன் என்றான், அப்படியானால் நான் எப்போதுவர என்று அனுமந்தன் கேட்டான், நீங்கள் நாலுமணிக்கெல்லாம் இவ்விடம் வந்துவிட்டால்தடையில்லாமல் ரூபாய் கொடுத்துவிடுகிறேன், பிறகு தங்கள் சௌகரியம்போல ரயிலுக்குப் போகலாம் என்றான் கோதண்டன். அனுமந்தன் அப்படியானால் வண்டியில் ஏறுங்கள் என்று கோதண்டனை ஏற்றிக்கொண்டு நேரே ஹைகோர்ட்டண்டை விட்டுவிட்டு பீச்சு வழியாக மைலாப்பூர் போய் சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு மூன்றரை மணிக்கெல்லாம் கோதண்டசாமி வீட்டண்டை வந்தான். வீட்டில் விசாரித்தான் தங்களுடன் போனவர் இன்னும் வரவில்லை யென்றார்கள், அவ்விடத்திலேயே இரவு எட்டு மணிவரையில் காத்திருந்தான், ஆள் உருவே இல்லை, அனுமந்தன் வீட்டில் வந்து தனக்காகக் காத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்த கோதண்டசாமி, பக்கத்து தெருவிலுள்ள தன் சிநேகன் வீட்டிற்குப்போய் அனுமந்தன் தன் வீட்டைவிட்டு போகும் டயத்தை எதிர்பார்த்திருந்தான் எட்டுமணி வரையில் எதிர்பார்த்துவிட்டு அனுமந்தன் மைலாப்பூரை யடைந்தான். மறுதினங்காலை ஐந்து மணிக்கெல்லாம் அனுமந்தன் கோதண்டசாமியின் சந்நிதியடைந்தான், அனுமந்தன் வந்தசேதி யறிந்து கோதண்டன் வெளியில் வந்து என்ன சார் நேற்று கோர்ட்டிலேயே ஐந்துமணியாய்விட்டது. அங்கிருந்து நேரே மைலாப்பூரில்போய் தங்களை விசாரித்தேன், தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள், ஒருக்கால் இங்கு தான் வந்திருக்கிறீர்களோவென்று வேகமாய் இங்கே வந்தேன், இங்கு விசாரித்ததில் இப்போதுதான் போய்விட்டீர்கள் என்று சொன்னார்கள்.

பிறகு ரொம்ப வருத்தப்பட்டேன் என்று சொன்னான், அனுமந்தன் மெய்தானுக்கும் என்று நினைத்து, சரிபோன விடத்தில் அம்மாதரியாய்விட்டால் நாமென்னசெய்வது இப்போது பணங்கொடுத்தால் ஒருமணி வண்டிக்காவது போக

லாமென்றிருக்கிறேன் என்றான், கோதண்டன் அனுமந்தனைப் பார்த்தானுமுதலியாரே இன்னம் பணம் கைக்குவரவில்லை. எண் பதினாயிரம் ரூபாய் வரவேண்டியதற்கு ஆயிரம் ரூபாய் வர மாட்டேன் என்கிறதே, சரி இன்று மாலை எவ்விதத்திலும் ரூபாய் கொடுத்துவிடுகிறேன் நீங்கள் தடையில்லாமல் போகலாம் என்றான். இதையும் மெய்யென்று நம்பி அனுமந்தன் வீட்டிற்கு வந்து மறுபடி மாலை கோதண்டசாமியின் வீட்டிற்கு வந்து விசாரித்தான். வீட்டிலுள்ளவர்கள் தங்களை நாளையதினம் வரச்சொன்னார் என்றுமட்டில் சொன்னார்களே தவிர விவரமான தகவல் ஒன்றும் ஏற்படவில்லை. இதற்குள் அங்கொரு ஆசாமி தென்பட்டான். அவனை விசாரித்ததில் முன்னாளைய கோதண்டசாமி வனம்போனதுபோல, இக்கோதண்டசாமி திண்டிவனம் போயிருப்பதாக ஏற்பட்டது. என் செய்வான் அனுமந்தன் மைலாப்பூர் போவதும் காலையில் ஒரு பயணம் மாலையில் ஒரு பயணம் புரசைவாக்கம் வருவதுமாய் இருந்தான்.

சுமார் ஒரு வாரம் வரையில் காத்திருந்தான், கோதண்டன் செத்ததும் பிழைத்ததுங்கூடத் தெரியவில்லை, அனுமந்தனுக்கோ கையிலிருந்த பணமெல்லாம் மைலாப்பூருக்கும் புரசபாக்கத்திற்கும் வாடகை வண்டிக்குக் கொடுத்தே செலவாய் விட்டது. அனுமந்தனிடம் ஒரு காசுகூடஇல்லை, அரைமணி நேரத்திற்கு ஒரு பீடி பிடிப்பான் பீடி வாங்கவும் ஒரு காசு கிடையாது, என் செய்வான் பாவம் பீடிப் பயித்தியம் பெரிது, யாராவது தெருவில் பிடித்துக்கொண்டுபோனால் அவர்களிடம் கெஞ்சி வாங்கி அடிபீடியைக் கிள்ளிப்போட்டு விட்டு ஒருதரம் அடிப்பான், மைலாப்பூருக்கும் புரசவாக்கத்திற்கும் பேயைப்போல நடக்க நேர்ந்தது, கொஞ்சமான வழியாயிருக்கிறது பாவம், அனுமந்தன் அம்மாதிரி எப்போதும் நடந்ததேயில்லை, அப்போதும் கோதண்டனை நம்பியேயிருந்தான்.

கோதண்டசாமியோ பெரிய தகல்பாசி, தன் தகப்பன் கொஞ்சம் கொடுக்கல் வாங்கல்லாவாதேவி செய்திருந்து கால

மாய் விட்டான், அவன் தகப்பன் இறக்கும்போது, கொடுக்கல் வாங்கலில் இரண்டாயிரம் ரூபாயும் நகை நாணயத்தில் நாலாயிரம் ரூபாயும் ஒரு வீடு நாலாயிரம் ரூபாயும் ஆக பத்தாயிரம் ரூபாய் வைத்துவிட்டுப்போனான், தகப்பன் இறந்த நான்கு மாதத்திற்குள் தம்பி கோதண்டன், வரவேண்டிய பாக்கிதார்களை யெல்லாம் தாராதரமின்றி கோர்ட்டில் தாவா செய்து ஒன்றுக்கு முக்கால். அரையாக வாங்கித் தாம் தூம் செய்துவிட்டான். தன் தகப்பனுரிருந்து செய்ததுபோல் தானும் கொடுக்கல் வாங்கல் செய்யவேணும் என்கிற ஆசை உண்டாயிற்று, தாயாருமில்லை. வீட்டிலிருக்கும் நகைகளை மார்வாடியிடம் அடகுவைத்து அந்தபணத்தை பத்து எட்டு கேட்கிறவர்களுக்கு ஒரு ரூபாயிக்கு ஒரு அணு இரண்டணு வட்டிவீதம் கொடுப்பான், கடன் காரர்களிடம் தினம் தண்டலுக்குப்போய் இரண்டு ஒன்று அகப்பட்டால், தன் சிநேகர்களான ஊர்தாரிப்பயல்களுடன் சேர்ந்துகொண்டு செலவு செய்து முண்டையைப்போல் வீடு வந்து சேர்வான், பேசுவதோ உடம்பெல்லாம் பொய், பார்ப்பவர்களுக்கு ஒப்பப் பொய் சொல்வான். 'பொய்யுடை யொருவன் சொல்வன்மையினுல் மெய் போலும்மே மெய் போலும்மே" என்னும் பழமொழிக்கு ஒத்தவன் இவனே ஒருவன் ஒரு ரூபாய் கேட்டால் குறைந்தது பதினைந்து விசை நடக்க வைத்து கடைசியில் இல்லையென்பான்.

இப்பேர்ப்பட்ட மகாபாவியை அனுமந்தன் நம்பினுன், கோதண்டசாமி யென்னும் திருநாமம் பெற்ற, இராமபிரான், அனுமார் என்னும் தூதரை ஏவல் கொண்டதை யொத்தது, மிதுன்புரி அனுமந்தன் கோதண்டனை அடுத்துத் திரிந்தது, கடைசியில் இரண்டு வாரங் காத்தபினபு கோதண்டசாமியின் தகவல் நன்றாய் ஏற்பட்டது அனுமந்தனுக்கு அதாவது கோதண்டன் தன்னிடமிருந்த நகை நாணயம் வீடு முதலியவைகளை யெல்லாம் ஒரு மார்வாடியிடம் வைத்து பணம் வாங்கி அதை தவணைபோலக் கொடுக்கத்தவறி மார்வாடி கோர்ட்டில் தாக்கல்செய்து ஏலத்தில் யெடுத்த சொத்துக்கள்போக

மீதி தொகைக்கு ஆளை வாரண்டில் பிடிக்கப் பிரயத்தனப் படுகிறதை அறிந்த கோதண்டன், புதுச்சேரிக்கு ஓடி ஒளித் துக்கொண்டானென்பதே. இதையறிந்த அனுமந்தன் வருத் தத்துடன் ஊர்ப்போய்ச்சேர, கையில் ரயில் சார்ச்சு இல்லா மல் தான் வந்திருந்த வீட்டில் கடன் வாங்கிக்கொண்டு மிது னபுரியை அடைந்து நடந்த வர்த்தமானங்கள் யாவையும் வைத்தியரிடம் கூறினன். வைத்தியர் பார்த்தார் தனக்கு அனுமந்தன் கொடுப்பதாகச்சொன்ன ரூபாய்க்கு ஒரு அண் டிமாண்டு எழுதிக்கொடுக்கும்படி கேட்டார். உடனே அனு மந்தன் வைத்தியனைப் பார்த்து, அய்யா தாங்கள் பயப்பட வேண்டாம் இக்தாரும் ஆயிரம் ரூபாய்க்கு எழுதித் தருகி றேன் என்று ஆயிரம் ரூபாய்க்கு ஓர் அண்டிமாண்டு எழுதி வைத்தியரிடம் கொடுத்தான். வைத்தியன் சந்தோஷப்பட்டு எப்படி இருந்தாலும் இந்த ஆயிரம் ரூபாயை அனுமந்தனிட மிருந்து பெறலாம் என்று தைரியமா யிருந்தான்.

நான்காம் அத்தியாயம்.

விவாகத்தடையால் காதலர்கள் கருத்தழிதல்.

இது நிற்க, கனகசபை முதலியார் வைத்தீஸ்வரன் கோ விலிலிருந்து மிதுனபுரிக்கு வந்ததும் நடந்த வர்த்தமானங் களை யெல்லாம் தன் மனைவியுடன் சொன்னார், அதைகேட்ட மனோன்மணியம்மாள் மாரகதத்தை சுந்தரனுக்கு கலியாணம் செய்து கண்ணால் பார்க்க கொடுத்துவைக்கவில்லையேயென்று வருத்தப்பட்டாள். ஆயினும் ஜாதகபாவம் ஆகாதா யிருந் தால் நாமென்ன செய்வது யென்று ஒருவாறு மனந்தேறி னள். அன்றைய யிரவு மரகதம் காய்ச்சிய பாலைக்கொண்டு வந்து மனோன்மணியம்மாளிடம்கொடுக்கவந்தாள், அப்போது மனோன்மணியம்மாளின் சிநேகமான ஒரு அம்மாள் அவ்வி டத்தில் உட்கார்ந்திருந்தாள் மரகதம் பாலைக் கொண்டுவந்து கொடுக்கையில் மரகதத்தைப்பார்த்து அழுதாள் மனோன்

மணியம்மாள், அதைக்கண்ட சிநேகிதை என்ன அம்மா குழந்தையைப் பார்த்து அழுகிறீர்களே என்று கேட்டாள். மனோன்மணியம்மாள் அந்தம்மாளைப்பார்த்து அம்மா! இந்தப் பெண் (மரகதம்) எனது நாத்தியம்மாள் இறந்ததுமுதல் என்னிடமே வளர்ந்து வந்தாள்.

நானும் என்வயிற்றிற் பிறந்ததைக்காட்டிலும் எண்மணங்கதிகமாகவே பாவித்து வந்தேன். என்னுடைய அனுபவங்களையெல்லாம் அவள் அறிந்தாள், அவள் குணங்களையெல்லாம் நான் அறிந்தேன், இம்மாதரி என் கையின்கீழ் இருந்து வளர்ந்த பெண்ணை என் மூத்தார் குமாரனை சுந்தரன் என்பவனுக்கே கலியாணம் செய்துவைக்கவேண்டும் என்று எண்ணியிருந்தேன். எங்கள் முதலியாரும் அவ்வாறே எண்ணியிருந்தார், அவர் இம்மாதத்திலேயே கலியாணத்தை முடிக்கவேண்டுமென்று இரண்டு நாளைக்கு முன்னே வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போய் எல்லாம் முடிவு செய்தான பிற்பாடு ஜோசியரிடம் ஜாதகத்தைக் காட்டினார்களாம், ஜோசியர் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கழுத்துப் பொருத்தமே இல்லை, இவ்விரண்டு ஜாதகருக்கு மணம்செய்வித்தல் கூடாது என்று கட்டாயமாய் சொல்லிவிட்டாராம், அதன் பின்பு கும்பகோணத்தில் வடிவேலு முதலியாரின் பெண்ணை சுந்தரனுக்கு மணம்புரிவிக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்தாராம், என்னமோ நமது கையின் கீழிருந்து வளர்ந்த பெண்ணை நாமே கட்டிக்கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன், என் எண்ணத்தில் கடவுள் கல்லைப்போட்டார், அதனால்தான் அவளைப் பார்த்ததும் அழை வந்தது என்று விருத்தாந்தங்களையெல்லாம் சொன்னாள்.

இதை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மரகதத்தின் மனம் எவ்வாறிருக்குமென்பதை இதை வாசிப்பவர்களே அறியலாம், நின்ற நிலைமையிலே சிலையுருவென ஸ்தம்பித்தாள், சுவாசம் ஒருவித ஆவேச சத்தம்போல் வந்துக்கொண்டிருந்தது, பார்வை ஒன்றைக்குறித்துப் பாராமல் நிலைக்கண்ணிட்டது, தேகமெல்லாம் குபீரென்று வேர்த்தது

கால்கள் நடுங்கின. இந்த சந்தர்ப்பத்தில் கையிலிருந்த பால் நிறைந்த வெண்கல செம்பை கைதவறிகீழே விட்டுவிட்டாள். செம்பு இரண்டாய் உடைந்ததுந் தவிர, அதிலிருந்த பாலெல்லாம் வெள்ளம்போல முற்றத்தில் ஓடிற்று. அதைக்கூட கவனியாது மரகதம் மரம்போல் அசைவற்று நின்றதினால் மனோன்மணியம்மாள மரகதத்தின் நிலைமை இத்தகையதாயிருக்கிறதென்பதை நன்குணர்ந்துகொண்டாள். ஆயினும், அதைக் கவனியாதும்போலவே மரகதம் என்ன தூக்கம்போலிருக்கிறது, நீ போய் படுத்துக்கொள்ளம்மாவென்று அனுப்பிவிட்டாள். மரகதமும் ஒன்றும் சொல்லாமல் நேரே தன் படுக்கை யறைக்குட்போய் கதவைத் தாளிட்டுக்கொண்டு கவிழ்ந்தபடி படுத்துக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். எவ்வளவுதான் மனதைத் திடப்படுத்தினும் அவளையும் அறியாது வருத்தம் வந்தது, புரண்டுப் புறண்டுப் படுத்தாலும் தூக்கம் வரவில்லை. கதவை மெள்ளத் திறந்து கொண்டு வெளியில் வந்தாள், இருள் விலைமாதர்களின் வேல்போன்ற அழகிய விழிகளில் தீட்டும் மைபோன்று மூடிக்கொண்டிருந்தது. தைரியமாய் நேரே சுந்தரன் நித்திரை செய்யும் அறையண்டை வந்தாள், கதவு சற்று திறக்கப்பட்டிருந்தது, அதை திறந்துகொண்டு உள்ளே சென்றாள். மஞ்சத்தின் மீது நிட்களங்கமாய் நித்திரை செய்யும் ஆடவர் சிங்கமான சுந்தரனைக் கண்டாள், இரண்டொரு நிமிஷம் உற்றுநோக்கினாள், அவள் மனம் பதைத்தது, மீறியவருத்தத்தை அடக்க முடியாமல் தலையில் அறைந்து கொண்டாள், அச்சந்தடியால் சுந்தரன் மறுபக்கம் திரும்பிப் படுத்தான்.

உடனே மரகதம் திடீரெனச் சுந்தரன் மார்பின்மீது சாய்ந்தாள், சுந்தரன் அலறி எழுந்தான், தன் மடியின்மீது மரகதம் சாய்ந்து கிடக்கக்கண்டான், வாரியெடுத்து தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு முகத்தைப் பார்த்தான். இரண்டு கண்களும் கோவைப்பழம்போல சிவந்து காணப்பட்டதுந்தவிர, இருவிழிகளின்றும் நீர் தாரை தாரையாய் வந்துகொண்டிருந்தது, அதைக்காணவே சுந்தரனுக்கு ஆச்

சரியமும் வருத்தமும் உண்டாயிற்று, மற்றொருக்கால் மரகதத்தை உற்று நோக்கினன் சுந்தரன், தன்னை உற்றுப்பார்க்கவே தானும் அவனைப்பார்த்துத் தேம்பியழ ஆரம்பித்தாள். மரகதம் அழும் காரணத்தை இன்னதென்றறியக்கூடவில்லை.

சுந்:— கண்மணி மரகதம்! ஏன் இவ்வாறு அழுகிறாய்?

மரக:— மறுபடி சுந்தரன் முகத்தைப் பார்த்து அழுதாள்.

சுந்:— (தன் கண்களில் நீர்ததும்ப) உன் வருத்தத்தின் காரணத்தை நான் அறியக்கூடாத பாவியா? அதன் காரணம் இன்னதென்றறியும் வரையில் என் மனம் அனலில் விட்ட மெழுகை நிகர்க்கிறதே. உன் பெற்றோர்களை நினைந்து வருந்துகிறாயா? உன்னெண்ணத்தைத் தீவிரத்தில் சொல். அன்றேல் என்னை வருத்தும் விரோதிகளின் பான்மையை ஒத்தவளாவாய்?

மரக:— அத்தான்! என் வாய்விட்டுச் சொல்ல மனம் வரவில்லையே. அச்சேதியை நினைக்கு மளவிலேயே "புண்ணிற் காச்சிய கோலை சொருவியதை யொப்பவிருக்கிறதே, என் செய்வேன்.

சுந்:— சும்மா சொல்லு. அஃது எத்தன்மையான வருத்தமாயினும் சுழல்காற்றிற்பட்ட பஞ்சுபோல் பாக்கச் செய்வேன்.

மரக:— உங்கள் சிறிய தகப்பனார் இரண்டு மூன்று நாளாய் எங்கே போயிருந்தார் தெரியுமா?

சுந்:— தெரியும் வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போயிருந்தார்.

மரக:— ஏன் தெரியுமா?

சுந்த:— என் தகப்பனைரைக் காணும் பொருட்டாம்

மரக:— அல்ல, அல்ல; உங்கள் திருமணத்தின் பொருட்டாம்.

சுந்:— என் திருமணத்தின் பொருட்டா? யார் சொன்னது?

மரக:— அம்மாள் சொன்னார்கள்.

சுந்:— என்னவென்று சொன்னார்கள்?

மரக:— நடந்த பலவும் விடாமற் சொல்லியழுதாள்.

சுந்:— மரகதம் அதற்காகவா பயப்படுகிறாய்? எனக்கா கும்பகோணத்துப் பெண்ணைப் பார்த்திருக்கிறார்கள் கும்பேஸ்வரரே நேரில் பிரத்தியட்சமானாலும் அதற் கிசையேனே.

மரக:— உங்கள் பெற்றோர்கள் வற்புறுத்தினால் என்ன செய்வது?

சுந்:— எதற்கு உடன்பட்டாலும், அவ்விஷயத்தில் மட்டும் உடன்படேன். இதை சத்தியமாக நம்பு

மரக:— அத்தான்! நான் ஒன்று சொல்லுகிறேன். அதாவது நாமிருவரும் ஒருவரை யொருவரன்றி பிறரை மணக்கிறதில்லையென்று பிரமாணிக்கம் செய்துகொள்ளவேணும். அவ்வாறு மணக்கப் பெரியோர்களுடைய வற்புறுத்தல் அதிகமானால் உயிர் துறப்பதேயன்றி அவர்கள் எண்ணத்திற்கு உட்படல் கூடாது. என்ன சொல்லுகிறீர்கள்? என்றாள் மரகதம்.

சுந்தரன் மரகதம் கூறியவாறே பலமான பிரமாணிக்கம் செய்து கொடுத்தான். மரகதம் சுந்தரனிடம் விடைபெற்றுக் கொண்டு தன் படுக்கை யறைக்குப் போய்விட்டாள். அங்கு போய் படுத்தாலும் நித்திரை என்பதே வரவில்லை.

"செப்புநேர்முலைக் கண்வேனில் வேடொடுத்ததேமலர்
அப்புமாரி காமவெம்மை யெய்யவாற்ற லாமையால்
எப்புவிக்கும் வேந்தெழிற் கடற்படிந்து மீண்டுமால்
வெப்புநோயர் நீரின்மூழ்கின் வெம்மையாறுமோ கோலாம்

என்பதுபோல் எவ்வித திருப்தியும் மரகதத்தின் மனக் கலவரத்தை அடக்கவில்லை. அன்றிரவை சிறிதும் நித்திரையின்றிக் கழித்து விடிந்தவுடன் எழுந்து நீண்டகாலம் வியாதியிலிருந்தவள்போல வாட்டத்துடன் உலாவிக்கொண்டிருந்தாள்.

சுந்தரனும் எவ்விதத்திலும் மரகதத்தின் குணத்தில் சிறிதும் இளைத்துக் காட்டவில்லை. அவன் மனதோ விடிவதற்குள் அநேகங்கோடி எண்ணங்களுக்கு இடந்தந்தது. சுந்தரனோ பாலியன். பிறந்தது முதல் இதுவரையில் ஸ்திரீ சுகம் என்பது இன்னதென்றறியாதவன். அவன் மனதில் மயல் மிகுத்தல் வியப்பா !

"நாணியென்பதை நாரியென்றுரைத்திடு நகையால்
வேணுவானது வளைந்ததுபோய் புகுந்தது என்றால்
காணலாவதோ ருருவமெய்ந்நாரியைக் கண்டால்
பூணுவார்மயல் காளையரென்பதும் புதிதோ,"

"உணங்கி யொருகான் முடமாகி
 யொருகண் ணின்றிச் செவியிழந்து
வணங்கு நெடுவால் அறுப்புண்டு
 மன்னு முதுகில் வயிறொட்டி
அணங்கு நலிய மூப்பெய்தி
 யகல்வா யோடு கழுத்தேந்திச்
சுணங்கன் முடுவல் பின்சென்ற
 லாரைக் காமன் றுயர்செய்யான்,"

என்னும் செய்யுள்போல,

இரதியும் நாணும் எழில்வாய்ந்த கன்னிகையைக்கண்ட சுந்தரன் மனம் பேதித்தல் ஆச்சரியமல்ல; என்றாலும் கணிகையர் மோகத்தில் அவ்வளவு மனதை எவனும் செலுத்துதல் கூடாது. மோகத்தினால் பாவம் சம்பவிக்கும் என்பது காதலா மலகமெனப் புல்லறிவாளரும் அறிந்த விஷயமே. காமத்தால் மனந்தடுமாறி, அடாத செய்கைகளைச்செய்து படாதபாடு பட்டவர்களின் சரித்திரத்தைக் கேட்டிருப்பதுடன் கண்டு மிருக்கிறோ மல்லவா!

"காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத் தழிந்தனன்
காமத்தால் கீசகன் கடிது மாண்டனன்
காமத்தால் மாண்டவர் கணக்கி லார்களே."

என்பது நம்மவர் அறியாததா? காமம் பூண்டவன், கள்ளுண்டவனுக்குச்சமானம். கள்ளுண்டவனுவது கள்ளின் வெறி நீங்கிய பின்பு உடனே நற்குண மடைகிறுன். காமக் கள்ளுண்டவஞே தான் கோரிய வனிதைக் கிடைத்த பின்னும் அவள் மோகத்தில் சதா அழுந்திக் கிடக்கிறுன், மோகம் என்பதைக் கொண்டவர்களின் சுபாவம், இனியில்லை யென்ற நிகரற்ற அழகு வாய்ந்த மங்கையைப் பெற்றுலுங் கூட அவன் மோகம் தணியாது, அழகு குன்றிய மங்கை ஒருத்திவரக்கண்டால் அவளும் கிடைப்பாளா வென்கிற ஆவல் அவனைத் தூண்டும்.

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்துக் குண்டு.

ஆனபடியால் அவன் என்றைக்கும்,

பாபத்தைச்செய்யவேண்டியதாகிறது. தன்மனைவியன்றி பிறன் மனைவியை மனத்தால் இச்சித்தாலுங்கூட பஞ்சமா பாதகனுகிறுன். "மற்ரூர் பொற்புடை மனைவி தன்னைப் புணர்வதற் கெண்ணுவானும்" என்ருர். பிறர்மனைவி யன்றி, வேசையர், கைப்பெண், முதலியவர்களைப் பெற இச்சித்த ஒருவன் "ஒரு சாந்திராமண விரதத்தை அனுஷ்டித்தால் சுத்தனுகிறுனென்று புராணங்களில் கூறி யிருக்கிறது மேற் கண்ட விஷயங்களைப்பற்றிக் கவனிக்காதவனு யிருந்தாலும், இவ்வுலகத்தில் அநேக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய திருக்கிறது. அயலான் மனைவியை நேசங்கொண்டால் உடையவனுக்கும், மற்றையோர்க்கும் தெரியாமல் காத்துக்கொள்ள வேண்டிய காரியத்தில் முக்கிய ஊக்கம் வைத்துச் சதா திகிலையே ஆபரணமாகப் பூண வேண்டியிருக்கிறது. அதனு லன்றோ,

"புக்கவிடத் தச்சம் போகதரும்போ தச்சம்
துய்க்குமிடத் தச்சந் தோன்ருமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமாலெவன் கொலோ
வுட்கான் பிறனில் புகல்."

என்று கூறியுள்ளார். அதுவுந் தவிர விலைமாதர் ஆசையாலோ, பணவிரயம், தேக நஷ்டம், மானக்குறைவு முதலிய பல இம்சைகள் வுண்டாகும், முக்கியத்தில் காமமானதுமுன்னடி அற்ப (சிறிது நேரம்) சுகத்தைத் தந்தாலும், பின்னால் (வியாதி, பணவிரையம் முதலியவற்றால்) அடையுந் துன்பத்திற்கோ அளவு கிடையாது.

"— நெடுங்காமம்.

முற்பயக்கும் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது."

என்று குமரகுரு சுவாமிகளும் கூறி யிருக்கின்றனர். ஆ! இஃதென்ன உலகம் தெரிந்த விஷயத்தைக்கூட மதியீனமாய்ச் செய்து விட்டிற்போலும் மட்டித்தன முறுகிறார்கள்.

"தையலார் மையலையகோ கெடுதி" என்று முறையிடுகிறார்களே! அதுகளை யெல்லாம் கவனிக்கக்கூடாதா? பின்னிட்டுத் துன்பம் அடைவோம் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும் காரியத்தை தேக சிறமப்பட்டும், பணவிரயம் செய்தும் செய்கிறார்கள். பகவத் தியானமானது பின்னைய சுகத்தைக் கொடுக்கிறதென்று தெரிந்திருந்தும், அதைச் செய்ய மனம் வருகிறதில்லை. பகவத் தியானத்திற்கு பணம் வேண்டுமா? தேக கஷ்டம் வேண்டுமா? ஒன்றுமில்லையே! ஏன் அவ்விதம் செய்யலாகாதென்று கேட்டால் கடவுள் புத்தி கொடுக்கவில்லையே யென்கிறார்கள். அவர்களின் சாதுரிய வார்த்தையை யார் மெச்சுகிறது.

"மங்கையர்கள் யோனியிசை வைத்திருக்கு மாசையினை
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்து—கங்கைமதி
வேணியரன்பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணுக் கதி."

என்பதுபோல,

மங்கையர் மயலில் மனதைச் செலுத்தும் அளவில் அநேகம் பாகம் குறைந்ததாகவே கடவுள் பக்தியில் வைத்தால்

எவ்வளவோ சுகிர்தம் அடையலாம். இச்செதி ஆடவர்களு க்கு மட்டிலா உள்ளது? மாதர்களுக்குமே. ஆடவர்களிலும் மாதர்கள் இவ்விஷயத்தில் நடப்பதை யோசிக்கில் மிகுந்த பரிதாபத்தை விளைவிக்கும்.

“பள்ளமுது னீர்ப்பழகினுமீனினம்
வெள்வம்புதியதைக் காணில் விருப்புறும்
கள்ளவிர்கோதையர் காமனோடாயினும்
உள்ளம்பிறிதாய் உருகுவர்கொண்ணீ.”

என்றும் வளையாபதியில் கூறியதுபோல மாதர்கள்குண மும் வேறுபடுதல் இயற்கையே.

ஆனால் நமது சுந்தரன் கொண்ட காதல் மேற்கண்ட தகைமைத்தல்ல. மரகதத்தை பலரறிய மணந்து இல்லறம் நடாத்தும் எண்ணத்துடனே யாதலால், அதை மிகவும் இழி வாகப் பாவித்தல் கூடாது. சுந்தரன் இரவெல்லாம் வருந்தி விடிந்ததும் எழுந்து சந்திரசேகரனைக்கூட அழைக்காமல் தன் வீட்டிற்கு எதிரிலிருந்தசிறுபூந்தோட்டத்திற்குள்போய் உட் கார்ந்து குச்சி யொன்றை வாயில் வைத்துக்கொண்டு, தந்த சுத்தி செய்ய ஆரம்பித்தான். இவனது பற்பல வெண்ணத் தால் மணி பதினொன்றாயும் பல் துலக்கி முடியவில்லை. இதற் குள் சந்திரசேகரனும் மனோன்மணியம்மாளும் சுந்தரனைக் காணாமையால் பற்பல விடங்களில் தேடச் சொன்னார்கள், யாருக்கும் அகப்படவில்லை. மனோன்மணி யம்மாள் கனக சபை முதலியாரிடம்சென்று சுந்தரனை காலைமுதல் காணோம் என்று சொன்னாள். அவரும் தேடச் சென்றார், அதுவும் பிர யோசனப்படவில்லை, இப்படி மூவரும் பிறரும் வருந்திக் கொண்டிருக்கையில் சுந்தரன் கையில் பற்கொம்புடன் வீடு வந்து சேர்ந்தான், மனோன்மணியம்மாளும் சந்திரசேகரனும் இன்னேரம் எங்கே போயிருந்தாய் என்று கேட்டார்கள், சுந்தரன் எதற்கும் பதிலுரைக்கவில்லை, மறுபடியும் மனோன் மணியம்மாள் வற்புறுத்திக்கேட்டதற்கு காலைமுதல் வயிற்று

வலி அதிகமாயிருக்கிறதால் பூந்தோட்டத்தில் உட்கார்ந்திருந்தேன் என்று சொல்லிக்கொண்டே குளிக்குமிடத்திற்குப் போய்விட்டான்.

இதற்குள் சமையற்காரனால் வென்னீர் தயாரிக்கப்படவே ஸ்நானம் செய்து அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு போஜனத்திற்குப் போனான், இத்தனை நாள் புசிக்கும் பாகத்தில் நாலில் ஒரு பங்குதான் புசித்தான். அதையும் மனோன்மணியம்மாள் கவனித்தாள். ஏன் சரியாய்ச் சாப்பிடவில்லை யென்று மனோன்மணியம்மாள் கேட்டதற்கு "வயிற்றுவலி யென்று முன்னமே சொன்னேனே, அதனால் ஆகாரம் சரியாய் ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னான் அது மெய்யென்றே நம்பினாள் மனோன்மணியம்மாள், சுந்தரன் சாப்பிட்டதும் கையலம்பிக்கொண்டு படுக்கையறைக்குப் போய் படுத்துக்கொண்டான், சந்திரசேகரனுக்கு சுந்தரனுடன் பேசவேண்டும் என்கிற ஆவலினால் சுந்தரன் படுத்துக்கொண்டிருந்த அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். சுந்தரன் கண்ணை மூடிக்கொண்டு தூங்குபவன் போலிருந்ததால் சுந்தரன் நித்திரை செய்கிறானென்றே எண்ணிக்கொண்டு மறுபடி வெளியே வந்துவிட்டான்.

சந்திரசேகரன் வந்துபோனவுடன், சுந்தரன் கதவைத் தாளிட்டுக்கொண்டு மாலை ஆறுமணி வரையில் படுத்துக்கொண்டிருந்தான், மாலை ஆறுமணிக்குமேல் மனோன்மணியம்மாள் சுந்தரன் படுத்துக்கொண்டிருந்த அறைக்குப்போய் சுந்தரனைப் பார்த்து, கண்ணே! என்னடா இன்னம் படுத்துக்கொண்டிருக்கிறாய், மணியோ ஏழரையாய்விட்டதே எழுந்திரு என்று சொன்னாள். மனோன்மணியம்மாளின் மனதுக்குச் சிறிதும் வருத்தமுண்டாகாவண்ணம் நடக்கவேண்டியதென்கிற எண்ணத்தைச் சுந்தரன் கொண்டவனானதால், உடனே எழுந்து வெளியில் வந்து சிறிது நேரம் அங்குமிங்கும் உலாவியிருந்து இராப் போஜனம் கொண்டு மறுபடி சயன அறைக்குப் போய்ப்படுத்துக்கொண்டான்.

இதற்குள் சுந்தரன் வயிற்றுவலியால் வருந்துகின்றனனென்று பலருக்கும் தெரிந்தது. கனகசபை முதலியார் கேள்விப்பட்டதும் தக்க வைத்தியன் ஒருவனை வரவழைத்துப் பார்க்கும்படி கட்டளையிட்டார். வைத்தியன் வந்து சுந்தரனைப் பார்த்து வயிற்றுவலியின் தன்மையைப்பற்றி விசாரித்தான். சுந்தரன் ஐயா வைத்தியரே! எனக்குத் தற்காலம் வயிற்றுவலி கொஞ்சம் அநுகூலமாயிருப்பதாலும், இரவு போஜனம் கொண்டு விட்டபடியாலும் நாளை காலை ஏழு மணிக்கெல்லாம் வருவீர்களேயானால் அதுவரையிலும் நானும் உயிருடனிருந்தால் பிறகு தக்க மருந்துகொடுத்துக் குணப்படுத்துவீர்கள் என்றான். இதைக்கேட்ட வைத்தியரும் நாளைக்கு வருவதாய் கூறிப்போய்விட்டார், வைத்தியர் போன அரைமணி நேரத்திற்கெல்லாம் எழுந்து உட்கார்ந்துகொண்டு பேனா மசிக்கூடு எடுத்துக்கொண்டு பின் வருமாறு இரண்டு கடிதங்கள் எழுதினான்.

முதற் கடிதம்.

எனது ஆருயிர் மரகதமே!

“நின்திருவசனத்தால் என் செவியிற்புகவைத்த மொழியின் காரணத்தை முன்னிட்டு நான் உயிர் துறக்கத்துணிந்தேன். நின்னையன்றி பிறிதொரு நாயகியை எனக்கு மனைவியாக்கக் கருதியுள்ள என் பெற்றோருக்கு அதிக சிரமம் வைக்காது, பிராணத் தியாகம் செய்து கொள்வதே உசிதமெனத் தோன்றுகிறது, நான் நின் மாட்டுவைத்துள்ள ஆசையிலும் அதிகமாக நீ என்பால் வைத்துள்ளதை நானறிந்திருந்தும், உன்னை வருந்தவிட்டு நான் மாய்வது நீதியல்லவென்று நீ நினைக்க இடந்தரும் என்றாலும், உயிருடனிருந்து உன்னை அடைய நேரிடாமல் வருந்துவதிலும் இதுவே மேலெனத் தோன்றுகிறது. எல்லாம் வல்ல இறைவர் நம்மிருவருக்கும் இத்தகைய பாசத்தை விளைவித்தது நமது பின்னைய சுகத்திற்கென்றே மதித்தேன். அவ்வாறன்றி என் உயிருக்கு உலைவைத்தார் கடவுள். அதைப்

பற்றி வருந்துதல் வீண். கடைசியில் நான் உனக்கொரு கட்டளையிடுகிறேன், அதை என்மீதுள்ள அன்பினுல் போற்றினுல் போற்று, அன்றி விட்டால்விடு. அதாவது, நான் இறந்ததாகக் கேள்விப்பட்ட பின்பு நீ உயிர் விடத் துணியாதே. உன் உயிருள்ளவும் பிறரை மணந்து, நான் கோரிய சுகத்தை மற்றொருவன் அடையச் செய்யாமல் அந்தியபரியந்தம் கன்னிகையாயிருந்து காலத்தை கழித்து உன்னை கற்பின் மிக்காளெனப் பலரும்போற்ற நட. இது தான் என் கடைசி வார்த்தை.'' பின்பு உனது சௌகரியத்தையும் இஷ்டத்தையும் பார்த்து நட.

இப்படிக்கு,

உனது அழகை மனதில் தியானித்து உயிர்விடும்

சுந்தரன்.

[இதைப் பார்த்தவுடன் கிழித்தெறிய மறவாதே]

என்று ஒரு கடிதத்தை எழுதி ஒரு கவரில் போட்டு விட்டுமற்றொரு கடிதம் எழுதத் தொடங்கினுன் அதாவது,

இரண்டாவது கடிதம்.

அடியேனின் நேயர்கள் தலைவா!

"பின்வரும் சங்கதிகள் உனக்குஆச்சரியத்தையும்தீராத வருத்தத்தையும் தருமாகிலும், கடமைப்பற்றி வரையத் துணிந்தேன்."

அதாவது என் மனதிலுண்டான அளவுகடந்த வருத்தத்தின் நிமித்தம் நான் உயிர்விடச் சித்தமாய்ப் புறப்பட்டு விட்டேன். இனே இனே, நான் இவ்வாறு செய்துகொண்டதற்குக் காரணம் இன்னதென்பது உனக்கு விளங்கும். எனது ரகசியத்தை இதுவரையில் உனக்கு ஒளியாதிருந்தும் இதை உன்னிடங்கூற சாவகாசமின்மையால் புகலவில்லை. அதைப்பற்றி என்மீது வருத்தப்படாமல் இருக்கவும், எனது பிரிவாற்ருமையால் என் பெற்ருேரும் சிறிய

தகப்பனார் முதலியவர்களும் வருந்தினால் அதை தணிக்கும் விஷயத்தில் பின் வாங்காதே, எல்லாம் விதிப்படி முடியும்.

இப்படிக்கு,

உன் உண்மையான

சுந்தரன்.

என்றபடி இரண்டாவது கடிதம் எழுதி, ஒரு உறையிற் போட்டு ஒட்டி அதற்கு சந்திரசேகரனது விலாசத்தை எழுதி தான் படுத்திருந்த கட்டிலின்மீது பலருக்கும் தெரியவைத்து விட்டு, மரகதத்திற்கு எழுதிய கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மரகதம் படுத்திருக்கும் அறையண்டை போய் நின்றான், பத்து நிமிஷங்கள் வரையில், ஏதோ சில எண்ணங்கள் எல்லாம் எண்ணினான், பின்பு துணிந்து கதவைமெள்ள அசைத்தான். கலவரத்தால் நித்திரையின்றிவிழித்துக்கொண்டிருந்த மரகதம் சரேலென்று எழுந்து விளக்கை சற்று ஏறப்பார்த்துவிட்டு கதவைத் திறந்தாள். சுந்தரன் நிற்பதைக் கண்டாள். சுந்தரனை உள்ளே வரும்படி ஜாடைக் காட்டி, வந்த பின்பு கதவைச் சாத்திக்கொண்டு சுந்தரனை கட்டிலின் மீது உட்காரவைத்து தான் பக்கத்தில் நின்றிருந்ததின் அமைப்பை வர்ணிக்க ஏடுஇடந்தராது என்கிற எண்ணத்தாலும், இதை வாசிக்கும் நண்பர்கள் தானகவே அதை கிரகித்துக்கொள்ளுவார்கள் என்கிற தைரியத்தாலும் வரையாது விடுத்தேன்.

சுந்தரன் திடீரென்று எழுந்து மரகதம்! நள்ளிருளில் கன்னிகைப் பெண்கள் சயனித்திருக்கும் இடத்திற்கு ஆடவர்கள் வந்து அவர்களது கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தால் பார்ப்பவர்கள் என்ன சொல்லுவார்கள், ஆனதால் நான் போகிறேன் நீ படுத்துக்கொள்ளென்றான். மரகதத்திற்கு எதுவும்பேச வாய்வரவில்லை. கண்களில் மட்டும் நீர் தாரை தாரையாய் வடிந்தது, தேகம் விலவிலத்தது. வலிவென்பதே கிடையாது.

அதாவது"

"மங்கைகடி தேகிடலும் மைந்தன்முகம் நோக்கி
அங்கைதொட நாணிமனமஞ்சி யயனின்று
கங்கைவள நாடனிரு கண்கலுழி சிந்த
வெங்கயம் நுகர்ந்தவிள வின்கனியை யொத்தான்."

என்று அரிச்சந்திர புராணத்தில் கூறியவண்ணம்இருந்தாள். சுந்தரன் புயத்தை இடது கையால் சேர்த்து அணைத்து வலது கையால், அவளது சிவந்த கன்னத்தை பிடித்து ஓர் முத்தந்தந்து, ஆவேசக்காரன்போல பெருமூச்செறிந்துகொண்டே வெளியில் வந்து கதவைச்சாத்திக்கொண்டு நேரே தெருவிற்கு வந்தான். அப்போது மணி ஒன்று இருக்கும், வேலையாட்களெல்லாம் நல்ல நித்திரையிலிருந்தார்கள். இதுதான் சமையமென்று ரயில்வே ஸ்டேஷனை நோக்கி வெகு துரிதமாக நடந்தான், கிராமத்திற்கும் ஸ்டேஷனுக்கும் சுமார் ஒரு மைல் தூரமிருக்கும், அதை இரண்டு நிமிஷத்தில் நடந்தான். ரயில்டேஷனில் ஜனங்கள் நிறையப் படுத்திருந்தார். ஸ்டேஷனண்டை போனதும் தன் மேல் துண்டை விரித்துக் கீழே போட்டு அதில் படுத்துக்கொண்டான். அவ்வாறு கடுந்தரையில் இதுகாறும் சுந்தரன் படுத்ததில்லை என்றாலும், அவன் மனதிற் குடிகொண்டிருந்த துன்பமும் சோகமும் தரையின் குணத்தை அறியச் செய்யவில்லை, தரையிற் படுத்தானோ இல்லையோ பெரியநாயகி துணைக்கொண்டுவிட்டாள். மணி மூன்றாயிற்று மெயில் வரும் நேரமாய்விட்டதால் மணியடித்தார்கள். அவ் வண்டிக்காக காத்திருந்த பிரயாணிகள் எல்லாம் சீட்டு பெற்றுக்கொண்டார்கள், இரண்டாவது மணி யடித்தார்கள். ஜனங்களெல்லாம் பிளாட்பாரத்தில் குழுமினார்கள். அங்கிருந்த போர்டர் ஒருவன் சுந்தரன் படுத்துக்கொண்டிருந்த இடத்தண்டைவந்து "வடக்கே போகிறவர்களெல்லாம் எழுந்து பிளாட் பாரத்தண்டை போங்கள்" என்று உரத்திக்கூவினான். அப்போது தான் சுந்தரன் சற்று நித்திரை தெளிந்தெழுந்தான். ஜனங்களெல்லாம் பிளாட்பாரத்தில் நிற்பதைக் கண்டான், ஓ! நமது என்

ணத்தைப் பூர்த்திசெய்ய இதுவல்ல காலம் வண்டியில் ஏறிக்கொண்டால் வண்டி துரிதமாய்போகையில் விழுந்துவிடலாம் என்று எண்ணி டிக்கட்டும் பெறாமலே வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டி புறப்பட்டு வெகு துரிதமாய் போய்க்கொண்டிருக்கையில் சுந்தரன் ஏரியிருந்த அறையில் ஏரியிருந்த ஒருவன் நித்திரையிலிருந்து விழித்து ஐயா இப்போது நின்றது என்ன ஸ்டேஷன் என்று கேட்டான். சுந்தரன் மிதுனபுரி என்று சொல்லி வாய்மூடு முன்னம் திடீரென கீழே குதித்தான். பிரயாணி குதிக்கவே கால் வண்டியின் சக்கரத்தில் மாட்டி சக்கரம் இழுத்து குதித்தவனை சின்னபின்னமாக வெட்டிப் போட்டது. இதைக்கண்ட சுந்தரன் பயந்து கூச்சலிட்டால் நம்மைப் பிடிக்கும் என்கிற பயத்தினால் உடனே வண்டியில் படுத்துக்கொண்டான். சுந்தரன் ஏரியது மெயிலானதால் சிறு ஸ்டேஷன்களில் நிற்காமல் பெரிய ஸ்டேஷன்களில் இரண்டொரு நிமிஷம்நின்று ஆறுமணிக்கெல்லாம் திண்டிவனம் ஸ்டேஷனுக்கு வந்தது. சுந்தரன் இனி ரயிலிலிருந்தால் கஷ்டம்நேரிடுமென்று எண்ணி திண்டிவனத்திலேயே இறங்கி விட்டான். ஸ்டேஷன் மாஸ்டர் சுந்தரனை டிக்கட்டு எங்கே என்று கேட்டார். சுந்தரன் ஆங்கில பாஷையில் டிக்கட்டுத் தவறிவிட்டது. நான் விழுப்புறத்தில் இறங்கவேண்டியவன் என்னுடன் ஏறியவர்கள் அவ்விடத்தில் இறங்கிவிட்டார்கள். நான் மட்டில் தூங்கிவிட்டேன். ரயில்வே ரூல்ஸ்படி மறுவண்டியில் நான் விழுப்புரம் போய்விடுகிறேனென்றான்.

சுந்தரன் ஆங்கிலத்தில் பேசியதாலும் ரயில்வே ரூல்ஸ்படி மறுவண்டியில் விழுப்புரம் போகிறேன், என்றதாலும், ஸ்டேஷன்மாஸ்டர் சரியென்று ஒப்புக்கொண்டு போய்விட்டார், சுந்தரன் சற்றுநேரம் அவ்விடத்திலிருந்து காலைக்கடன் முடிக்கப்போகும் வண்ணம்போல் குளத்தை நாடிப்போய் காலைக்கடன்களை யெல்லாம் முடித்துக்கொண்டு குளக்கரையில் உட்கார்ந்துக் கொண்டிருக்கையில், திண்டிவனத்தை யடுத்த முளைச்சூர் கிராமத்துப் பிரபல மிராசுதாரரான

வெங்கட வரதா ரெட்டியார் என்பவர் அக்குளத்தண்டை
வந்து தந்த சுத்தி செய்துக்கொண்டிருந்தார். களையால்உட்
கார்ந்திருக்கும் சுந்தரனைக் கண்டார். அவனது முகவிலா
சத்திற்கேற்ற உடையின்றி மிகவும் பழமையான அடி வேஷ்
டியும் அதனிலும் இளைத்த மேல் துண்டையுங்கண்டு இவன்
தகுந்த குடிப்பிறந்தோன் தற்காலம் கால வித்தியாசத்தால்
ஏதோ வறுமை யடைந்திருக்கிறானென்று எண்ணி, சுந்தரனை
பார்த்து."

அப்பா நீ எந்தவூர் ?

சுந்த:— ஐயா நான் தென்தேசம்.

வெங்க:— தென்தேச மென்றால் பொதுவாக ஆகிறது. நினது
வாசஸ்தலம் எது?

சுந்த:— நான் பிறந்தது வளர்ந்தது மதுரையின் கீழ்திசையி
லுள்ள திருபுவனம் என்னும் சிறுநகர் ஆயினும் நான்
என் சிறு வயது தொடங்கியே யாத்திரிகனானேன்.

வெங்க:— உன் சிறு வயதிலேயே யாத்திரை செய்ய நேர்ந்த
தின் முக்கிய கருத்தென்ன?

சுந்த:— என் கருத்தா? அது கடவுளின் கருத்து, அவ்வா
றிருந்தமையால் என் புத்தி அதில் லயித்துப் புறப்பட்
டேன்.

வெங்க:— தம்பி நீ கூறும் சொற்களே உன்னை சிறு வயது
முதல் யாத்திரையிற் காலங் கழித்தவனென மதிக்கத்
தடைபடுகிறது. ஆயினும் அதைப்பற்றி ஊன்றிவிசாரித்
தல் எனக்கு மனமில்லை. இவ்வூருக்கு நீ வந்து எத்தனை
தினங்களாகிறது?

சுந்த:— இது முதற்றினத்தின் ஆரம்பம்.

வெங்க:— நான் இருப்பது இவ்வூரல்ல, இதை யடுத்த கிரா
மம். கோர்ட் வேலையாக நேற்று இவ்வூருக்கு வந்தேன்,
அகாலமாய் விட்டபடியால் இரவு இவ்வூரில் தங்க நேரி
ட்டது. இப்போது என் கிராமத்திற்குப் போகிறேன்,

என்னுடன் அவ்வூருக்கு வந்து இரண்டொரு தினங்கள் இருக்கப் பிரியங்கொள்ளுவாயா?

சுந்த:— பெரியவாள் சொல்லுக்கு இணங்காதவர்களும் உண்டோ? தங்களுத்தரவை முன்னிட்டுவரச் சித்தமாயிருக்கிறேன்.

வெங்:— சரி புறப்படு, ஏதேனும் மூட்டை இருக்கிறதா?

சுந்த:— என் ஆன்மா சுமக்கும் தேகமாகிய மூட்டை ஒன்று தவிர மற்றொன்றும் இல்லை. சன்னியாசியின் பயணம் திண்ணையை விட்டெழுந்தாலாயிற்றென்றுரைக்க கேட்டிருப்பீர்களல்லவா?

நான் எழுந்து நிற்பதே என் பயணந்தான் என்று ரெட்டியாரைத் தொடர்ந்தான். ரெட்டியாரும் சுந்தரனை தமது வண்டியிலேற்றி அழைத்துக்கொண்டு முளச்சூர் என்னும் கிராமத்திற்குப்போனார். சுந்தரன் வேளாளர் மரபைச் சேர்ந்தவனென்றாலும் ரெட்டியாருக்கு சமையல்காரன் பிராம்மணனாதால் சாப்பாட்டுக் கஷ்டமில்லாமலிருந்தது. தினங் காலையில் ஸ்நானஞ்செய்து பூஜை முடித்துக்கொண்டு ஞான நூல்களை வாசிப்பதும் சாப்பிடுவதும் தான் சுந்தரன் வேலை. வெங்கடா வரதா ரெட்டியார் சுந்தரனுக்கு இரண்டு மல் அங்கவஸ்திரமும் இரண்டு துண்டும் வாங்கிக்கொடுத்தார். யாதொரு பிரதிபலனுமில்லாமல் ரெட்டியாரிடம் அன்னமுண்பதும் ஆடை வாங்குவதும், சுந்தரனுக்கு குறைவாயிருந்தாலும் தற்காலம் தானிருக்கும் கால வித்தியாசத்தால் மௌனமாயிருந்தான்.

ஐந்தாம் அத்தியாயம்.

சுந்தரன் காணாமற்போனதால் மிதுனபுரியில் கலக்கம்.

சுந்தரன் மிதுனபுரியிலிருந்து புறப்பட்டு வந்த மறு தினங் காலை ஏழுமணி வரையில் சுந்தரனுடைய படுக்கை

அறை திறவா திருந்தமையால், மனோன்மணியம்மாள் கதவை திறந்து பார்த்தாள். சுந்தரனைக் காணோம், வெளியில் எழுந்து போய்விட்டானென்று எண்ணிக்கொண்டு திரும்புகையில் கட்டிலின்மேல் ஒரு கடிதம் இருக்கக்கண்டு அதென்னவென்று எடுத்துப் பார்த்தாள். அதின்மேல் பாகத்தில் சந்திரசேகரனுடைய விலாசம் எழுதியிருந்ததால், அதை யெடுத்துக்கொண்டு சந்தரசேகரன் இருக்குமிடந்தேடி அவனிடம் கொடுத்தாள். அக்கடிதத்தைப் பார்க்கும்போதே சுந்தரனுடைய கையெழுத்தென்று தெரிந்துக்கொண்டு, ஓ! என்னமோ மோசம் வந்தது, என் மனதில் நினைத்துப் தீவிரமாய் பிரித்துப் பார்த்துக்கொண்டே "சுந்தரா! மோசம் செய்தாயா" வென்று தலையிலும் முகத்திலும் அறைந்து கொண்டான்.

கடிதத்தை முழுதும் பாராமலே கீழே விட்டெறிந்தான் தரையில் வீழ்ந்து புரண்டழுதான், இதைப்பார்த்த மனோன்மணியம்மாள் சந்திரசேகரனைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாய் வாயிலும் மார்பிலும் அறைந்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். இக்கூச்சலைக்கேட்டு கனகசபை முதலியார் ஓடோடியும் வந்து என்ன சங்கதி யென்றார். இதற்குள் சந்திரசேகரன் நிதானித்து மறுபடி ஒருதரம் கடிதத்தைப் பார்த்து கனகசபை முதலியாரிடம் கொடுத்தான். அதைப் பார்த்ததும், மகனே இப்படியுஞ் செய்யலாமா? உன் மனம் இவ்வளவு துணியும் வண்ணம் நான் என்ன செய்தேன்? எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே? உன் சிறிய தாயாரும் உனக்கு ஒருவித தீங்கும் செய்திராரே, என்மனதிற்றோன்றியதோ? எதுவிருந்தாலும் என்னிடம் சொல்லக்கூடாதா? எங்களை இப்படியும் செய்யலாமாவென்று அழுதார்.

அருகிலிருந்த மற்றையரும் அழ ஆரம்பித்தார்கள். வீட்டின் பின் புறத்திலிருந்த மரகதத்தினிடம் சமையற்காரன் ஓடி அம்மா சுந்தர முதலியார் இறந்து விட்டாராம் என்றுரைத்தான். இந்த சொல்லைக் கேட்ட மரகதத்தின் மனம் துடிதுடித்து அழாமலே கீழே விழுந்து மூர்ச்சையானாள். சமையற்காரன் அருகில்போய் பார்க்கையில் மரகதத்

திற்கு ஈனசுவாசம் ஒன்று தவிர மற்றைய சுவாசங்கள் ஒன்று மில்லாதிருக்கக் கண்டு ஓடி வந்து வேலைக்காரி ஒருத்தியை அழைத்துக்கொண்டுபோய் மரகதத்தை எழுப்பச் சொன்னான். வேலைக்காரி தன்னாலான வரையில் பார்த்தும் செத்த பிணம்போல் இருப்பதைக் கண்டு மரகதத்தைத் தூக்கிக் கொண்டு வந்து தாழ்வாரத்தில் கிடத்தினாள். கனகசபை முதலியார் அவர் மனைவி முதலியவர்கள் சுந்தரனுக்கழுவார்களா? மரகதத்திற் கழுவார்களா? பாவம். அந்த வருத்தத்திலும் மனோன்மணியம்மாள் இவருடன் சொல்லி மரகதத்தைக் கவனிக்கும்படி உத்தரவு செய்தாளே தவிர, தான் இருந்த இடத்தை விட்டெழுந்திருக்க சக்தியற்றவளாயிருந்தாள். இதற்குள் கனகசபை முதலியார் வீட்டில் காரியம் பார்க்கும் மணியக்காரர் வந்து ஏன் இப்படி வருத்தப்படுகிறீர்கள். சுந்தரன் இறந்துபோனான் என்று எவ்விதம் சொல்லுகிறது, கடிதம் எழுதி வைத்துவிட்டு எங்கேயாவது போயிருந்தாலாகாதா? அல்லது வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போயிருந்தாலாகாதா? சும்மா வருத்தப்படாதீர்கள். என்று தணிக்கை சொன்னதின்மீது சற்று ஓய்ந்தார்கள். இதற்குள் மரகதத்திற்கும் கொஞ்சம் ஸ்மாரகம் வந்தது. சகலரும் சுந்தரன் வைத்தீஸ்வரன் கோவிலுக்குதான் போயிருப்பான் என்று நினைத்தார்கள். உடனே வைத்தீஸ்வரன் கோவிலுக்கு ஆள் அனுப்பிப் பார்த்து வரும்படி கட்டளையிட்டார்கள். அமளி கொஞ்சம் அடங்கிற்று. சமையற்காரனால் சுவல்ப ஆகாரம் தரப்பட்டதை கனகசபை முதலியாரும் மனோன்மணியம்மாளும் அருந்தினார்கள். மரகதத்திற்கும் கொடுக்கப்பட்டது.

ஆனால் மரகதம் உட்கொள்ளவில்லை. சிலரின் நிர்ப்பந்தத்தால் சிறிது உட்கொண்டாள். வெளியில் கூட்டம் அபரிமிதமாயிருந்ததால் தன் படுக்கையறையிற்போய் படுத்துக் கொள்ளலாம் என்று போனாள், படுக்கையின்மீது ஒரு கவர் இருந்தது. அதை யெடுத்துப் படித்துப் பார்த்தாள். இவள் மனதில் உண்மையாய் சுந்தரன் இறந்துவிட்டானென்றே

எண்ணிவிட்டாள். "இதற்குத்தானா அத்து மீறி என்னை இரவு முத்தந்தந்துபோனீர்." என்று தனக்குத்தானே பிதற்றிக்கொண்டாள். தனக்குச் சுந்தரன் எழுதிய கடிதத்தைப் பிறருக்குக் காட்டினால் ஏதாவது பிரமாதம் எண்ணுவார்கள் என்று காட்டாமல் அக்கடிதத்தை தனதுபெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டாள். கட்டிலின் மீது உட்கார்ந்து சுந்தரன் மரணம் தன் காதலாலல்லவா என்று எண்ணுவாள், தானும் உயிரைவிடத் துணிவாள் ஆயினும் சுந்தரனது கடைசி வார்த்தையென்று எழுதியதை நினைந்து சுந்தரன் சொல்லைக் காப்பாற்ற வேணுமே என்று அவ்வெண்ணத்தை நீக்குவாள். இவ்வாறு வரகதம் வருந்திக்கொண்டிருக்கையில் கனகசபை முதலியாரும் மனோன்மணியம்மாளும் நினைந்த வருத்தத்துடன் நிமிஷத்திற்கு நிமிஷம் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போன ஆள் வந்துவிட்டானா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் தெருவில் ஒருவித குழப்பமுண்டாயிற்று. அதாவது சுந்தரன் ரயிலில் அகப்பட்டு சின்னபின்னமாய் சிதைந்து இறந்து கிடக்கிறான் என்ற சப்தம் பிறந்தது, இதைக்கேட்ட கனகசபை முதலியார் அலறி எழுந்து மேல்வேட்டிகூட இல்லாமல் ஓடினார். மனோன்மணியம்மாளும் ஓடினாள். அவர்களுடன்கூட கணக்கில்லாத ஜனங்கள ரயிலடிக்கு ஓடினார்கள். மரகதம் வீட்டிற்குள்ளிருந்ததால் இச்சேதி தெரியாது. இதையறிந்த சமையற்காரன் பாதி வழிபோய் திரும்பி வந்து படுக்கையறைக் கதவைத் திறந்து மரகதத்தைப் பார்த்து அம்மா சுந்தர முதலியார் ரயிலிலகப்பட்டு இறந்து கிடக்கிறாராம். முதலியார்முதல் சகலரும் அவ்விடம் போயிருக்கிறார்கள், என்றான் மரகதம் இதைக்கேட்கவே பயித்தியக்காரிபோல் பொருளில்லாச் சங்கதியைப் பேசிக்கொண்டு ரயிலடியை நாடி ஓடலானாள். சமையற்காரன் மரகதம் இரயிலடிக்குப் போகாமல் தடுக்க எண்ணங்கொண்டானெனினும் தன் சொல்லை எடுத்துக் கொள்ளமாட்டாள் என்று மரகதத்தின் பின்னேயே போனான். சுமார் அரைமைல் தூரம் போனதும் மரகதம் கால் சோர்ந்து வழியில் விழுந்துவிட்டாள். இதை யறிந்த

சமையற்காரன் ஒரு வண்டியில் மரகதத்தை ஏற்றிக்கொண்டு ரயிலடியை நாடிப்போனான்.

இதற்குள் ரயில்வே அதிகாரிகள் சுந்தரன் என்று நினைத்த பிரயாணியின் பிரேதத் துண்டுகளை யெல்லாம் பொருக்கி யெடுத்துக்கொண்டு வந்து ரயில்வே ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள், ஆனால் அப்பிரேதத் துண்டுகளால் இன்னாரென்று அடையாளம் தெரிந்துக்கொள்ள முடியாது. ஏனெனில் அவ்வளவு சிறிய துண்டாக இருந்தது, சகலரும் சுந்தரன்தானெனப் புகன்றார்கள். அதைக்கண்ட கனகசபை முதலியாரும் மனோன்மணியம்மாளும் நிலைகலங்கி வருந்தி ரயில்வே அதிகாரிகளுக்கு மின்சாரத் தபால் மூலமாய்த்தெரிவித்து உத்தரவுப்பெற்று சவத்தை வீட்டிற்கு எடுத்துக் கொண்டுவந்தார்கள். இதற்குள் மற்றுமொரு ஆள் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு அனுப்பப்பட்டான். இரண்டாவது ஆள் போகும்போது குணாலய முதலியாரும், அம்மணியம்மாளும் மானெனப் பறந்துவரும் இரண்டு காளைகள் பூட்டிய வண்டியில் வருவதைக் கண்டான். போன ஆள் "சாவைச் சொன்னாலும் அமரச்சொல்" என்பதுபோல் அவர்களிடம் சொல்லாமலே இருந்துவிட்டான். இரண்டாவதுவந்த ஆளை பார்த்தவுடன் குணாலய முதலியார் திடுக்கிட்டு என்னடா சங்கதி யென்றார். சுந்தர முதலியார் தகவல் இன்னும் ஏற்படவில்லை. வைத்தீஸ்வரன் கோவிலுக்கு எனக்கு முன் வந்தவன் இன்னும் வராமையால் இரண்டாவது என்னை அனுப்பினார்கள் என்றான். சரியென்று முதலியார் வண்டியை பின்னும் துரிதமாக ஓட்டச்சொன்னார். காளைகள் காற்றாய்ப் பறந்து கடிதில் மிதுனபுரியை யடைந்தது, இதற்குள் வழியில் தென்பட்ட சிலரால் சுந்தரன் ரயிலிலகப்பட்டிறந்தானென்பதை யறிந்த பெற்றோரிருவரும் அதிகமாக வருந்தியழுதார்கள், அன்றைய தினம் மிதுனபுரியானது ஸ்ரீ ராமபிரான் வனம் புகப்புறப்பட்டுப் போகும்போது அயோத்திரி இருந்த நிலைமையைக் காட்டிலும் அநேக மடங்கு அதிகரித்திருக்கிறது.

இரவு எட்டுமணிக்குமேல் சவத்தை அடக்கம் செய்தார்கள். அதுமுதல் குணாலய முதலியாரும் அவர் மனைவியும் மிதுனபுரியிலே இருந்துவிட்டார்கள். இந்தியர் சாங்கியப்படி சுந்தரனுக்காக கர்மம் முதலானதுகள் முடித்தாய் விட்டது. குணாலய முதலியார் அவர் தம்பி, மனோன்மணியம்மாள் அம்மணியம்மாள் இவர்கள் நால்வரும் துக்கக்கடலுளாழ்ந்திருந்தனர். வைத்தீஸ்வரன் கோவில் வேலைகளை யெல்லாம் காரியஸ்தர்களைக்கொண்டே பார்த்து வரப்பட்டது. இவர்களிங்ஙனமிருக்க, மரகதமோ அதுமுதல் ஆகாரம் என்பதேயில்லாமல் நாளுக்கு நாள் மிகவும் மெலிந்து வெகு துர்ப்பலமாய்க் காணப்பட்டாள். தான் அணிந்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றிவிட்டு வைதவ்வியப் பெண்களுக்கு நிகரானாள். புதியதாய்ப் பார்ப்பவர்களுக்கு இவள்தான் மரகதம் என்று தெரியாது. அவ்வளவு உருகுலைந்துவிட்டாள் சுமார் உரண்டு மாதங்கள் கடந்தன. ஒருநாள் குணாலயமுதலியார் தன் தம்பியாகிய கனகசபை முதலியாரைப்பார்த்து. அப்பா கனகசபை நமது அதிர்ஷ்டந்தான் சுந்தரன் அக்கதியானான் நமது உயிரிருக்கையிலே நம் பிற்காலம் நடக்கவேண்டியதற்கான ஏற்பாடுகள் ஏதாவது செய்யவேண்டாமா வென்றார்.

கனக:— ஏற்பாடென்ன விருக்கிறது சுந்தரனே போய்விட்டானே இனி எது எப்படிப்போனுலென்ன?

குண:— அப்படிக்கல்ல, இனி சுந்தரனைப்பற்றி நினைப்பதில் என்னபயன். "ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலு மாண்டார் வருவாரோ மானிலத்தீர்" என்பது போல நமது ஆயுள் வரைதான் அழுதோம் இனி சுந்தரனைக் காணப்போகிறோமா? அதில்லை, ஆனதால், நானென்று நினைக்கிறேன்.

கனக:— என்ன நினைக்கிறீர்கள்? யாரையாவது ஸ்வீகாரம் வைத்துக்கொள்ளலாமென்றுர்?

குண:— அல்ல, அல்ல. அவ்வெண்ணம் எனக்குக் கிடையாது.

கனக:— பின்னென்ன?

குண:— நமது மரகதத்தை யாருக்காவது கொடுத்து நமது சொத்துக்கள் அனைத்தையும், மரகதம் பேரிலும் மரகதத்தின் நாயகன் பேரிலும் எழுதி வைக்கலாமென்று நினைக்கிறேன் என்றனர்.

கனக:— அண்ணே அவ்வாறுசெய்வதானாலும் சுந்தரனுடைய முதல்திதி நடந்த பிறகுதான் செய்யவேணும் அப்படி செய்வதற்குத் தகுந்தவன் எங்கிருக்கிறான்?

குண:— உனக்குத் தெரியாமல் எனக்கு மட்டிலா தெரியும்? நீயே யோசித்துப்பார்.

கனக:— சரி யோசிப்போம் என்றுசொல்லி கனகசபைமுதலியார் வெளியே போய்விட்டார்.

இதுகளையெல்லாம் கேட்டிருந்த மரகதம், மனம்வருந்தி இதென்ன பிரமாதமாயிருக்கிறது நமக்கு வேறுவரனைத்தேடி மணம் செய்துவைக்க எண்ணமாயிருக்கிறார்களே, இதைப் பற்றி அவர்கள் பிரயாசை எடுத்துக்கொள்ளு முன்னமே நாம் தடுத்துவிட வேண்டும். என்று நினைத்துத்தனியே தன்னறையிலிருந்துக் கொண்டு அடியில் வருமாறு ஒரு கடிதம் வரைந்தாள்.

என தரும்பெறல் மாமா!

அடியாள் வரைவதில் பிசகிருந்தால் மன்னித்து அங்கீகரிக்கக் கோரி எழுதும் விஷயமாவது,

"தாங்களும் பெரிய மாமாவும் எனக்கு விவாகம் செய்ய வேணுமென்று யோசித்துக்கொண்டிருக்கிறபடி நான் நடக்க இறந்துபோன தங்கள் குமாரனை யன்றி பிறரை மணக்கக் கூடாதென்கிற பிரமாணத்தைக் கொண்டிருக்கிறேன். ஆனதால் எனது விவாகத்தைப்பற்றி யாதொரு ஏற்பாடு செய்யாதிருக்கவும். அவ்வாறன்றி என்னை வற்புறுத்தினால்; விவாக தினத்தில் என்னை, எமபுறத்திலிருந்துதான் அழைத்துவர வேண்டும். இது முக்காலும் சத்தியமே. இவ்வளவு தைரியமாய் நமக்கு வரைந்தாளே என்று வருத்தம் வேண்டாம் மன்னிக்கவும்."

இப்படிக்கு,

மரகதம்.

என்றெழுதிய கடிதத்தை வேலைக்காரி ஒருத்தியிடம் தந்து அதைக் கனகசபை முதலியாரிடம் சேர்ப்பிக்கக் கட்டளையிட்டாள். அவ்வாறே கனகசபை முதலியாரிடம் அக்கடிதம் சேர்க்கப்பட்டது. அதைப் பிரித்துப் பார்த்தார். மனம் வாடினார். இவ்விஷயத்தைத் தன் தமயனாருக்குச் சொன்னார். குணைய முதலியார் இதென்ன "கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதை யொத்திருக்கிறது. சரிகடவுள் செயல்படியாகிறது. வாளாவிருப்போம் என்று கனகசபை முதலியாரிடம் சொல்லிவிட்டுத் தான் சுந்தரனை நினைத்து வருத்தமுற்றுக்கொண்டே தனது காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தார்.

மிதுனபுரியில் உள்ளார் சங்கதி இவ்வாறிருக்க முளைச்சூரிலிருக்கும் நமது சுந்தரனைப்பற்றி பிரஸ்தாபிப்போம்.

சுந்தரன் முளச்சூரில் ரெட்டியாருடைய அனுசரணையிலேயே சுமார் ஒரு மாதம் வரையில் இருந்து வந்தான். வெங்கட வரதா ரெட்டியாரோ வாசித்தவர்களிடம் சால அன்பு வைத்தவர். கற்றவர்களுக்குத் தன் உயிரையும் கொடுக்கத்தக்க குணம் வாய்ந்தவர் ஏழைகளிடம் நிரம்பத் தயை பாராட்டுபவர், தனது வாழ்நாளை பிறருடைய உபகாரத்திற் செலுத்துவதில் பிரியமுள்ளவர் தானும் கற்றவர், கற்றறிந்தவர்களிடம் பழக்கமும் கொண்டவர். தனது கீழ்க்குடிகளிடம் அன்பைச் செலுத்துபவர், இவ்வாறான நற்குணங்களமைந்த சிலரிடம் நமது சுந்தரன் சேர்ந்தது நலமே,

"நற்றாமரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்"

என்றவாறு. நற்குணமே உருவெடுத்தவனும், தீயோர் நட்பை நீக்கியவனுமாகிய சுந்தரன், தன் குணத்தினும் மேம்பட்டவரான வெங்கட வரதா ரெட்டியாரிடம் கடவுளே சேர்த்து வைத்தாரென மதித்தல் வேண்டும். நமது ரெட்டியாரை அடைந்த கெட்டவனும் நல்லவனாவான். மேலோர் தம்மையடுத்த தீயவரையும் தன்னைப்போல ஆக்குவிப்பாரென்பது இயல்பே.

அதாவது,

"உருண்டவாய்த் தொறும் பொன்னுருளுரைத்துரைதோடி
இருண்ட கல்லையும் தன்னிற மாக்கிய விரதம்
தெருண்டமேலவர் சிறியவர்சேரினும் புன்மை
மருண்ட சிந்தையை மாற்றுவரென்பது வழக்கோ."

என்னுஞ் செய்யுளுக் கொத்தவர் ரெட்டியார். அவனுடன் நற்குண சீலனை சேர்ந்தால் சொல்லவேணுமா? தினம் புராணங்களைப் படிப்பதும் வியாக்கியானஞ் செய்வதும், நல் விஷயங்களைபேசிக்கொண்டிருப்பதும் இவர்கள் தொழிலாக கொண்டிருந்தார்கள் ரெட்டியாருடன் அத்யந்தவிசுவாசமாக விருந்தும் சுந்தரன் அவரிடம் தனது சவிஸ்தாரங்களில் அணு வளவுங் கூறவில்லை. ரெட்டியார் சுந்தரனை அவன் அபிநயத்
வளவுங் கூறவில்லை. ரெட்டியார் சுந்தரனை அவன் அபிநயத்
தால் பரதேசியென்றே மதித்தனர். அவ்வூரிலுள்ளார் அனைவரும் பரதேசியார், பரதேசியார் என்றே அழைப்பது வழக்கமாயிற்று. சுந்தரன் ரெட்டியாரிடம் சேர்ந்த இரண்டு மாதத்திற்கெல்லாம் தமிழில் முன்னையிலும் வல்லவனானன், "கற்றலிற் கேட்டலே நன்று" என்பதுபோல சதா வாசித்த விற்பனர்களிடம் பழகுவதினாலே தான் வாசிப்பு விர்த்தியாகும் இதை யனுஷ்டித்தே பவணந்தி முனிவரும் நன்னூலில்,

"ஆசானுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூறல் லதுபற் றலனாகும்
அவ்வினையாள ரொடு பயில்வகை யொருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விருகாலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்."

என்று கூறினர். ஆயினும் சுந்தரனுக்குத் தமிழ் மாத்திரந்தான் பழக்கமுண்டென்று ரெட்டியார் நினைத்திருந்தார் ஆங்கிலத்தில் பி. ஏ. படித்தானென்று ரெட்டியாரும் மற்றையாரும் கிஞ்சிற்றும் நினைக்குமாறு சுந்தரன் காட்டிக் கொள்ளவில்லை. இவ்வாறிருக்கையில், ரெட்டியாருக்கு வழக்கம்போல்

வரும் "லோகோபாரி" என்னும் தமிழ்ப் பத்திரிகையில், அடுத்த புதவாரம் பிற்பகல் இரண்டு மணிக்குமேல் "தென்னாற்காடு ஜில்லா திண்டிவனம் இந்து ஹைஸ்கூலில், அவ்வூர் கனம் சப்கலெக்டர் அவர்களது தலைமையின்கீழ் விவசாய சம்மந்தமான பொதுக்கூட்டம் ஒன்று கூடப்படும்" என்று இருந்தது. அதை ரெட்டியார் பார்த்தார், அதில் குறிப்பிட்ட தினம் அடுத்த நாளாயிருந்தது. உடனே பரதேசியாரே நாளையதினம் திண்டிவனத்தில் ஒரு மீட்டிங் நடக்கப்போகிறதாம் அதற்கு நானும் போய்வரலாமென்றிருக்கிறேன், நீங்களும் வருகிறீர்களா வென்றார். சுந்தரன் நிலச்சுவான்தாரரும், கௌரவஸ்தர்களுமான தங்கள் போன்றவர்கள் போகவேண்டுமேயொழிய என்போலிய பரதேசிகளுக்கு அங்கென்ன வேலையிருக்கிறது? ஆயினும் நீங்கள் அழைப்பதனால் வரச் சித்தமாயிருக்கிறேனென்றான். ரெட்டியாரும் நாளைய தினம் போகலாம் என்று ஏற்பாடு செய்துக் கொண்டு போஜனம் செய்யப்போனார். சுந்தரன் மேஜையின் மீதிருந்த பேப்பரை எடுத்து பார்த்துக் கொண்டே வருகையில், "விசேஷ வர்த்தமானம்" என்னும் தலைப்பின்கீழ், "ரயில் விபத்து" என்ற மகுடத்தையொட்டி "மிதுனபுரிக்கு அரைமைல்தூரத்தில் இன்னதேதி போட்மெயில் போய்க் கொண்டிருக்கையில் அவ்வூர் பிரபல மிராசுதாரரான கனகசபை முதலியாரின் தமையனாரும் வைத்தீஸ்வரன் கோவிலில் வசிக்கும் குணாலய முதலியாரின் குமாரனுமான சுந்தரமுதலியார் என்பவர் எவ்விதமோ பாதையில் அகப்பட்டு இறந்துவிட்டார்" என்றெழுதியிருந்ததை வாசித்தான் மனதில் கிலேசமுற்றான்.

அச்சமயத்தில் ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அதாவது தான் புறப்பட்டதினம் ஒரு பிரயாணி ரயிலிலிருந்து குதித்ததே. அதனால் இப்பத்திரிகையில் கண்ட சுந்தரன் என்பவன் அவனே என்று தீர்மானித்துக்கொண்டான். அச்சமயத்தில் மரகதத்தின் நினைவு அதிகமாக சுந்தரனுக்கு உண்டாயிற்று. கடவுள் அருளிருந்தால் கூட்டிவைக்கும் என்று வாளாயிருந்தான். இயற்கையிலேயே பத்திரிகை வாசிப்பதில்

சுந்தரனுக்குப் பிரியம் அதிகம். அதிலும் லோகோபகாரி என்ற நாமத்துடன் உலவி அதன் பெயருக் கிசைந்தவாறு வேதாந்த விஷயங்களை உலகத்தோர்க்கு உபகரிக்கும் பத்திரிகையான அதை தினம் வாசிக்கப் பின்னும் பிரியங்கொண்டான். பத்திரிகை முற்றும் வாசித்தபின்பு சுந்தரனும் போஜனம் கொண்டு இருந்தான் மறுதினம் ஒரு மணிக்கெல்லாம் ரெட்டியாருடன் சுந்தரனுமாக திண்டிவனம் வந்தார்கள். இரண்டுமணிக்கெல்லாம் மீடிங்கூடிற்று ரெட்டியாருக்குப் பக்கத்தில் சட்டை, பாகை முதலியன இன்றிமேல் தருவம் ஒன்றுடன் உட்கார்ந்திருந்தான் சுந்தரன் அங்கு கூடிய அனைவரும் ரெட்டியாரைக் கவனித்தார்கள் ஏனெனில், பார்ப்பவர்கள், "எந்த ஊர் அரசனோ இவர்" என்று நினைக்கும்படியான உடை உருவத்துடனிருக்கும் வெங்கடவரதா ரெட்டியாரின் அருகில் பரம ஏழையொருவன் உட்கார்ந்திருந்ததில் சகலரும் கவனிக்க நேர்ந்தது.

இரண்டரை மணிக்கெல்லாம் சுமார் நூறு ஜனங்களுக்கதிகமாக கூடினார்கள். அவர்களில் அனைவரும் பெரிய மனுஷர்களே அச்சமயத்தில் கலெக்டரும் வந்தார். கலெக்டரும் மற்றவருமாக சில விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். சுமார் மூன்றரைமணிக்கு சுந்தரன் எழுந்து நின்றான். அனைவரும் சுந்தரனைப் பார்த்தார்கள் உடனே சுந்தரன் கலெக்டருக்கும் சங்கத்தினருக்கும் வந்தனஞ் சொல்லி, விவசாய விஷயமாக இங்கிலீஷில் முக்கால் மணிநேரம் வெகுசாதுர்யமாயும், இனிமையாயும், பொதுவும், முக்கியமுமான விஷயமாய்பேசினான் சுந்தரன் பேசும்போது சகலரும் அவனையே உற்றுப்பார்த்தார்கள். அநேக வக்கீல்களும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரும் சுந்தரனுடைய பேசுந்திறமைக்கும், ஆங்கிலவிற்பத்திக்கும்படி மெச்சி அவனை சேர்த்துக் கட்டிக்கொள்ளலாமென நினைத்தார்கள். ஒவ்வொருவரும் அவனை இன்னனென்றறிந்து கொள்ளப் பிரியப்பட்டார்கள். சுந்தரனுடைய பிரசங்கம் முடிந்ததும்-கலெக்டர் எழுந்து, சுந்தரனைப் பற்றிப் புகழ்ந்து பேசிவிட்டு அவன் சொன்ன விஷயங்களில் சிலதை

இராஜாங்கத்தார் மூலமாய் அமுலுக்குக் கொண்டுவரத்தான் முன் நிற்பதாயிம் சொன்னதுந் தவிர சுந்தரன் இன்னுமென் றறிய விருப்பங் கொண்டதாயும் கூறினர்.

இதற்குள் வெங்கடவரதாரெட்டியார் எழுந்து சில விஷயங்கள் பேசியபின்பு "இன்றையதினம் நமது சபையில்பேசிய இவர் தென்தேயவாசி தனதிளம் வயது முதல் தேசசஞ்சாரியாக விருப்பவர் அவர் கடந்த இரண்டு மாதங்களாக எங்கள் கிராமத்தில் வந்திருக்கிறார். இவர் உற்றார் பெற்றாரனைவரையும் துறந்து சந்நியாசியாயிருப்பது நாம் வியக்கத்தக்கதே என்று பேசி முடித்தார் பிறகு மீட்டிங்கலைந்து சுந்தரனும் ரெட்டியாரும் கிராமத்திற்குப் போக வண்டியில் ஏறியதும்,

ரெட்:—பரதேசியாரே இதுவரையில் தாங்கள் கூறிய மொழிகள் அனைத்தையும் நம்பியிருந்தேன். இன்றையதினம் தங்களைத் தாங்கள் கூறியவாறு மதிக்கச் சந்தேகிக்கிறேன். ஆனதால் தங்களுடைய உண்மையானவற்றைப் புகலுவீர்களென்று நம்புகிறேன்.

சுந்:—தங்கள் போன்றவர்கள் மாட்டு ஒரே விஷயத்தைப்பல மாதரியாகப் புகல என் மனஞ்சற்றும் வரவில்லை.

ரெட்:—பலமாதரி அல்லாவிட்டாலும் உண்மையான ஒன்றைமட்டில் நானறியக்கூடாதா?

சுந்:—அறையிற்கட்டிய வேடம், அம்பலத்தில் தானே நடிக்க வேண்டும்.

ரெட்:— அதுவரை பொறுக்க இயலாத என்போன்றவர்களுக்கு முன்னுடி தெரிவிக்கவேண்டுவது நியாயமல்லவா?

சுந்:—இதேது பிரமாதமாய் விட்டதென்று நினைத்து, ரெட்டியார் அவர்கள் என்சஹிஸ்தாரங்களைக் கேட்க விரும்பில் எழுத்து மூலமாய்த்தான் தெரிவிக்க எனக்கிஷ்டம் என்றான்.

இதற்குள் வண்டியும் ஊருக்கு அருகாமையில் வந்து பொழுதும் போய்விட்டது. வீடு சேர்ந்ததும் வழக்கம் போல் ரெட்டியாரும் சுந்தரனும் இராமாயணம் வாசித்து

அவரவர் படுக்கைக்குச் சென்றார்கள். சுந்தரன் விடியற்காலம் இரண்டு மணிக்கே எழுந்திருந்து இனி இங்கிருப்பின் நமது விவரங்களை செட்டியார் அவர்களிடம் கூறவேண்டி வரும் அவ்வாறு கூறினால் எப்படியும் செட்டியார் நமது நன்மையைக் கோரி நமது ஊரிற் கொண்டு விடுவார். இதெல்லாம் கஷ்டமாகும் ஆனதால் இவ்வூராரால் அழைக்கப்படும் மாதிரி பரதேசியாகவே வெளிக்கிளம்பிப் போகவேண்டும் என்று எண்ணிதான் உடுத்தியிருந்த அங்கவஸ்திரம் குட்டையுடன் புறப்பட்டு இன்ன இடந்தான் போகவேணுமென்று நிச்சயித்துக் கொள்ளாமலே மேற்றிசையை நோக்கி நடந்தான். விடிந்து ஒன்பது மணிவரையில் பிரயாணம் செய்தான். தினங்காலையில் ஆகாரங் கொள்பவனானாலும், இதுகாறும் அவ்வளவு தூரம் நடவாதவனானாலும், சுந்தரனுக்கு மிகவும் களைப்புத் தோன்றி, நடக்கமுடியாமல் போயிற்று ஆயினும் அச்சமயம் அவன் இருந்தவிடத்திற்கும் ஊருக்கும் சுமார் ஒருமைல் தூரமிருந்ததால் மெள்ள மெள்ள அவ்வொரு மைல் தூரத்தையும் கடந்து அருகிலிருந்த ஊரை நடந்து அவ்வூர் சத்திரத்தின் வாசற்றிண்ணையின் மீது படுத்துக்கொண்டான். அச்சத்திரத்தில் தினம் பத்து பரதேசிகளுக்கு அன்னம் படைக்கும்படி அவ்வூர் தனவந்தரிலொருவர் ஏற்படுத்தியிருந்ததால் அச்சேதியறிந்த அநேகம் பரதேசிகள் அங்கு வந்து அன்னமுண்டு போவது வழக்கம், அதுபோல அன்றும் ஐந்தாறு பரதேசிகள் அங்கு வந்தனர். சத்திரப் பிராம்மணன், பரதேசிகளாகக் காவி ருத்திராக்ஷமுடுத்தியிருந்தவர்களை உள்ளே அழைத்து சாப்பாடு போட்டான். சகலரும் உண்டு அவரவர்கள் போய்விட்டார்கள். சுந்தரன் படுத்திருந்ததைக் கண்ட சத்திரப் பிராம்மணன் யாரோ பாட்டைசாரி, தரும சாப்பாட்டுக்காக வந்தவனல்லவென்பதாக யெண்ணி வாளா விருந்தான். அச்சத்திரத்தில் அன்னமுண்ட பரதேசிகளில் ஒருவன் மட்டில் அத்தெருத் திண்ணையிலேயே படுத்திருந்தான். சுந்தரன் பகல் ஒருமணி வரையில் தூங்கி எழுந்தான். பசி அதிகரித்தது என் செய் செய்வான் யாரைக் கேட்பான். ஒருவரைப்போய் கேட்க

மனம் வரவில்லை. உட்கார்ந்த யிடத்திலே யிருந்தான். எதிரி லிருந்த பரதேசி சுந்தரனுடைய முகவாட்டத்தையும், அவனது முகம் இயற்கையில் வசீகர முடையதையும் கண்டு, அப்பா நீ எந்த ஊர் என்றான். சுந்தரன் பரதேசியைப் பார்த்து, நான் தென் தேசம் தலயாத்திரை செய்ய வெண்ணிப் புறப்பட்டு சில தலங்கள் சென்று இன்னமுள்ள தலங்களைக் காண இம்மார்க்கமாய்ப் போகிறேன் என்றனன். பரதேசி சாப்பாடு ஆயிற்றா வென்றான். சுந்தரன் இன்னும் இல்லை என்று கூறியதும் உள்ளே சென்று சத்திரப் பிராமணனிடம் சொன்னான். பிராமணன் அகாலமாய் விட்டதால் விசேஷம் ஒன்றுமில்லை ரசம் சாதம் கொஞ்சமிருக்கும் அதை வேண்டுமானால் போடுகிறேன் அழைத்துவா வென்றான். பரதேசி சுந்தரனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் சாப்பிடச் சொல்லி ,சாப்பிட்டானவுடன் மறுபடி திண்ணைக்கழைத்து வந்து சுந்தரனைப்பார்த்து, நீ தலயாத்திரை செய்யப் புறப்பட்டு எவ்வளவு காலம் ஆயிற்று?

சுந்:— சுமார் பத்து வருஷங்களாகிறது.

பரதேசி:— என்ன காரணத்தால் இவ்வாறு கிளம்பினாய்?

சுந்:— காரணமென்னவிருக்கிறது. தலயாத்திரை செய்யவேணுமென்கிற எண்ணத்தின் காரணந்தான்.

பரதேசி:— நீ மறுபடி உன் ஊருக்கு எப்போது போவாய்? உனக்குத் தாய் தந்தையர் உற்றாருறவினர்கள் உண்டோ?

சுந்:— இனி என் கிராமத்திற்குப்போக எண்ணமில்லை, மற்றைப்படி பெற்றோருறவினர்களும் எனக்கு இம்மண்ணில் சதமாயில்லை.

பரதேசி:— அவ்வாறு நீ உன் காலமுழுவதையும் தேசயாத்திரையிற் கழிக்க வெண்ணினால் சில தந்திரங்கள் இருக்கிறது. அதை நீ அனுஷ்டித்தாலன்றி உன் யாத்திரை சுகமாய் ஈடேறாது.

சுந்:— தந்திரமா? தந்திரமென்பது பிறரை மோசம் செய்ய வெண்ணிக் கபடமாக நடத்தும் செய்கைக்கன்றோ சொல்வது. அவ்வாறு பிறரை வஞ்சித்தும், மானத்தை விட்டும் இத்தேகத்தைப் போஷிப்பதில் எனக்கிஷ்ட மில்லை, ஏனெனில்,

"மான வருங்கலை நீங்கி இரவுவென் னும்
ஈன விளிவினுல் வாழ்வேன்மன் ஈனத்தல்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந்திவ்வுடம்பு
நீட்டித்து நிற்குமெனின்."

என்பதுபோல,

மானம் என்று சொல்லா நின்ற நிகாற்ற ஆடைய நீக்கி இரந்து இவ்வுடலத்தைப் போஷித்தாலும் அது நிலையாய் இருக்குமென்னும் உண்மை யிருந்தால் செய்யலாம் என்றைக் கிருந்தாலும், ஒரு நாளில், மாயுந் தேகந்தானே இது, ஆன தால் மானம்விட்ட செய்கையும், வஞ்சிக்குந் தொழிலும் செய்து பிழைக்க எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை.

பரதேசி:— அப்பா! உன்னை மோசஞ்செய்தும் பிறரை வஞ்சித்தும் தனம் சேர்க்கச்சொல்லவில்லை. அதாவது நான் சொல்வது என்னவென்றால், நீ உண்மையாய் உன்காலத்தை தல யாத்திரையில் கழிக்கவேணு மென்கிற எண்ணத்தை உடையவனுகில் நீ முதலில் காஷியங்கவஸ்திரம் தரிக்கவேண்டும், பிறகு ஒரு உத்திராக்ஷ மாலையை அணிந்துக்கொள்ளவேண்டும். ஏனெனில இப்போது நீ இருக்கும் மாதிரியாய் யாத்திரை செய்தால் உனக்குதினம் உண்ண அன்னங்கிடைப்பது அரிது திருஷ்டாந்தமாக எங்களுடன் இருந்த உன்னை யாரோ என் றுமதித்தல்லவோ இன்றையதினம் உனக்கு இச்சத்திரத்தில் அன்னம் படைக்கவில்லை நான் சொல்லிய வண்ணம்இருந்தால் உனக்கு காலத்தில் உணவுகிடைத்திருக்கும் அல்லவா? இதையே திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு நான் சொன்னபடி செய். அவ்வாறு நீ செய்துகொண்டபின்பு வெகு ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். அதாவது அடி-

யாரிடம் அன்பு, சர்வ ஜீவன்கள்மட்டும் தயை, திரவியத்தைக் கண்டால் கொல்லவரும் சிம்மம் என நினைப்பது, இவைகளை கையாடல் வேண்டும். சிலர் வறுமையின் கொடுமையால் ஆண்டிவேடம் பூண்பதுண்டு, சிலர் உண்மைப் பக்தியினால் ஆண்டிவேடம் பூண்பதுண்டு. பக்தியால் வேடம் பூண்டவனுக்கே மறுமையில் சுகம் கிடைக்கும். வறுமையில் வேடம் பூண்டு வறுமையை நீக்கிக்கொள்ள எண்ணுகிறவனுக்கு இம்மையில் பழிச்சொல்லும் மறுமையில் நரகமும் தடையின்றி நேரிடும், அதை விளக்க நான் நேரில் பார்த்த ஓர் பஞ்சத்தாண்டியின் சரித்திரத்தைக் கூறுகிறேன் கேள்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன் சத்தியபுரி என்கிற ஊரில் ஓர் சூத்திரன் இருந்தான். அவன் தனது சிறு வயதுமுதல் கஷ்ட சீவனமே செய்துவந்தான். அவனுக்கு சுமார் ஐம்பது வயது ஆனபிறகு தன் குடும்பத்தை கஷ்டார்சிதத்தால் காப்பாற்ற முடியாமல் வெகு சிரமப்பட்டுக்கொண்டு இரண்டு மூன்று வருஷங்கள் வரையில் தன் சொந்த ஊரிலேயே காலந் தள்ளினான், இந்த இரண்டு மூன்று வருஷங்களில் அவனது வாழ்க்கையோ நித்திய தரித்திரனும் பரிதாபிக்கத் தகுந்தது. விடிந்தெழுந்தால் தன் மனைவிக்கும் தனக்கும் குழந்தைகளைக் காக்கும் நிமித்தமாய் சண்டை உண்டாகும். தினம் ஒரு வேளை சாப்பாடாயிருந்தாலும், சண்டை நான்கு தடவையாயிருக்கும் இந்த உபத்திரவத்தால் சாப்பிடுங் காலந்தவிர, மற்றக் காலங்களில் வீட்டிலிருக்க அஞ்சுவான். தன் காலத்தை அயல்வீட்டிலேயே, கழிக்க இச்சிப்பான். இவ்விதம் எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவான் பாவம். சாப்பாட்டுக்குச் சம்பாதிக்கிறதா? பெண்சாதியின் சண்டைக்கு சமாதானம் செய்கிறதா? கடன்காரர்களுக்கு பதில் சொல்லுவதா, இத்தனை வித கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் கண்மறைய எங்கேயாவது போய்விட்டால், ஷை தொந்தரைகள் ஒன்றும் இல்லாதிருப்பதுந் தவிர, தினம் வயிறுறச் சாப்பாடாவது கிடைக்குமே என்று எண்ணினவனாய், வீட்

டியும் ஊரிலும் சொல்லாமலே தேசாந்திரம் போய்விடயோசித்து பஞ்சாங்கத்தில் ஓர் நல்ல நாளைப்பார்த்துக்கொண்டு குறித்த நாள் விடியற்காலம் எழுந்து இராமேஸ்வரம் போக எண்ணிப் புறப்பட்டுப்போகையில், தனது மக்களை நினைத்து வருத்தப்பட்டவனாய் நெடுந்தூரம் போகுமளவுந் தன்னூரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு அழுத கண்ணும் சிந்தியமூக்குமாய் வெகுதூரம் நடந்து பகல் ஒருமணிக்கெல்லாம் ஓர் ஊரையடைந்தான்.

அவ்வூரில் அன்றைய தினம் ஓர் வீட்டில் விவாகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. போனவுடன் கலியாண வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான். அங்கிருந்த ஒவ்வொருவரும் இவனை கலியாணத்திற்கு வந்தவன் என்று மதித்திருந்தார்கள். இவனும் பார்வைக்கு கொஞ்சம் நாகரீகமாகவே யிருப்பான். இதற்குள் விவாகம் முடிந்து எல்லோரையும்போஜனத்துக்கழைத்தார்கள். அச்சமயத்தில் இவனையும் அழைத்தார்கள் முன்னாடியே அவாள் வீட்டில் சாப்பிடலாம் என்பதைத் தெரிந்து கொண்டான். அதனால் இவனும் எழுந்து சாப்பிடப் போனான். சாப்பாடோ வெகு மேலாயிருந்தது. அநேகவித காய்கறிகளும், பலகார தினுசுகளும் படைக்கப்பட்டது. ஆசாமி வெகு நாளாய் நல்ல போசனம் இல்லாமலிருந்தவனானதால், ஒரு விசைக்கு மூன்றுவிசையாக பரிமாரச் சொல்லி விலாப் புடைக்கத்தின்றான். அவ்வூரில் இரண்டு நாள் தங்கியிருந்து பிறகு பின்னும் தெற்கே இராமேச்சுரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான் இவன் நல்லகாலம் ஊரைவிட்டுப் புறப்பட்ட பத்துப் பதினைந்து தினங்கள் வரையில் ஏதேஷ்டமாக நல்ல போசனமே கிடைத்துக்கொண்டுவந்தது.

இதற்குள் ஆள் சாப்பாட்டு மூர்த்தியாய்விட்டான். தெற்கே போகப் போகப் பரதேசி, பண்டாரங்களுக்கு மரியாதையே தவிர, வெள்ளை வேட்டித் தம்பிரான்மாரை மதிப்பவர்கள் சேர்ப்பவர்கள் இல்லாமையால், இவனுக்கு தினம் மகேஸ்வர பூஜை நடப்பது அரிதாய் விட்டது. பார்த்தான் இனி

இவ்வாறிருந்தால் நமது பாடு திண்டாட்டமாய் முடியும் என்று எண்ணி ஒரு யுக்தி செய்தான். அதாவது, தன்னிடமிருந்த சில்லறை ஆறணாவில் அரையணாவுக்கு காவிக்கல்லும் நாலணாவுக்கு சிறு ருத்திராக்ஷமாலை யொன்றும் அரையணாவில் சிவப்புநிற விபூதிப்பையும் வாங்கிக்கொண்டு ஓர் குளத்தண்டைபோய் தன் வேஷ்டிகளுக்கெல்லாம் காவி தோய்த்து உலர்த்திக் கட்டிக்கொண்டு விபூதியை மேனி யெங்கும் ஒளிரப்பூசி ருத்திராக்ஷத்தை கழுத்தில் அணிந்துக்கொண்டான் அவ்வாறு செய்து கொள்ளவே அவனைப் பார்த்தால் ஒரு மடாதிபதியைப்போல விளங்கிற்று. பார்ப்பவர்களுக்கு இவனிடம் ஒரு மதிப்பு உண்டாய்விட்டது. இத்தனை நாளைவிட இப்போது இவனிடம் சிலர் மெய்யன்பு பாராட்டுவதையும், இவன் கேட்கா முன்னம் இவனுக்குத் திருவமுது செய்விப்பதையும் பார்த்து இவ் வேஷத்தில் இருக்கும் நன்மையை தெரிந்துக்கொண்டு மென்மேலும் வேஷத்துக்கொப்ப நடக்கப் புகுந்தான். ஆயினும் இவன் ஒரே ஊரில் தங்காமல் யாத்திரை செய்துகொண்டே வந்தான். இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில், பழனி என்னும் சுப்பிரமணிய தலத்திற்குச் சென்றான். அப்போது அவ்விடத்தில் சுவாமிக்கு பெரிய உற்சவம் நடந்துகொண்டிருந்ததால் அநேக ஊர்களினின்றும் திரளான ஜனங்கள் வந்திருந்தனர். இவ்வுத்திராக்ஷப் பூனை அவ்வூரின் நாலா வீதிகளையும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தது. ஒரு பெரிய மடத்தில் அனேகம் பெரிய மனுஷர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

இவ்விடத்தில் போனால் சரியான ஆகாரம் கிடைக்கும் என்று எண்ணி அம்மடத்திற்குச் சென்று அங்கிருந்த கனவான்கள் முன்னிலையில் நின்றான். இவனைக்கண்ட அனைவரும் மரியாதையாய் வரவழைத்து உட்காரச் சொன்னார்கள். பொய்யாண்டிபாடு புளகாங்கிதம் கொண்டது. பிறகு அம்மடத்தில் வந்துள்ளோர் போஜன காலத்தில் பொய்யாண்டியையும் அழைத்தார்கள். இவனும்போய் அன்னமுண்டான். அவர்களெல்லாம் கோவிலுக்குப் போகும்போது இவனும்

கூடவே போவான். அங்கு நடக்கும் மரியாதைகளையும் பொய்யாண்டிக்கு முன்னடி செய்யச் சொல்லிய பின்பு அக்கனவான்கள் பெறுகிற வழக்கம். இவ்வாறு உற்சவம் கழிக்கும் வரையில் இருந்து அவரவர்கள் தத்தம் ஊருக்குப்போகும் போதும் நபருக்கு ஒரு ரூபாய் அரை ரூபாய் இம்மாதிரி கொடுத்துவிட்டுப் போனார்கள். அன்றைய தினம் இருபத்தைந்து ரூபாய் மட்டில் பொய்யாண்டிக்குச் சேர்ந்தது. அதைக் கண்ணால் பார்க்கவே அங்கம் பூரித்தது இதனோடா போய்விட்டது வந்திருந்த தனவந்தரில் ஒருவர் இவனைப் பார்த்து சுவாமிகளே தாங்கள் தயவுசெய்து எங்கள் ஊருக்கு வரும் பக்ஷத்தில் சில பெரிய மனுஷாளுக்குச்சொல்லி கொஞ்சம் தொகை சேர்த்துக்கொடுக்கிறேன் என்றார். பணங்கண்ட தேவடியாள் பாயிற் படுப்பாளா என்பது போல, பொய்யாண்டி அதற்கிசையவே தனவந்தர் தன்னூருக் கழைத்துக் கொண்டு போனார். அக்கனவான் நாலைந்து தினங்கள் வைத்திருந்து சில தனவந்தர்களிடம் அழைத்துக்கொண்டுபோய் இச்சுவாமியார் காளாஸ்திரியாம், தாம் ஏதோ திருத்தொண்டு செய்கிறதை முன்னிட்டு பலருடைய உதவியைக்கோரி வந்திருப்பதாயும் சொன்னார். அழைத்துக்கொண்டு போனவரின் கௌரவத்திற்காகச் சிலரும், இவன் காவி வேஷ்டி ருத்ராக்ஷ மாலைக்காகச் சிலருமாய் சுமார் நூற்றைம்பது ரூபாய் வரையில் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொண்ட பொய்யாண்டிபாடு அளவில்லாத சந்தோஷம் உண்டாய்விட்டது.

அப்போது என்ன யோசனை செய்தானும், "நமது மனதில் சிறிதும் தெய்வ பக்தி யென்பதே கிடையாது. ஆயினும் சிவனுக்கன்பான விபூதி ருத்திராக்ஷம் காவியை அணிந்ததிலேயே இவ்வளவு பெருமையும் செல்வமும் கிடைத்ததே, என்று நினைத்துக்கொண்டானும், பிறகு அவ்வூரினின்றும் புறம்பட்டு பின்னுந் தெற்கேயுள்ள சில பெரிய ஊர்களிற் சென்று ஆங்கிருக்கும் தக்க மனுஷாளிடம் போய் தானிருப்பது காளஹஸ்தி யென்றும் தன்னால் அவ்வூரில் ஓர் நந்தவனம் வைக்கப்பட்டிருக்கிறதென்றும், அஃது விசாலமும்

அழகியதுமாய் தினம் ஸ்ரீ காளத்தி நாதருக்கு வேண்டியபுஷ்பங்களைத் தருகிறதென்றும், அந்தத் தோட்டத்தைப் பரிபாலிக்க அதிக செலவு செல்லுகிறதென்றும், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரமாகப் புளுகி தனஞ்சேர்க்குந் தொழிலை மேற்கொண்டான்.

ஏறக்குறைய நான்கு வருஷம் வரையில் தென் பாகம் முழுதும் ஊர் ஊராய்த் திரிந்து சுவாமி காரியத்தின்மீது பழிபோட்டு சுமார் மூவாயிரம் ரூபாய் வரையில் சேர்த்துக் கொண்டான். இனி இவ்விடங்களில் இருப்பதைவிட நமது சொந்த ஊர்போய்ச் சேர்ந்தால் நலமென்று எண்ணி ரூபாய்களை வெகு ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டு தன்னூரை நாடி வந்தான். தன்னூர் ஒரு காதவழிக் கப்பாலிருக்கும் போதே காவித்துணி உத்திராக்ஷமாலை இரண்டையுங்களைந்து மூட்டை கட்டிவிட்டு வேறே வெள்ளை வேஷ்டிகள் வாங்கி உடுத்திக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தான். நாலு வருஷ காலமாய் சோற்றுக்குப் பறக்கவிட்டுப்போன நாயகன் வரவைக் கண்ட நாயகிக்கு இவனைப்பார்க்கும்போதே வயிற்றெரிச்சல் உண்டாய்விட்டது, சரியாகப் பேசவில்லை. பிள்ளைகள்மட்டில் தகப்பனை வந்து சுற்றிக்கொண்டது. இவன் வீட்டிற்கு வரும்போது பகல் இரண்டு மணி யிருக்கும் அதுவரையில் பெண்சாதி பல்கூட துலக்கவில்லை. நேற்றைய அன்னம்கொஞ்சனஞ்சம் இருந்ததை குழந்தைகளுக்குப் போட்டு விட்டு சிவ சிவா வென்றிருந்தாள்.

பார்த்தான் ஆசாமி இவனுக்கும் காவடி பூஜ்ஜியம் என்பதை அறிந்துகொண்டு தனது (கார்பெட் பாக்ஸ்) கித்தான் பையைத் திறந்து அதனுள் இருக்கும் ரூபாய்களைத் தன் மனைவி பார்க்கும்படியாக காட்டி அதில் ஒரு ரூபாய் எடுத்து தன் மனைவியிடம் தந்து சமையல் செய்யச்சொன்னான். புருஷனது பையில் நிறையப் பணத்தைக்கண்டவளவில் மனைவிக்கு புருஷன்மீது சந்தோஷம் உண்டாய் விட்டது. கொடுத்த ரூபாய்க்கு சாமான்களும் அரிசியும் வாங்கிச் சமையல் செய்ததுந்தவிர புருஷனுக்கு வெந்நீரும் வைத்துக்கொடுத்தாள்.

அது முதல் புருஷனுந் தானும் வெகு ஒற்றுமையாயிருந்ததுந் தவிர அவனிடம் தான் முன்னிருந்த நிலைமையை மறந்து பெருமை பாராட்டத் தலைப்பட்டாள்.

ஜடை பொய்ப் பண்டாரம் தான் தெய்வ தொண்டுக்கென்று வாங்கிக்கொண்டு வந்த பணத்தில் ஒரு காசுகூட தெய்வத்திற்காகச் செலவு செய்யவில்லை. அதுமுதல் வெகு சிக்கனமாகவே செலவு செய்துவந்தான்; ஆனால் தன்னிடத்திலிருக்கும் பணக் கர்வத்தால் சகலரும் தன்னைப் பணக்காரரை மதிப்பதுபோல மதிக்கவேணும் என்றும் எண்ணுவான். இவனிடம் பணமிருந்தால் யாருக்கென்ன பிரயோசனம், இவன் பழைய கருப்பன் கருப்பன்தானே, இவன் செய்த தெய்வ மோசத்தால் நாளுக்கு நாள்செல்வம் குறைந்து கையிலிருந்த பணமெல்லாம் போய் முன்னோர்கள் தேடி வைத்திருந்த உபாய சொத்துகளும் போய் கடைசியில் பழையபடி ஓட்டாண்டியானான் இவன் எண்ணங்களும் செய்கைகளும் நல்லதாயிருந்தால் கைகாட்டிய தெய்வம், ஆதரிக்காதா? ஒவ்வொருவரும் தான் முன்னிருந்த நிலைமையை யோசித்துத் தெய்வத்தையும் நம்பி நடக்கவேணும் இது என் அநுபோகமானது, கதையல்ல, அவன் சங்கதி யெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்த தென்றாலோ நானும் தெற்கே யாத்திரை போயிருந்த காலத்தில் இவனிருக்கும் ஊருக்கு தற்செயலாய் போனேன். இவன் ஒரு பெரிய மனுஷன் வீட்டு திண்ணையில் உட்கார்ந்திருந்தான். பார்த்தால் பெரிய மடாதிபதியென்றே மதிக்கவேண்டியதாயிருந்தது. நான் அவனைத்தெரிந்துகொள்ளாமல் அன்னியர்களை விசாரித்ததில் மேற்படி சங்கதியாக வந்திருக்கிறார் என்றார்கள். நான் அவ்விடத்தில் அவனது சங்கதியைக் கூறினால் அவன் தலைக்கு ஆபத்து வரும் என்றெண்ணி நமக்கென்னவென்று வந்துவிட்டேன் பிறகு என்னிடங்கூட அவன் பெருமையைச் சொல்வான். நான் அவனைப்பார்த்து தெற்கே நடந்த விஷயத்தைக்குறிப்பாய்ச் சொன்னேன். அதின் பின்பு என்னை கண்டால் கொஞ்சம் வணக்கமாகவே பேசுவான். கடைசியில் பஞ்தியாய் விட்

டான். சரி அவன் கதை அம்மட்டில் விட்டு உனக்கு நான் சொன்னபடி செய். நீ உனது யாத்திரையை பெருமையாய்க் கழிப்பாய் என்று பெரிய ராமாயணம் படித்தான் பரதேசி.

சுந்தரன் பரதேசி கூறிய மொழியால் சத்து இருக்கிறதென்று அவ்வாறேசெய்வதாய் ஒப்புக்கொண்டு பரதேசியை பார்த்து அன்பரே தாங்கள் எவ்விடம் போக உத்தேசித்திருக்கிறீர்கள் என்றான். பரதேசி தான் திருப்பதிக்குப் போவதாய்ச் சொன்னார். சுந்தரன் தானும் கூடவருவதாக கூறவே அது முதல் சுந்தரனுக்கு காவி கொடுத்துத் தன்னுடன் அழைத்துக்கொண்டு திருப்பதியை நோக்கித் தினம் பத்துமைல் வீதம் நடந்தார்கள். சுந்தரனுக்கு யாதொரு கவலையுமின்றி மெள்ளமெள்ள அழைத்துக்கொண்டு இராயவேலூர் என்னும் பட்டணத்திற்கு வந்தான் பரதேசி. இவ்விருவரும் வேலூருக்கு வரும்போது மாலை ஐந்துமணியிருக்கும் வந்தவர்கள் நேராக கடைத்தெருவிற்கு வந்து சுற்றிப் பார்த்துக்கொண்டு காய் கரிகள் விற்கும் மார்க்கட்டிற்குள் நுழைந்து அங்குள்ள கடைகளையெல்லாம் பார்த்து வருகையில், அங்கோரிடத்தில் உருளைக்கிழங்கு கடையில் உட்கார்ந்து கொண்டிருந்த தெய்வசிகாமணி முதலியார் என்பவர் தன்னருகில் இருந்த தனது தமையனார் உலகநாதமுதலியார் என்பவருடன் அண்ணா! அதோ இரண்டு பரதேசிகள் வருகிறார்கள் அவர்கள் முகக்குறியால் காலை முதல் சாப்பிடாதவர்கள் போலத் தோன்றுகின்றது, அவர்களை விசாரியுங்கள் என்றார். உடனே உலகநாத முதலியார் என்பவர் இவ்விரண்டு பரதேசிகளையும் அழைத்து அவர்களை அன்புடன் உபசரித்துத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய் இருவருக்கும் அன்னமிட்டு படுக்க வசதியும் செய்தார். இதற்குள் தெய்வசிகாமணி முதலியார் கடையிலிருந்து வீட்டிற்கு வந்தார். வந்தவுடன் பரதேசிகள் போஜனம் செய்தார்களா? வென்று விசாரித்துச் சேதியறிந்த பின்புதான் அன்னம் புசித்தார்.

ஷை உலகநாத முதலியார் என்பவர் கிரஹத்தாச்சிரமத்தில் இருப்பவராயினும் நடவடிக்கைகளெல்லாம் சந்நியாசி

யாச்சிரமத்தோரை ஒத்திருக்கும். சதா சாதுக்களின் சேர்க்
கையிலே யிருப்பார். துறவிகளின் மனதை குதூகலிக்கச்
செய்து, அவர்களால் அநேக விஷயங்களையெல்லாம் அறிந்த
வர். தினம் இரவில் யோகம் பயில்வார். அநேகவித அவிழ்த
மூலிகைகளையும் அதனதன் உபயோகங்களையும் தெரிந்தவர்.
சில தினங்கள் வரையில் ஆகாரமே இல்லாமல் திடகாத்திர
ராய் உலாவுந் தன்மையார். கற்றோர்களிடம் மிகுதியும் அன்
பைப் பாராட்டுபவர். ஏழை பரதேசிகளுக்கு அன்ன மிடுவ
தில் மிகுதியும் சந்தோஷங் கொண்டவர். இவ்வாறான நற்
குண சீலரானதால் அவ்வூரிலுள்ள ஒவ்வொரு பெரிய மனு
ஷாளும் அவர் சொல்லென்றால் தட்டாமல் ஏற்றுக்கொள்
வார்கள். இவரது குணங்கள் இவ்வாறிருக்க இவரது தம்பி
யரான தெய்வசிகாமணி முதலியாரோவெனில் தன் தமையனு
ரைத் தந்தையாகப் பாவித்து அவரது சொல்லுக்கு அணுவ
ளவும் தவறி நடக்க மாட்டார். பொய் யென்பதே தெய்வ
சிகாமணி முதலியார் வாயில் வராது. எவ்வளவு பணம் வரு
வதாலும் சொல் தவறமாட்டார். எவ்வளவு ரூபாய் நஷ்டம்
வருவதானாலும், சிவனடியார்களுக்கும், நண்பர்களுக்கும் நம்
பியவர்களுக்கும் ஒருவித தீங்கும் செய்யமாட்டார், தெய்வ
பக்தியில் அவரினும் மேற்பட்டவர். கற்றவர்களை ஆதரிக்குங்
குணம் அவரிடம் அதிகம். ஏழைகளாகிய தமது பந்துக்களுக்
குத் தம்மாலியன்ற உதவியைச் செய்யச் சிறிதும் பின் வாங்க
மாட்டார். தெய்வ சிகாமணி முதலியார் என்றால் வேலூரி
லும் அதையடுத்தக்கிராமங்களிலுமுள்ள ஒவ்வொருவருக்கும்
மரியாதை அதிகம். சிவ புராணங்கள், பிரசங்கங்கள் எவ்வ
ளவு தூரத்தில் நடந்தாலும் சிரமம் பாராது போய்க் கேட்
டானந்திப்பார். தெய்வ சிகாமணி முதலியாரின் நற்குணத்
தால் லட்ச ரூபாய் வேணுமானாலும் யாதொரு சீட்டின்றித்
தருவார்கள். மேற்கூறிய தமையன் தம்பிமார் குணங்கள்
தான் சத்விஷயத்தில் இருக்கும் என்று நினைக்கவேண்டாம்.
அவாள் வீட்டிலுள்ள பெண்டுகள் குழந்தைகள், வேலைக்
காரர்கள் முதலியவர்களுடைய குணமும் நல்லதே. அவாள்
வீட்டுமாடுகள்கூட ஒருவருக்குத் தீங்கு செய்யாது என்றால்

அவர்களுடைய குணங்கள் இவ்வளவென்று சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம் இத்தன்மையான குணம் வாய்ந்தவர்களிடம் நமது சுந்தரனும் பரதேசியும் போய்ச்சேர்ந்தார்கள்.

சுமார் ஒருவாரம் வரையில் அவாள் வீட்டிலேயே போசனம் செய்துகொண்டு இருந்தார்கள். ஒருநாள் பரதேசி சுந்தரனைப்பார்த்து அப்பா நாம் ஒரு ஊரில் பலநாள் தங்கியிருந்தால் நமது யாத்திரை சீக்கிரம் முடியாது ஆனதால் நாம் இவ்வூரினின்றும் புறப்பட்டு திருப்பதிக்குப் போகலாம் வாவென்றார். சுந்தரனும் அதற்கிசைந்தான். இச்சேதியை தெய்வ சிகாமணி முதலியார் அறிந்து அவ்விருவரையும் போகக்கூடாதென்றும் அல்லது இன்னம் ஒருவாரமாவது இருந்துபோகும்படி கேட்டுக்கொண்டார்.

அச்சமயத்தில் சுந்தரனுக்கு சீதள சம்பந்தமாய் தேகம் சற்று மெலிந்திருந்ததினால் பரதேசி தெய்வசிகாமணி முதலியாரைப் பார்த்து, ஐயா! இச்சிறு சன்னியாசி இவ்விடமிருக்கட்டும் அவருக்கு சற்று தேகசௌக்கியமின்றி யிருப்பதால் அது குணமாவதற்குள் நான் திருப்பதி போய்வருகிறேன், பின்பு நான் அழைத்துக்கொண்டு போகிறேன் என்றார். தெய்வசிகாமணி முதலியார் அதற்கிசைந்து, பெரிய பரதேசிக்கு திருப்பதி போய்வர ரயில் செலவு கொடுத்து அனுப்பினார். பெரிய பரதேசியும் முதலியாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

அதுமுதல் சுந்தரனும் தெய்வ சிகாமணி முதலியாரும் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து பாலாற்றுக்குப்போய் ஸ்நானம் செய்து வீட்டிற்கு வந்து சிவபூஜை முடித்துக் கொண்டு காலையாகாரம் கொண்டபின்பு சுந்தரனும் முதலியாருமாகக் கடைக்குப்போவார்கள். அவ்விடத்தில் குமாஸ்தாக்கள் வியாபாரஞ் செய்துகொண்டிருந்தால் முதலியாரும் சுந்தரனும் கடையில் ஒரு பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டு சத்காலட்சேபமாகப் பேசிக்கொண்டும், நல்ல புராணங்களைப் பார்த்துக்கொண்டுங் காலங்கழிப்பார்கள். தெய்வ

சிகாமணி முதலியார் தமது ஓழிந்த நேரங்களில் சுந்தரனுடன் நல் விஷயத்தைப்பற்றி பேசுவதையே கடமையாகக் கொண்டிருந்தார்.

தான் எங்கேயாவது வெளியில் போகுங் காலங்களில் சுந்தரனையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். எவ்வாறு நடந்து கொண்டிருக்கையில், தெய்வ சிகாமணி முதலியாருடைய வியாபாரம் முன்னையிலும் எண்மடங்கு அதிகமாக நடக்கத் தலைபட்டது. பயிர் வகையிலும் அதிகதானியங்கள் உற்பத்தியாகத் தலைப்பட்டது. சுந்தரன் இரவில் தெய்வ சிகாமணி முதலியார் வீட்டில் புராணப் பிரசங்கம் செய்து வருவான். அதை அவ்வூரிலுள்ள பலரும் வந்து கேட்டு ஆனந்தமடைவார்கள்.

இவ்வாறு சுந்தரன் புராணப் பிரசங்கம் செய்துவருகிறதைக்கேட்ட பலரும் சுந்தரன்மீது மிக்க அன்புகொண்டு தத்தம் வீட்டிற்கு வந்து புராணம் சொல்லும்படி வேண்டிக் கொள்ளுவார்கள். "ஆயினும்தெய்வசிகாமணி முதலியாரின் உத்தரவில்லாமல் நான் யாதொரு காரியமும் செய்வது தகுதியல்ல, தாங்கள் முதலியாருடன் சொல்லி அவரெனக்கு உத்தரவு செய்தால் நான் செய்யத்தடையில்லை" என்று சொல்வான். கிராமத்தாரும் தெய்வசிகாமணி முதலியார் மூலமாய் சுந்தரனை தமது வீடுகளுக்கு அழைத்துக்கொண்டு போய் புராணம் செய்யச்சொல்வார்கள். அச்சமயத்திலும் சுந்தரனுடன் தெய்வசிகாமணி முதலியார் போகாமல் இருக்கமாட்டார். இவ்விதமாக சுமார் ஒரு மாதம் வரையில் சுந்தரன் உள்ளூரிலேயே யிருந்தான். அதற்குமேல் வேலூரை யடுத்த கிராமங்களிலெல்லாம் சுந்தரனுடைய பிரபாவம் பரவிவிட்டது. அவ்வவ்வூர்களினின்று கனவான்களும், தனவான்களும் வந்து சுந்தரனை அழைத்துக்கொண்டுபோய் புராணப் பிரசங்கம் செய்யச் சொல்லுவார்கள். அவ்வூர்களுக்கும் தெய்வசிகாமணி முதலியார் சுந்தரனுடன் போய் வருவார். சிலர் மட்டில் தெய்வசிகாமணி முதலியார் சதா சுந்தரனுடன் திரிந்துகொண்டிருக்கிறாரே தவிர, வியாபாரத்

தில் கவனிப்பதில்லையென்று சொல்லிக்கொள்வார்கள். அம்மாதரி சொல்லும் இரட்டைப் புத்திசாலிகளின் வார்த்தைகளைத் தெய்வசிகாமணி முதலியார் கவனிப்பதில்லை.

தெய்வசிகாமணி முதலியார் சுந்தரன் வந்து சேர்ந்த ஆறுமாத காலமாக தமது வியாபாரம் மென்மேலும் விர்த்தியடைந்து வருவதையும் மற்றச் சகல விஷயங்களும் தனக்கனுகூலமாகவே கூடிவருவதையும் கண்டானந்தப்பட்டுக்கொண்டிருப்பார். ஒருநாள் தெய்வசிகாமணி முதலியார் நித்திரை செய்துக்கொண்டிருக்கையில் சொற்பனத்தில் யாரோ ஒரு பெரியவர் வந்து 'உன்னிடம் வந்திருக்கும் பரதேசிச் சிறுவரது நன்மையால் உனக்குப் புத்திர சந்தானம் உண்டாகும்'' என்று சொன்னாராம். அது முதல் தெய்வசிகாமணி முதலியார் சுந்தரனிடம் முன்னிலும் பதின்மடங்கதிகமான அன்பைப் பாராட்டி வந்தார். இவ்விதமாக ஒரு வருடம் சுந்தரன் முதலியார் வீட்டிலேயே இருந்தான். தெய்வசிகாமணி முதலியார் ஓர் தினம் சுந்தரனாகிய பரதேசியைப் பார்த்து, ஐயா, நான் தங்களிடம் ஒரு விஷயம் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று வெகுநாளாய் எண்ணம் அதைத் தங்களிடம் கூற மனந்துணிந்தேன் என்னுரைகேட்டுத் தாங்கள் அனுக்கிரகிக்கவேண்டும்.

அதாவது நான் சைவகுலத்திலுதித்தவனாயினும் இதுகாறும் சிவதீக்ஷையில்லாதிருக்கிறது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருகின்றது. ஆதலால் தாங்கள் தயை செய்து நான் மானுட உருவெடுத்ததற்குச் செய்யவேண்டிய கடமையான சிவபூஜையைச் செய்து பஞ்சாக்ஷரம் ஜெபிக்கும் வழியைக் காட்டவேண்டுகிறேன்.

அதாவது;

சிவனடியார்க்கன்பிலாச் சிந்தையே யிரும்பு என்றும்.

தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேறுந்தலைவனை தலையே நீ வணங்காய்.

என்றும் கூறியிருப்பது போல நமது தேகம் கடவுளைத் தொழவும் பூசனை செய்யவுமே யென்பதை தங்கள் போன்றவர் மாட்டுக் கேட்டிருந்தும் அவ்வாறு செய்யாதவனாயிருக்கிறேன். அவசியம் தாங்கள் செய்துவைக்க வேண்டுகிறேன் என்று கேட்டுக்கொண்டதின் பேரில் சுந்தரன் அவருக்கு ஒரு தினத்தைக் குறித்து அத்தினத்தில் அவருக்கு சிவதீக்ஷை செய்வித்து பஞ்சாக்ஷரத்தையும் உபதேசித்தான். முதலியாரும் அதை அன்பாய்க்கேட்டு அன்று முதல் சிவபூஜையை வழுவாமலும் ஜெப தபங்களில் குறையாமலும் செய்துவந்தார். சிவபூஜையின் வன்மையினாலும் முன்வினைப் பயனாலும், ஷை தெய்வசிகாமணி முதலியாருக்கு நல்ல சுபதினத்தில் பலவகைப் பொருத்தங்களும் அமைந்து சகலரும் கண்டானந்திக்குமாறு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அச் சந்தோஷத்தால் முதலியார் பலருக்கும் சக்கரை வழங்கி பிராம்மணர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு பலவகைத் தானங்களும் செய்தார். அவர் தந்த தானங்களைப் பெறவரும் அந்தணர்கள் வாழ்த்தொலியும், மற்ற யாசகர் முழக்கும் பற்பல பறை, சங்கம், முதலிய வாத்திய கோஷங்களின் சப்தமும் எவ்வாறிருந்ததெனில், முன்னம் பார்வதிக்கும், பரமசிவத்திற்கும் நேர்ந்த சபதத்தால், ஈஸ்வரி தனது முக்குணத்திலொன்றாய், தமோ குணத்தை மாயை வடிவமாய் உலகத்தில் மதுகேஸ்வரன் என்னும் அரசனுக்குப் புதல்வியாகப் பிறக்கக் கட்டளையிட்டனுப்பியபடி ஷை மாயை மதுகை நாதன் மனைவி வயிற்றிலிருந்து பிறந்த காலத்தில் சந்தோஷத்தினால்,

"சங்கொடு தண்ணுமை சச்சரிதாளம்
வங்கியம் வெந்துடிவார் முரசங்கள்
மங்கல மங்கைமகப் பெறுநாளில்
அங்கசன் வெம்முறசென்னவதிர்ந்த"

என்று கூறியிருத்தலை யொத்திருந்தது. முதலியாருக்கு அதுபரியந்தம் புத்திரப் பேறில்லாமல் தற்போது உண்டானதாலும், சுப சொற்பனங் கண்டபடியே நடந்ததாலும்,

மிகுதியும் களித்து சாஸ்திரப்படி பதினாறும் நாள் அக்குழந்தையை தொட்டிலிட்டு நாமகரணம் சாற்றவெண்ணி அது விஷயமாய் தமது பந்துக்களுக்கும், சிநேகர்களுக்கும் தெரிவித்து அன்றைய தினத்தைப் பெரிய நற்றினமாகக் கொண்டாடினார்.

ஷை தினத்தில் வந்திருந்த சகலரும் உண்டான பின்பு மாலை மூன்று மணிக்கு அவர்களை யெல்லாம் ஓரிடத்தில் கூட்டி சுந்தரன் ஓர் உன்னியாசம் செய்ய நினைத்து முதலியாருடன் சொன்னான். முதலியாரும் சந்தோஷப்பட்டு சகலரையும் ஒன்று சேர்த்தார். சுமார் ஆயிரம் ஜனங்களுக்குமேல் சேர்ந்துவிட்டார்கள். அக்கூட்டத்தில் அநேக மேதாவியர்களும், பிரபுக்களும், மற்றவர்களும் நிறைந்திருந்தார்கள். அச்சன சமூகத்தில் சுந்தரன் எழுந்து சபையோர்களுக்கு வந்தனம் செய்து பேசியதாவது;

இச்சபையின்கண் வீற்றிருக்கும் கற்றவர்கள் முன்னில் எவ்விதத்திலும் இச்சபையோர்களுக்கு இணையில்லாத சிறியவனும் முதிர்ந்த அறிவாளனல்லாதவனுமான நான் "நல்லொழுக்கம் என்பதைப்பற்றி மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலான் வாசித்துள்ள சில விஷயத்தைக்கூற மனங்கொண்டுள்ளேன், அவ்வாறு யான் கூறுவதில் ஏதேனும் தவறுகளும், குற்றங்களும், தோன்றில் அதை மன்னித்து என்னைக் கௌரவப் படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதாவது,

மானிட தேகத்தை எடுத்து உலகில் உலாவும் ஒவ்வொருவரும், தம் வாழ்நாளை மிகவும் ஜாக்கிரதையுடன் கழிக்கப் பிரயத்தனப்படவேண்டும். அச்சாக்கிரதையானது எதுவிஷயத்தில் எனிலோ, தேகத்தைக்காக்கும் விஷயத்திலன்று. ஆன்மா புகுந்துலவும் இவ்வுடற்கூண்டை நல்கப்பெற்ற நாம் நல்லொழுக்கத்தில் நடந்துகொள்ளுதலே.

நல்லொழுக்கமானது, மனிதப் பெற்றினுக்குச் சிறந்த தூண்டுங் கருவியாகின்றது, அது தானடையாத வியக்தி விசேடங்களால், மனித வியல்பை முடிந்த நிலைமையில் விளங்கக் காட்டுகின்றது; ஏனெனில் அது மனிதனை அவனுக்குரிய சிறந்த நற்குணத்தில் புலப்படுத்துகின்றது.

ஒவ்வொரு ஜீவனத்திலும் முயற்சி, சத்யம் இவைகள் வேண்டும். மேலான ஒழுங்கு, வஞ்சமற்ற யோக்கியமான மனக்கொள்கை, இவற்றையுடைய சயமான உயர்குண மனிதனை பிரஜைகள் தாமே பூசிக்கத் தலைப்படுகிறார்கள். அன்னோரை விசுவாசிப்பதும், அவர்பால் அந்தரங்கம்வைப்பதும் அவரைப்போல நடப்பதும் இயல்பாகின்றன. உலகத்தில் நன்மையெனப்படுவதனைத்தும், அவராலே நிலைபெறுகின்றது அவர் இலரேல் இவ்வுலகம் நாம் வசிக்குந்தரமன்று.

மேதாவிகளுக்கு என்றும் புகழ்ச்சி கிடைப்பினும், ஒழுக்கமுடையோருக்குப் பூஜிதை பெறும் பான்மையும் உடையதாகும். மேதையானது பெரிதும் மூளைவலிவாலும், ஒழுக்கமானது மனப்பாலும் உண்டாகின்றன. நடைமுறையில், உலகில் மேன்மையானது மனப்பாண்மையாகும். ஜனசமூகத்திற்கு மேதாவிகள் புத்திஸ்தானத்திலும், ஒழுக்கமுடையோர் மனச்சாக்ஷி ஸ்தானத்திலும் நிற்கின்றனர். ஆனால் மேதாவிகளைச் சொல்லாற் புகழ்கின்றனர்.

மனிதருட் பிரஸ்தாபசீலர் பெரும்பான்மையும் விசேஷித்த சிலரேயாவர், பிரதாபத்திற்கு வரையபட்ட பரிமாணமின்று, உள்ளவாறே அநேகருக்குத் தங்கள் வாழ்க்கையில், இடம், பொருள், ஏவல் மட்டுப்படுவதால் மிகச்சிலரே பிரதாபம்பெற இடம் வாய்க்கின்றது. ஆனால் ஒவ்வொருவனும் தனக்குரிய தொழிலைத் தன்னால் ஒல்லுமாறு உண்மையோடுங் கண்யத்தோடும் நடத்தக்கூடும். தனக்குக் கிடைத்த பாக்கியத்தை நன்னெறியில் செலுத்தியும் தீநெறியில் விலக்கியும் தன் வாழ்நாளை நலமாக்குவதில் முயலக்கூடும் மிகச் சிறியதனத்தாலும், உண்மையும், நியாயமும், யோக்கியமும், அன்புமுடையவனாயிருத்தல் கூடும் சுருக்கமாகச் சொல்லும்

பக்ஷத்தில் கடவுள் தனக்குக் கொடுத்துள்ள நிலைமையிலிருந்தே தனது கடமையை செலுத்த முடியும்.

மேற்குறியவாறு ஒருவன் தனது கடமையை செலுத்துவது சாதாரணமாகத் தோன்றினாலும், அது உலக வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய கொள்கைக்கு முதற்காரணமாகத் தோன்றுகிறது. ஆதலால் ஒருவன் பல நூல்களைக்கற்று அதன்மூலமாய், உலகோரால் மெச்சப்படுவதிற்பிரியங்கொள்வதைக் காட்டிலும், தனது பிறப்பொழுக்கத்திலும்,மற்றைய ஒழுக்கத்திலும் கவனத்தை வைத்துத் தவறாது நடக்க முயற்சித்தும் நடந்தும் வந்தால் அதனால் அடையும் பெருமை கல்வியிற்தேர்ந்த வியாபகன் அடையும் பெருமையைக் காட்டிலும் சாலவும் மேன்மையதாய் விளங்கும்.

"மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்"

என்னும் நாயனார் வாக்கினாலும் அதன் உண்மையை அறியலாம். சாலக்கல்வி கற்றவர்களைக் காட்டிலும் நல்லொழுக்க முடையாரை ஆயிரமாயிரம் பொன்னுக்கும் நம்புவர், கல்வியால் ஒழுக்கம் பெற்றுள்ளானேல் அவனை உலகுமெச்சும் கல்வியான் ஒழுக்கங் குறைந்திருப்பின் அன்றேலைக் காசுக்கும் நம்பாதொழிவர்கள். இஃது இங்குறும் அனைவர்க்கும் செவ்வனே தெரிந்த உவமையே. மேலும் ஒருவனது நல்லொழுக்கமே பெறற்கரிதாய முத்திப்பேற்றை எளிதில் அடையும் சுருக்க வழியைக் காட்டும். எவ்வாறெனில் ஒழுக்கமுடையானிடம், மெய், தயை, மோசமின்மை இவை உண்டாகிறது, இவையனைத்தையும் நெறியாய்க்கொண்டவனையே ஒழுக்கத்துள்ளான் எனப் புகல்வதேயன்றி அதில் இம்மியேனும் பிரண்டு நடப்பவனுக்கு ஒழுக்கத்தான் என்னும் பேருண்டாகாது. அவ்வாறு குணத்துடையவன், பாப கிருத்தியங்களைச் செய்யான். பிறர்சொத்தை அடைய இச்சிக்கான். பிறர்மனை நயவாமையை முதற்கடமையாகக்கொள்வான். சர்வ சீவராசிகளிடத்தும் தன்னின் உயிரிடத்திலிருக்கும் கருத்தையொக்க வைத்திருப்பான். மேற்கூறிய குணத்தோனுக்கு மறுமையில்

நரகம் என்பது இன்னவிடத்தில் இருக்கிறதென்பதே தெரியாமலிருக்கும். தீயவொழுக்கத்துட்பட்டவன் பொய் சொல்ல அஞ்சான். அன்னியர் சொத்துகளைக் கண்டால், தம் முன்னோர் தேடித் தனக்கு உயில் சாசனம் செய்து வைத்துப் போனதென மதிப்பான். பொருளாசை கொண்டவனுக்கு தயை என்பது சிற்சிறிதும் இராது, ஜீவன்களிடத்தும் கனிவு உண்டாகாது. மேற்குறித்த குணத்தானுக்கு காமம் சொந்தமே. ஆகையால் தீயவொழுக்கத்தோனுக்கு மறுமையில் "வருக! வருக!! நண்ப வருக" என்று நரக வாயிலிற்பட்டயங் கட்டுவித்திருக்கும். ஆதலால் இவ்வுலகில் கற்றவனாயிருத்தலினும், நல்லொழுக்கத்தில் மேம்பட்டவனாயிருத்தலே மேன்மையானது.

மேற்கூறிய விஷயங்கள் சகலருக்கும் தெரிந்த விஷயமாயிருந்தும் சில அத்தியாவசியமானதை முன்னிட்டு அதை தற்காலம் கூற நேரிட்டது. நான் சொன்னதைத் தெரிந்த விஷயந்தானே யென்று அசட்டை செய்யாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தெரிந்த விஷயங்களைக்கூட மறுபடி பிறரால் அதை நினைப்பூட்டினால் அவ்விஷயம் தெரிந்திருந்தவர்களுக்கும் பின்னும் பதிந்தாகும் மேலும் தற்போது அதைக் கூறவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டதென்று சற்று முன் நான் கூறியதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதென்ன சந்தப்பம் என்றால் இன்றைய தினம் இச்சபை இவ்விடம் கூட்டப்பட்டதற்கு காரணகர்த்தாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ, தெய்வசிகாமணி முதலியார் என்பவர் தனது தமையனார் சொல்படி கேட்டும், பொய்யென்பதை மறந்தும், வஞ்சனையை பகைத்தும், சிவனடியார் பக்தியை நேசித்தும், நாணயத்தைக் கண்ணாகக் கொண்டும் இருந்ததினால் நல்லொழுக்கத்தைப்பூண்டவர் என்கிற சொல்லைப்பிறரால் சொல்லப்பெற்று, மிகுந்த கௌரவத்துடன் வாழ்ந்து வருவதை அனைவரும் அறிந்த விஷயமே. நான் இதுகாறும் உபன்யாசித்ததை நிரூபிக்க உவமானமாககூற நமது முதலியாரானவர் கஷ்டப்படாமல்தென்பட்டதே எனக்கு நிறைந்த சந்தோஷம்.

"ஐந்துவித்தா ஞற்றலகல் விசும்புளார் கோமான்
இந்திரனேசா லுங்கரி." என்று நாயனுர் கூறியது.

என்னினைவுக்கு வந்தது. தவிர தற்காலம் கூடியிருக்கும் சபையிலுள்ளார்களையும் முதலியாரையும் கடவுள் ஆசிர்வதிப்பார் என்று நப்புகிறேன், என்றுப் பிரசங்கம்செய்து முடித்தனர்.

சுந்தரன் தனது பிரசங்கத்தை முடித்ததும், ஆங்குள்ள பலரும் கரகோஷம்செய்து ஆர்ப்பரித்தார்கள். சங்கமும் கலைந்து அவரவர்கள் போய்விட்டார்கள். பின்பு சுமார் பதினைந்து தினங்கள் வரையில் சுந்தரன் வேலூரிலிருந்து முதலியாரிடம் தான் திருப்பதிக்குப் போய் வருவதாய் உத்தரவு கேட்டான். முதலியாரும் உத்தரவு கொடுத்தார். சீக்கிரத்தில் மறுபடி வேலூருக்கு வந்து விடும்படியும் சொன்னுர். சுந்தரனும் அவ்வாறே வருவதாய் ஒப்புக்கொண்டு திருப்பதிக்குப் போய்விட்டான்.

ஐந்தாம் அத்தியாயம்.

"மிதுனபுரியில் நடந்த விஷயங்கள்"

குணசீல முதலியார் மரகதத்தைப் பிள்ளைக்கு விவாகம் செய்துவைத்து தமது சொத்துக்களனைத்தையும் மரகதத்தின்பேரில் எழுதி வைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கையில், மரகதத்தால் எழுதிய கடிதத்தைக்கண்டதும் வருத்தத்துடன், "எல்லாம் இறைவன் செயல்"என்று எண்ணிக்கொண்டு, வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போய்விட்டார். சுமார் இரண்டு மாதங்கள் கடந்த பின்பு அனுமந்தன் வைத்தியரிடம், மரகதத்தைத் தான் விவாகம் செய்துக் கொள்ளவேண்டியதற்கான சூழ்ச்சி ஏதாவது செய்யச்சொன்னுன். வைத்தியர் அனுமந்தன் தற்காலம் ரூபாய் கொடாவிட்டாலும் அவன் தந்தைக்குப் பிற்காலத்தில் தனக்கு

ஏராளமான பணம் தருவானென்கிற எண்ணத்தைப் பூர்த்தியாய்க் கொண்டிருந்ததினால் அனுமந்தனைப் பார்த்து,

வைத்தியர்:— அனுமந்தா! சுந்தரன் நமது சூழ்ச்சியால் மாண்டனன், இனி எவ்வாறு நமது எண்ணத்தைப் பூர்த்திசெய்யலாம்?

அனு:— தெரிந்தவரும் அனுபோகஸ்தருமான தங்களைக்கேட்டால் தாங்கள் என்னைக்கேட்கிறீர்களே இவ் விவாகத்தை முற்றும் முடிப்பது தங்கள் பாரமே. இது விஷயத்தில் தங்களை முழுதும் நம்பிக்கொண்டிருக்கிறேன்.

வைத்:— ஆமாம். இது விஷயத்தில் உன் தகப்பனார் சம்மதம் எப்படி இருக்கிறது?

அனு:— அவர் சம்மதமென்ன! உள்ள வயதும் ஆய்விட்டது, அந்தக் கிழத்தின் இஷ்டத்தைக் கோரவேண்டிய அவசியமில்லை.

வைத்:— அப்படிக்கல்ல. "சுவற்றைவைத்துக் கொண்டல்லவோ சித்திரம் வரையவேண்டும்" வீட்டிலுள்ள பெரியவர்கள் மூலமாய் குணாலய முதலியாரைப் பெண் கேட்கச் சொல்லி பிறகு நமது இஷ்டம்போலச் செய்யலாம் அவ்விதம் செய்தால் தான் நமது எண்ணம், சரிவர நிறைவேறும். உன்னிஷ்டமென்ன?

அனு:— தங்களுக்கு எது யுக்தியென்று புலப்படுகிறதோ அதைச் செய்யத் தாங்கள் சற்றும் பின்வாங்க வேண்டியதில்லை. எவ்விதத்திலும் தங்கள் இஷ்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறேன். என்பது உண்மை அதில் சிறிதும் சந்தேகிக்க வேண்டியதில்லை.

வைத்:— அவ்வாறாயின் நாளைய குருவாரம் உனது தகப்பனாரையும் தாயாரையும் முதலில் கனகசபை முதலியார் வீட்டிற்குப்போய் அவரையும் அவர் மனைவியாரையும் பார்த்துப்பேசி "மரகதத்தை எங்கள் குமாரனுக்குத் தாருங்கள்" என்று கேட்கச்சொல்லி பின்பு வைத்தீஸ்வரன் கோலுக்குப்போய் குணாலய முதலியாரையும்,

அம்மணியம்மாளையும் கேட்கச்சொல். அதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அது தெரிந்தால் பிறகு செய்யவேண்டிய யோசனைகள் செய்யலாம்.

அனு:— அவ்வாறே என் தாய் தகப்பன்மார்களை அனுப்புகிறேன். என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய் கட்டிலின் மீது படுத்துக்கொண்டான். மணி பனிரெண்டாகியும் அனுமந்தன் சாப்பிட வராமையால் அவன் தாயாராகிய பார்வதியம்மாள் அனுமந்தன் படுத்துக்கொண்டிருந்த அறையில்போய் அவனை எழுப்பிச் சாப்பிடச் சொன்னாள்.

அனு:— எனக்குச் சாப்பாடு வேண்டாம்.

பார்வதி:— ஏன் வேண்டாம்? காலையில் காப்பி கூட சாப்பிடவில்லையே?

அனு:— காப்பி சாப்பிடாவிட்டால் உனக்கென்ன ? நீ போவென்றால் போ. நான் எக்கேடு கெட்டாலும் கெடுகிறேன், இன்னம் இரண்டு நாள் பொறு நான் ஒழிந்து விடுகிறேன் பின்பு சுகமாயிருப்பீர்கள்.

பார்வதி:— அடே அப்பா! நீ யிருப்பதில் எங்களுக்கென்னடா வருத்தம்? சீராகஇரு. துஷ்ட சகவாசம் வேண்டாமென்று புத்தி சொல்லுகிறோமே, அது தவிர உன்னை என்ன செய்கிறோம்? திட்டுகிறோமா? அடிக்கிறோமா? உனக்கு என்ன குறைச்சல் செய்கிறோம் சொல்லு பார்ப்போம். நீ ஏன் வீணாக வருத்தப்படுகிறாய்.

அனு:— அதெல்லாம் சரிதான், நீங்கள் என்ன குறை எனக்குச் செய்கிறீர்கள், எல்லாம் சரியாகத்தான் செய்கிறீர்கள், வெளியாரைக் கேட்டால் தெரியும்.

பார்வதி:—வெளியார் என்ன சொல்லுகிறார்கள்?

அனு:— அதை நான் சொல்லுவானேன்.

பார்வதி:— பின்னை எப்படி எங்களுக்குத் தெரியும்?

அனு:— விசாரித்துப்பாருங்கள்.

பார்வதி:— நீ சொல்லக்கூடாதா? நாங்கள் போய் என்னவென்று விசாரிக்கிறது?

அனு:— அந்தக் கதையெல்லாம் வேண்டாம், நான் நாளைய தினம் வெளியில் போகப்போகிறேன்.

பார்வதி:— எங்கே போகப்போகிறாய்?

அனு:— இன்னவிடமென்று எழுதி வைத்திருக்கிறேனு, எங்கேயோ என் மனம் போனவாறு போய்க்கொண்டிருந்தால் நாள் வந்தால் சாகிறது. கண்டவர்கள் எடுத்துப் போட்டுவிடுகிறார்கள். நாளைய முதல் சனி விட்டதென்று இருப்பீர்கள்.

பார்வதி:— உன் மனதில் என்ன யெண்ணங்கொண்டிருக்கிறாய்? அதைச்சொல், அவ்வாறே செய்கிறேன்.

அனு:— உண்மையாய் நான் சொல்லுகிறபடி செய்கிறாயா? அப்படி செய்யாவிட்டால் என்ன செய்கிறது?

பார்வதி:— நீ சொல் அப்படி செய்யாவிட்டால் பின்பு கேள்.

அனு:— மரகதத்தை எனக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டும்.

பார்வதி.— அப்படியானால் உன் தகப்பனரிடம் யோசனை செய்து சொல்லுகிறேன்.

அனு:— யோசனை யென்ன நாளைய வியாழக்கிழமை நாள் நன்றாயிருக்கிறது. அன்றைய தினம், நீயும் அப்பாவும் போய் கனகசபை முதலியாரையும் மனோன்மணி அம்மாளையும் கேட்டுவிட்டு வரவேணும் அப்படிப்போய் கேட்காவிட்டால், சுந்தரன் செய்தமாதிரிதான் நானும் செய்வேன் என்னமோ சொல்லுகிறான் என்று நினைக்க வேண்டாம் அவசியம் வியாழக்கிழமை போய் வர வேணும்.

பார்வதி:— அப்படியே போய் வருகிறோம் நீ போய் சாப்பிடு போ. என்று அனுமந்தன் தாயாரான பார்வதியம்மாள் சொன்னபின்பு அனுமந்தன் தீனிக்குப்போனான். மகன்

சாப்பிட்ட பின்பு தன் புருஷனுன சோணுசல முதலியார் தனியே யிருக்கையில் பார்வதியம்மாள் அவரிடம் போய் ஏதோ சில விஷயங்கள் பேசிக்கொண்டிருந்து பேச்சின்மேல் நமது பையனுக்கு வயதாய்விட்டதே கலியாணம் செய்துவைக்க வேண்டாமா? என்று கேட்டாள்.

சோணு:— கலியாணத்திற் கென்னவந்தது அவசரம். உன் மகன் மிகவும் யோக்கியன், வாசிப்பிலோ நிபுணன், அதனுல் பெண் வீட்டுக்காரரெல்லாம் பெண் கொடுக்க காத்திருக்கிறுர்களோ?

பார்வதி:— யோக்கியன் அயோக்கியன், எப்படி யிருந்தாலும் செய்துதானே யாகவேணும். அவனுக்கென்று ஒருத்தி பிறந்துதானே யிருப்பாள்? நீங்கள் பேசுகிறது விந்தையாயிருக்கிறதே?

சோணு:— அப்படியானுல் பேசி கலியாணம் செய்து வைக்கிறதுதானே என்னுடன் சொல்வானேன்?

பார்வதி:— * தலையிருக்க வால் ஆடுமா? என்பது போல நீங்கள் ஒருவர் இருக்கும்போது நான் போய் பெண் பேசி முடிவு செய்வது அழகா? அப்படி போய் கேட்டாலும் கொடுப்பார்களா?

சோணு:— சரி அதெல்லா மிருக்கட்டும். நமது பையனுக்கு தகுந்த பெண் எங்கே யிருக்கிறது?

பார்வதி:— எங்கே யிருக்கிறதென்று கேட்பானேன். எனது தமையனுர் குமாரத்தி மரகதம் இருக்கிறுளே அவளைத்தான் கேட்டு முடிவு செய்யவேணும்.

சோணு:— பார்வதி! உன்னெண்ணம் நிறைவேறுமா? கனகசபை முதலியாரும், குணுலய முதலியாரும் அனுமந்தனுடைய குணங்களை யெல்லாம் தெரிந்தவர்களாச்சுதே;

---

* ஒரு இரட்டைப் புத்திசாலியான மாமனுர், தன் தாயார் இறந்துவிட்டதை தன் மருமகனுக்குத் தெரிவிக்கும் கடிதத்தைத் தனது மகன் கையெழுத்திட்டு எழுதச்சொன்னுன் அதைக்கண்ட மருமகன் தலையிருக்க வால் ஆடுமா என்றுனும்.

அப்படியிருக்கத் தன் வயிற்றிற் பிறந்தைப் பார்க்கிலும் எண்மடங்கதிகமாகப் பாவித்து வளர்த்துவரும் மரகதத்தை அவனுக்குக் கொடுப்பார்களா? ஒருபோதும் கொடுக்கமாட்டார்கள். அவர்களைப் போய் கேட்பதும் அழகல்ல. கேட்டு அவர்கள் கொடுக்கமாட்டேன் என்றால் அது ரொம்பவும் குறைவு தெரிந்திருந்தும் நான் போய் கேட்டு அவமானப்பட்டு வரமாட்டேன்.

பார்வதி:— நமது பையன் மரகதத்தையே கட்டிக்கொள்ள வேணுமென்று இருக்கிறான். நாளைய வியாழக்கிழமை தினம் நாள் நன்றாயிருக்கிறதாம் அன்றையதினம்போய் கனகசபை முதலியாரைக் கேட்டுவிட்டு வரும்படி சொல்லுகிறான். அப்படி போய் கேட்காவிட்டால், சுந்தரன் இறந்து விட்டமாதிரி தானும் இறந்து விடுவானாம். இன்று காலை முதல் இரண்டுமணி வரையில் சாப்பிடக் கூடமாட்டேனென்று அடம் செய்துக்கொண்டிருந்தான் பிறகு நான் வியாழக்கிழமை போய் கேட்டுவிட்டு வருகிறோம் என்று சொன்னபின்புதான் சாப்பிட்டான், ஆனதால் நம்மேல் பழியில்லாமல்போய் கேட்போம் கொடுக்கிறேனென்றால் அவ்வாறே முடிப்போம் மாட்டேனென்றால் பிறகு வேறே பெண்ணைப் பார்ப்போம்.

சோணா:— சரி உனக்கும் உன் மகனுக்கும் நான் போய் கேழ்க்கவில்லையென்கிற வருத்தம் ஏன், அப்படியே வியாழக்கிழமை போய் வரலாமென்று சொன்னார்.

அச்சேதியை பார்வதியம்மாள் அனுமந்தனிடம் சொன்னாள். அனுமந்தப் பிரபு மிகுந்த களிப்புடன் வைத்தியரிடம் போய், "என் தாயாரும் தகப்பனாரும் வியாழக்கிழமைபோய் கனகசபை முதலியாரைக்கேட்பதாகச் சொன்னார்கள்" என்று சொன்னான். அவ்வாறே வியாழக்கிழமை சோணாசல முதலியாரும், பார்வதியம்மாளும் கனகசபை முதலியார் வீட்டிற்கு போய், கனகசபை முதலியாரையும் மனோன்மணியம்மாளையும் மரகதத்தை தமது குமாரனுக்குக் கொடுக்கும்படி கேட்-

டார்கள். கனகசபை முதலியார் மௌனமாயிருந்தார். மனோன்மணியம்மாள், "எங்கள் குமாரன் சுந்தரனை வாரிக்கொடுத்து இன்னம் மூன்று மாதங்கூட ஆகவில்லையே இதற்குள் கலியாண சந்தோஷங் கொண்டாடவேணுமா? பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள். எல்லாம் பொறுத்துப்பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னாள்."

சோணாசல முதலியார் மனோன்மணியம்மாளைப்பார்த்து நடந்த விஷயங்களைப்பற்றி யோசித்து நடக்க வேண்டியதை நிறுத்தல் தகுதியல்ல. இவ்வுலகில் ஜென்ம மெடுத்தபோதே இறத்தல் நிச்சயம். காயகற்பங்கொண்டவர்களுங்கூட பிரமனது வரையளவைத்தாண்டி நிற்பதில்லை, சுகமுந் துக்கமும் ஒவ்வொருவருக்கும் கலந்தேவரும், அததுவருங்கால் அததை அனுபவித்தே தீரவேண்டும். எ ழு தா வி தி அழுதாலும் வராது. சுகமனுபவிக்கையிலேயே துக்கம் யெய்தும், துக்கத்தை அனுபவிக்கையில் சுகம் தோன்றும், இது இயற்கையே அடுத்த நிமிஷத்தில் நடக்கப்போவது இன்னதென்பதை நாம் அறிதல் அசாத்தியம். தரித்திரன், தனவானாதலும், தனவான் தரித்திரனாதலும், மணமகன் பிணமகனாதலும், ஆச்சரியமல்ல "மணமகனே பிணமகனாய் மணப்பறை பிணப்பறையாய் அணியிழையார்வாழ்த்தொலிபோய் அழுகையே"

என்றவாறு நிகழ்தல் அநேகம். ஆதலால் நமது சுந்தரன் காலமான நீண்டவருத்தம் உங்களுக்கன்றி எனக்கும் உள்ளது தான் "பிணத்தை மூடி மணத்தைச் செய்" என்னும் பழமொழிக்கிணங்க, நமது சுந்தரனுடைய மரணவருத்தம் நமக்குச் சற்று தெளியுமாறு இக்கலியாண வேலையை ஆரம்பிக்கலாம் என்பது எனது எண்ணம். அது விஷயத்தில் நீங்கள் இருவரும் மனம் வைத்து எவ்விதத்திலும் முடித்து வைக்கவேண்டியது யெனறார்.

சோணாசலமூர்த்திக் கோணாமலுரைத்த வீணை வார்த்தையைப் பேணுமொழிக்கின் அவர் மனங்கசியுமென்ற எண்

ளைக் கொண்டவராய் பார்வதியம்மாளையும் அவரையும் பார்த்து அடியில் வருமாறு சொன்னார்.

அதாவது, தாங்கள் மரகதத்தைத் தங்கள் குமாரனுக்காக என்னைக்கேட்க வந்தது சரியே, ஆயினும் என்னிலும் பெரியவர்களான என் தமையனார் அண்ணி இவ்விருவரையும் யோசித்தீர்களானால் அவர்கள் கருத்து எவ்வாறிருக்கிறதோ அவ்வாறே நாங்களும் நடக்கக்கடமைப் பட்டுள்ளோம். அநுமந்தனுக்கு மரகதத்தை வதுவை செய்து வைப்பதற்கு அவ்விருவரும் இஷ்டப்பட்டால் நாங்களும் இஷ்டப்பட்டோம் என்றே மதித்துக்கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போய் அவர்களைக் கலந்து அவர்கள் இஷ்டத்தைத் தெரிந்துகொண்டு வாருங்கள் என்றார்.

கனகசபை முதலியார் அவ்விதங் கூறியவுடன் சோணாசல முதலியாரும், பார்வதியம்மாளும் ஆனந்த சித்தராய் அன்றிரவு கனகசபை முதலியார் வீட்டிலேயே இருந்து மறுதினம் தங்கள் வீட்டிற்குப்போய் அநுமந்தனிடம் நிகழ்ந்தனவற்றைச் சொல்லி இரண்டொரு தினங்களில் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போனார்கள். அவ்விடம் இரண்டுநாள் இருந்து ஒருநாள இரவில், குணாலய முதலியாரும், அம்மணியம்மாளும் ஒன்றாயிருக்கையில் சோணாசல முதலியார் குணாலய நாங்கள் ஒரு விஷயத்தை முன்னிட்டு இவ்விடம் வந்தோம் முதலியாரைப்பார்த்து அந்த விஷயத்தைத் தாங்களும் அம்மாளும் கவனிக்கவேண்டும் என்றார். சோணாசல முதலியார் அவ்வாறுரைத்ததும், அதன்விவரம் இன்னதென்றறிய குணாலய முதலியார் உட்கார்ந்தார். மற்றவர்களும் முறைப்படி உட்கார்ந்தார்கள்.

சோணாசல முதலியார் குணாலய முதலியாருடன் பின்வருமாறு சொன்னார். அதாவது? நமது சுந்தரன் காலமான விஷயமாய் தாங்களன்றி நாங்களும் ஆராத்துயருடனிருக்கிறோமென்பது ஒருவாறிருக்க, மத்தியில் எங்கள் மனதில்

ஒரு எண்ணம் தோன்றியிருக்கிறது. அதை சீக்கிரத்தில் முடித்துப் பார்க்கவேண்டுமென்கிற அவாவும் அதிகமாயிருக்கிறது. அதாவது, எனது குமாரனுக்கு விவாகம் செய்து பார்க்கவேண்டுமென்கிறதே. அதனால் தங்களிடம் வந்த காரணம் என்னவென்றால், தங்களிடம் வளர்ந்துவரும் மரகதத்தை கட்டவேணும் என்கிறது எங்கள் எல்லாருடைய எண்ணமும் மேலும் நமது பையனுக்கு அம்மான் மகளாகவும் இருப்பதால் குலங்கோத்திரம் விசாரிக்க வேண்டியதில்லை என்று தங்களுடைய உத்தரவைக் கோரி இவ்விடம் வந்தோம். மிதுனபுரியில் தங்கள் தம்பியினிடம் இதைப்பற்றி யோசனை செய்ததில், "என் தமையனார் இஷ்டப்பட்டால் எனக்கும் இஷ்டமே. ஆனதால் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப்போய் வாருங்கள் என்று எங்களை அனுப்பினார். அவருக்கு இஷ்டந்தான். ஆயினும் தங்கள் இஷ்டத்தை தெரிந்து கொண்டபின்பே தனது எண்ணத்தை வெளியிடச் சம்மதம் என்று சொன்னார். குணலய முதலியார் சோணசல முதலியார் சொன்னவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டு, யோசித்து நாளைய தினம் சொல்லுகிறேன்" என்று எழுந்துபோய் படுத்துக்கொண்டு யோசனை செய்ததில் அனுமந்தன் நல்ல நடவடிக்கை இல்லாதவனயிருந்தாலும், பெண்ணுக்கு நெருங்கிய பாத்தியஸ்தனயிருப்பதால், அவனுக்குக் கொடுத்துப் பின்பு திருத்திக்கொள்ளலாம், நமது சொத்துக்கள் அன்னியர் அனுபவிப்பதிலும், அனுமந்தன் அனுபவிப்பது நலமென்றும், மரகதம் மற்றவர்களை மணம் செய்துகொள்ள மனம் ஒப்பாவிட்டாலும், அத்தையின் மகனை அனுமந்தனை விவாகம் செய்துகொள்ள மனம் இசைவாள்என்று, அவர் மனதில் தோன்றிற்று.

[மரகதம் சில கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்கிற விதி யிருப்பதால் அதை அவள் இக்கலியாணத்தைமுன்னிட்டு அனுபவிக்கவேண்டியதின் நிமித்தமே குணலயமுதலியாருக்கு அவ்வித எண்ணம் தோன்றிற்று. "விதிவழியே மதி செல்லும்" என்பது பொய்யாகுமா?]

மறு தினம் சோணாசல முதலியார் குணாலய முதலியாருடன் தான் வந்து நாளாகிறதென்று சொல்லவே குணாலய முதலியார் சோணாசல முதலியாருடன் "நீங்கள் ஊருக்குப் போங்கள் நான் ஒரு வாரத்தில் அவ்விடம் வந்து, தம்பியையும் கலந்து பதில்சொல்லுகிறேன். அநேகமாய் முடிவாகவே சொல்லுகிறேன் என்றார். அதைக் கேட்கவே வந்தவர்கள் இருவருக்கும் அளவிலாச் சந்தோஷத்தை யடைந்தார்கள். அநேகமாய் மரகதத்தை அனுமந்தனுக்குக் கொடுக்க இச்சைபடமாட்டார் என்று எண்ணியிருந்தவர்களுக்குக் குணாலய முதலியார் கொடுக்க மனதுடையவராயிருப்பது தோன்றவே சந்தோஷம் அதிகரித்தது. சோணாசல முதலியாரும், பார்வதியம்மாளும் மிருனபுரிக்கு வந்து வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போனதும் அவ்விடத்தில் நடந்ததையும் கனகசபை முதலியாரிடமும் அவர் மனைவியாரிடமும் விவரமாய்ச் சொல்லி, குணாலய முதலியார் வந்தால் நீங்களும் சொல்லி எவ்விதத்திலும் இம்மாதத்திலேயே கலியாணத்தை முடித்துவிடவேண்டியது என்று சொல்லிவிட்டுத் தமது வீட்டிற்கு வந்து அனுமந்தனிடம் குணாலய முதலியார் மரகதத்தைக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார் என்பதைச் சொல்லவே, அனுமந்தன் பாடு தேவேந்திரப் பட்டத்தைப் பெற்றவன் போலானான்.

அல்லாமலும் மரகதத்தைக் கட்டிக்கொண்டால், குணாலய முதலியார் சொத்துக்களெல்லாம் தனதே யாகும். அக்காலத்தில் இவ்வூரில் நம்மைப் பலரும் வெகு கௌரமாக எண்ணுவார்கள். இதை யடுத்த அநேக கிராமங்களிலும் நம்மினும் மிக்க தனவந்தன் எவனுமிரான். என்றும் அச்செல்வத்தைத் தான் அனுபவிக்கும் காலத்தில்தான் இருக்க வேண்டிய விஷயங்களைப்பற்றியும் யோசித்துக்கொண்டு அளவிலாத மகிழ்வெய்தினார் அம்மகிழ்ச்சி எவ்வாறிருந்ததெனில்

"கரியொரு திங்களாறு கானவன் மூன்றுநாளும்
இருதலைப்புற்றில்நாகம் இன்றுநாளும் இரையீதென்று

விரிதலைவேடன்கையில் விற்குதை நரம்பைக்கௌவி
நரியனூர் பட்டபாடு நாளையே படுவர்மாதோ."

என்னும் பாட்டிற்கொப்ப விருந்தது.

தன் தகப்பனாராலும் தாயாராலும் விவாக முடிவைச் சொல்லக்கேட்ட அனுமந்தன் வெகு துரிதமாய் வைத்தியர் வீட்டிற்குச் சென்று நடந்த விவரங்களை அவரிடம் கூறினன் அதைக்கேட்ட வைத்தியர் தம்பி! நான் இரண்டு மூன்று தினங்களாகச் செய்துவந்த பூஜையின் பலனைக் கண்டாயா? முதலில் தேவதைக்குப் பூஜை போடவேணும் என்றபோது உனக்கு கொஞ்சமும் நம்பிக்கை யில்லாமலிருந்ததே. இப்போது நம்பிக்கை வந்ததா? மற்றதும் அனுபோகத்தில் தெரியும் என்றார்.

அனுமந்தன் அவ்வாறு சொன்ன வைத்தியரைப் பார்த்து, ஐயா! நான் நம்பிக்கையா அற்றிருந்தேன்? அவ்வாறு எண்ணுதீர்கள். தங்கள் விஷயத்தில் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேனே என்றான். அனுமந்தன் வைத்தியனை நம்பி யிருப்பது எத்தகைமைத்து என்றால்.

"வெறியயர்வெங்களத்து வேன்மகன்பாணி
முறியார்நறுங்கண்ணி முன்னர்த்தயங்க
மறிகுளகுண்டன்ன மன்னுமகிழ்ச்சி
அறிவுடையாளர்க ணில்."

என்பதை ஒத்திருந்தது. (அதாவது, வெட்டத் தயாரா யிருக்கும் பூசாரியை ஆடுநம்பி அவன் வைத்திருக்கும் வேப்பிலையைத் தனக்கு ஆரமாகக்கொடுக்கிறான் என்று தின்னும்.)

இதை வாசிப்பவர்கள் வைத்தியன் தேவதா பூஜை யென்று சொன்னானே அதென்ன வென்றறியார்களல்லவா? அதன் விருத்தாந்தம் யாதெனில்; சோணாசல முதலியாரும் பார்வதியம்மாளும் பெண் கேட்க வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போனவுடன் வைத்தியருக்குச் செலவிற்குத் தட்டாயிருந்ததால், அனுமந்தனைக் கூப்பிட்டு, அப்பா உன் தாயார்

தகப்பனார் வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போயிருக்கிறார்கள். அவ்விடத்தில் குணாலய முதலியாரின் மனது உனக்குப் பெண்கொடுக்கத் திருப்தியாய்ச் சொல்லும்படியாக அவர் மனம் திரும்ப நமது தேவதை ஒன்றை உச்சாடனம் செய்து அனுப்பவேண்டும் அப்படி அனுப்பினால். அத்தேவதை குணாலய முதலியாரின் மனத்திற்புகுந்து மரகதத்தை உனக்குக் கொடுக்கும்படியான எண்ணத்தை உண்டு பண்ணும். அவ்வாறு அதை அனுப்ப வேண்டுமானால் அதற்கு ஆகுதி கொடுத்தே அனுப்பவேண்டும் அதற்காக சுவல்பமாக பார்த்தாலும் சுமார் பத்து ரூபாய்கள் வேண்டும். அதைமட்டில் எங்கேயாவது வாங்கிக்கொடு என்று வேப்பிலையடித்தார்.

அதைக்கேட்ட அனுமந்தராயமுனி எங்கெங்கோ திரிந்து கஷ்டப்பட்டு பத்து ரூபாய் வாங்கிக்கொண்டுவந்து வைத்தியனிடம் கொடுத்துத் திருப்தி அடைந்தது. அதை வாங்கி தன் செலவைப் பார்த்துக்கொண்டு இரண்டு தினம் என்னமோ பூஜை போடுவதாக அனுமந்தனுக்கு அயற்புக் காட்டி வந்தான். அதற்கொப்ப வந்தவர்களும் நற்சேதி கொண்டு வரவே, வைத்தியன் பாடு கொண்டாட்டமாய் விட்டது. தான் தேவதைக்குப் பூசை போட்டதாலே தான் குணாலய முதலியார் நல்லுத்தரவு கொடுத்தாரென்று அனுமந்தனிடம் கூறித் தன்னிடம் அனுமந்தனுக்குத் திருப்தியும் நம்பிக்கையும் அதிகரிக்கச்செய்தான் வைத்தியன்.

வைத்தியன் உருவேத்துவதை யெல்லாம் பகுத்தறிவில்லாத அனுமந்தப் பிம்பம் மெய்யென்றே நம்பிற்று. இவன் நம்பிக்கை வைக்க வைத்தியனும் அனுமந்தனை ஏமாற்ற வெகு சுலபமாயிருந்தது.

இந்நிலைதிப்படியிருக்க சோணாசல முதலியார் வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்துவந்த நாலைந்து தினத்திற்கெல்லாம் குணாலய முதலியார் மிதுனபுரிக்கு வந்தார். நடந்த விஷயங்களைப்பற்றி கனகசபை முதலியாரிடம் சொல்லி அவ்வாறு நடப்பதில் தனக்கு ஒருவாறு சம்மதம் என்பதையும் தெரி

வித்தார், கனகசபை முதலியாரும் தனது தமையனுருக்குக் கொஞ்செம் இஷ்டம் என்பதைத் தெரிந்தபிறகு தனக்கும் சம்மதம் என்றே புகன்ருர். இவ்விஷயங்களை யெல்லாம் மரகதத்திற்குத் தெரிவித்து அவளிஷ்டத்தை அறிய வேண்டும் என்று இருவரும் யோசித்து, மரகதத்தின் சிநேகிதையான ஒரு சமையற்காரியினிடம் சொல்லி அனுப்பிஞர்கள்.

இதைச் சமையற்காரி மரகதத்தினிடம் சொன்ன வளவில் மரகதம் கொண்ட வருத்தத்திற் கிணையாக எவர் வருத்தத்தையுங்கூறச் சாத்தியமாகாது. (ஆயினும் ஒரு உவமானம் சற்றுப் பொருந்துமெனக் கூறத்துணிந்தேன். அதாவது; வாசித்த வித்வான்களைக்கண்ட லோபியர்கள் மனம் எவ்விதம் வருந்துமோ அறற்குச் சற்றேறக்குறையவிருந்தது புலவர்களைக்கண்ட லோபிகள் ஏன் வருந்துகிறதென்ருல், ஒருக்கால் நம்மை ஏதாவது பரிதானம் கேட்பார்களோ என்னமோ வென்று பயப்படுவார்கள்.) சமையற்காரியிடம் எதையும் சொல்ல வாயெழவில்லை. அச்சமயத்தில் தன்னுண்மையான காதலன் சுந்தரன் நினைவு வந்தது. பின்னும் அவனுல் தனக்கெழுதப்பட்ட கடிதத்தின் கருத்தும் நினைவுக்கு வந்தது, என் செய்வாள் அவள் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. அதனுல் சமையற்காரி மரகதம் அனுமந்தனை மணக்க இஷ்டமுடனிருக்கிருளென்று மந்தமதியால் யூகித்துக்கொண்டாள், மறுபடியும் மரகதத்தைப்பார்த்து "உன்னிஷ்டம் என்ன சொல்லு!" என்ருள்.

மரகதம் ஒன்றும் சொல்ல மனமில்லாமல் ஏதேதோ தன் மனதில் நினைத்துக்கொண்டு "எல்லாம் விதிப்படி முடியும்" என்ருள். அச்சொல் மரகதத்தின் வாக்கால் வந்ததும் சமையற்காரி வெளியே வந்து, குணலைய முதலியாரிடம், மரகதத்திற்கு அனுமந்தனைமணக்க இஷ்டந்தான். அதை வெளிப்படையாய்ச்சொல்ல அஞ்சி, "எல்லாம் விதிப்படி முடியும்" என்ருள் ஆதலால் அதன் பொருள். அனுமந்தனை மணக்கும் இஷ்டத்தாலே சொல்லும் சொல்லென்று எனக்கேற்பட்டது என்ருள்.

சமையற்காரியான ஒண்ணேகால் மூடம் தனது மிளகத்தனை மூளையின் வலுவால் கிரகித்து வந்து சொன்ன சொல்லை நம்பி குணாலய முதலியாரும் கனகசபை முதலியாரும், சோணாசல முதலியாரை வரவழைத்து; மரகதத்தை உங்கள் குமாரனுக்குக் கொடுக்க இஷ்டம் ஆயினும் அவனது நடத்தைகளையெல்லாம் விட்டு நன்மார்க்கத்தில் வந்தால்தான் சரிப்படும். அல்லாவிட்டால் மணம் நடந்து விட்டாலும் பெண்ணை அனுப்பமாட்டோம் பின்னிட்டு வருந்துவதில் பயனில்லையென்றார்கள் சோணாசல முதலியார் அவ்வாறே அனுமந்தன் தன் குணங்களை யெல்லாம் மாற்றிவிட்டான். அநேகமாய் நன்னடக்கையையே கடைப்பிடித்திருக்கிறான். பின்னும் நல்வழியில் திரும்புவது தங்கள் கடமையே. இனி அவன் எங்கள் குமாரனல்ல தங்களிருவரின் குமாரனே யாவான். என்று முகமன் கூறிப்போகப் புறப்படும் சமயத்தில் சோணாசல முதலியார் குணாலய முதலியாரிடம் நாள் பார்க்கும்படி கேட்டுக்கொண்டதின்மேல் புரோகிதரை அழைத்து வந்து ஓர் தினத்தைக் குறிப்பிட்டு நிச்சயித்துக் கொண்டார்கள். கனகசபை முதலியார் சோசல முதலியாருடன் கலியாணத்திற்காக நீங்கள் யாதொன்றும் சேகரிக்க வேண்டாம். சகலமும் நாங்களே செய்துவிடுகிறோம் என்றார். சோணாசல முதலியாரும் தனக்கு பெரிய மனுஷன் வீட்டுச் சம்பந்தம் கிடைப்பதைப்பற்றிச் சாலவும் சந்தோஷத்துடன் வீட்டிற்கு வந்து தன் பாரியாளிடம் நடந்தவற்றைக் கூறினார். பார்வதியம்மாளும் குதூகலமடைந்தாள். அனுமந்தனுக்கிச்சேதி எட்டிற்று. அச்சமையம் அனுமந்தனுடைய மனம் எவ்வாறிருக்குமென்பதை இதை வாசிப்பவர்களே அறிந்து கொள்ளலாம். இவ்வளவும் வைத்தியரின் மந்திர பலத்தாலும் தேவதை பூஜையாலுமே முடிவேறியதென்பது அனுமந்தனது கொள்கை.

விவாகத்திற்காக சகல ஏற்பாடும் வெகு மும்மரமாக நடப்பதை மரகதம் அறிந்தாள், ஓ இதேது மோசம் வந்துவிட்டது. இனி இங்கிருந்தால் நம்மை எவ்விதத்திலும்

அனுமந்தனுக்கே மணமுடிப்பார்கள். அச்சமயத்தில் நாம் வேண்டாமென்றால் நம்மை வளர்த்து இவ்வளவு காரியங்கள் செய்தவர்களுக்கு நம்மிடம் மிகுந்த அருவெறுப்புண்டாவதுடன் ஊராரும் "மிஞ்சிய பெண் மரகதம்" என்கிற டைட்டல் தருவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. எவ்விதத்திலும் இக்கலியாணத்தை நிறுத்திவிட்டால் நலம் அச்சங்கதியை நிறைவேற்றும் அறிவாளிகள் இல்லை. ஆதலால் நமது பிராணனை விட்டுவிடுவதே யுக்தம் நான் எனதுயிர்க்கு சமானமாய் நினைத்திருந்த சுந்தர புருஷனே போய்விட்டார். இனி நாம் இவ்வுலகத்தில் இருந்து என்ன சுகத்தை அடையப் போகிறோம், அவர் இறந்த காலத்தே நாம் வைதவ்விய மாதர்க்கு நிகரானோம், மனதினால் ஒருவரைக் காமுற்றுப் பிறகு மற்றவரை மணத்தல் தரும சாஸ்திரத்திற்கு விரோதம் அல்லவா. நமது உயிர் இருக்குமளவும் எவரையும் மணக்க உடன்படலாகாது என்பதைத் திடமாய் நினைத்துக் கொண்டாள். ஆயினும் இவ்விடமிருந்தால் எவ்விதத்திலும் நம்மை வலுவில் மணத்துக்கு உடன்படுத்துவார்கள். ஆனதால் இவர்கள் முன் இல்லாமல் பிராணத்தியாகம் செய்துக் கொள்ளவேண்டுமென்று உறுதியாக நினைத்துக்கொண்டாள். இரண்டு மூன்று தினங்கள் வரையில் மிதுனபுரியிலேயே யிருந்தாள். விவாகத்திற்காக காரியங்கள் எல்லாம் வெகு துரிதமாகவும் விமரிசையாகவும் நடந்துகொண்டிருக்கிறது. தெருவில் பிரம்மாண்டமான ஓலைப்பந்தல்கள்போடத் துவக்கிவிட்டார்கள். மற்றைப்படி ஒவ்வொன்றும் தயாராகி வருகிறது, இன்னம் நான்கு தினங்களே இருக்கிறது விவாக நாள். இனி இவ்விடம் இருத்தல் நலமல்லவென்று அன்றிரவு சுமார் பனிரெண்டு மணிக்கெல்லாம் சுந்தரன் தனக்கு எழுதிய கடைசிக் கடிதத்தை மட்டில் எடுத்துக்கொண்டு தான் அணிந்த நகைகளுடன் மெள்ளத் தன் படுக்கை யறையினின்றும் புறப்பட்டு புறக்கடை வழியாக வெளிவந்து தன்மனம் போனவாறு காற்றிலும் கடுவேகமாய் நடந்தாள். சுமார் இரண்டு மைல்தூரம் போனாள் அதற்குள் மிதுனபுரியின் வடபுறத்துள்ள பெரிய மலையடி வாரத்தில் கொண்டுபோய்விட்டது.

தான் வந்திருக்கிற இடம் மலையடிவாரம் என்று அறிந்தாள். இதைத் தாண்டிப்போகவேணுமாகில் கிழக்கே நான்கு மைல் தூரமும் மேற்கே மூன்று மைல் தூரமும் போகவேண்டும். அவ்வாறு போகையில் மிதுனபுரி வாசிகள் ஒருக்கால் வழியில் தென்பட்டாலும் தென்படுவார்கள். ஆனால் இம்மலை யுச்சியிலேறி குப்புற வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்வதே நலம் என்று எண்ணி, மலையின்மீது ஏறத் தலைப்பட்டாள். பகலிலேயே மலைமீது வழியில்லா வழியில் ஏறுவது கஷ்டம். அவ்வாறிருக்க, இரவில் ஏறுவதானால் சாத்தியமா? மேலும் மரகதம் நல்ல பாதைகளில்கூட நடந்தறிய மாட்டாள். அச்சமயம் இரண்டு மைல் நடந்ததே அவளுக்கு இரண்டு காதம் நடந்த அவ்வளவு இளைப்பும், நோயும் உண்டாயிற்று. அவ்வளவு வருத்தத்தையும், பொறுத்துக்கொண்டு நடந்து வந்ததும், இனி நடக்க முயற்சிப்பதும் சுந்தரன்மீது வைத்திருந்த காதலாலும், தன் கற்பழியாதிருக்கவேண்டுமென்கிற எண்ணத்தாலுமே.

ஆனால் அச்சமயத்தில் சந்திரன் மட்டில் பால்போலப் பிரகாசித்தது. அதனால் சிறிது மரகதத்திற்கு அனுகூலமாயிருந்தது. மரகதம் மலையின்மீது ஏறத்தலைப்பட்டாள் சுமார் நூறுகஜ தூரம் வரையில் வெகு கஷ்டத்துடன் ஏறினாள். அதற்குள் மரகதத்திற்கு இருட்டாலும் கஷ்டத்தாலும் மிகுந்த அயர்ச்சி யுண்டாயிற்று. அங்கிருந்த ஓர் பெரிய பாறையின்மீது படுத்துக்கொண்டாள். மனக்கிலேச முள்ளவர்களுக்கு எளிதில் நித்திரை வராது என்றாலும் அயர்ச்சியை அடைந்ததினால் மரகதம் வெகு சீக்கிரத்தில் தூங்கிவிட்டாள் சூரியன் உதித்த பின்பே கிரணந்தாங்கி விழித்தாள். தெற்கே நோக்கினாள் மிகவும் அருகாமையிலே மிதுனபுரிதோன்றிற்று அடடா பெண் புத்தி பின்புத்தி யென்பதின் அருத்தம் நம்மிடமே பலித்துவிட்டது. நான் புறப்பட்ட நேரத்திலேயே விடாமல் நடந்திருந்தால் இதுவரையில் சுமார் இருபதுமைல்களுக்குமேல் நடந்திருக்கலாம். கொஞ்சம் அயர்ந்ததால் இவ்வண்ணம் ஆயிற்று. இனி, அரை க்ஷணமும் தாமதிக்கா

மல் நடக்கவேண்டியதென்று தீர்மானித்து பரபரப்புடன் மலையுச்சியைநாடி ஏறினள். ஆயினும் அம்மலையானது பெரிய மரங்கள் அடர்ந்துள்ளதாயிருந்ததால் வெயிலின் கொடுமை மரகதத்திற்கு உண்டாகவில்லை. மரகதம் மலையில் ஏறுவதும் கீழிருந்து பார்த்தால் பிறருக்குத் தெரியாது. அவ்வாறே மலையின் முக்காற் பங்கு உயரம் ஏறினள். அவ்விடத்தில் பெரிய மரங்கள் தழைத்து சுற்றிலும் புதர்களால்வேலிபோல அமைந்துள்ள ஒரு இடம் தோன்றிற்று. அதனுள் நுழைந்தால் அங்கிருக்கும் துஷ்டமிருகங்களால் வதைப்பட்டாவது நமதுயிரைத் துறக்கலாம் என்று எண்ணினவளாய் துணிந்து அப்புதருக்குள் நுழைந்தாள். அதனுள் விசாலமான இடமும் அவ்விடம் நிரைய எலும்புகளும், சில பொன்னகை, வெள்ளி நகை, முதலியதும் விசேஷமாயிருந்தன.

அதைக்கண்டதும் மரகதம் அக்குகை மனிதர்களையும் விலங்குகளையும் வதைத்துத் தின்னும் துஷ்ட மிருகத்தின் வாசஸ்தானம் என்று தெரிந்து கொண்டாள். அவ்விடமிருந்தால் தானும் துஷ்ட மிருகத்தின் வாய்ப்பட்டு மாள்வது நிச்சயமென்று அறிந்துக்கொண்டும், சாவத் துணிந்தவர்களுக்குச் சமுத்திரம் முழங்காலளவு ஜலம்'' என்னும் பழமொழிக்கொக்க, மரகதம் சாகத்துணிந்து தயாராயிருப்பவளாதலால் பின் வருமாறு யோசிக்கலானாள். அதாவது நாமோ சாகத்துணிந்து வந்தோம், கிணறு, குளம், குட்டை, இவைகளில் இறங்கியாவது அல்லது மலையுச்சியில் ஏறிக்குதித்தாவது நமது பிராணனைவிட எண்ணினோம். அவ்வாறு பிராணனைவிட்டால் நமது தேகம் பயன்படாதொழியும். அவ்வாரன்றி, இக்குகையிலேயே இருந்தால் இதில்வசிக்கும் துஷ்ட மிருகம் வந்து நம்மைக்கொன்று நமது உடலைத்தின்று பசியாறும். ஆதலால் இக்காயத்தை ஒரு பிராணியின் பசியாறத் தருவது புண்ணியமாகும் என்று எண்ணிக்கொண்டிருக்கையில், அப்புதரிலிருந்த காடையென்னும் பறவை எழுந்து பறந்தோடிற்று. அதனால் அவ்விடத்தில் ''சடசட'' வென்ற சப்தம் உண்டாயிற்று, அதைக்கேட்டவுடன் மரகதம் திடுக்

கிட்டுப் பயந்து வெளியே ஓடிவந்தாள். அவ்விடத்தில் யாதொரு துஷ்டப்பிராணியையும் காணவில்லை. காடை ஓடுவதைக் கண்டாள். அடா என்ன மாய்கை, நமது அறிவின்மையை விளக்கக் கடவுளே சோதித்தனர் போலும். இந்நேரம் உயிர்விட வேண்டியதற்கான தைரியத்தைக் கொண்டிருந்தேன் அவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் திடீரெனக் கேட்ட இச்சந்தடியால் நான் என்னுயிரைக்காக்க வெளிவந்தேன் இது என் மூடத்தனமல்லவா ? நினைப்பதொன்றும் செய்வதொன்றுமாக வல்லவோ இருக்கிறது. மனோவாக்குக் காயம் என்றுந் திரிகரண சுத்தியாய் நடக்க இயலவில்லையே, அவ்வளவு பெருமையுடையதா எனது தேகம். இத்தேகம் எத்தனை நாளைக்கிருந்தாலும் ஒரு நாளைக்குச் சாகத்தானே வேண்டும். இதுவரையில் மிகக் கீர்த்திபெற்ற அரசர்களும் வல்லமையில் மிகுந்த வீரர்களும், தேவர்களுங்கூட அழிந்தனரே தவிர நிலையுடன் இருந்ததாக கேள்விப்படவில்லை.

அதாவது,

"மண்ணொடு மன்னவரும் அவர்தனமும் மாண்டனநுண் மணலையொக்கும், விண்ணோடு மிந்திரரும் அவர் வாழ்வும் போயினவிண். மீனையொக்கும், எண்ணொடும் பிரமரும் அண்டமும் பூதங்களும் இறந்த வெல்லை இல்லை, கண்ணொடு மவையெங்கே நின் வாழ்க்கை நிலையென்னே கழறு நெஞ்சே"

என்று ஞானவாசிட்டத்திலும்;

"என்னை மாழ்கி இரங்குவதேதைநீ
பொன்னுமாவிப் பொருந்தியகாயமும்
மின்னுமொக்குளும் போய்நனிவீழ்ந்திடும்
அன்னதுன்னி அறிஞரழிவுறார்."

"பண்டைவாசனைத் தொக்கப்பயிற்சியால்
கொண்டகாயம் நிலையெனக்கொள்வரோ
அண்டரேனு மிறப்புளா தாமெனின்
விண்டுகாயமிறப்பது மெய்யரோ."

என்னும் செய்யுளின் பொருளைத் தெரிந்து கொள்ளும் சக்தி சிறிது வாய்த்திருந்தும் நமது உயிரின்மேல் இத்தகைய அன்பு வைத்திருப்பது தகுதியல்லவென்று யோசித்து மறுபடி அக்குகைக்குள்ளே நுழைந்து படுத்துக்கொண்டாள். நடந்த அயற்சியாலும், பசியின் கொடுமையாலும், நித்திரை வந்துவிட்டது. மரகதம் தூங்கிக்கொண்டிருக்கையில், அப்புதரைச் சுற்றிலுமுள்ள நாணற்புற்கள் பற்றிக்கொண்டு புகை மரகதம் படுத்துக்கொண்டிருந்த புதருக்குகைக்குள் நிறையக் கப்பிக்கொண்டது. அப்புகையின் நெடியால் கண்விழித்துப் பார்த்தாள். மரகதம் தானிருக்கும் இடம் அதிகப்புகையால் சூழப்பட்டிருப்பதைக்கண்டு ஒன்றுந் தோன்றாதவளாய் வெளியேவர வழியுந்தெரியாமல் குறிப்பின்மேல் வெளியேவந்து பார்த்தாள் தானிருந்த புதரைசசுற்றிலுமுள்ள நாணற்புற்கள் தீப்பற்றி யெறிவதைக் கண்டாள். அத்தீயுண்டானதற்குக் காரணம் இன்னதென்றறியச் சாத்தியப்படாமல், தீயில்லாத இடத்தில்போய் நின்றாள். மரகதம் குகைக்குள்ளிருந்து வந்து நெருப்புப்புகையில்லாத ஓர் பாறையினருகில் உட்கார்ந்தவுடன் கறுத்த மேனியும் சுருண்ட மயிரும்; மிரண்ட பார்வையும், உருண்ட முகமும், திரண்ட புஜமும், உடைய ஓர் மனிதன் தன்னருகில் நிற்கக் கண்டாள். அவனது பயங்கரமான உருவத்தால், இவன் ராக்ஷசனோ, அல்லது காலதூதவனோ, அல்லது மலைப்பூதமோ என்று திகைத்தாள், ஆயினும் தைரியத்தை விடவில்லை. அருகில் வந்து நின்றவனை ப்பார்த்து,

மரக:— அப்பா! நீயார்? இம்மலைவாசிதானோ?

கரி:— மலைவாசியல்ல, நிலவாசிதான் நான். நீ மலைக்கன்னிகையோ?

மரக:— மலைக்கன்னிகையல்ல; கிராதகாது உயிருக்கு உலைக்கன்கை.

கரி:—கிராதகர் என்றால் யாவர்?

மரா:— கிராதகர் என்ற பதத்திற்கு அருத்தம் பின்பு கூறுகிறேன். அதைச் சொல்லப்புகுந்தால் விரியும். அதன்

அருத்தத்தைத் தெரிந்து கொள்ளக் கூடுமையா என்பதை நான் முதலில் அறிந்தே சொல்வேன்.

கரி:— என் குணத்தை நீ எவ்வாறு அறிந்துகொள்வாய்?

மரக:— முகக்குறிப்பினுலும், பேசும் சொல்லினுலும், அரை நொடியில் தெரிந்து கொள்ளலாம்.

கரி:— அவ்வளவு சாமர்த்தியம் பெற்றவர்கள். நிறைந்த அறிவாளிகளாயிருத்தல் வேண்டும் அல்லவா ?

மரக:— கற்றவர்களுக்கும் அனுபோகஸ்தர்களுக்குமே அது இயல்பு மற்றையர்களுக்குக் கடினமே.

கரி:— என்னை யாரென மதித்தாய் நீ?

மரக:— உன்னையா? நீ நகரவாசி யென்றும், உனது தொழில் மட்டில் அன்னியரால் நல்லதல்லவென்று நிஷேதிக்கத் தக்கதென்றும் மதித்தேன்.

கரி:— நான் உன்னை யாரென மதித்தேன் தெரியுமா ? இம் மலைக் கன்னிகையா யிருக்கவேண்டும். என்று மதித்தேன்.

மரக:— ஆமாம். நான் மலைக்கன்னிகைதான்.

கரி:— மலைக்கன்னிகையாயின் நீ வசிக்கும் இடம் எது?

மரக:— இம்மலையின் எந்தப்பாகத்திலும் நான் வசிப்பேன்.

கரி:— இரவில் எங்கிருப்பாய்?

மரக:— இரவில் தழைத்த மரத்துச்சியில் இருப்பேன்.

கரி:— உனக்கு ஆகாரம் என்ன?

மரக:— காய்கனி கிழங்குகள் உண்பேன். பின்னும் சிலவான ஆகாரங்கள் உண்பேன்.

கரி:— அவ்வாறிருக்க நீ இப்புலிக்குகைக்குள் வந்ததென்ன காரணம்?

மரக:— நீ ஏன் என்னை அதிகமான கேள்விகள் கேட்கிறாய்?

கரி:— இல்லை நீ நரமாமிசம் புசிப்பாயோ என்கிற சந்தேகத்தால் கேட்கிறேன்.

மரக:— எது புசித்தாலுனக்கென்ன? எனக்குத் தற்காலம் சில காய் கனி கிழங்குகள் கொண்டுவந்து ஆகாரமாகத் தந்தால் உன்னை விட்டுவிடுகிறேன்.

கரி:— அல்லாமற் போனால்

மரக:— உன்னைக் கவளீகரம் செய்துவிடுகிறேன்.

கரி:— ஓ! சரி; அதற்காகத்தான் கேட்டேன். என்னை உனது மெல்லிய கரம் வருந்தப் பிடித்தடிக்கும்படியானசிறமம் வைக்காது நானே என்னைக் கொலை செய்து கொள்ளுகிறேன். பின்பு என்னை நீ புசித்துவிடு என்று தன் கையிலிருந்த சிறு கத்தி யொன்றைத் தன் கழுத்தில் வைத்து அழுத்தினன் இதற்குள் மரகதம் ஓடிப்போய் அவன் கழுத்தில் வைத்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டாளெனினும் அவனது புறங்கழுத்து சுமார் காலங்குல அளவு அறுப்புண்டு உதிரம் தாரை தாரையாய் வடிந்தது.

அதைக்கண்ட மரகதம் மிகவும் பச்சாத்தாபப்பட்டு அப்பா! நீயேன் இவ்வாறு செய்துகொண்டாய் என்றான். கரியன் மரகதத்தைப் பார்த்து அம்மா நீ பசியாயிருப்பதை பார்த்து உன் பசியை அடக்கவே இவ்வாறு செய்தேன் என்றனன். ஆயினும் கரியனுக்கு அதிகம் பேசச்சாத்திய மில்லாமையால், மரகதம் அவனது இடையிலிருந்த துணியொன்றில் ஒரு முழம் கிழித்து அதனால் கரியன் மீதிருந்த உதிரங்கள் எல்லாம் போகும்படி துடைத்து பின்னும் கொஞ்சம் துணி கிழித்து அதனால் அப்புண்ணைக்கட்டினாள். சிறிது நேரத்தில் கரியன் ஈன சுரத்தோடு அம்மா! நாம் இங்கிருக்க வொண்ணாது என்னை அழைத்துக்கொண்டு அதோ உயரமாய்த் தெரிகிற பாறை யண்டைபோனால் பின்பு மற்றவை சொல்லுகிறேன் என்றனன். அவ்வாறே மரகதம் அவனை மெள்ள அப்பாறையண்டை அழைத்துக்கொண்டு போனாள். அப்பா

றைக்குப் பின் புறத்தில் செங்குத்தாக ஏறவேண்டியதான ஓர் வழி தோன்றிற்று. அந்த வழியாகக் கரியன் முன்னே ஏறினன். பின்னால் மரகதமும் ஏறினள். அவ்விடத்தில் சுமார் இருபது கஜதூரம் சமசதுரமான இடமும் சிறிய வழியுள்ள ஒரு குகையும் இருந்தது. அதில் கரியன் முன்னுழைந்தான். பின்னேயே மரகதமும் நுழைந்தாள். அங்கே சற்றேறக்குறைய இருபது மனிதர் இருக்கும்படியான விசாலமான இடமும் அந்த இடத்திற்கு பக்கவாட்டா மூன்றிடங்களிலிருந்து வெளிச்சம் தோன்றும்படியான துவாரங்களும் இருந்தது. அத்துவாரங்களின் வழியாய்த் தோன்றும் வெளிச்சம் அந்த இடத்திற்குப் போதுமானதாயிருந்தது அதுவுந்தவிர அங்கோர் பக்கத்தில் வெள்ளரிக்காய்போல நிறமும் உருவமும் உடைய பத்துப்பனிரெண்டு காய்களும்,ஒரு மட்ட பாத்திரத்தில் வெகு குளிர்ந்த நீரும் பின்னும் சில பெயர் தெரியாத பழவர்க்கங்களும் இருந்தன. அவற்றையெல்லாம் கண்ட மரகதத்திற்கு ஒருவித ஆச்சரியமும் கிலியும் உண்டாயிற்று. ஆயினும் கிலியை வலிவாய்க் கொள்ளவில்லை. தொலைவாய் விடுத்து, கரியனை நோக்கி அப்பா! உன் விஷயங்கள் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவிக்கிறபடியால் உனது சவிஸ்தாரத்தை எனக்கு விவரமாயும் உண்மையாயும் சொல்லவேண்டுகிறேன் என்றனள், மரகதம் அவ்வாறு கேட்டதும் அம்மா! நீ ரொம்பவும் பசியாயிருப்பதாய்த் தோன்றுகின்றது. ஆனபடியால் முதலில் அதோ யிருக்கும் காய்களில் சிலவற்றைத்தின்று உன் பசியை ஆற்றிக்கொள்வாயேயானால் பின்பு என் சவிஸ்தாரங்களைக் கேட்கமுடியும், ஏனெனில் என் சரித்திரம் மிகவும் நீண்டதும், பரிதாபங்கொள்ளக் கூடியதுமானது. ஆனதால் உன் பசியைத் தணித்துக்கொண்டபின்பே கேட்கச் சாதகமாகும் என்றான். கரியன் கூறியவாறே ஆங்கிருந்த காய்களில் சிலதைத் தின்றாள். அக்காய்கள் மிகவும் உருசியாயும், மெதுவாயும், குளிர்ச்சியாயுமிருந்தது. அதை வயிறுநிரையப் புசித்துவிட்டு பானைத்தண்ணீரில் கொஞ்சம் குடித்தாள். சற்றுநேரம் அயர்ந்தாள், இதற்குள் மாலை ஐந்துமணியாய்விட்டது, குகையில் இருள் வந்து

விட்டது. அச்சமயத்தில் கரியன் அங்கிருந்த தோலாசனம் ஒன்றை மரகதத்திற்குக் காட்டி, அதை எடுத்து விரித்து அதில் சயனித்துக்கொள்ளச்சொன்னான். மரகதம் அத்தே கற்பாயை எடுத்து விரித்து அதில் உட்கார்ந்துகொண்டு அப்பா! நீ உன் சரிதையைக்கூறு அதைக்கேட்க ஆவல் மிகுந்திருக்கிறதே தவிர, நித்திரை வரவில்லை என்றாள். கரியன் அம்மா எனது கதையை பிரமாணப் பூர்வமாக ஒன்றும் விடாமற் சொல்லுகிறேன் கேள்.

நான் இம்மலையடிவாரத்திற்கு தென்பாரிசத்தில் சுமார் நாலைந்து மைல் தூரத்திலுள்ள மிதுனபுரியில் யாதவ குலத்திலுதித்தவன். என் இளமைப் பருவத்தில் எனது பெற்றோர் என்னை வாசிக்கச் செய்யத்தகுந்த இயல்பில்லாதவர்களாயிருந்தமையால் எங்களுக்குள்ள சுமார். நூற்றைம்பது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கக் கட்டளையிட்டார்கள். அவ்விதமே எனது எட்டாவது வயது வரையில் ஆடு மேய்க்குந் தொழிலிலிருந்தேன். அச்சமயம் மிதுனபுரியில் தோன்றிய காலராவென்னும் பேதியில் என் பெற்றோர் இருவரும் ஒரே தினத்தில் மாண்டனர். என் பெற்றோருக்கு என்னைத் தவிர வேறு புத்திரர் புத்திரிகள் இல்லை. அதனால் நான் எனது வீட்டில் தனியேயிருக்க மனமில்லாமல், எனது பந்து ஒருவர் வீட்டில் ஒரு வருஷகாலம் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன், எனது ஆடுகளிலிருந்து நான் கறந்துதரும் பாலைக் கொண்டு நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் வீட்டார் நல்ல லாபத்தை அடைந்தார்கள். அவ்வாறிருக்கையில், மிதுனபுரியில் இருந்த பாடசாலையில் கற்கும் மாணாக்கர்களில் ஒருவன் வீட்டுக்குத் தினம் அரைப்படி பால் கொண்டுபோய் கொடுக்கிற வழக்கத்தை வைத்திருந்தேன். அந்த வழக்கப்படி ஓர் நாள் இரவு எட்டு மணிக்குமேல் பால் எடுத்துக் கொண்டுபோனேன். அப்போது அவ்வீட்டுப்பையன் தீபத்தின்முன் வாசித்துக்கொண்டிருந்தான்.

நான் பால்கொண்டுபோனவன் பாலைக் கொடுத்ததும் திரும்பாமல் சற்றுநேரம் அந்தப்பையன் வாசித்துக்கொண்

டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அந்தப்பயல் என்னைப்பார்த்து, "அடே பயலே தூரம்போ; இரும்படிக்கும் இடத்தில் நாய்க்கு என்ன வேலை" என்றான். என்னிலும் சிறியவனான அப்பையன் சொன்னசொல்லானது என் காதை துளைத்தது. உடனே அவ்விடம் விட்டுப் புறப்பட்டு என் வீட்டிற்கு வந்து, நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த வீட்டாருக்கு எனது ஆடுகள் நூற்றைம்பதையும் நானூறு ரூபாய்க்கும், என் வீட்டை இருநூறு ரூபாய்க்கும் விற்றுப்போட்டு பத்து தினத்தில் அறுநூறு ரூபாயையும் பெற்றுக்கொண்டு, மிதுனபுரிக்குப் பத்துமைல் தூரத்திலுள்ள சாலக்குடி என்கிற ஊருக்கு வந்து அவ்வூர் உபாத்தியாயரிடம் ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து, "சுவாமி! நான் பரம ஏழை. என் பெற்றோர்களும் காலமாய் விட்டார்கள். என் ஆஸ்தியெல்லாம் இதுதான். எனக்கு வாசிப்பதில்மிகுந்த ஆசை உண்டு. ஆனதால் இந்த ரூபாயை எடுத்துக்கொண்டு எனக்கு எழுத படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டியது தங்கள் பாரம். சாப்பாட்டுக்கும் வேறு வழியில்லை" என்று உபாத்தியாயர் காலில் விழுந்தேன். உபாத்தியாயர் சந்தோஷத்துடன் என்னை எழுந்திருக்கச்செய்து அவ்வாறே நமது வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு வாசித்துவா என்று சொன்னார்.

அது முதல் அவருக்கு வேண்டிய வேலைகளையெல்லாம் குறிப்பாலறிந்து செய்துக்கொண்டு வந்ததில் உபாத்தியாயருக்கும் அவர் மனைவியாருக்கும் என்னிடம் சால அன்பு பிறந்தது. இரவிலும் பகலிலும் எனக்கு ஓயாமல் படிப்பு போதித்து வந்தார். மூன்று வருஷத்தில் நான் நன்றாய் எழுதவும் எந்தப் புஸ்தகத்தை எடுத்தாலும் பிழையறப் படிக்கவும் கற்றுக்கொண்டேன். ஆனாலும் அப்பாடசாலையில் என்னிலும் நன்றாய் எழுதுபவர்கள் இல்லை. நான் அச்சு அடித்தமாதிரி எழுதக் கற்றுக்கொண்டேன். பிறகும் ஒரு வருஷம் அவரிடமே யிருந்தேன். எனக்கு நன்றாய் வாசிக்கவும் சில புதிய வசனங்களுக்குப் பொருள் நானே தெரிந்துகொள்ளும்படியான சக்தியும் வந்துவிட்டது அதைக்கண்ட

உபாத்தியாயர் சாலக்குடி கிராம மிராசுதாரரிடம் கணக்கெழுதும் வேலையில் என்னை வைத்தார். அவ்வாறே மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு கணக்கெழுதிக்கொண்டிருக்கையில் அவ்வூரில் நான் கணக்கெழுதும் முதலியார் வீட்டிற்கு எதிரில் ஓர் தாசி வீடு இருந்தது. அவ்வீட்டில் ரூபாவதி என்று ஓர் பெண்ணிருந்தாள். நான முதலியார் வீட்டுத் திண்ணையின்மீது உட்கார்ந்து கணக்கெழுதும் போதெல்லாம் அவளை உற்றுப்பார்ப்பேன். அவளும் என்னைப் பார்ப்பாள்.

இவ்விதமாக இரண்டொரு மாதங்கள் கடந்ததும், நான் அவள் வீட்டிற்கு போகத் தலைப்பட்டேன். அப்பெண்ணின் தாயாரும் என்னிடம் முதலில் சிறிது பட்சமே பாராட்டி வந்தாள் நான் தினம் ஒரு தடவை அவ்வீட்டிற்குப் போவேன். அச்சமையத்தில் ரூபாவதி யென்னும் தாசிப் பெண்ணும் நானும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருப்பது வழக்கம். இம்மாதிரியே நடந்து வருகையில் அப்பெண்மேல் மோகித்த ஒருவன் அவர்கள் வீட்டிற்கு வரத்தலைப்பட்டான். அவன் மிகுந்த செல்வந்தன். மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கிறவன். அதுவுந்தவிர அநேகமான உயர்ந்த நகைகளும் செய்து கொடுத்துக்கொண்டிருந்தான். அக்காலத்திலும் நான் எனது வழக்கம் போலத்தினம் ஒரு பயணம் போய் வந்துகொண்டிருந்தேன். நான் போவது அவளிடம் நேசமாயிருக்கும் மனிதனுக்கு வருத்தமாயிருந்தது. அப்பெண்ணினிடம் "எதிர் வீட்டுக் கணக்குப்பிள்ளை இங்கு ஏன் அடிக்கடி வருகிறான் இனி அவன் இவ்விடம் வந்தால் நான் கோபித்துக்கொள்வேன்" என்று கூறுகிறதாம். அதையெல்லாம் அந்தப்பெண் என்னிடம் சொன்னதில்லை. நான் கறுப்பாயும் பார்வைக்கு அழகில்லாதவனுயு மிருந்தாலும், அப்பெண்ணுக்கு என் மீது மிகுந்த பக்ஷம் உண்டாய்விட்டது நானும் அவளிடம் எனது உண்மையான அன்பைச் செலுத்தி யிருந்தேன், நான் மாத்திரம் நின்றவனல்ல, என் வழக்கப்படி போய்க்கொண்டுதான்

வருகிறது. இவ்வாறிருக்கையில் ஓர் நாள் நானும் அத்தாசிப் பெண்ணும் ஒரே படுக்கையில் படுத்துக்கொண்டிருந்ததை அம்மனிதன் பார்த்துவிட்டான். அதுமுதல் அவன் என்னை எவ்விதத்திலும் பங்கம் செய்யவேணும் என்று எண்ணங் கொண்டான். இது விஷயமாக அப்பெண்ணைத் தண்டித்தா னும், முதல் தடவையானதால் அவனுடைய தண்டனையை பொறுத்தே ஏற்றுக்கொண்டிருந்தாள்.

என்றாலும் நான் மட்டில் கட்டாயம் ஓர் தடவை அவர் கள் வீட்டிற்குப் போகாதிரேன். எனது உயிரையே அப் பெண்மணியின்மீது வைத்திருந்தேன். ஒரு நாள் எனக்கு விரோதியான மனிதன் அவனுடைய பந்துக்கள் வீட்டில் நடந்த சுபம் ஒன்றிற்குப் போவதாய்ச் சொல்லிப்போய்விட் டான். போனவன் நாலு தினங்கள் வரையில் வரமாட்டே னென்று சொல்லிவிட்டுப்போனான். அவன்போன அரைமணி நேரத்திற்கெல்லாம் ரூபாவதி தன் வீட்டு வேலைக்காரியிடம் என்னை வரும்படி சொல்லியனுப்பினாள். நானும் போய் என்னையேன் வரச்சொன்னாயென்று கேட்டேன்.

அதற்கு அப்பெண் "என்னை வைத்திருக்கும் மனிதன் அயலூருக்குப் போய்விட்டான். அவன்வர நாலு தினங்கள் செல்லும் ஆகையால் அதுவரையில் நீங்கள் இவ்விடம் அடிக் கடி வந்துபோங்கள் என்று சொன்னாள். நானும் இதுவரை யில் களவியலாக விருந்தமையால், சுயேச்சையான காலம் வந்ததே. என்று சந்தோஷங் கொண்டவனாய் அவ்விடத்தி லேயே போயிருந்தேன். இரண்டு நாள் சென்றதும் வெளியே போயிருந்த மனிதன் வந்துவிட்டான். வந்தவன் நேராகத் தன் வீட்டிற்குக்கூடப் போகாமல் இவள்வீட்டிற்கு வந்தான் அச்சமையத்திலும் நாங்களிருவரும் ஒரே படுக்கையில் படுத் திருப்பதைக் கண்டான். அவன் மனம் பொறாது உரத்த சத்தமாய் அடே பயலே என்றான். நான் திடுக்கிட்டு எழுந்து படுக்கை வீட்டினின்றும் வெளியே போகப்பிரயத்தனப்பட்டு அறையின் வாசற்படியண்டை வந்தேன். இதற்குள் அம்மனி தன் என் குடுமியைப்பிடித்து இழுத்துக் கன்னத்தில் பல

மான ஓர் அறை அறைந்தான், அது பொறுக்காமல் கோபத்துடன் அவனைப்பிடித்துக் கீழே தள்ளி கையப்புடைந்தேன். இதற்குள் தாசிப்பெண் அவனைப்பார்த்து நீ இனி என் வீட்டிற்கு வரவேண்டாம் நானோ தாசி என் வீட்டிற்குப் பலரும் வருவார்கள். அவர்களையெல்லாம் நீ தண்டிப்பதும் கண்டிப்பதும் அழகல்ல "தாய் மாமன் பிள்ளையோ தாலிகட்டித் தந்தேனோ" என்பது போல நான் உனக்குடன்படிக்கை எழுதி தரவில்லை ஆனதால் நீ இவ்விடம் வாராதே" என்றாள். நான் சமர்ப்பித்த ஒத்தணத்தாலும், தான் காதலித்த நாயகி ஓதிய மந்திரத்தாலும் அவன் மிகுந்த நாணமுற்று சுமார் பத்துப் பனிரெண்டு தினங்கள் வரையில் அந்தத் தெருவையே எட்டிப் பார்ப்பதில்லை. பின்பு ஒருநாள் தாசிப் பெண்ணின் தாயாரைத் தனியே ஓரிடத்திற்கு தாவழைத்து அவளிடம் என்னென்னமோ புளுகி, "எதிர் வீட்டுக் கணக்கப் பிள்ளையை உன் வீட்டிற்கு வரவொட்டாதே அப்படி வந்துகொண்டிருந்தால் உங்கள் குடும்பத்துக்கே பெருத்த ஆபத்து நேரிடும்" என்றுசொல்லி அனுப்பினான் கிழவி அதை கேட்டுக்கொண்டு வந்து தன் மகளைத் திட்டம் செய்ய ஆரம்பித்தாள், அவள் தாயின் திட்டத்தை ஒருபொருட்டாக யெண்ணாமல் பழயபடி என் சிநேகத்தையே கொண்டிருந்தாள் மறுபடி ஒருநாள் கிழவியைவரவழைத்து பழைய பாரத்தைஓதினான் கிழவி அதை கேட்டுக்கொண்டுவந்து என்னுடனே அப்பா நீ இனி இவ்விடம்வராதே அப்படி வருவாயானால் உனக்கும்எனக்கும் நல்ல சண்டை வரும். அதையும் கவனிக்காவிட்டால் உனது பவுசைச் சந்தியில் சிரிக்க வைப்பேன் என்றாள் அதைக்கேட்ட அப்பெண் தன் தாயாரிடம் பெருத்த சண்டை யிட்டுக்கொண்டு மாலை ஐந்து மணிக்கு குளத்திற்குப் போகிறவள்போல் குடத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். அவள் வரவை எதிர்பார்த்திருந்த என்னைக்கண்டவுடன்கண்சைகையால் என்னைக் குளத்தண்டை வரும்படி சொன்னாள். நானும் அவ்வாறே அவள் போன இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் குளத்தண்டை போனேன். அவ்விடத்தில் ரூபாவதி யென்கிற பெண் என்னைப்பார்த்து சொல்லுகிறாள்:—

என் அன்பைக் கொள்ளைக்கொண்ட காதலரே! இனி நாம் இவ்வூரில் இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் நமது எண்ணம் இனி ஒருதரமும் கைகூடாது. ஆனதால் இன்றிரவு பத்து மணிக்குமேல் புறப்பட்டு நாமிருவரும் வேறே எந்த ஊருக்காவது போய்விட வேண்டும் என்றாள். நானும் அதற்கிசைந்து "அவ்வாறே இரவு பத்து மணிக்கு நான் முதலியார் வீட்டுத் தெருத் திண்ணையில் வழக்கப்படி படுத்துக் கொண்டிருக்கிறேன். நீ புறப்பட்டுவா போய்விடலாம்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் என் கிராமத்திலிருந்து கொண்டுவந்த அறுநூறு ரூபாயில் உபாத்தியாயரிடம் கொடுத்த ரூபாய் ஐந்நூறு போக மீதி ரூபாயைப் பத்திரமாக யாரிடமும் கொடுக்காமல் நானே ஓரிடத்தில் சேமித்து வைத்திருந்தேன். அதை எடுத்துக்கொண்டு எனது துணிமணி வகையறாக்களையும் எடுத்துக்கொண்டு இரவு பத்துமணிக்கெல்லாம் முதலியார் வீட்டுத் தெருத் திண்ணையில் வந்து படுத்துத் தூங்காமலிருந்தேன். சிறு கிராமமானதால் ஜனங்கள் சீக்கிரத்திலேயே படுத்துக்கொள்வது வழக்கம். பத்தரை மணிக்கெல்லாம் ஊரில் சத்தடங்கிவிட்டது. ரூபாவதி தன்னுடைய தாயார் தூங்குவதைப் பார்த்து தனக்கு வேண்டிய துணி நகை முதலியவற்றை எடுத்துகொண்டு மெள்ளக் கதவைத்திறந்து வெளியில் வந்து படுத்திருக்கும் என்னருகாமையில் வந்து நின்றாள். உடனே நானும் எழுந்தேன். இருவருமாகப் புறப்பட்டு மூன்று மைல் தூரத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தோம் அவ்விடத்தில் பிறர் எங்களை கவனிக்காதபடி மறைவான ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து, இரவு இரண்டரை மணிக்கு தெற்கே மதுரைக்குப் போகும் வண்டியில் திருச்சிறுப்பள்ளிக்கு இரண்டு டிக்கட்டு வாங்கிக்கொண்டு ஏறிவிட்டோம். மறுதினம் பனிரெண்டு மணிக்கெல்லாம் ரயில் திருச்சி ஜங்ஷனுக்குப் போய்ச் சேர்ந்தது. அவ்விடத்தில் இறங்கி, முன் பின் போகாத ஊரானதால், சத்திரம் எங்கே இருக்கிறதென்று விசாரித்துக்கொண்டு சத்திரத்தில் போய்த் தங்கினோம். அவ்வூரில் நான்கு தினங்கள் இருந்தோம். அவ்வாறிருக்கையில் ஒரு நாள் ஒரு

மனிதன் அச்சத்திரத்தில் வந்து படுத்திருந்தான். அவன் என்னைப்பார்த்து நீ எந்த ஊர் என்றான்.

நான் வடக்கே வெகு தொலையென்றும் ஜீவனத்திற்காக ஏதாவது தொழில் தேட முயற்சிக்கிறேன் என்றும் சொன்னேன், அப்படியானால் எங்களூரில் வந்து பாடசாலை வைப்பாயேயானால் உனக்கு நல்ல ஜீவனம் கிடைக்கும் என்று சொன்னான். அவ்வாறே வருவதாகக்கூறி அவனுடன் புறப்பட்டு ரூபாவதி யென்னும் தாசிப்பெண்ணையும் அழைத்துக் கொண்டு ஆலத்துறை யென்னும் ஊர்போய் என்னை அழைத்துச்சென்றவனுடைய ஒத்தாசையாலும் முயற்சியாலும் ஒரு பாடசாலை வைத்தேன். அதில் சுமார் ஐம்பது பிள்ளைகள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் சம்பளம் வந்தது. அதனால் நானும் ரூபாவதியும் சுகமாகக் காலங்கழித்துக்கொண்டு வந்தோம். அவ்வூரிலிருக்கப்பட்ட அனைவரும் எங்களிருவரையும் புருஷன் பெண்சாதி யென்றே மதித்திருந்தார்கள். எங்களிருவர்மீதும் ஒவ்வொருவரும் மிகவும் அன்பு பாராட்டிக்கொண்டிருந்தார்கள்,

நானும் பிள்ளைகளுக்கு வெகு சிறம்பப்பட்டு பாடம் சொல்லி வந்தேன். இவ்வாறு ஐந்து வருஷங்கள் கடந்தன. எனக்குக் கிடைக்கும் மாதசம்பளமல்லாமல் மேல் வருமானம் சுமார் எங்கள் இருவருடைய சாப்பாட்டிற்கும் போதுமான அளவு வந்துகொண்டிருந்தது. அதனால் எங்களுடைய ஜீவனம் சுகமாகநடந்ததுமல்லாமல் மாதச்சம்பளம் மீதியாயிற்று அவ்வாறு மீதியான பணத்தை பத்திரமாகச்சேர்த்து வைத்தேன். இரண்டாயிரம் ரூபாய் வரையில் சேர்த்தேன். ஐந்து வருஷம் வரையில் நான் இருக்குமிடத்தை யாருக்கும் தெரிவிக்கவில்லை. இவ்வாறிருக்கையில் ஒரு நாள் நான் வைத்திருந்தபெண்ணானவள் "என் தாயாரைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசை யிருப்பதால், அவள் க்ஷேமமா யிருக்கிறாளா வென்பதை முதல் தெரிந்து கொண்டால், பின்பு நாம் போய் வரலாம். உங்களுக்கு விரோதியாயிருந்தவன்

இத்தனை நாள் விரோதத்தை மறந்திருப்பான், ஆனதால் என் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்" என்று சொன்னாள். நானும் அவளிஷ்டத்தைத் தவிர்க்கக்கூடாது என்கிற எண்ணத்தைக் கொண்டு ஒரு கடிதம் எழுதினேன். அதில் எனக்கு அவள் பதில் கடிதம் எழுதுவதற்கு விலாசமும் எழுதி யிருந்தேன். அக்கடிதம் கிழவிக்குச் சேர்ந்தவுடன் நாங்கள் இருக்குமிடம் முதலியவற்றை அறிந்துகொண்டு என் விரோதியானவனை அழைத்துக் கொண்டு ஆலத்துறைக்கு வரச் சித்தமாயிருந்தாளாம். அச்சமயத்தில் என் விரோதி அக்கிழவியிடம் வந்து, நாம் அவ்விடம் போவதைக் காட்டிலும் அவர்களை இவ்விடம் வரவழைத்துக்கொள்ளுதல் மிகவும் நல்லது என்றானாம். "கிழவி அவர்கள் எப்படி வருவார்கள். அவர்கள் செய்துபோன மோசத்திற்கு மறுபடியும் இவ்விடம் வர முகமிருக்காது, நாம் போய்தான் அவர்கள் இருக்கும் ஊரிலுள்ளவர்கள் முன்னிலையில் அவர்கள் செய்துவந்த மோசத்தைச்சொல்லி மானத்தை வாங்கிவிட்டு வரவேணும்" என்றாள். அதற்கு என் விரோதியான நாராயணன் "மாமி நான் ஒரு கடிதம் நீ எழுதிய பாவனையாக எழுதுகிறேன். அதைப்பார்த்தால் கட்டாயம் வருவார்கள்" என்று சொல்லி அடியில் வருமாறு ஓர் கடிதம் எழுதினான்.

"என்னருமை மருமகனும், மகளும் நீடூழி வாழ்கவேண்டி ஆசீர்வதித்தெழுதியதாவது,

இவ்விடம் க்ஷேமம் அவ்விடத்திய க்ஷேமத்தை தெரிவிக்கவும்.

எனது தள்ளாமைக் காலத்தில் உதவி செய்யாது தனியே வருந்தும்படி விட்டுப் போனீர்கள். அதுமுதல் ரூபாவதியைப் பார்க்கவேணுமென்கிற ஆவல் எனக்கு ரொம்பவும் அதிகமாயிருக்கிறபடியால் இக்கடிதம் கண்டவுடன் நீங்கள் இருவரும் புறப்பட்டு இவ்விடம் வரவேண்டியது. நானோ படுக்கவும் எழுந்திருக்கவும்கூடாத அவ்வளவு ஸ்திதியிலிருக்

கிறேன். அண்டை அயலார் எவ்வளவு நாளைக்குத்தான் உதவி செய்வார்கள். நாராயண முதலியாரும் இறந்து இரண்டு வருஷங்களாகிறது. நானும் கூற்றுவனது தூதனை எதிர்பார்த்துக் கொண்டிக்கிறேன். அந்தியத்தில் சமீபத்திலிருந்து என்னை நல்லடக்கஞ் செய்துவிட்டால் அதுவே எனக்குப் போதுமானது. இதைத் தந்தியாகப் பாவித்து உடனே புறப்பட்டு வரவேண்டியது. பிறகு உங்களிஷ்டம். "மாதா மனமெரிய வாழாரொருக்காலும்" என்பதை நினைவில் வைக்கவும். வருந்தினத்தை முன்னடியே தெரிவிக்கவும்.

இப்படிக்கு, தனலட்சுமி அம்மாள், (கைநாட்டு.)

என்றெழுதி என் விலாசத்துக்குப் போட்டார்கள். ஒருநாள் நான் பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்திருக்கையில் தபால்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்தான். அதை நான் வாங்கிப் பிரித்துப் பார்த்ததும் அக்கடிதத்தை ரூபவதியாளிடம் கொடுத்தேன். அதை முற்றிலும் வாசித்துச் சற்று நேரம் துக்கித்தாள். செவ்வல்லியின் நிறத்தையொத்த ரூபாவதியினது இரண்டு விழிகளிலிருந்தும் நீர் வடிவதைக்கண்ட நான் மிகவும் பரிதாபப்பட்டு அவளை அழைத்துக்கொண்டு போய் அவள் தாயாரைப் பார்க்கும்படி செய்ய வேண்டும் என்று நினைத்து ரூபாவதியைப் பார்த்து, ரூபா! நீ அழாதே இன்னம் இரண்டு மூன்று தினத்தில் உன்னை ஊருக்கு அழைத்துக்கொண்டுபோய் உன் தாயாரைப் பார்க்கும்படி செய்கிறேன் என்றேன். அம்மொழி என்வாயிலிருந்துவந்தபின்பு அவள் கொஞ்சம் சந்தோஷங் கொண்டாள்.

ரூபாவதி பின்பு அவ்வூரிலுள்ளார்களிடம் நான் வந்து நெடுநாளாய் விட்டபடியாலும் தற்காலம் என் மாமியாருக்கு தேகசவுக்கியமில்லையென்று கடிதம் வந்ததாலும் நான் என் சொந்த ஊருக்குப்போய் வருகிறேன் என்று சகலரிடமும் விடைபெற்றுக்கொண்டு, இன்ன தேதியில் வருகிறேன் என்று கடிதமும் எழுதிவிட்டேன். குறிப்பிட்ட தினத்தில் எங்களிடமிருந்த முக்கியமான சாமான்களையும் ரொக்கமாக வைத்தி

ருந்த ரூபாயையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு ரயிலேறி, எங்களூர்வந்து சேர்ந்தோம் நேரே ரூபாவதியின்வீட்டிற்குப் போதனும், அவ்விடத்தில்

"விற்பிடித்து,

வாங்கினாற்போலவளைந்த வரட்டுடலும்
தாங்கிவைத்தகாலும் தடிக்கொம்பும்—தேங்காய்
குடுக்கைபோல்வாயுங் கொடுவாயுஞ்சற்றே
நடுக்குந்தலையும் நரையும்—பொடிக்கொசுவு
மொய்த்தகண்ணுங் காற்றுமுட்டிமுன்பறியப்பின்டனியக்
குத்திருமல் போட்டலக்குங் கோப்புமாய்—வித்துக்கு
விட்டசுரக்காய் போல் விழுந்து முழங்காலதனைத்
தொட்டதனத்தாய் கிழவி தோன்றினுள்:—

என்பது பொலத் தாய்கிழவி உட்கார்ந்திருந்தாள். எங்களைக் கண்டதும், நிறைந்த அன்புகொண்டவளைப்போலக்காட்டித் தன் மகளைச் சேர்த்துக்கட்டிக் கொண்டழுதாள். மகளும் அழுதாள் இதற்குள் அண்டை அயலாரெல்லாம் வந்து கும்புகூடினார்கள். அவர்கள் முன்னிலையில் நான் நிற்கச்சங் கோசப்பட்டு மறைவாய்ப் போயிருந்தேன். வந்தவர்களெல் லாம் ரூபாவதியின் க்ஷேமத்தை விசாரித்துப் பின்பு "தள் ளாமைக் காலத்தில் உன் தாயாரைத் தனியேவிட்டு நீ அவ ளிடம் சொல்லாமற்கூடப் போய்விட்டது நியாயமா? இல்லை; அப்படித்தான் போனீர்களே அடிக்கடி ஒரு கடிதாசியாவது எழுதக்கூடாதா" வென்று கேட்டார்கள், சில தாசிகள் என்னடி ரூபா! நீ நடக்கிற விஷயங்கள் சமுசாரிமாதிரியிருக் கிறது, உன் ஜாதித் தொழிலை மறந்து, நாயகனுக்காசைப் பட்டு ஒருவன் பின் போகலாமா? பணம் சம்பாதிக்கும் இள மையை ஒருவனிடம் கழித்துவிட்டு முதுமையில் பணம் வா வென்றால் வருமா? "வாலிபத்தே தேட்டில் மனம்வைத்தாற் பொற்றகட்டில் வேலியிட்டுக்கட்டலாம் வீடெல்லாம்" என் பது தெரியாதா? தவிரவும்.

"ஆய்ந்தபஞ்சுப்

பெட்டிபோல நிறைத்த பெண்கள் கையிலென்னவருஞ் சட்டிசுறண்ட வருந்தையலே" என்று சொல்லுவதைக் கேட்டதில்லையா? என்று சொன்னார்கள். இதுகளை யெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த எனக்கு மனம் வருத்தமாகவே யிருந்தது.

பின்பு இரண்டு தினங்கள் சென்றன. நான் அவாள் வீட்டிலேயே யிருந்தேன். வெளியில் போய் என் சிநேகிதர்களைக் காணவும் வெட்கமாயிருந்தது. மூன்றாம் நாள் நான் வெளியே புறப்பட்டு எனக்கு வாசிப்பு சொல்லித்தந்த உபாத்தியாயரிடம் போய் அவருக்கு இருபத்தைந்துரூபாய் காணிக்கையாகக் கொடுத்து அவர் பாதத்தில் விழுந்து சேவித்துக் கொண்டேன். அவர் என்னை உபசாரமாய் உட்கார வைத்து நான் போய்வந்த விஷயங்களிற் சிலதைக்கேட்டு, "நீ செய்த காரியம் உனக்கும் உன்னைச்சேர்ந்தவர்களுக்கும் அதிக குறைவை யுண்டுபண்ணியது" என்று சொன்னார். பின்னும் சில நற்போதங்களையும் சொன்னார் அன்றையதினம் பகற்போஜனம் எனது உபாத்தியாயர் வீட்டிலேயே சாப்பிட்டேன். இரவு எட்டுமணிக்குமேல் ரூபாவதியின் வீட்டிற்குப் போனேன். கதவு மூடப்பட்டிருந்தது. கதவைத்தட்டினேன் சந்தடியில்லை ரூபா ரூபா! என்று இரண்டு விசைக்கூப்பிட்டேன். தாய்க்கிழவி வந்து கதவண்டை நின்று யார் என்றாள். நான்தான் கண்ணப்பன் என்றேன். அதற்கவள் "உன்னப்பன் வீட்டிற்குப்போ. விண்ணப்பன் வந்தாலும் பெண்ணைக் காணமாட்டாய் சின்னத்தனமடைவாய் கதவு திறக்கப்படமாட்டாது" என்றாள். இதைக்கேட்கவே எனக்கு மிகுந்த வருத்தம் உண்டாய்விட்டது. என்செய்வேன் சுமார் இரவு பத்துமணி வரையில் நான் நத்திய பெண்ணுக்காக சுற்றியிருந்தேன் ஒன்றும் சாயவில்லைபின்பு ரூபாவதி யென்றுஉரக்கக் கத்தினேன். இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் கதவு மெள்ளத் திறக்கப்பட்டு ரூபாவதி வெளியில் வந்து, ஏன் இப்படி கத்துகிறீர்கள்? நாராயண முதலியார் வந்திருக்கிறார். அவர்

எழுந்தால் என்னைத் திட்டுவார். நீங்கள் காலையில் வாருங்கள் என்றாள்.

நான் உண்மையாய் நேசித்தவளும் எனது சம்பாதனை முழுவதையும், இரண்டு வேஷ்டிகள் தவிர மற்ற நகை நாண யங்கள் அனைத்தையும் கைப்பற்றியவளுமானவளே இம்மாதிரி சொன்னாள் நான் என்ன செய்கிறது. அம்மாதிரி வார்த்தையை ரூபாவதி சொன்ன அளவில் எனக்கு அளவில்லாத கோபம் உண்டாகி, அவளது கையைப் பிடித்துக்கொண்டு ஏ! சண்டாளி என்னிடம் இவ்வளவு கடுமை பாராட்டவும் உனக்கு மனம் வந்ததா? இதுவரையில் நாமிருவரும் இருந்த ஒற்றுமையை மறந்தாயே, உனக்குத் தெய்வம் துணை செய்யுமா வென்றும் பின்னும் பலவிதமாகவும் பேசினேன். அதற்கவள் "நேரமாகிறது இருட்டுக்காலத்தில் வீண்புரளி செய்ய வேண்டாம், நாளைய தினம் சகலமும் பேசிக்கொள்ளலாம்" என்று சொல்லி என்னால் பிடிக்கப்பட்டிருந்த கையைத் திமிரிக்கொண்டு போய்விடப் பிரயத்தனப்பட்டாள்.

ஆயினும் நான் விடவில்லை. கெட்டியாகவே பிடித்திருந்தேன். அவள் மறுபடி என்னைப்பார்த்து, "கையை விட்டால்விடு அல்லாவிட்டால் மரியாதை கெட்டுப் போவாய்" என்றாள். அந்தச்சொல் வாயிலிருந்து வந்ததோ இல்லையோ, ஓங்கி ஓரறை அவள் கன்னத்தின்மீது கொடுத்தேன். அவ்வடி தாக்கினவுடன் ஒவென்றலறி பெருங்குரல்பாச்சி அழுததும் அல்லாமல் அநேகமான துர்ப்பாஷையால் என்னை வைதாள். திட்டத்திட்ட, நானும் திட்டுத்திட்டென்று முதுகிலும் தலையிலும் கைகொண்டமட்டும் சாடினேன். இதற்குள் உள்ளேயிருந்த கிழவியும், நாராயணனும் ஓடிவந்தார்கள். அச்சமயத்திலும், நான் பிடித்த கையை விடவில்லை. கிழவி வந்ததும் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கூக்குரலிட்டாள். இதற்குள் அண்டை அயலார்களெல்லாம் சுமார் நூறு ஜனங்கள் வரையில் வந்து கூடினார்கள். அச்சமயத்தில் நாராயணன் என்னைப்பார்த்து "அடே கண்ணப்பா! ஏன் வீணாகக் கெட்டுப்போகிறாய் அவள் கையைவிடு, அவளை

மோசடியாய் அழைத்துக்கொண்டு போனதற்கே உன்னைத் தகுந்த மரியாதை செய்திருப்பேன். கிடக்கிறான் என்றுவிட்டதனுலல்லவா இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டாய் இப்போதாவது இவ்விடமிருந்து ஓடிப்போகாவிட்டால், சரியான காப்பணங் கிடைக்கும் என்றான்.''

அவன் அம்மாதிரி சொன்னதைக்கேட்ட நான் ரூபாவதியின் கையை விட்டுவிட்டு நாராயணனைப் பிடித்துக்கொண்டு என் மனம்போன வரையில் ஒத்தணங் கொடுத்தேன். அவன் என்னிலும் அதிக வலிவிழந்தவன், ஆனபடியால் என்னை மீறிச் சண்டையிட முடியவில்லை. நாங்களிருவரும் குத்துச்சண்டை பழகிக்கொண்டிருக்கையில் டிக்கட்டில்லாமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களை நோக்கி நோடீஸ் கொடுத்து ஜனங்களை வரவழைத்தத் தாய்க்கிழவி, (எங்கள் குத்துச்சண்டைக்காகச் சந்தோஷித்துக் கரகோஷம் செய்கிற பான்மையாக) எங்களது சண்டையை விலக்கச் சொன்னாள். அதில் இரண்டொருவர் வந்து எங்களை விலக்கித் தனித்தனி விட்டு என்ன சங்கதியென்று விசாரித்தார்கள். நடந்தன யாவையும் ஒன்று விடாமல் சொன்னேன். இதைக்கேட்டுக்கொண்டு கிழவியைப்பார்த்து உன் சங்கதியென்னவென்றார்கள்.

கிழவி சபையிலுள்ளாரைப் பார்த்து, ஐயா! இப்பாவிப் பயல் எதிர்வீட்டு முதலியாரிடம் கணக்குவேலையிலிருந்தான் அவ்வாறிருக்கையில் எவ்விதமோ என் பெண்ணைக்கணக்குப் பார்த்துவிட்டான். ஒருகாசும் கொடுக்கிறதென்பதும் கிடையாது, அப்படியிருக்கையில் எங்களுக்கு ஆயிரம் ஆயிரமாக பணந்தந்துவந்த நாராயண முதலியாரை இவ்வீட்டிற்கு வரக்கூடாதென்றான். எங்களுக்குப் பணமல்லவோ பிரதானம், இந்த பாபர் பயலை நம்பி, கீபர் வைத்திருக்கும்,டாபர் நாராயண முதலியாரை யெப்படி வரவேண்டாமென்றுபேபர் கொடுத்து விடுகிறது, அப்படிச் செய்யமாட்டோம் என்றேன். பின்பு எந்தவிதத்திலோ என் பெண்ணின் கண்ணில் மண்ணைத்தூவி, இக்கண்ணப்பன் சொல்லாமல் அழைத்துக்

கொண்டு போய்விட்டான். பலவிடமும் தேடிப்பார்த்தோம் அகப்படவில்லை. சரியென்று சும்மா யிருந்துவிட்டோம். அச்சமயத்தில்கூட மாதம் இருபது ரூபாய் தவறாமல் கொடுத்துக்கொண்டு வந்தார் நாராயண முதலியார். அவ்வாறு ஐந்து வருஷங்கள் வரையில் நடத்திவந்தார் அப்புண்ணிய வான் பின்பு சுமார் இருபது நாளைக்கு முன் இவன் ஒரு கடிதாசி எழுதினான். அதைப்பார்த்துவிட்டு நான் இவர்களை வரும்படி ஒரு கடிதம் எழுதினேன். அதன் பின்பு இருவரும் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வரவைக்கேட்ட நாராயண முதலியார் வந்து, இனி அப்பயலைச் சேர்க்காதீர்கள். அப்படிச்சேர்த்தால் நமது தலைக்கே தீம்புவரும் என்றார் அது போலவே போகச்சொன்னால் போகமாட்டேனென்றான், பின்பு என்மகளை அனுப்பி அவனுக்குத் தணிக்கைசொல்லி அனுப்பிவிட்டுவா வென்று சொன்னேன். அவ்வாறே என் மகள் வந்து என்னமோ சொன்னாளாம். அதைக் கேட்ட வுடன் இந்தப்பாவி என் மகளை நன்றாய் நையப்புடைத்தான். அதைக்கேட்டு நாங்கள் ஓடிவந்து, விடடா வென்றால் எங்களையும் ஒரு கை பார்த்தான். இதுதான் சங்கதி. இனி இப்பாவியை இவ்வீட்டுவழி வராமல் செய்துவிட்டுப் போங்கள் என்றாள்.

கிழவியின் பிரசங்கம் முடிந்ததும் அங்கிருந்த சகலரும் என் முகத்தையே பார்த்தார்கள். அப்போது எனக்குஉண்டான அவமானத்திற்கு அளவே யில்லை. ஆயினும், ரூபாவதியின்மீது கொண்டமையால் மானம் என்பது அச்சமயம் எனக்கு பிஞ்சாகவே யிருந்தது சகலரும் என்னைக்கூப்பிட்டு, கண்ணப்பா பிள்ளையே நீ இவ்வூரில் இருந்தபெருந்தகைமையும் உன்னிடத்தில் நாங்கள் வைத்திருந்தமரியாதையும், பாதிக்கு மேல் குறைந்துவிட்டது. இனி மீதிப்பாகமும் இன்றோடே போச்சுது. பிட்னும் இவள் வீட்டிலிருக்கப் பிரயத்தனப் பட்டால் உனது வெட்கம் கெட்டுப்போகக்காலம் வந்துவிடும் போலிருக்கிறது. ஆகையால் இன்றுமுதல் இந்தத்தெருவைக்கூட எட்டிப்பாராமல்இரு. அரைக்கணமும் இங்கிருக்கவேண்

டாம் என்று சொன்னார்கள். அதைக்கேட்ட நான் கிராமத்தாரை நோக்கி, ஐயா! சபையோர்களே! நான் என் சம்பாதனையை எல்லாம் அவளிடந்தான் கொடுத்துவிட்டேன். தற்காலம் என்னிடம் ஒரு காசுகூட இல்லை, நான் வரும்போது இரண்டாயிரம் ரூபாயிருக்குமேல் கொண்டுவந்தேன் அதுவுந் தவிர, சுமார் நூறு ரூபாய் தாளும்படியான துணிவகையறுக்களும் கொண்டுவந்தேன், அதுகளை யெல்லாம் என்னிடம் கொடுத்துவிடச் சொல்லுங்கள் என்றேன்.

என் மொழியைக் கேட்ட ஒரு பெரியவர் சிரித்துக்கொண்டே என்னிடம் வந்து, அங்கிருந்தவர்கள் முன்னிலையில் என்னைப்பார்த்து அப்பா! நீ சொல்லும் சொல் வெகு நன்றாயிருக்கிறது, தாசிகள் வீட்டில் கொடுத்த பணத்தைத் திரும்பிக் கேட்டவர்களில் நீதான் முதலானவன். "எள்ளுக்குளெண்ணைபோல் அளந்து காட்டிப் பழிபடுபோகம் விற்பர்" என்று கூறியிருப்பதைக் கேட்டிலையா? அவர்கள் வியாபாரமே அதுவாயிற்றே அப்படி யிருக்க வியாபாரத்தில் வந்த லாபத்தைத் தாவென்றால் யார்தான் தருவார்கள். மதியிழந்தவர்களே வேசி நேசம் கொள்வார்கள். அவ்வாறு வேசிநேசங்கொண்டாலும் சிலர் அளவாகவிருந்து தப்புவார்கள், சிலர் அதிகமாக வைத்து உன்னைப்போல சந்தியில் சிரிக்கப்படுவார்கள். ஆனதால் இத்துடன் வந்துவிட்டால் உனக்கு கொஞ்சமாவது மானம் நிற்கும் அன்றேல் பின்னும் சீர் கெடுவாய், நீ தற்காலம் இவ்வளவு ஜனங்களைக் கூடும்படிசெய்தது உனக்கு ஒரு புண்ணியமே. ஏனென்றால் ஒவ்வொருவரும் ஒருகெட்ட விஷயத்தைப்பற்றி பிறரால் சொல்லக் கேட்கையில் அவர்கள் மனதிற்பதியாது நேரிற்கண்டால் நன்றாய்ப்பதியும், தான் அனுபவித்ததை ஒப்பாக நினைப்பார்கள். ஆனதால் தற்காலம் அநேகர் முன்னிலையில் உன் நாடகத்தை நடத்தினாய். இதைக்கண்ட ஒவ்வொருவருக்கும் புத்தி வந்திருக்கும் ஆனபடியால் உன் செய்கைப் பலருக்கு நற்போதத்தை விளைத்தது. இனி இங்கிருக்காதே வாவென்றழைத்துக்கொண்டு போய்விட்டார்கள், நானும் தெருவாசற்படியண்டைநிற்கும்

ரூபாவதியைத் திருப்பிப் பார்த்துக்கொண்டே போய்விட்டேன். இரவு ஒரு மணிக்குமேல் என் உபாத்தியாயர் வீட்டுத் திண்ணையின்மீது படுத்துக்கொண்டேன். எனக்கு நித்திரை வரவில்லை. இனியெப்படி ஊரார் முகத்தில் தென்படுகிறதென்ற நாணத்தால் அந்த நிமிஷமே புறப்பட்டு இம்மலையை யடைந்து அதுமுதல் இவ்விடத்திலே தங்கி விட்டேன். எனக்கு ஆகாரம் காய் கனி கிழங்குகளே தவிர அன்னமென்பதைப் பார்த்து பதினைந்து வருஷங்களாகிறது இப்போது என்னிடம் லட்ச ரூபாய் நகைகளுக்குமேல் இருக்கிறது. அது எதென்றால், நான் தங்கியிருந்த குகை ஒரு புலியின் குகை அது தன்னெதிரிற்படும் மனிதர்களை அடித்துக்கொன்று குகைக்குள் கொண்டுவந்து வைத்துக் கொண்டு தின்னும். அப்போது அம்மனிதர்கள் போட்டுக் கொண்டிருக்கிற நகைகளெல்லாம் விழுந்து கிடக்கும் ஒரு மாதத்திற்கொருதரம் நான் அப்புலி இல்லாத சமயத்தில் அக்குகைக்குள் சென்று நகைகளைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டு வருகிறது வழக்கம். புலி யிருக்கும் குகைக்கடுத் தாற்போல் நெருப்புப் புகையுண்டாகும்படி செய்தால் அதை கண்டு உள்ளிருக்கும் புலி வெளியே ஓடிப்போகும். பின்பு இரண்டு மூன்று நாளைக்கு அக்குகையினிடம் வராது. அச்சமயத்தில்தான் நான் குகைக்குள்ளிருக்கும் நகை நாணயங்களை கொண்டுவருகிறது. நகைகள் தவிர ரொக்கமாகவும் ரூபாய்கள் கிடைக்கும் அம்மாதிரி எடுத்துவந்தது சுமார் பத்தாயிரம் ரூபாய்கள் அதோ யிருக்கிறது. இதுதான் என் சவிஸ்தாரம். ஆனல் இன்று என் கழுத்தை அறுத்துக்கொள்ளத் துணிந்ததை சொல்ல மறந்துவிட்டேன். அதைச் சொல்லப் புகுந்தால் உன் மனதுக்கு சிறிது வருத்தத்தை உண்டு பண்ணும். அதாவது என்னவென்றால், அக்குகையண்டைக் கண்டவுடன் உனது அளவிலாத அழகால் உன்னிடம் மோகம் வைத்தேன். நீ வனதேவதை யென்று கூறியவுடன் நீ என் எண்ணத்திற்கு உடன்படாய் என்கிற எண்ணம் தோன்றிற்று, ஆயினும் உன்னை அடையாமல்போக நேரிடுகிறதே என்ற வருத்தத்தால் உயிர் வாழ்ந்திருப்பதிலும் பிராணனைப்

போக்கிக்கொள்வதே நலமென்று துணிந்து அவ்வாறு செய்தேன்." என்று கண்ணப்பன் தனது விருத்தாந்தங்களையெல்லாம் ஆதியோடந்தமாய் மரகதத்தினிடம் சொன்னான்.

மரகதம் கண்ணப்பனது விருத்தாந்தங்களையும் அவன் தற்போது கொண்டிருக்கும் எண்ணங்களையும் யோசிக்கவே கண்ணப்பனுடன் அக்குகைக்குள் அன்றிரவு கழிப்பது எவ்விதம் என்று தோன்றிற்று, ஆயினும் கண்ணப்பன் மாதர் மயலால் அவமானமடைந்திருப்பவனாதலாலும் அவன் அதுவரையில் பேசிவந்ததைக் கவனித்ததில் கண்ணப்பன் நியாயத்திற்குக் கட்டுப்படுவானென்று தோன்றியதால் தனது வரலாற்றை அவனிடம் சொல்லலாமென்று எண்ணி கண்ணப்பனை பார்த்து,

"ஐயா! கண்ணப்பரே! உமது பெயருக்கே சாலவும் சந்தோஷப்பட்டேன். அதிலும் நீர் உபாத்தியாயர் தொழில் செய்து வந்தீரென்று கேட்டதுமுதல் பின்னும் சந்தோஷமே ஏனெனில் பண்டைக்காலத்தில் காளத்தியென்னும் மலையில் வசித்துவந்த கண்ணப்ப நாயனார் தனது உண்மையானபக்தியைக் கடவுளிடம் செலுத்தி வந்தவரைப்போல நீங்களும் மலைவாசியும், தனிவாசியுமாயிருக்கிறீர்கள். மேலும் உபாத்தியாயரா யிருந்தவரானதால், கல்வி கேள்விகளில் வல்லவராயிருப்பதுடன், நன்மை தீமைகளைப் பகுத்தறியுந் தன்மை வாய்ந்திருப்பீர்கள் என்கிற சந்தோஷந்தான் எனக்கு உங்களிடம் உண்டாயிற்று. அந்த நம்பிக்கையின்மீது என்னுடைய விருத்தாந்தத்தைச் சிறிது கூறுகிறேன் என்று தனது விருத்தாந்தம் யாவையும் ஒன்றொழியாமல் தான் பிறந்தது முதல் தற்காலம் கண்ணப்பனுடன் குகையில் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும் காலம் வரையில் நடந்ததைச் சொன்னாள்.

மரகதத்தின் சவிஸ்தாரத்தைக் கேட்டு கண்ணப்பன் படுத்திருந்ததை விட்டெழுந்து மரகதத்தின் காலில் விழுந்து சேவித்துக்கொண்டு, தாயே! எனது பாட்டனார் காலமும் எனது தகப்பனார் காலமும், மிதுனபுரி கனகசபை முத

யோர் வீட்டில் ஜீவித்தவர்கள். எங்கள் குடும்பமே உங்கள் அம்மான் வீட்டாரால் தலையெடுத்தது. அவர்களால் பெற்ற உபகாரத்திற்கு அளவே யிராதென்று எனது தகப்பனார் இருவரும் புகழ்ந்து பேசிக்கொள்வதை அநேக முறை கேட்டிருக்கிறேன். ஆனதால் அவ்வீட்டாருக்கு என் உயிரையுங் கொடுத்து ரக்ஷிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவ்வாறானதால் தங்களிடம் என் காதலைச் செலுத்திய தப்பிதத்திற்கு என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும், வேண்டுமானால் தங்களை மறுபடி அழைத்துக்கொண்டு பத்திரமாக மிதுனபுரியிற் சேர்க்கிறேன். தங்கள் இஷ்டம் என்ன? அதைச் சொன்னால் அதன்படி நடக்கிறேன் என்றான். கண்ணப்பன் அவ்வாறு தன்னிடம் பக்தி பாராட்டியதற்கும், திக்கற்ற காலத்தில் கண்ணப்பனைச் சந்திக்க வைத்ததற்கும், கடவுளை மனப்பூர்வமாகத் துதிசெய்து கண்ணப்பனை நோக்கி, அண்ணா! நான் மறுபடி மிதுனபுரிக்குப்போவது உசிதமாகத்தோன்றவில்லை. என் காலத்தை இம்மலையின்மீது தங்களுடன் கழிக்கவே எனக்குப் பிரியம், ஆனதால் என்னை இதுமுதல் தங்கள் தங்கைமாதிரி பாவித்துக்காத்துவரவேண்டியது என்று கேட்டுக்கொண்டாள். கண்ணப்பனும் அவ்வாறே பாதுகாப்பதாக ஒத்துக்கொண்டு அது முதல் மரகதத்தை வெகு கவனமாய்க் காத்துக்கொண்டுவந்தான்.

வேறு அத்தியாயம்.

சுந்தரன் வேலூரிலிருந்து புறப்பட்டு காளாஸ்த்திரிக்கு போய் நாலைந்து தினங்கள் அவ்விடமிருந்து மறுபடி திரும்பி திருப்பதி என்னும் தலத்திற்கு வந்து சேர்ந்து வேங்கடமலையின்மீதுள்ள ஸ்ரீ வெங்கடாசலபதியின் சேவையிலும், அவ்வேங்கட மலையின் ரமணீயத்திலும் மனதை முழுதும் செலுத்திக்கொண்டு தினம் சுவாமி தரிசனம் செய்வதும் திருக்கோயில் மண்டபத்திலேயே தங்கியிருப்பதுமா யிருந்தான். ஓர் நாள் பகல் இரண்டுமணிக்கு சுந்தரன் ஆங்குள்ள கோயில்

மண்டபத்தின் ஓர் பாகத்தில் நித்திரை செய்துக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் ஒரு திருடன், சுந்தரனுக்கு அருகில் படுத்திருந்த ஒரு யாத்திரிகனுடைய சிரசின் கீழிருந்த மூட்டையை சொந்தக்காரனுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு போய்விட்டான். யாத்திரிகன் விழித்தெழுந்தவுடன் தனது மூட்டையைக் காணுமல் அங்கு மிங்கும் பார்த்து, அருகிலிருந்த சுந்தரனே தன் மூட்டையைக் களவு செய்தானென்று கூக்குரலிட்டான். அக்கூக்குரலால் அண்டை அருகிலிருந்த சிலர் ஓடிவந்து எல்லாரும் சுந்தரனே அம்மூட்டையை களவு செய்தவனென்று தீர்மானித்து போலீஸார்வசம் செய்துவிட்டார்கள்.

போலீசார் சுந்தரனைச் சிறைப்படுத்தி மாஜிஸ்ட்ரேட்டினிடம் அனுப்பினுர்கள். சுந்தரன் தன்னை யார் என்ன கேட்டபோதிலும் அநேகமாக மௌனம் சாதித்தானே யொழிய, உண்மை எதையும் சொல்லவில்லை. கடவுள் தனக்கு உண்டாக்கின பழியைக் குறித்துச் சிறிதும் கவலைப்படாமல் எல்லாம் இறைவன் செயல், ஒவ்வொன்றும் வினைக்கீடாகவே நடக்கும் என்று பொறுத்துக்கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கையில் அதிகாரிகள் சுந்தரன்மீதே ஷை களவு குற்றத்தைச்சுமத்தி (சாக்ஷிகளின் வாக்குமூலத்தால்) தண்டிக்கக் குற்றப் பத்திரிகையும் ஏற்படுத்தியாய்விட்டது. மறுதினம் தீர்ப்பு சொல்வதாகச் சொல்லிக்கோர்ட்டு கலைந்து விட்டது.

அன்றிரவு மாஜிஸ்ரேட் தமது வீட்டில் உட்கார்ந்திருக்கையில் அவ்வூர் இஞ்சினீயர் துரை மாஜிஸ்ட்ரேட்டின் வீட்டிற்கு வந்து அவரிடம் ஒரு புகைப்படத்தைத்தந்தார், மாஜிஸ்ட்ரேட் அப்புகைப்படத்தை வாங்கி பிரகாச விளக்கின் முன்பு பார்த்தார். அதில் உள்ள விசித்திரங்கள் தெளிவாய் புலப்பட்டமையால் மறுதினங் காலையில் பார்க்கலாம் என்று தனது மேஜையின்மீது வைத்துவிட்டு எஞ்சினீயரிடம் வார்த்

தைச் சொல்லிக் கொண்டிருக்கையில் எஞ்சியனீர் சொன்ன தாவது;

"சில தினங்களுக்குமுன் நான் திருப்பதி மலையின்மீது சென்று கோவில் குளம் முதலியவற்றின் வேலைத்திறங்களைக் கண்ணுற்றேன். கோவிலில் சிற்ப வேலைகள் வெகு சாமர்த்தியமாக விருந்தது. அதனால் அதை அவ்விதமே புகைப்படமெடுத்து பொருட் காட்சிச்சாலைக்கனுப்பலா மென்கிற எண்ணம் உண்டாய் அப்படியே புகைப்படமெடுத்தேன். அதில் ஒரு படம் தங்களிடம் கொண்டுவந்தேன் என்றார்.

மாஜிஸ்ட்ரேட்டும் எஞ்சினீயர், தனக்கு வெகுமானமாக புகைப்படம் கொடுத்ததற்கு அவருக்கு வந்தனம் செய்து அனுப்பினார். மறுதினங் காலையில் மாஜிஸ்ட்ரேட் ஷை படத்தை எடுத்துப்பார்த்துக்கொண்டிருக்கையில், அப்படத்தில் ஓர் அதிசயம் இவர் கண்ணுக்குப் புலப்பட்டது. அதாவது அப்படத்தில் தோன்றும் ஒரு மண்டபத்தில் இருவர் நித்திரை செய்யவும், அதில் ஒருவன் தலையின்கீழ் ஒருமூட்டை இருக்கவும், அதை ஒரு கட்டைத்தடியன் வெகு சாமர்த்தியமாக திருடிக்கொண்டு போவதையும் கண்டார். அதைக் கண்டவுடன் சுந்தரன் கேசு நினைவிற்கு வந்தது. உடனே ஒரு துண்டுக் கடிதத்தில், எஞ்சினீயர் எந்த தேதியில் எத்தனை மணிக்குப் புகைப்படமெடுத்தார் என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டார். எஞ்சினீயரும் தான் போய் வந்த தினத்தைக் குறிப்பிட்டெழுதினார். அந்த தேதியும் சுந்தரனுடைய கேஸ் பிறந்த தேதியும் ஒன்றாயிருந்தது. மாஜிஸ்ட்ரேட்டுக்கு இதைத் தீரவிசாரிக்கவேண்டு மென்கிற எண்ணம் தோன்றிற்று. அன்றைய தினம் கோர்ட்டிற்கு வந்ததும், சுந்தரன் கேசை எடுத்துக்கொண்டு, பிராதி, குற்றவாளி இருவரையும்வரவழைத்தார். புகைப்படத்தில் பிடித்தவாறிருப்பது, சுந்தரனும் பொருளிழந்தவனுமாகத் தோன்றிற்று.

மாஜிஸ்ரேட்:— ராமநாத முதலி! (பொருளிழந்தவன்) நீர் உமது மூட்டையைப் பறிகொடுத்தது எந்த தேதி?

இராமநாதன்:— (27-12-12) பகல் இரண்டு மணிக்கு
மாஜி:— நீங்கள் படுத்திருந்த மண்டபத்தில் உங்களையன்றி யின்னும் யாராவதிருந்தார்களா?
இராம:— இல்லை.
மாஜி:— உங்களிருவரில் முந்தி அம்மண்டபத்தில் வந்தது யார்?
இராம:— குற்றவாளியாயிருக்கும் சுந்தரனே.
மாஜி:— சுந்தரன் நீர் வரும்போது விழித்திருந்தானா, அல்லது நித்திரை செய்துகொண்டிருந்தானா?
இராம:— நான் அதைக் கவனிக்கவில்லை.
மாஜி:— சரி. நீங்கள் படுத்திருந்த மண்டபத்தில் எந்த பாகத்தில் நீங்கள் இருந்தது?
இராம:— தென்மேற்குப் பாரிசத்தில்.
மாஜி:— உன் அருகில் படுத்திருந்த சுந்தரனும் நீரும் ஏதாவது வார்த்தை யாடினீர்களா?
இராம:— என் மூட்டையைக் காணாது நான் கூக்குரலிட்ட பின்பு தூங்கி எழுந்தவன் போல எழுந்தான். அதன் பிறகுதான் அவனிடம் வார்த்தையாடினேன்.
மாஜி:— சுந்தரா! நீ அம்மண்டபத்தில் படுத்திருக்கும் போது இராமநாத முதலி அவ்விடம் வந்து படுத்தது உனக்குத் தெரியுமா?
சுந்த:— தெரியும்.
மாஜி:— அவரிடம் நீ ஏதாவது பேசினாயா?
சுந்த:— இல்லை.
மாஜி:— ஏன் பேசவில்லை?
சுந்த:—அவர் அதற்குமுந்தி எனக்குத்தெரிந்தவரல்லாமையாலும், நிரேதுவாக ஒருவரிடம் வீண்வார்த்தைகள் பேச எனக்கு எப்போதும் இஷ்டமுண்டாவதில்லை, யாதலாலும் நான் அவரிடம் எந்த வார்த்தையும் பேசவில்லை.

மாஜிஸ்ட்ரேட் அம்மட்டில் விசாரணையை நிறுத்தி அங்கிருந்த வக்கீல்களை (நியாய பரிசோதகர்களை) தமதிடம் அழைத்து தான் வைத்திருந்த புகைப்படத்தை அவர்களிடம் கொடுத்து, இதில் படுத்தவண்ணமா யிருக்கும் இருவர்களைப்போல வேறு யாரையாவது நீங்கள் கண்டதாக நினைவிருக்கிறதா வென்றார். அதைப்பார்த்த ஒவ்வொருவரும் கோர்ட்டில் நிற்கும் வாதி பிரதிவாதிகளே என்று சொன்னார்கள். உடனே மாஜிஸ்ட்ரேட் இராமநாத முதலியை அருகிலழைத்து புகைப்படத்திலுள்ள உண்மையைக்காட்டி, நீங்களிருவரும் நித்திரையிலிருக்கும்போது அன்னியதிருடனொருவன் வந்து உனது முட்டையைக் களவு செய்திருக்கிறான். அப்படி யிருக்க இதோ நிற்கும் வாலிபன்மீது நீர் பழிசுமத்தியது அடாத காரியமல்லவா, அவ்வாறு ஒருவன்மீது வீண் பழி சுமத்துதல் நீதியன்று, ஆதலால் ஷை காரியம் செய்தவன் நீ கூறும் சுந்தரனல்லவென்று தெளிவாய் ஏற்படுவதால் அவனை விடுதலை செய்கிறோம். இனி இவ்விதமாக அடாத காரியத்தில் பிரவேசிக்கப்படாதென்று வாதிக்கு பலவிதமாக சொல்லிக் கேசைத் தள்ளிவிட்டார்.

எதிர்பாராத சம்பவம் நடந்ததைச் சுந்தரன் கேட்டு அகதிக்குத் தெய்வமே துணையாகும்” என்று முதியோர் “கூறியுள்ளதை தெளிவாக்கும் நிதரிசனம் இதுவே என்று, கடவுள் இச்சமயத்தில் தனக்குச்செய்த நன்மைக்காகக் கடவுளைத் தியானம் செய்து கொண்டு நின்றான்.

சுந்தரன் இதுவரையில் கைதியாக எண்ணப்பட்ட காலத்தில் எவ்விதமான நிலைமையில் இருந்தானோ அதே நிலைமையில் குற்றமில்லை யென்று விடுவிக்கப்பட்ட காலத்திலும் இருக்கிறானே தவிர, சந்தோஷக் குறிப்பே சுந்தரனுடைய முகத்தில் காணப்படாததால், மாஜிஸ்ட்ரேட் சுந்தரனைப் பார்த்து, அப்பா! சுந்தரா! இன்னும் உனக்கு சந்தோஷம் உண்டாகாத காரணம் என்னவென்று கேட்டார். அம்மொழியைக்கேட்ட சுந்தரன். புன்னகை கொண்டு, ஐயா! சந்தோஷமும் துக்கமும் கலந்தே உண்டாகும், சந்தோஷம் உண்

டாகுங்கால் மீறிய ஆனந்த மடைவதும், கஷ்டம் எய்தும் போது ஆழ்ந்த துன்பத்தை அடைவதும் தகுதியல்ல, எல்லாம் அவனவன் வினைக்கிடாக உண்டாகும். அதனால் நாம் கிலேசமடைவது மதியீனம் என்பதை நினைத்தே இருக்கிறேன் என்றான்.

சுந்தரனுடைய மொழியைக் கேட்ட அதிகாரி சுந்தரனை அன்றிரவு தன் வீட்டிற்கழைத்துக்கொண்டுபோய் அன்னமிட்டு அவனுடைய சரித்திரங்களை யெல்லாம் விவரமாகக் கேட்டு அதிக ஆச்சரியமடைந்து, தான் இதுவரையில் அவனைக் கைதியாக நினைத்து வார்த்தையாடின சமயத்தில் உண்டான குற்றங்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். மறுதினம் அவ்வூரிலுள்ள பாடசாலை ஒன்றில் ஓர் கூட்டம் கூடி அக்கூட்டத்தில், சுந்தரனை தெய்வ பக்தி என்கிற மகுடம்பூண்ட உபன்னியாசம் செய்யும்படி வேண்டினார்கள். அவ்வாறே சுந்தரன் இனிமையாகவும், கேட்போர் மனதில் உருக்கமும், பக்தியும் அழுந்தும்படியாகவும் உபன்னியாசம் செய்தான். அச்சபையில் நாலைந்து ஆங்கில உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தபடியால் சுந்தரன் ஷை விஷயத்தையே மற்றுமொருக்கால் ஆங்கிலத்தில் வெளிவரப்பேசினான். அதைக்கேட்ட ஆங்கிலர்கள் அனைவரும் சுந்தரனை புகழ்ந்து கொண்டாடினார்கள். சபை கலைந்து அவரவர்கள் போன பின்பு மாஜிஸ்ட்ரேட் சுந்தரனைத் தமது வீட்டிற்கழைத்து வந்து நான்கு தினங்கள் வரையில் வைத்திருந்தான். சுந்தரன் சென்னைக்குப்போய் வரவேணுமென்று மாஜிஸ்டிரேட்டினிடம் உத்தரவு கேட்டான் மாஜிஸ்டிரேட் சுந்தரனுக்குச் செலவுக்காக வேண்டிய ரூபாய்களைக்கொடுத்து அனுப்பினார்.

சுந்தரன் திருப்பதியினின்றும் புறப்பட்டு நேரே திருத்தணிகையென்னும் முருகர் தலம் வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு, திருவள்ளூர் என்னும் விஷ்ணு ஸ்தலத்திற்கு வந்தான். அவ்வூரில் இரண்டொரு நாள் தங்கியிருந்தான். ஓர் நாள் மாலை ஐந்துமணிக்கு திருக்குளத்தின் மேற்பக்கத்திலுள்ள ஒரு சத்திரத்தின் திண்ணையில் உட்கார்ந்திருக்கை

யில் அவனருகில் ஒருவர் வந்து உட்கார்ந்தார். அவர்சிவந்த மேனியும், சிரித்த முகமும், உயர்ந்த உருவமும், காருணியம் நிறைந்த கண்களும், உடையவராயிருந்தார். அவரைக் கண்ட அளவில் சுந்தரன் தான் நீட்டிக்கொண்டிருந்த காலை மடக்கிக்கொண்டான். வந்தவர் யார் என்ருல் சென்னையில் வண்ணாரப்பேட்டை என்கிற பாகத்தில் இருக்கப்பட்டவர் அவர் பெயர், கன்னைய நாயுடு என்பார்கள். அவர் வாசித்தவர்களிடமும், பெரியோர்களிடமும் அதிக அன்பைப் பாராட்டுபவர். சுந்தரன் தனியே அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டு சுந்தரனுடைய அமைதியானகுணத்தாலும் இடையில் காவி வேஷ்டி அணிந்திருப்பதாலும், "யாரோ பரதேசி என்று எண்ணி அதிக மரியாதையாக சுந்தரனைப் பார்த்து, சுவாமி! தாங்கள் இருப்பது எவ்விடமோ அதைத் தெரிவிக்க வேண்டிக்கொள்ளுகிறேன் என்றனர். ஏன் அவ்வாறு கேட்டனர் என்ருல், ஷை கன்னைய நாயுடு என்பவர் தன்னிளம்பருவத்தில் நிறைந்த செல்வவந்தர் அல்லாவிட்டாலும், தற்காலம் கூடுமான செல்வவந்தரே. மாதம் நூறு ரூபாய்க்கு மேல்பட்ட வருமானத்தை உடையவர், அவருக்கு தற்காலம் நாற்பது வயது ஆனதென்ருலும், தாயார், தந்தை, சகோதரிகள், அம்மான் முதலிய பலரும் வாய்க்கப்பட்டவர். ஆகிலும் அவருக்கு மனதில் ஓர் குறைமட்டில் சதா இருந்துக் கொண்டிருந்தது. அதாவது புத்திரனில்லாத வருத்தமொன்றே அதனுல் ஷை கன்னைய நாயுடு என்பவர் புத்திரோர்பத்தியை வேண்டியே இரண்டு மனைவிகளை மணந்தும் தன்னெண்ணம் ஈடேருமலிருக்கிறபடியால், யாராவது சாதுக்கள் மூலமாயாவது தகுந்த ஆசிர்வாதம் பெற்று புத்திரப்பேறடையலாம் என்கிற யெண்ணம் சதா அவர் மனதைத் தூண்டிக்கொண்டிருந்தபடியால், நமது சுந்தரனை ஓர் சாதுவென மதித்து அவ்வண்ணம் கேட்கலானர்.

கன்னைய நாயுடு கேட்ட கேள்விகளுக்குச் சுந்தரன் ஐயா! நானிருப்பது தென்தேசம் எனது இளமையிலே தேச யாத்திரை செய்வதில் மனம் வந்து அது முதலாக

அநேக தலங்களை யெல்லாம் சுற்றிக்கொண்டு தற்காலம் இவ்விடம் வந்தேன். இவ்விடம் விட்டு சென்னைக்குச் சென்று அங்கு சில தினங்கள் இருந்து பிறகு மீளவும் எனது யாத்திரையை ஆரம்பிப்பேன். இதுதான் என் எண்ணம் என்றான்.

கன்னைய நாயுடு:- "சுவாமீ! தாங்கள் சென்னைக்கு வருவதானால் என்னுடனே வருவீர்களானால் அடியேனுடைய வீட்டில் தங்கியிருக்க வசதியான இடமுண்டு. தாங்கள் எவ்வளவு காலம் சென்னையில் இருக்கப்பிரியமோ அவ்வளவு காலம் இருக்கலாம்" என்றார்.

சுந்:- "கிரகஸ்தர்கள் பரதேசிகள் மீது இத்தகைய அன்பைப் பாராட்டல் மிகவும் சுவல்பமே. ஆயினும் தாங்கள் என்னை அன்புடன் அழைத்ததால் அவ்வாறே வரச் சித்தமா யிருக்கிறேன்" என்றான்.

சுந்தரப்பரதேசிச் சென்னைக்குத் தன்னுடன் வருவதாக ஒப்புக்கொண்ட அளவிலேயே கன்னைய நாயுடு நிறைந்த சந்தோஷங்கொண்டு சுந்தரனையும் அழைத்துக்கொண்டு மாலை ஆறு மணிக்கெல்லாம் தன் வீடுவந்து சேர்ந்தார். கன்னைய நாயுடு தன்னுடன் அழைத்துக்கொண்டுபோன பரதேசியாரைக்கண்ட இவர் வீட்டிலுள்ளார் அனைவரும் பரதேசியாரிடம் மிகுந்த பட்சமுடன் வாவென்றார்கள். அதுமுதல் அவ்வீட்டின் மேல்மாடியிலுள்ள அறையில் சுந்தரனே சொந்தமாக சமையல்செய்து சாப்பிட்டுக்கொண்டு இராவில் சத்காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தான்.

இவ்வாறு நிகழ்கையில் ஷை கன்னைய நாயுடுக்கு இளமையில் வாசிப்புசொல்லிவைத்த குருவின் குமாரரான விஸ்வநாதய்யர் என்பவர் கன்னைய நாயுடுவைக் காண அவர் வீட்டிற்கு வந்தார். அச்சமையம் பரதேசியும், கன்னைய்ய நாயுடுவும் இராமாயணம் படித்துக்கொண்டிருந்தார்கள். விஸ்வநாதையரைக் கண்ட கன்னைய நாயுடு மனப்பூர்வமான அன்புடன் வரவழைத்து தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, பரதேசியைப் பார்த்து, சுவாமீ! இவர் எனது

உபாத்தியாயரின் குமாரர் இவரும் தங்களைப்போன்று தமிழில் வாசித்துள்ளவர், இருவரும் சேர்ந்ததே, இவ்வாறு சேர்ந்ததைக்கண்ட எனக்கு என்றுமில்லாத ஆனந்தம் உண்டாயிற்று என்று சொன்னார்.

பரதேசியாரும், விஸ்வநாதனுடன், சில விஷயங்கள் பேசினார். ஷை இருவருக்கும் சிநேகம் அதிகரித்துவிட்டது. விஸ்வநாதனும் கன்னைய நாயுடு வீட்டிலே நின்றுவிட்டான். சதா சத்விஷயக்காலக்ஷேபமே அவ்வீட்டில் நடந்து வந்தது, கன்னைய நாயுடுவுக்கும் நாளுக்கு நாள் வருமானம் அதிகமாக வரத்தலைப்பட்டது. மேலும் ஷை இருவர்களும் அவ்விடத்திருப்பதால் சென்னையிலுள்ள அநேகங்கற்றவர்களும், பெரியோர்களும் திரள் திரளாகவந்து கொண்டிருந்தார்கள். அதனாலே கன்னைய நாயுடுவுக்கு முன்னைவிட அதிக மதிப்பும் உண்டாயிற்று. இவைகளை யெல்லாம் நினைக்குந்தோறும் தன் மனதுக்குள் அளவிலாத ஆனந்தம் கன்னைய நாயுடுவுக்கு உண்டாகும். அதனால் சுந்தரனும், விஸ்வநாதனும், எத்தனை நாளைக்கு இருந்தாலும் அவர்களுக்கு உபசாரம் செய்வதில் சற்றும் பின் வாங்குகிறதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டார்.

இவ்விதமாக சுமார் ஒரு வருஷம் வரையில் ஷை இருவரும் கன்னைய நாயுடு வீட்டில் அவரது உபசாரணையின் கீழிருந்தார்கள். இதற்குள் ஷை கன்னைய நாயுடுவுக்கு நற்சுபதினத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தது ஷை இருவர்களுடைய ஆசிர்வாதத்தால் என்று சாலவும் ஆனந்தமடைந்து அவ்விருவருக்கும் அநேக மரியாதைகள் செய்தார்.

சுந்தரப் பரதேசி சகல வருத்தத்தையும் மறந்து தற்காலம் தான் கொண்டிருக்கும் வேடமே இம்மை, மறுமை இரண்டிற்கும் சாதனக்கருவி யென்பதை உணர்ந்து விஸ்வநாதையரிடமும் தனது உண்மையான விருத்தாந்தத்தைக் கூறாமலிருந்தான் ஒருக்கால் விஸ்வநாத ஐயருக்குத் தன்

சவிஸ்தாரங்கள் தெரிந்தால் தன்னிடமிருக்கும் உண்மையான விஸ்வாசத்தால், மீளவும் தன் தந்தையரிடம் கொண்டு சேர்ப்பாரென்றே சுந்தரன் தன் சவிஸ்தாரங்களை விஸ்வநாதனிடம் கூறவில்லை.

ஓர் நாள் சுந்தரனும் விஸ்வநாதனும் வேடிக்கையாக சென்னையிலுள்ள (ராபின்சன் பார்க்) அலங்கார தோட்டத்திற்குப்போய் ஆங்குள்ள நாற்காலியின்மீது உட்கார்ந்துபேசிக் கொண்டிருக்கையில் விஸ்வாதன் முகவாட்டமாகவும், மனம் தளர்ச்சியாக்வும் தோன்றவே,

சுந்:— நேயரே என்ன ஒருவாருயிருக்கிறீர்? நாம் வீட்டிலிருந்து புறப்படும்போது இருந்த குதூகலம் தற்போது மிகுதியும் குறைந்திருக்கிறதே?

விஸ்வ:— குதூகலமும், வருத்தமும் எனக்கு ஒன்றே ஆயினும் தங்களைப்போல ஞூவாச்சிரம வாரிதியை நான் கடந்தவனல்ல வானதால் சிற்சில சமயங்களில் என் மனம் பேதிக்கும் என்பது இயற்கையே.

சுந்:— அவ்வாறு தங்கள் மனம் பேதிக்கவேண்டிய விஷயம் தற்போது என்ன நிகழ்ந்தது அதை என் மாட்டுங்கூற மனமிருக்குமோ?

விஸ்:— ஆ! "தாய்க்கொளித்த சூலா" என்பதுபோல தங்களிடம் கூறாத விஷயமும் உண்டோ! அஃதில்லை.

சுந்:— அவ்வாருயின் தற்போது நீர் கொண்டிருக்கும் மனக் கிலேசத்தை வெளியிடுமே.

சுந்தரப்பரதேசி விஸ்வநாதனை அவ்விதம் கேட்கவே, விஸ்வநாதன் தன் விருத்தாந்தங்களைப் புகலுற்றுன்.

"ஐயா! என் ஜனனபூமி, தொண்டை நாட்டின் கீழ்த்திசையில் பாலிநதிக்கரையின்பாலுள்ள ஒரு சிறு கிராமம், நான் எனது சிறு வயது முதல் எனது அம்மானிடம் கல்வி பயின்று வந்தேன். என் அம்மானே கல்வியில் நிகரற்றவர். அவரை மிஞ்சிப்பேசும் தமிழ்ப் புலவர்கள் தமிழ் நாட்டில்

எவரும் இல்லையெனத்தைரியமாய்க்கூறலாம். அவரிடம் நான் தமிழில் பயின்று வருங்காலத்தில் சென்னையின் கண்ணுள்ள ஒருவன் என்னை அடிக்கடி காண்பதுண்டு. சிற்சில சமயங்களில் அவன் என்னுடன் அதிகமும் விசுவாசம்பாராட்டுவான் நான் மட்டில் அவனிடம் நிறைந்த விசுவாசம் வைத்ததில்லை. ஏனெனில் அவன் சிறிதும் கல்வி ஞானமில்லாதவன். வார்த்தை சொல்லவும் நன்றாய்த் தெரியாது. ஆனால் யோக்கியனென்று பிறர் மதிக்கும்படி காட்டிக்கொள்ள மட்டில் அறிந்திருந்தான். தீயவர் நட்பைக் காட்டிலும் நல்லோர் பகையே நன்றென்பதை பெரியோர் சொல்லக் கேட்டுள்ளேனாதலால் அந்த மனிதன் எனக்கு நல்லவனல்லவென்று புலப்பட்ட அளவில் அவனுடன் நெருங்கி வார்த்தையாட மனமில்லாது விடுத்தேன்.

இவ்வாறு எனது பதினைந்தாவது வயது வரையில் சென்னையில் எனது அம்மான் வீட்டில் வாசித்திருந்து பிறகு எனது சொந்த கிராமத்திற்குப் போய்விட்டேன். என் கிராமத்திற்கு அருகிலுள்ள திருக்கழுக்குன்றம் என்னும் சிவஸ்தலத்தில் பிரம்மோற்சவம் நடந்ததைக் காணும் பொருட்டு நானும் என் நேயர் சிலருமாக அவ்விடம் போயிருந்தோம். அவ்விடத்தில் முன் சென்னையில் அடிக்கடி என்னைக் கண்டு பேசிக்கொண்டிருந்த குள்ளமனிதன் என்னைக்கண்டு மிகுந்த அன்புடன் விசாரித்து, தான் இறங்கியிருக்கும் வீட்டிற்கு வந்து சாப்பிட வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அவன் வேண்டிக்கொண்டபடி அவன் வீட்டில் நான் சாப்பிட இணங்காதது கண்டு தன் வீட்டிற்கு வந்து பழமாவது சாப்பிடவேணுமென்று கேட்டுக்கொண்டான். அவ்விதம் வேண்டுபவனது மனதை திருப்தி செய்ய வேண்டுவது என் கடமையாயிற்று. அவனுடன் கூடவே அவன் இறங்கி யிருக்கும் வீட்டிற்குச் சென்றேன். அது மிகவும் நெருக்கமான இடமாயிருந்ததுந் தவிர நிறைய மூட்டை முடிச்சுகளால் அடைக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் உட்காரவே எனக்குச் சிறிதும் மனங்கொள்ளவில்லை என்றாலும், கடமைபற்றி

உட்சென்றேன். உட்புறத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர் என்னைக்கண்டதும், முகமலர்ச்சியுடன், "தம்பீ! வா. உட்கார்" என்று ஓர் மரப்பலகை ஒன்றைப்போட்டார். நானும் அதில் உட்கார்ந்தேன், சிறிது நேரம்பொறுத்து, என்னருகில் உட்கார்ந்திருந்தவர் என்னைப்பார்த்து, தம்பீ! நான் இன்னாரென்று உனக்குத் தெரியுமா தெரியாதா வென்றார். எனக்குத் தாங்கள் முற்றும் புதியவர் என்னை அழைத்து வந்தவரோ, சென்னையில் பல தடவைகளில் மட்டும் கண்டு பேசியவர். இதையன்றி மற்றொன்றும் நான் தெரிந்தவனல்ல வென்றேன். இதைக்கேட்ட அப்பெரியவர், அப்பா! நான் உனக்கு ஒரு விதத்தில் பந்துவாக விருப்பேன். என் பெயர் சரவணப்பெருமாள் என்பார்கள். என் பெயர் உன் தகப்பனுருக்குத் தெரியும், உன்னை இங்கழைத்து வந்தவன் எனது சட்டகன். அவன் பெயர் மாணிக்கக்கொழுந்து, அவனை உன் தகப்பனுரும் மற்றையவர்களும் அறிந்திருக்கமாட்டார்கள். என்னையும் என்னைச்சேர்ந்த இன்னும் சிலரையுமட்டில் உன் தகப்பனுர் அறிந்திருப்பார் அவருக்கும் எனக்கும் பால்ய சிநேகமும் உண்டு. சில விஷயத்தால் தற்போது போக்கு வருத்து இல்லாமலிருக்கிறது. என்று லன்னென்னமோ சுமார் அரைமணி நேரம் வரையில் பேசினுர்.

நான் எதற்கும் வாய்திறவாமல் மௌனமாயிருந்தேன். இதற்குள் மணி சுமார் பனிரெண்டாயிற்று. சரவணப் பெருமாள் என்பவர் என்னை நோக்கி, தம்பீ! நேரமாச்சுது, ஸ்நானம் செய்துவிட்டு வருவோம் வாஎன்று அழைத்தார். ஐயா! நான் அமுது கொண்டுவந்திருக்கிறேன் என்றேன். அப்படிக்கல்ல நானிருக்கையில், நீ ஏன் கட்டமுதைப் புசிக்க வேண்டும் என்றார். நான் அவரைப்பார்த்து, ஐயா! எனது புத்தி தோன்றிய நாள் முதலாக தங்கள் வீட்டிற்கு வந்து நான் சாப்பிடாதிருக்க தற்காலம் எப்படி சாப்பிடுவது? என் பெரியோர்கள் கேட்டால், என்னைக் கண்டிப்பார்கள். ஆனபடியால், நான் இன்று இவ்விடம் சாப்பிடாத குற்றத்தை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றேன். நான் என்ன

சொல்லியும்கேளாமல் ரொம்பவும் வற்புறுத்தியதால் அவ்விடம் விட்டு எப்போது போகிறது என்று எனக்குத் தோன்றிற்று. உட்கார்ந்த இடத்திலேயே எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அவர் உள்ளே சென்று ஒரு தட்டில் உரித்த வாழைப்பழம் நாலும், அசிகா சாக்கரை கொஞ்சமும் வைத்து என்னிடம் கொடுக்கும்படி ஒரு பெண்ணிடம் கொடுத்தனுப்பினார். அப்பெண் அத்தட்டை எடுத்துக்கொண்டு என்னெதிரில் வந்து அதை என்முன் வைத்தாள். அப்பெண்ணுக்கு வயது பத்துக்கு மேலிராது, அவளது சிவந்த மேனியும், மிரண்ட பார்வையும், புன்முறுவலும், என்னுயிரையே கொள்ளை கொண்டன. (அவள் உலகிலுள்ள மற்ற நயபெண்களைக் காட்டிலும் அழகில் சிறந்தவளல்லாவிட்டாலும் அவள்மீது நான் மோகங்கொண்ட எனது பின்னைய விஷயத்திற்கென்றே மதிக்கவேண்டும்) எனக்குப் பழங்கொண்டு வந்து கொடுத்த பெண்பால் பின்னும் சற்றுநேரமாவது என்முன் நின்றாளா! இல்லையே. வெகு சீக்கிரத்தில் எனது பார்வையைவிட்டு அகன்றாள். இதற்குள் எனக்கெதிரில் விட்டிருந்த கோணிப்படுதாவின் மறைவிலிருந்து சிற்சில தலைகள் தென்பட்டன. அத்தலைகளில் சிலது அழகுள்ளதும், சிலது அழகற்றதுமாயிருந்தன. ஒருதலை என்னைப்பார்த்துக்கொண்டிருக்கையில், மற்றொரு தலை அத்தலைக்குமேலே தோன்றும். மற்றொன்று அவ்விரு தலைகளையும் உள்தள்ளி நிற்கும் அத்தனைகளின் பக்கமாய் என் கண்கள் நோக்கினால், சரேலென்று அத்தனை தலைகளும் பொம்மலாட்டம்போல உள்ளே போய்விடும் தலைகள் உட்சென்றவுடன் குசுகுசு வென்று பேசும் சப்தம் கேட்கும் அந்த நாடகம் வெகு தமாஷாய் இருந்தது.

பின்பு சற்று நேரத்திற்கெல்லாம் சரவணப் பெருமாள் என்பவர் என்னிடம் வந்து தம்பி நேரமாகவில்லையா ? வா குளிக்கப்போவோம் என்றார். நானும் தடையின்றி எழுந்துவிட்டேன். (சற்று முன் சாப்பிட மனமில்லாத நான் தற்காலம் ஒத்துக்கொண்டது எதுக்கென்றால் பழங்கொடுத்த பெண்ணை பழமையாக்கிக் கொள்ளலாம் என்றே) நானும்

சரவணப் பெருமானும் குளம் சென்று ஸ்நான பானதிகளை முடித்துக்கொண்டு வெகு துரிதமாகவே வீட்டை யடைந்தோம். நாங்கள் வரும்போது மாணிக்கக்கொழுந்து கையில் விளக்குமாற்றைப் பிடித்துக் கூட்டிக்கொண்டிருந்தது.

அதைக்கண்ட சரவணப்பெருமாள் கண்சாடை செய்தார். மண்குழையானதால் பண்பறியாதிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் இரண்டிலைகள் போட்டு எங்களை அமுதுண்ண அழைத்தார்கள். நாங்களிருவரும் உட்கார்ந்தோம், அப்போது எங்களுக்கு அன்னம் பரிமாற வேறு யாராவது வருவார்களோ வென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்படிக்கில்லாமல், நான் கோரிய வண்ணமே பிரஸ்தாபத்தையலாள் கரியமுது வகையராக்கள் படைத்தாள். கரிவகையராக்கள் படைத்தாள். கரிவகைகள் பரிமாறுகையில் பல தடவைகளில் அம்மாது குனிந்துக்குனிந்து நிமிரும்போது எனக்கு வருத்தமாயிருந்தது. சகலமும் படைத்தான பின்பு ஓர் வட்டகையில் நெய்யெடுத்துக்கொண்டு வந்தாள். அதை கண்டவளவில்,

“இட்டடி நோவ இருந்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய.”

என்று அம்பிகாபதி கூறியது என்னினைவிற்கு வந்தது. நானும் சரவணப்பெருமாளும் உண்டான பின்பு அவ்விடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், என்னுடன் வந்த தோழர்கள் என்னிடம் வந்து, நாம் நமது ஊர் போக வேண்டாமா? என்றார்கள். “நானும் வருகிறேன் வண்டி கட்டுங்கள்” என்றேன். இதைக்கேட்ட சரவணப்பெருமாள் “நீ இன்றைய தினம் போகப்படாது நாங்கள் இவ்வூரில் நாலு தினங்கள் வரையில் தங்கி யிருப்போம் அதுபரியந்தம் நீயும் இங்கிருக்க வேண்டும்” என்று சொன்னார். நான் ஒத்துக்கொள்ளாதவன்போல அபிநயித்தேன். பின்னும் அவர் வற்புறுத்தினார். அதன் பின்பு என் தோழர்களிடம் இரண்டு நாள் தங்கிவருவதாகக்கூறி அவர்களை அனுப்பிவிட்டேன்.

ஷெ திருக்கழுக்குன்றத்தில் அவர்களுடன் நான்கு தினங்கள் வரையில் இருந்தேன். அந்நான்கு தினங்களில், ஒருநாளாவது கோவிலுக்குப் போயிருப்பேனோ? அல்லது கிரிப்பிரதக்ஷணம் செய்திருப்பேனோ? கடை, கடைத்தெருக்களைப் போய்ப்பார்த்தேனோ? எதுவுமில்லை. சதா மடப்பள்ளி பூனையைப்போலவும், செக்கிற் பூட்டிய எருது அவ்விடமே சுற்றிசுற்றி வருவது போலவும், அவ்வீட்டிலே யிருந்தேன் நான், அப்பெண்ணின்மீது நட்புமாயிருப்பதை வாட்டமாயறிந்த வீட்டார்கள். அப்பெண்ணை வேளைக்கொரு உடுப்பால் அலங்கரித்துக் காட்டுவார்கள் அவர்கள்செய்த ஜாலத்தால் என்மனம் முழுமையும் அக்கன்னிகையின்மேல் லயித்துவிட்டது. அதனோடா போச்சு அப்பெண்ணின் தாயான "குண்டுணிமங்கை" யென்பாள் வெகு ஜாலக்காரி, மிகுந்த சாமர்த்திய முடையவள் கற்பதுமையைக்கூட தன்னுடைய இதவார்த்தையால் தலையசைக்க வைப்பாள். அவள் என்னிடத்தில் காட்டிவந்த அன்பையும், அபிநயத்தையும் சொல்ல முடியாது வெளியில் என்முன் வந்தால், வெகு நாணமுற்றவள்போலதேகத்தைக் குன்றச்செய்து மறைந்து விடுவாள். அப்படி மறைவது உண்மையான நாணமல்ல போலி வெட்கமே.

நான் காமுற்ற பெண் புஷ்பிணியாகாத இளந்தையாயிருந்ததால் இரண்டொருநாளில் என்னிடம்வந்து தாராளமாய் பேசவும் விளையாடவும், இடங்கொடுத்தது. அப்பெண்ணுக்கு தங்கைமார் நாலு பெண்கள் சிறிதும் பெரிதுமாக இருந்தது. அவைகளும் என்னிடம்வந்து விளையாடிக்கொண்டிருக்கும், இவ்வாறு நான்கு தினங்கள் வரையில் அவ்விடமிருந்தேன். நாலாம் நாள் காலையில், பயணத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தார்கள். அதைக்கண்ட நான் ரொம்பவும் மனம் வாடினேன். இச்சேதியை யறிந்த அவர்கள் நமது எண்ணம் பலித்தது என்று சந்தோஷங்கொண்டார்கள். இதற்குள் சரவணப்பெருமாள் என்னிடம் வந்து, தம்பீ நாங்கள் திருப்போரூருக்கு போகப்போகிறோம் நீயுங்கூட வா

அப்படியே உன் ஊருக்குப் போகலாம் என்றார். அவர் கூப்பிட்டவளவிலேயே நானும் போக எண்ணங்கொண்டேனென்றாலும், என் தாயார் தகப்பனார், உத்தரவில்லாமல் அதிக நாள் வெளியில் தங்குவது சரியல்லவென்று எண்ணி, நான் அவருடன் சொன்னதாவது, நான் திருப்போரூருக்கு வரச் சாவகாசமில்லை என் ஊருக்குப் போய் பின்பு ஒரு பயணம் வருகிறேன் என்றேன். அவரும் அதற்கிசைந்து என்னை மலையடிவாரத்தினிடம் அழைத்துக்கொண்டு போய் ஏதேதோ சில சங்கதிகளைப் பேசியிருந்து பின்பு அடியில் வருமாறு சொன்னார். அதாவது;

தம்பீ! நான் சிலவிஷயங்கள் உன்னுடன்சொல்லவேணுமென்று வெகு நாளாய் நினைத்திருந்தேன். அதற்கு சமயம் வாய்க்காமல் இருந்தது தற்போது வாய்த்ததால் அதில் சிறிது கூறுகிறேன்.

அதாவது, நான் உன் தாயார் வம்சத்திற் சேர்ந்தவன். ஆனால் என் விவாககாலத்தில் புதிய வழியில் பெண் கட்டியதால், அதுமுதல் என் மாமியார் வீட்டார் வழியிலேயேயிருக்கிறேன். எனக்கோ புத்திர சந்தானம் என்பது கிடையாது. அதனால்வருத்தப்பட்டுக்கொண்டிருந்தோம்.இனி புத்திரப்பேறு உண்டாகாதென்று என் மனைவிக்கும் எனக்கும் தோன்றிய பின்னர் என் மனைவியானவள் என்னிடம் வந்து தனது தங்கையின் பசங்களில் ஒன்றை நாம் வளர்த்துக் கொள்ளலாமா வென்றாள். நானும் அதற்கிசைந்தேன், உடனே சென்னையிலுள்ள என் சட்டகனை மாணிக்கக்கொழுந்தைக் கடிதமெழுதி வரவழைத்து சங்கதியைச் சொன்னேன். இதைக் கேட்டவுடன், தலைமூட்டைக் காரனுக்குச் சுமைதாங்கிக்கல் கிடைத்ததை யொத்தான், ஆயினும் தன் மனைவியின் உத்தரவில்லாமல் ஜலபாதைக்கும் போகிற வழக்கம் அவனுக்கில்லை. அதனால் மறுபடி போய் வந்து சங்கதி சொல்லுகிறேன் என்று போய்விட்டான்.

மாணிக்கக்கொழுந்தோ, புத்தியில் உலக்கைக் கொழுந்துதான். ஆள் மட்டில் வாட்டமாயிருப்பானே தவிர சம்

பாதனையே குறைவு. கடவுள் அவனுக்கு அரை டெஜன் குழந்தைகளைக் கொடுத்துவிட்டார். அவைகளைக் காப்பது அவனுக்கு மிகுந்த கஷ்டமாகவே யிருந்தது. ஆயினும் அவன் மனைவி பற்பல பேரங்கள் செய்து குழந்தைகளை காப்பாற்றி வந்தாள். அவள் சாமர்த்தியம் இல்லாவிட்டால் கொழுந்து பெற்ற குழந்தைகள் எல்லாம், குழிகளில் விழுந்திருக்கும்.

இத்தகையான என் சட்டகன், நான் சொன்னதை அவன் மனைவியிடம் சொன்னான் அதைக்கேட்டவளவில் பிறவித் தரித்திரனுக்குப் பொற்கிழி யகப்பட்டதுபோல குண்டுணி மங்கை சந்தோஷித்தாள். ஏனெனில் என்னிடம் சுமார் பதினாயிரம் ரூபாய் சொத்துக்கள் இருப்பதை தெரிந்திருப்பதால், அச்சொத்துக்களெல்லாம் தன் பிள்ளைக்கே சேரும் என்பதினால் ஒரு வாரத்திற்கெல்லாம் என் சட்டகனும், அவன் மனைவியும், அவனது மூத்தபிள்ளையானசோணாசலம் என்பவனையும், அதற்கிளையதான இராஜசுந்தரம், கனகசுந்தரம், சிவகாமசுந்தரம் என்னும் மூன்று பெண்களையும் ஆக ஆறு ஆத்மாக்களும் திருப்போரூரில் என் வீட்டிற்கு வந்தார்கள்.

இக்கூட்டத்தைக் கண்டவுடனே என்பாடு வாட்டமாயிற்று ஏனென்றால், 'தொட்டென்றான் தச்சன் சோறென்றாள் தச்சத்தி'' என்பதை யொக்க ஒரு பிள்ளையை அனுப்பென்றால் ஒன்றுக்கு நாலாக அழைத்துவந்து விட்டார்களே முதலிலேயே இப்படி யிருந்தால் முட்டமுடிய எப்படி யிருக்குமோவென்று பயந்தேன், என்மனைவிமட்டில் தங்கையையும் தங்கைக் குழந்தைகளையுங் கண்டளவில் மிகுந்த சந்தோஷத்துடன் வரவழைத்து உபசாரஞ் செய்துவந்தாள்.

சுமார் பதினைந்து தினம் வரை அவர்களெல்லோரும் என் வீட்டிலேயே யிருந்தார்கள். பின்பு என் சட்டகன் சென்னைக்குப்போக வேணுமென்றான் என் மனைவி மூலமாகவே, சோணாசலத்தையும், இராஜசுந்தரம் என்னும் பெண்ணை

யும் நிறுத்திக்கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டோம். அதுமுதல் அவ்விரு மக்களும் என்னிடமே இருந்தார்கள். நாளாவிர்த்தியில் மீதி பசங்களும் அநேகமாய் என்னிடமே வந்துவிட்டன. என் மைத்துனி ஆளுக்கு ஏற்றமாதரி நடக்கும் தன்மையாள் ஆனதால் அவனது குழந்தைகளின்மீது எனக்கும் என் மனைவிக்கும் வெகுஅன்பு உண்டாய்விட்டது. என் சட்டகன் மட்டில் மாதம் ஒருமுறை திருப்போரூருக்கு வந்து பத்துப் பதினைந்து தினங்கள் இருந்து போவான் என் மைத்துனி எங்கள் வீட்டிலேயே யிருப்பாள். இவ்விதமாக நடந்துகொண்டு வருகிறது. மத்தியில் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன், தற்காலம் என் சட்டகன் குடும்பத்தார் மட்டில் எங்கள் வீட்டிற்கு வரப்போக விருக்கிறுகளே தவிர, அவனைச்சேர்ந்த எவர்களும் வருத்துப் போக்கில்லை. ஆனதால் அப்பெண்களை நல்லயிடமாகப் பார்த்துக்கொடுப்பது என் பொறுப்பாயிருக்கிறபடியால், இராஜசுந்தரம் என்னும் பெரிய பெண்ணுக்குமுதலில் விவாகம் செய்யவேணுமென்று ஒரு வருஷமாக எண்ணங் கொண்டிருக்கிறேனென்றுலும், தகுந்தவாள்கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இவ்விதமிருப்பதால் ஷை பெண்ணை உனக்கே கொடுக்கவேணும் என்கிற எண்ணம் எனக்கும் மற்றவர்களுக்கும் உண்டு. ஆயினும் நானே வலுவில் வந்து உன் தகப்பனுரிடம் எப்படிச்சொல்வதேனறிருந்தேன் நீயே நேரில் அகப்பட்டாய் எனது எண்ணத்தை உன்னிடம் சொல்லிவிட்டேன் உனக்கு இஷ்டம் யெப்படி யென்றார்.

அவர் சொல்வது எனக்கு குருடனுக்குக் கண் வேண்டுமா என்று கேட்பதுபோலவிருந்தாலும், என் தாய் தந்தையர் இஷ்டத்தைக் கோரவேண்டியவனுக விருந்தமையால், நான் ஊருக்குப்போய் பின்பு வந்து சொல்லுகிறேன் என்றேன். இதைக்கேட்ட சரவணப் பெருமாள் சரிதானென்று ஒப்புக்கொண்டானென்றுலும் ஒருக்கால் நான் பின்னிடையாய்ப் போகிறேனென்கிற சந்தேகத்தால் மறுபடி என்னைப் பார்த்து, விஸ்வநாதா! நீ என்னிஷ்டப்படியே கலியாணம்

செய்துகொண்டால் என்னிடமுள்ள பதினுராயிரம் ரூபாயில் ஐயாயிரம் ரூபாய் சொத்து உனக்கு தருவதல்லாமல் பெண்ணுக்கு ஆயிரம் ரூபாய் நகை போடுகிறேன் சீதன சாமான்களை அளவற்றது தருகிறேன் என்றுபலவிதமாக வேப்பிலை அடித்தான். இதையெல்லாங் கேட்கவே சிறுவனுன எனக்கு மனம் திரும்பிவிட்டது.

சரவணப்பெருமாளைப்பார்த்து "மாமா" தங்களிஷ்டபடியே செய்கிறேன் என்றேன். நான் மாமா வென்றதற்கே அதிக சந்தோஷப்பட்டு அப்பா! நீ சொல்வது உண்மைதானு வென்ருன், உண்மைதானென்றேன். மறுபடி பிரளுவாயோ வென்றார். பிரளேனென்றேன். அவ்வாருனுல் நான் நம்புவதற்கு வேதகிரீஸ்வரர்மீது பிரமாணம் செய்து கொடுவென்ருர் அவ்வாறே செய்துக்கொடுத்தேன்.

பின்பு அவர்களெல்லாம் திருப்போரூருக்குப் போக பிரையாணமாஞர்கள். வண்டி வந்து தெருவில் நின்றது. எல்லாரும் ஏறிக்கொண்டார்கள். ராஜசுந்தரம் ஏறும்போது என்மனம் அளவில்லாத வருத்தத்தை அடைந்தது கண்களில் நீர் ததும்பியது. இதைக்கண்ட அப்பெண்ணின் தாயார் விஸ்வாசப் பறவை நமது வலையில் சிக்கிக்கொண்டதென்று சந்தோஷப்பட்டாள். அவர்கள் வண்டி ஒருபர்லாங்குதூரம் போகிறவரையில் நின்றவிடத்திலேயே நின்று பார்த்திருந்தேன்; என் பார்வைக்கு எட்டாத்தூரம் போனவுடனே நான் என் ஊருக்குவரும் வழியைப் பிடித்து ஒரு மைல் ஒரு காதமாக எண்ணி இரவு எட்டுமணிக்கு என் வீடு சேர்ந்தேன். ஆயினும் அன்றைய இரவு போசனம் நான் மிகவும் வருத்தத்துடனே கொண்டு மறுதினம் முதல் சதா இராஜசுந்தரத்தின் நினைவே எனக்கு அதிகமாயிருந்தது. அவ்வெண்ணம் எனக்கு அதிகரிக்க அதிகரிக்க, எப்போது மறுபடியும் அவ்வணங்கைக் காணப்போகிறேும் என்கிற ஆவலால், திருப்போரூர் போகலாம் என்று துணிந்தேன். என் எண்ணங் கைகூடுமாறு கிருத்திகை நட்சத்திரம் இரண்டு நாள் இருந்ததால் அந்த காரணத்தை முன்னிட்டு

என் தகப்பனாரை திருப்போரூருக்குப் போய் வருகிறேன் என்று உத்தரவு கேட்டேன், எனது கபட எண்ணத்தை அறியாது என் தகப்பனாரும் உத்தரவு கொடுத்தார்.

மறுதினம் காலையில் புறப்பட்டு வண்டியை அதிக வேகமாய் ஓட்டும்படி வண்டிக்காரனுக்குச்சொல்லி சுமார் பனிரெண்டுமணிக்கெல்லாம் திருப்போரூர் போனேன். நான் போகும்போது சரவணப்பெருமாள் வீட்டிலில்லை. அவர் மைத்துனியும் இராஜசுந்தரமும் வீட்டிலிருந்தார்கள். என்னைக் கண்டவுடன் இராஜசுந்தரம் காற்றாய்ப் பறந்துபோய் தன் தாயாரிடம் நான் வந்திருக்கும் சேதியை டெலிபோன் போலச் சொன்னாள். உடனே அப்பெண்ணின் தாயார் வெளியில் வந்து என்னைக்கண்டு மிகவும் நாணமுறுபவள் போல அபிநயித்து, காலலம்பச் சலம் கொடுத்து உட்காரச் சொன்னாள் நானும் உட்கார்ந்தேன். ஒருமணி நேரத்திற்கெல்லாம் சரவணப்பெருமாள் வந்து சேர்ந்ததால் என்னைக் கண்டவுடன் சந்தோஷமாக விசாரித்தார். அன்றிரவு போசனம் உண்டானதும், கலியாண விஷயத்தைப்பற்றி உன் தகப்பனாரிடம் கூறினாயா? என்று கேட்டார், நான் இன்னும் கூறவில்லை என்றேன்.

நான் ஒருக்கால் ஷை கல்யாண விஷயத்தில் சம்மதமற்றிருக்கிறேனோ என்ற சந்தேகங்கொண்டு சரவணப் பெருமாளும் அவர் மனைவி, மைத்துனி முதலிய பலரும் என் மனது கரையும்படி சொன்ன வார்த்தைகளைக் கூறலாமென்றால் குறைந்தது ஒருமாத காலமும் போதாதென்றே மதிக்கலாம் இத்துடனாவிட்டது. மறுதினம் நான் மட்டில் தனியாயிருக்கையில் இராஜசுந்தரத்தின் தாயாரான குண்டுணி மங்கையென்பவள் என்னிடம் வந்து இராஜசுந்தரத்தைத் தாங்கள் மணந்துகொண்டால் எல்லா விஷயங்களிலும் தங்கள் சொல்லுக்கு அணுவளவும் தவறாமல் நடப்பதுந் தவிர, பெண்ணுக்கு வேண்டிய சகல நகைகளும் சுமார் இரண்டாயிரம் ரூபாயிக்கு போடுகிறேன் கலியாணமும் கன்னிகாதானமாக செய்து வைக்கிறேன். எங்கள் குடும்பத்தார் அனைவரும்

உங்களுக்கு அடக்கமாகவே யிருக்கிறோம். எப்படியாவது தயை செய்து எங்கள் பெண்ணை தாங்கள் மணம் செய்துக் கொள்ளவேணும் என்று என் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தாள். நான் திடுக்கிட்டு அம்மா! எழுந்திருங்கள் எவ்விதத்திலும் உமது பெண்ணையே நான் மணக்கிறேன். உங்கள் பெண்ணைத்தவிர மற்றப் பெண்களை மணக்கச்சிறிதும் எண்ணவில்லை அப்படி மனந்தால் அப்பெண் எனக்குத் தாய்க்குச் சமானம் என்றேன்.

இதைக்கேட்ட அந்தப்படுபாவி கரடகமங்கை மிகவும் சந்தோஷங்கொண்டவள் போலவும் அடக்கமும் வஞ்சனையும் அற்றவள் போல நடித்துச்சென்றாள். இரண்டொரு நாள் அவ்விடமிருந்து என் ஊருக்கு வந்துவிட்டேன். வந்த நாலைந்துநாள் பொறுத்து எனக்கு உண்மையான சிநேகரான ஒரு முதலியாருடன் என் எண்ணத்தைச் சொல்லி, அதை என் பெற்றோர்களிடம்கூறி அவர்கள் எண்ணத்தை அறியச்சொன்னேன். அம்முதலியாரும் வெகு தந்திரமாகவே விஷயங்கள் யாவற்றையும் என் தாய் தந்தையர்களிடம் சொன்னார்.

முதலியார் சொன்ன சங்கதியைக் கேட்டவளவில் என் தந்தையர் மிகுந்த வருத்தமுற்று முதலியாரைப் பார்த்து, அப்பா! தற்காலம் விஸ்வநாதன் இஷ்டப்பட்டிருக்கும்பெண்ணின் குடும்பத்தார் இதுவரையில் எங்கள்பந்துவில் சேர்ந்தவர்களல்ல மேலும் நாங்கள் அவாள் பார்க்கவும் சாப்பிடமாட்டோம், அவர்கள் எங்கள் வீட்டில் சாப்பிட நேர்ந்தால் புறம்பாக வெளியில் வைத்துப்போட்டால் அவர்கள் சாப்பிட்டு இலையை அவர்களே எடுத்துப்போட்டு போகிற வழக்கம் அவ்வாறானவர்களின் சம்பந்தத்தைச் செய்தால் எங்கள் குலத்துக்கு பங்கம் வருவதுடன் பந்துக்களும் ஒப்பார்கள். ஆனதால் அதுவிஷயமாக என்னிடம் பேசவேண்டாம் என்றார். அவ்விஷயத்தை முதலியார் என்னிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

நான் அப்பெண்ணின்மேல் வைத்த காதலால் மிகுந்த வருத்தப்பட்டு என் பெற்றோர்களிடம் சொல்லாமல், இராமேஸ்வரம் போய்விட்டேன். சுமார் இரண்டு மாதங்கள் வரையில் நான் இருக்கும் இடத்தை தெரிவிக்காமலே இருந்தேன், பின்பு எனது நண்பரான மாணிக்க முதலியாருக்கு ஓர் கடிதம் எழுதி கடைசியில் இராஜசுந்தரத்தை எனக்கு மணமுடிப்பதானால் நான் அவ்விடம் வருகிறேன். அன்றேல் நான் இவ்விடத்திலேயே இருந்து என் காலத்தைக் கழிக்கிறேன் என்று எழுதியிருந்தேன், அக்கடிதத்தை முதலியார் என் தகப்பனாருக்குக் காட்டினார். அதைக்கண்ட என் தகப்பனார். "மரபுக்கு விரோதமாக மணமுடிக்க எண்ணங் கொண்டவன் இவ்விடம் வராமல் அவ்விடமே யிருப்பது நலம்." என்றாராம். முதலியார் என் தகப்பனாருக்கு பலவிதமாகசொல்லி கடைசியில் சம்மதிக்கச்செய்து எனக்குக் கடிதம் எழுதி வரவழைத்தார். நான் வந்தபின்பு என் தகப்பனார் என்னுடன் சொன்னதாவது. நீ கோறிய பெண்வீட்டார் நமது மரபுக்கு தாழ்ந்தவர்களானதால், அவ்வீட்டாரை மட்டில் நமது ஆசாரியரிடம் அழைத்துக்கொண்டுபோய் தீக்ஷைசெய்வித்து அழைத்து வந்து, நீ கட்டும் பெண் தவிர மற்றப் பெண்களை உனது உத்தரவின்பேரில் மற்றொருவனுக்கு மணமுடிக்கிறோம் என்று அவர்களிடம் எழுதி வாங்கிக்கொண்டு பின்பு கலியாணம் செய்துக்கொள் என்றார்.

என் தகப்பனார் அவ்வளவு உத்தரவு கொடுத்ததே எனக்குப் போதுமானதாயிருந்தது. அவ்வுத்தரவைக் கேட்டுக்கொண்டு மறுதினமே திருப்போரூர் போய் நடந்தவற்றைச் சொன்னேன். எவ்விதமாகவாவது தன் பெண்ணை நான் கட்டிக்கொண்டால் போதும் என்ற எண்ணத்துடன் அவ்வாறே தீக்ஷை செய்துகொள்ள உடன்பட்டு ஓர் தினத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு சரவணப்பெருமாளும் அவன் சட்டகன் குடும்பத்தாரும் ஒன்றாகச் சேர்ந்து என் ஆசாரியர் திருமடத்திற்கு வந்தார்கள். அக்கூட்டத்தாரனைவரையும் (கருப்பு நாயை வெள்ளை நாயாக்குவது போல) தீக்ஷை செய்

வித்து பாத தீர்த்தங்கொடுத்து புனிதர்களாக்கி எனது மற்றைப் பந்துக்களும், சரவணப்பெருமாளின் குடும்பத்தாரும் சமமாக உட்கார்ந்து போஜனம் செய்யும்படி செய்தேன்.

சாப்பிட்டான பின்பு என் அம்மானவர் ஓர் விஷயத்தை நினைப்பூட்டினார். அதாவது, மாணிக்கக் கொழுந்து பின்பு தன் பழய பந்துக்களிடம் சேர்ந்து குலத்தைக் கெடுக்காத வண்ணம் பத்துபேர் முன்னிலையில் ஓர் உடன்படிக்கை எழுதிதரச்சொல்லி அதை வாங்கி வைத்துக்கொள் என்றார். அச்சங்கதியை சரவணப்பெருமாளிடம் சொன்னேன் சரவண பெருமாளும் அதற்கிசைந்து மாணிக்கக் கொழுந்தினிடம் சுமார் ஒருமணி நேரம் வரையில் ஏதேதோ பேசிவிட்டுப் பின்பு எழுதிக்கொடுப்பதாக ஒத்துக்கொண்டார். நானும் நகல் எழுதினேன். அதாவது;

"ஜெய வருஷம் ஆவணிமீ 15உ பூதநகர் விஸ்வநாதய ருக்கு செ ன் னை மாணிக்கக்கொழுந்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கையாவது என்னவென்றால்."

இதுகாறும் உமது மரபில் சேராதிருந்த என்னையும் என் வீட்டாரையும் தாங்கள் மடத்தார் மூலமாக தீக்ஷை செய்வித்து எங்களைப் புனிதப்படுத்தி எனது மூத்த குமாரத்தியான இராஜசுந்தரத்தை நீங்கள் மணக்கப்போகிறபடியால், இதுமுதல் எங்கள் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷயங்களையும் தங்கள் உத்தரவில்லாமல் நடத்துவதில்லை மற்ற பெண்களையும் உங்களுக்கு இஷ்டமான இடத்தில் கொடுக்கிறோம் இந்த விஷயத்தில் நானும் எனது பரம்பரையாரும் தவறாமல் நடக்கிறோம் அப்படி தவறினால் காசியில் காராம் பசுவைக்கொன்ற பாபத்தில் போகிறோம்.

இப்படிக்கு,

மாணிக்கக்கொழுந்து.

என்றபடி எழுதினேன். அதில் அவன் கையெழுத்திட்டதுந் தவிர, ஆசாரியர் முன்னிலையில் பிரமாணமும் செய்து

கொடுத்தான். அவ்வுடன்படிக்கையை என் தகப்பனாரிடம் காண்பித்த பின்பு சற்று தேறினார் என்றாலும், இராஜசுந்தரத்தை எனக்கு கொடுக்கும்படி தான் போய் கேட்கமாட்டேனென்றார். அவருக்குப் பதிலாக என் பந்துக்களில் ஒருவரான தங்கசாமி அய்யர் என்பவரால் முடிவு செய்து கலியாணம் செய்துகொண்டேன். கலியாணத்திற்கு மட்டில் என் பெற்றோர்கள் வந்திருந்தார்கள்.

கலியாணம் நடந்த இரண்டொரு வருஷம் வரையில், மாணிக்கக்கொழுந்து என் வார்த்தைக்கு அணுவளவும் தவறாமல் நடந்துவந்தாள். வாவென்றால், வரவும் போவென்றால் போகவும், நில்லென்றால் நிற்கவும், எக்காரியத்தைச் செய்யச்சொன்னாலும் முன் பின் யோசியாமல் செய்வாள். அதாவது குரங்காட்டி குரங்கை ஆட்டுவதுபோல ஆட்டி அவளது குணத்தைச் சோதித்தேன். அப்போதும் நிலை கலங்காமலிருந்தாள். ஆனால் ஒரு விதத்தில் மட்டில் என்மீது என் மாமனாருக்கு பெரியவருத்தம். அதாவது, என் மாமனாரின் பழைய பாத்தியஸ்தர்கள் என் மாமனாரின் வீட்டிற்கு வரப்படாது இவர்களும் அவாள் வீட்டிற்குப் போகப்படாது என்கிற கண்டிப்பான உத்தரவை பிறப்பித்திருந்தேன். ஏதாவது ஆபத்துச் சம்பத்து காலங்களில் பழைமையார் வந்தாலும் அவர்களை வெளியில் வைத்து சோறுபோட சொல்லி துரத்தி விடுகிறது இம்மாதிரி நடப்பதில் மட்டும் என் மாமனாருக்கு வருத்தமே.

ஆயினும் எனக்கு பெண் கொடுத்த பின்பு என் மாமனாருக்கு முன்னிருந்த தாழ்ந்த அந்தஸ்து போய் சகலராலும் நன்கு மதிக்கவும், பெருமை பாராட்டவும் நேர்ந்ததால் பொறுத்திருந்தான் இதுவிஷயமாக தன் மனைவியான மாமியாருடன் சொல்வான். என் மாமியார் ஜாலக்கள்ளிகளில் முதல் தாம்பூலம் பெற்றவளானதால் தன் புருஷன் சொல்லக் கேட்டபோது "சற்று பொறுங்கள் அவனால் இன்னம் சில காரியங்கள் ஆகவேண்டுமென்றாள்." அதைப்பற்றி கொழுந்

தும் சும்மாவிருந்தாள். என் கலியாணம் நடந்த நாலாவது வருஷம் என் மைத்துனிகளில் ஒருத்தி புஷ்பிணியானுள் உடனே அப்பெண்ணுக்குத் தகுந்த நாயகன் தேடப்புறப் பட்டேன் சுமார் ஒரு வருஷங்கள் வரையில் நானூரு ரூபாய் வரையில் செலவு செய்து தேடினேன் கடைசியில், பக்கிரிபுரம் என்கிற ஊரில் ஞானமுத்து என்னும் ஒருவனைக் கண்டுபிடித்து அவனுக்கு என் மைத்துனியை மணமுடித் தேன். இக்கலியாண விஷயத்தில் என் மாமனாராவது, மாமி யாராவது சற்றும், சிறமம் எடுத்துக்கொண்டவரல்ல. எல் லாம் நானே என் வீட்டிலே செய்தேன். அதே தினத்தில் மற்றொருவனுக்கு எனது இளைய மைத்துனியையும் மண முடித்தேன்

கலியாணம் நடந்த ஒரு மாதத்திற்கெல்லாம் என் மாமனர். தனது இரண்டாவது மூன்றாவது மருமகளுக்கு ஓர் விருந்திடத் தயார் செய்து அவ்விருவருக்குத் தனது பழைய பந்துக்களில் சிலரை வருவித்தான். அச்சமயம் எனக்குச் சொன்னால் புறம்பானவர்கள் வந்திருக்கின்ர்களெ ன்று நான் தடுப்பேனென்று சொல்லவேயில்லை. எனது சட்ட கன்மார் அவ்விருந்துக்குப் போனபோது, நான் வந்திருந்த மையால் மாமனைப்பார்த்து ஞானமுத்து என்பவன், விஸ் வநாதய்யர் ஏன் வரவில்லையென்று கேட்டதற்கு, லன் மாமி யார், ஞானமுத்துக்கு லன்மீது கொடியதுவேஷம் உண்டா கும்படியான சில வார்த்தைகள் சொல்லி மூட்டிவிட்டாள். ஞானமுத்து என்பான் தனது பெயரில் ஞானமுத்து என் பதை ஞானமத்து என்று பொருள்படும்படி நடந்துகொண் டான்.

படித்தாவதிருக்கவேணும் அல்லது படித்தவர்களின் கூட்டுறவாவது இருக்கவேணும், அன்றைய தினம் நடந்த விருந்தில் சில அன்னிய மனிதர்கள். சிறிதும் நாகரீகமில் லாமல் வந்திருக்கிறார்களே அவர்கள் யார் என்றும் விசா ரிக்கவில்லை. தனது மாமியார் சொன்னதை உண்மையென்று

நம்பி ஞானமுத்தன் நான் செய்த நன்றியையும் மறந்து என் மீது துவேஷம்பூண்டான் ஆயினும் அவன்பூண்ட துவேஷம் என்னை ஒன்றும் செய்யவில்லை, அவனையே அழித்தது.

இஃதிவ்வாறிருக்க ஷை விஷயங்கள் எனக்குத் தெரிந்ததும் என் மாமனாரை ஏன் இப்படி செய்தாயென்றேன். எதற்கும் பதில் சொல்லாமல் பன்றிபோல விருந்தான். என்மாமியாரும், எருமைமாதிரி நின்றாள். அச்சமயம் எனக்கு மிகுந்த வருத்தம் உண்டாய்விட்டது. தெருவில் வந்து கபட எண்ணத்தைப் பூண்ட பாவிகளே கூடிய சீக்கிரத்தில் நீங்களும் உங்கள் இனத்தாரும் அறியக்கடவதென்று சாபமிட்டுவந்து விட்டேன்.

வீட்டிற்கு வந்ததும் நடந்தன யாவற்றையும் என் மனைவியிடம் கூறினேன். தனது தாய் தகப்பனது கெட்ட எண்ணத்தைக்கேட்டு, அத்துரோகிகளான இருவரும் செத்தார்கள் என்று தலை முழுகினாள். அதுமுதல் நானும் என் மனைவியும் எனது மாமியார் வீட்டிற்குப் போவதில்லை. இவ்வாறிருக்கையில், எனது சட்டகர்களில் ஒருவன் கால வித்தியாசத்தால் ரயிலிலகப்பட்டு இறந்தான். மற்றவனோ பின்னும் இரண்டு மாதங்களில் வைசூரி நோய் கண்டு காலமானான். அவ்விருவரும் இறந்த பின்பு அவ்விருவர் மனைவிகளையும் என் மாமியார் தன் வீட்டிற்கழைத்துக்கொண்டுவந்து ஏதோ கஷ்டப்பட்டு கஞ்சி வார்த்து வருகிறாள். என் மாமனார் சம்பாதனை அவன் ஒருவனுக்கே போதாது. தினம் சாப்பாட்டுக்காக அவ்வீட்டார் படுங்கஷ்டம் சொல்லி முடியாது. என் மாமியார் ஜீவனத்தின் பொருட்டாக குப்பை வண்டி மாடுகள் கட்டும் தொட்டியில் போய் சாணங்கள் கொண்டு வந்து வரட்டி தட்டி அதை விற்று ஜீவிக்கிற வழக்கத்தைக் கொண்டாள். தாயார் எங்கிருக்கிற சாணத்தையும் கொண்டு வந்து போட்டால், கைம்பெண்கள் இருவரும் அதைத்தட்டி விடுகிறது. இவ்வாறு நிகழ்கையில், ஓர் நாள் எனது மாமியார் விடியற்காலம் எழுந்து சாணிக்கூடையை தலையில்

கவிழ்த்துக்கொண்டு தொட்டிக்குப் போகையில் வழியில் ஒருத்தி கூடை நிறையத் துவரை யெடுத்துக்கொண்டு வந்தாள்.

அதைக்கண்ட என் மாமியார் என்னடியம்மா எடுத்துக் கொண்டு போகிறாய் என்று கேட்கவே துவரை கொண்டு போகிறேன், இருபது படி துவரை இருக்கிறது. அதை அரை ரூபாயிக்கு கொடுத்துவிடுகிறேன் வாங்கிக்கொள். என்றாள். என்மாமியார் பேராசைக்காரியானதால் உடனே அவளிடமிருந்த துவரையை தான் வாங்கிக்கொண்டு தன்னிடமிருந்த அரை ரூபாயை அவளிடம் கொடுத்து அனுப்பி விட்டு, பரபரப்புடன் வீட்டிற்குவருகையில் இரண்டு போலீசார் வந்து, என் மாமியாரைப் பிடித்துக்கொண்டு இந்தத் துவரை ஓடுதென்றார்கள். பே, பே, என்றாள். இவள் திருடியென்று உதைமேல் உதை குத்துமேல் குத்துவிட்டு ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் எழுதிவிட்டார்கள்.

அந்த கேசு இன்றைய தினம் விசாரணையாம். ஆதலால் அது விஷயமாக எப்படி முடிந்ததோ என்றுதான் நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கையில், விஸ்வநாதனுக்குத் தெரிந்த ஒருவன் அவ்வழியே போனான். அவனைக்கண்டு என்னப்பா கோவிந்தா சங்கதி என்றான். அவன் விஸ்வநாதனைக்கண்டு கண்களில் ஜலம் விட்டுக்கொண்டே மாமியை ஆறுமாதம் சிக்ஷைசெய்து விட்டார்கள் என்றான்.

இதைக்கேட்ட விஸ்வநாதன் வருத்தமுற்றானென்றும் அருகிலிருந்த சுந்தரன் விஸ்வநாதனை நோக்கி நண்பா! உமது வருத்தம் இம்மட்டில் இருக்கட்டும். எனது சவிஸ்தாரத்னதக்கேள் என்று தனது சவிஸ்தாரம் அனைத்தையும் சுந்தரன் ஒன்றொளியாமல் சொன்னான் இதைக் கேட்கவே விஸ்வநாதன் மிகுந்த ஆச்சரியம் உண்டாய்விட்டது. அன்றைய தினமே சுந்தரனை அழைத்துக்கொண்டு மிதுனபுரிக்

குப்போகவேணும் என்று எண்ணங்கொண்டு தாங்கள் இருந்த கன்னைய நாயுடுவின் வீட்டிற்குப்போய் அவரிடம் உத்தரவுப் பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள்.

கன்னைய நாயுடு சுந்தரனுக்கு ஐம்பது ரூபாயும் விஸ்வநாதனுக்கு ஐம்பது ரூபாயும் கொடுத்து, விஸ்வநாதனுக்கு ஓர் அழகிய பட்டுக்குட்டை ஒன்று வாங்கித் தனது உபசாரமாக போய் வரும்படி உத்தரவு கொடுத்தார். ஷை கன்னைய நாயுடுவின் மைத்துனர்க்கு மட்டில் ரூபாயும் குட்டையும் கொடுத்தது மனந்தாளவில்லை, ஆகிலும் கன்னைய நாயுடு அதை லக்ஷியம் செய்யவில்லை.

மறுதினம் மாலை ஐந்து மணிக்கெல்லாம் சுந்தரனும் விஸ்வநாதனும் மிதுனபுரிக்குவந்து கனகசபைமுதலியாரைக் கண்டார்கள். இறந்தானென்று மதித்திருந்த அனைவரும் சுந்தரனைக்கண்டு ஆனந்தமடைந்தார்கள். சுந்தரனுடையதாய் தந்தையர்களுக்கு சமாசாரம் தெறிந்து அவர்களும் வந்து சுந்தரனைக்கண்டானந்த முற்றார்கள்.

இஃதிவ்வாறிருக்க மலையின் மீதிருந்த மரகதத்திற்கு ஆடை கிழிந்து சங்கடமாயிருந்ததால் கண்ணப்பனை மிதுனபுரிக்கு அனுப்பி ஓர் ஆடை வாங்கி வரும்படி சொன்னாள். கண்ணப்பன் ஓர் நாள் இரவில் வந்து ஜவுளிக்கடையில் ஆடை வாங்கிக்கொண்டிருக்கையில் கடைக்காரர்களில் சிலர் சுந்தரன் வந்ததைப்பற்றி சந்தோஷமாய் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக் கவனமாய் கேட்டிருந்த கண்ணப்பன் இச்சேதியை மரகதத்தினிடம் சொன்னான்.

உடனே மரகதம் புறப்பட்டு கண்ணப்பனை அழைத்துக்கொண்டு மிதுனபுரியில் கனகசபை முதலியார் வீட்டிற்கு

வந்து சேர்ந்தாள். இவ்வாறு மரகதமும் சுந்தரமும் சேர்ந்ததை முன்னிட்டு ஒரு பெரிய விருந்து செய்தார்கள். அத்தினத்தில் சுந்தரனும், மரகதமும், தங்கள் தங்கள் சவிஸ்தாரங்களைப் பலரறியச் சொன்னார்கள். அக்கூட்டத்திலேயே மரகதத்திற்கும் சுந்தரனுக்கும் மணம் முடிக்க ஓர் தினங் குறிப்பிட்டு அத்தினத்தில் வெகு ஆடம்பரத்துடன் மணம் முடித்தார்கள்.

பின்பு தம்பதிகளிருவரும் மனமொத்து வாழ்ந்திருந்தார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

சக்கரவர்த்தி பிரஸ், 189, தங்கசாலை வீதி, சென்னை - 1953

விநாயகர் புராணம்.

ஆனை முகத்தனை அன்புடன் பணிபவர்
ஏனை நலத்தினை எய்துவர் திணமே.

பக்தியிற் சிறந்த பண்புறைச் சீலர்காள் !

என்பது கொண்டு பற்பகக் களிற்றை எவரும் எக்காலத்தும் வழிபடத் தக்கதாம் தன்னை வழிபட்டார் மனம் மகிழுற வெக்காரியங்களையு மினிது நிறைவேற்றுங் கருணைவாய்ந்த வள்ளற் பெருமான் விநாயகரேயாதலின், அவரது தோற்றப் பிரபாவங்களையும், அவர் அன்பர்மாட் டன்புகூர்ந் தருளியத் திருவிளையாடல்களையும், அவரை உபாசித்துப் பேறுபெற்றார் பெருமைகளையும், பிரணவப்பொருளாம் ஐங்கரக்கடவுளைத் துதித்தற்குரிய சோடசம், அட்டோத்திரம், சகத்திரம், முதலான நாமங்களையும் மிகத் தெளிவாவும் விரிவாகவும் கூறுமிந் நூலைப்போல் வேறெந்நூலுமில்லை யெனலாம். மேலும், 'இந்நூலொன்றினைப்படித்தார் பலனூலின் பயனை நன்குணர்ந்தார்' என்று கொள்ளத்தக்க "சகல கலா பொக்கிஷம்" என்பதும் இந்நூலுக்கே பொருந்தும். ஆகவே இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் ஐதீகப் படங்களுடன் அச்சிட்டு அழகாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கிறது.

விலை ரூபா **8—0—0**

கிடைக்குமிடம் ,—

இட்டா, பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 189, தங்கசாலை வீதி, சென்னை-1.

அற்புத பூலோக ரம்பை

ஆச்சரியம், உண்மை நிறைந்தது.

காம்போஜநாட்டு இளவரசன் புவனேந்திரனும், பூலே
ரம்பையும் சதுரங்கமாடிக் கொண்டிருக்கும்போது, வி
நகரத்தரசன், விஜயதரன், வேட்டைக்கு வந்தான், அ
அழகைப்பார்த்து, அவளை அபகரித்துப்போக முயற்சிக்
யில், அவர்கள் மறைந்து விட்டார்கள். பூலோக ரம்பை
தன்னிடம் சேர்ப்பவருக்கு பாதி நாடளிப்பதாக பறை
விக்க, ஒரு பிராமணத்தி புவனேந்திரனிடம் சமையல்க
யாக அமர்ந்து பாஷாணவகைகளினால் புவனேந்திரனை
கொன்றுவிட்டு பூலோக ரம்பையை விஜயதரனிடம் சே
பிக்கிறாள், மந்திரி குமாரன் புத்தி சிகாமணி பிராமண
மகன்போல நடித்து, உளவுகள் உணர்ந்து, பூலோக ரம்
பையைக்கண்டுபேசி, புவனேந்திரனை உயிர் பெற்றெழும்
செய்தான், பிராமணத்தி சுண்ணாம்பு கால்வாயில்போடப்
டாள். அண்டரண்டப் பக்ஷிகள் பேசியதைக்கேட்டு பு
சிகாமணி, புவனேந்திரனைக் கடிக்கவந்த கார்க்கோடக
கொன்றான். அரசன் மந்திரி குமாரனை வெட்டிவிடும்
ஆக்கினைகொடுத்தான். உண்மையை சொல்லி கல்லுருவ
னான். புவனேந்திரன் தன் குமாரனைப் பலிகொடுத்து
சுய உருவம் பெறச்செய்தான். அரசன் மந்திரி குமா
மீது சந்தோஷமடைந்து அவனுக்கு மந்திரி பட்டமும்
குமாரனுக்கு இராஜ பட்டமும் கட்டி, சந்தோஷ சாகரத்
மூழ்கிறான். விரிவும் விபரமும் அறுபல நூலை வாசித்
துணருங்கள். டபுள் கிரௌன் 1X16 அளவில் 272-பக்
கள் கொண்டது. விலை ரூ. 2—0-

கிடைக்குமிடம்.—

இட்டா, பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

நெ. 189, தங்கசாலை வீதி, சென்னை-1